www.tamilarangam.net

# சரணாகதிப் பொருளாதாரம்




டி.எம்.தாமஸ் ஐசக்
கே.என். ஹரிலால்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

# சரணாகதிப் பொருளாதாரம்

டி.எம். தாமஸ் ஐசக்
கே. என். ஹரிலால்

பதிப்பாசிரியர் :
எம்.பி. பரமேஸ்வரன்

தமிழாக்கம்:
வி. கெ. பாலகிருஷ்ணன்

SOUTH VISION

சவுத் விஷன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Saranaagathi Porulaathaaram
T.M. Thomas Isac, K.N. Harilal
Editor : M. P. Parameswaran
Translated by V.K. Balakrishnan
Originally Published in Malayalam in 1991 by
Kerala Sastra Sahitya Parishad, Kozhikode.
First Published : April 1992
Second Edition : September 2000

Published by

SOUTH VISION
6, Thayar Sahib II Lane
Chennai - 600 002.

Rs. 65.00

சரணாகதிப் பொருளாதாரம்
டி.எம். தாமஸ் ஐசக், கெ.என். ஹரிலால்
பதிப்பாசிரியர் : எம்.பி. பரமேஸ்வரன்
தமிழாக்கம் : வி.கெ. பாலகிருஷ்ணன்
முதற் பதிப்பு : ஏப்ரல் 1992
இரண்டாம்பதிப்பு : செப்டம்பர் 2000
வெளியீடு

சவுத் விஷன்
6, தாயார் சாகிப் 2வது சந்து,
சென்னை - 600 002.

ரூபாய் : 65.00

அச்சாக்கம் : வைகை பிரிண்டர்ஸ், சென்னை ■ லேசர் அச்சு : லேசர் சிஸ்டம், சென்னை - 600 014.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இரண்டாம் பதிப்பிற்கான பதிப்புரை

இந்தியாவில் புதிய பொருளாதார கொள்கைகளை அமுல்படுத்தி ஒன்பது வருடங்கள் ஆகிவிட்டன. இக்கொள்கைகள் இந்தியாவிற்கு நல்ல பலனை கொடுத்திருக்கிறதா என்பதை கண்டறிய 9 வருடங்கள் போதும் என்ற கருத்தை எவரும் மறுக்கமாட்டார்கள்.

இப்போது நடந்து கொண்டிருக்கிற விஞ்ஞானபூர்வ பொருளாதார ஆய்வுகளிலிருந்து இந்த முடிவுகளை நாம் அறிய முடிகிறது.

i) இந்தியாவில் வேலையின்மை அதிகரித்துள்ளது என அரசாங்க ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஆனால் இவ்வுண்மை முழுமையாக வெளிப்படாததற்கு காரணம் நமது உற்பத்தி கட்டமைப்பில் ஏற்படும் மாற்றங்களே. கணினி துறை, உயர்வர்க்கத்தினர் மட்டும் பயன்படுத்தும் நுகர்பொருட்கள் ஆகிய துறைகளில் புதிய வேலைகள் கிடைத்துள்ளன. ஆனால் புதிய பொருளாதாரக் கொள்கையினால் இழக்கப்பட்ட வேலைவாய்ப்புகள் மேற்கூறியதைவிட அதிகமாகவே உள்ளன. எனவே புதிய பொருளாதார கொள்கையினால் வேலைவாய்ப்புகள் குறைந்துள்ளது என்பதே உண்மை.

ii) இது மட்டுமல்லாமல் இப்போது கிடைக்கும் வேலைகளில் தொழிலாளிக்கு கிடைக்கும் கூலியோ குறைவு. எந்தவிதமான தொழிற்சங்க உரிமைகளும் கிடையாது. பெண்கள் மற்றும் குழந்தை தொழிலாளிகள் பல அடக்கு முறைகளுக்கு (பாலியல் பலாத்காரம் உட்பட) ஆளாகின்றன. வேலை பறிப்போய் விடும் என்கிற பயத்தை தொழிலாளிகளிடம் ஏற்படுத்தி முதலாளிகள் தொழிலாளர்களை "நல்ல" உழைப்பாளிகளாக மாற்ற முயல்கின்றனர். இதற்கெதிரான போராட்டங்களும் உருவாகி உள்ளன. இப்போராட்டங்கள் முன்பைவிட அதிக ஒற்றுமையுடன் பலமாக மேற்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது.

iii) வறுமை அதிகரித்துள்ளது என்பதை அரசாங்க தரப்பு புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் முதலாளித்துவ-சாரா சித்தாந்திகள் இப்புள்ளி விபரங்களில் பிழைகள் உள்ளதாக கூறுகின்றனர். இதில் ஆச்சரியம் என்னவென்றால் இதுவரை சரியாக இருந்த புள்ளி விபரங்கள் திடீர் என்று மதிப்பிழந்துவிட்டன என்பதுதான். மதிப்பிழந்துவிட்டன என்பதன் பொருள் புள்ளிவிபரங்கள் அல்ல, இந்தியாவில் ஏழை மக்களின் வாழ்வுதான் வறுமையை குறித்து மற்றொரு கருத்தும் உண்டு. வறுமைக் கோடு என்று அழைக்கப்படும் புள்ளி விபரத்தை கணிக்கும் போது, ஒரு சராசரி மனிதனின் அடிப்படை உணவு தேவையை மட்டும் கணக்கில் கொண்டு நிர்ணயிக்கப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படுகிறது. உதாரணத்திற்கு ஒரு வருடத்திற்கு தேவைப்படும் உணவு 1000 கிலோ அரிசி என்று வைத்துக் கொள்வோம். ஒரு கிலோ அரிசியின் விலை ரூ. 5 என்றால் வருடத்திற்கு ரூ. 5000க்கும் குறைவாக ஊதியம் பெறுவோரை, வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ளனர் என்று குறிப்பிடுவோம். இதுபோன்ற முறையை கையாண்டு பார்க்கும் போது, நாம் அறிவது என்னவென்றால் புதிய பொருளாதார கொள்கைக்கு பிறகு இந்தியாவில் வறுமை அதிகரித்துள்ளது என்பதே. இதை மறைக்க சுவாமிநாதன் ஐயர் போன்ற முதலாளித்துவ பொருளாதாரவாதிகள் ஒரு சராசரி மனிதனின் அடிப்படை உணவு தேவை குறைந்துள்ளது என அப்பட்டமாக கூறுகின்றனர்! இதுபோன்ற ஆய்வுகளுக்கு விஞ்ஞானபூர்வ முத்திரையும் சூட்டப்படுகிறது.

இப்புத்தகம் வெளிவந்து 8 ஆண்டுகள் ஆகிவிட்டன. இதில் கூறப்பட்ட விஷயங்கள் ஓரளவு சரியாகவே உள்ளன. ஆனால் உலக முதலாளித்துவத்தில் சில புதிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த மாற்றங்களை சரியாக ஆய்வு செய்யும் எம்.ஏ. ஊமன் எழுதிய கட்டுரை முதல் பிற்சேர்க்கையாக வெளியிட்டுள்ளோம். இதை தவிர 1991க்கு பிறகு இந்திய பொருளாதார மாற்றங்களை ஆய்வு செய்கிற பிரபாத் பட்னாய'க் எழுதிய கட்டுரையை இரண்டாவது பிற்சேர்க்கையாக வெளியிட்டுள்ளோம்.

முடிவாக இந்த புத்தகத்தின் முதல் பதிப்பு வெளிவந்தபின், நிதி மூலதனத்தின் ஆதிக்கம் உலகமெங்கும் மேலோங்கியுள்ளது. இது குறித்து எம்.ஏ. ஊமனின் கட்டுரையில் ஒரு சிறிய விளக்கம் உள்ளது. இந்த நிகழ்வினால் "தேசப்பற்றுமிக்க மாற்று" என்ற 8வது அத்தியாயத்தில் கொடுத்துள்ள திட்டத்தில் சில மாற்றங்கள் தேவைப்படுகிறது. இதை பிரபாத் பட்னாயக்கின் கட்டுரை சுருக்கமாக விளக்கியுள்ளது. இந்த பொருளாதார ஆய்வுகள் பற்றிய விரிவான நூல்களை வெளியிட எமது நிறுவனம் வெளியிட உள்ளது. இதை தமிழ் வாசகர்கள் ஆர்வத்துடன் வரவேற்பார்கள் என்பதில் ஐயம் இல்லை.

சவுத் விஷன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## முதற்பதிப்பிற்கான பதிப்புரை

பொருளாதாரப் பாடம் கற்றறிவது கடினமான, வறண்ட, சில சமயம் புரிந்து கொள்ள முடியாத புதிர்களாக தான் பலச் சந்தர்ப்பங்களில் நாம் அறிந்து வந்திருக்கிறோம்! இதற்குக் காரணம் பொருளாதாரத்தை விளக்க முற்படும் அறிஞர்களா? (பேராசிரியர்களா? வல்லுனர்களா? விரிவுரையாளர்களா?) அல்லது இயல்பிலேயே இந்தக் குணாம்சத்தைப் பொருளாதாரப் பாடம் பெற்றுள்ளதா? இக்கேள்விக்கு விடை அளிப்பது மிகவும் கடினம். இந்நூலைப் படித்தால் ஒன்று நிச்சயமாக புலனாகும். அதாவது சிக்கில்லாமல், திக்குமுக்காடாமல் பொருளாதாரப் பாடத்தை படித்து புரிந்து கொள்ள முடியும் என்பதுவே அது.

இந்நூலாசிரியர்கள் பொருளாதார அறிஞர்களாக இருப்பினும் மிகவும் சாதாரண நடையில் எளிமையான உதாரணங்களை உபயோகித்து நம்மைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகளையும், கோடிக்கணக்கான மக்கள் எதிர்நோக்கியுள்ள அபாயங்களையும் தெளிவாக எடுத்துரைக்கின்றனர். இதை சிறப்புற மலையாளத்தி லிருந்து தமிழாக்கிய வி.கெ. பாலகிருஷ்ணன் பாராட்டிற்கு உரியவர்.

தமிழகத்தில் எவ்வளவோ பொருளாதார பண்டிதர்கள் மெத்தப் படித்தவர்கள் இருப்பினும் இப்படிப்பட்ட ஒரு நூல் தமிழில் இதுவரை வெளிவராதது கண்டு நாம் வியப்படைய வேண்டியது இல்லை. ஏனெனில் எல்லாத் துறைகளிலும் இதுதானே நிலைமை!

நம் நாட்டை ஆட்சி செய்பவர்கள் கடைபிடிக்கும் கொள்கைகள் எவ்வாறு நம் நாட்டின் இறையாண்மையை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது என்பதையும் அதற்கான மாற்று பாதையையும் விரிவாக மக்களுக்கு எடுத்துரைக்காமல் மக்களை ஒன்றுபடுத்துவதோ, அவர்களை அதற்கு எதிராக அணிதிரட்டிப் போரிடுவது என்பதுவோ வெறும் வெற்றுப் பேச்சாகவே இருக்கும்.

இதைச் செய்வதற்காக உதவிடும் ஒரு கையேடுதான் இந்நூல். ஒவ்வொரு கிளர்ச்சிக்காரனும் படித்து தனது கிளர்ச்சி பணியில் திறம்பட பயன்படுத்திட இந்நூல் பேருதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. கடந்த சில மாதங்களில் தொடர்ந்து எமது நிறுவனம் வெளியிட்டு வருகிற நிதி நிறுவனம் - உலக வங்கி (IMF - World Bank) யைத் தோலுரித்தி காட்டும் வரிசையில் இது ஐந்தாவது நூலாகும். தமிழகம் முழுவதும் இம்மாதிரியான நூல்களுக்கு பரவலாக வரவேற்பு இல்லாவிடினும் சில குறிப்பிட்ட பகுதிகளில் இதன் தேவை உணரப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளதை கண்டு நிறைவு அடைய முடியாவிட்டாலும் சற்று ஆறுதலாவது அடைய முடிகிறது.

25-3-92 எம். பாலாஜி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | இன்றைய உலகம் | 7 |
| 2. | வெளிநாட்டுச் செலாவணியில் நெருக்கடி | 25 |
| 3. | புதிய காலனிய மும்மூர்த்திகளின் தோற்றமும் வளர்ச்சியும் | 37 |
| 4. | கடன் பொறிக்கு அழைத்துச் செல்லும் நிதி நிறுவனம் | 52 |
| 5. | உலக வங்கி - வளர்ச்சித் திட்டங்களின் நிதி நிறுவனம் | 71 |
| 6. | காட் - அபினிப்போரிலிருந்து உருகுவே சுற்றுவரை | 94 |
| 7. | சுயசார்பிலிருந்து சரணாகதியை நோக்கி | 114 |
| 8. | சரணாகதிச் சீர்திருத்தங்களுக்கு தேசப்பற்று மிகுந்த மாற்று | 140 |
| 9. | பிறசேர்க்கை I | 169 |
| 10. | பிறசேர்க்கை II | 177 |


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 1

# இன்றைய உலகம்

'தி பேங்க்' (The Bank) என்றால் பொருளாதார அறிஞனைப் பொறுத்தமட்டில் ஒரே வங்கியாக உலக வங்கியும், 'தி ஃபண்ட்' (The Fund) என்றால் சர்வதேச நாணய நிதி நிறுவனமாகவும் தான் இருக்க முடியும். பொருளாதார உலகில் இவ்விரு அமைப்புகளுக்கும் அவ்வளவு முக்கியத்துவமிருக்கிறது. அண்மைக் காலத்தில் பத்திரிகைச் செய்திகளின் வாயிலாக வர்த்தகப் பேச்சுவார்த்தைகளுடன் தொடர்புற்று காட் (GATT) என்ற அமைப்பின் பெயரும் நமக்கு அறிமுகமா யிருக்கிறது. இந்த சர்வதேச அமைப்புகள் மிகவும் பாதிப்பை ஏற்படுத்தும் சில கருத்துக்களைப் பரப்புகின்றன. மூன்றாம் உலக நாடுகளின் சுயாதிகாரத்தை (இறையாண்மையை) கேள்விக்குறியாக்குபவை இந்தக் கருத்துக்கள். அவைகளுக்கான முக்கிய விமர்சனம் தான் இந்த நூலில் கையாளப்படுகிறது. இந்த அமைப்புகள் பரப்பும் கருத்துக்கள் சரியானவை என்றும், அவற்றின் நிபந்தனைகளுக்குப் பணிந்து போவதைத் 'தவிர நமக்கு வேறு வழியில்லை யென்றும், நமது நாட்டுப் பொருளாதார வல்லுனர்களில் பலர் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களனைவரும் ஒரு வகையிலான சரணாகதி மொழியிலேயே பேசுகின்றனர். குறிப்பிட்ட புதிய பொருளாதார சீர்திருத்தங்களையும், மக்களின் வாழ்க்கைக்கும் நாட்டின் சுயாதிகாரத்திற்கும் எதிராக அவை விடும் சவால்களையும் இந்த நூல் ஆராய்கிறது. இத்தகைய முயற்சியின் முன்னதாக இன்றைய உலக அரசியல் சூழ்நிலையைச் சுருக்கமாக வேனும் ஒரு முறை ஆராய வேண்டியிருக்கிறது.

நீங்கள் எவ்வளவு 'அப்பழக்கற்ற பொருளாதார அறிவியல்' மாணவராக இருப்பினும் இந்த அரசியல் சர்ச்சையைத் தவிர்க்க முடியாது. ஏனென்றால் உலக வங்கியும் நாணய நிதி நிறுவனமும் சர்வதேச அமைப்புகள். சுயாதிகார நாடுகள்தான் இந்த அமைப்புகளைக் கட்டுப்படுத்துகின்றன. இந்த அமைப்புகள் தொடர்பு கொள்வதும் சுயாதிகார நாடுகளுடன்தான். எனவே இன்றைய உலக அரசியல் அமைப்பைப் பற்றி சில கணிப்புகள் இருந்தே ஆக வேண்டும். இன்று உலகில் எந்தெந்த நாடுகள் உள்ளன? அவைகளுக்கிடையே என்னென்ன உறவுகள்? இந்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உறவுகளில் உலக வங்கியினுடையவும் சர்வதேச நாணய நிதி நிறுவனத்திடையவும் பாத்திரம் என்ன?

உலகில் இன்றைக்கு சிறிதும் பெரிதுமான 160 நாடுகள் இருக்கின்றன. துணைக் கண்டங்களிலிருந்து சில சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட நாடுகள் வரை இருக்கின்றன. இவை ஒவ்வொன்றுக்கும் தனக்கே உரிய பிரச்சினைகளும் இருக்கின்றன. இவற்றை ஒவ்வொன்றாக ஆராய்ந்து அதன் அடிப்படையில் நாடுகளுக்கிடையிலான உறவைச் சீர்தூக்கிப் பார்ப்பது வரவேற்கத்தக்கதாக இருப்பினும், இந்த சிறு நூலில் அது இயலாது. எனவே பொதுவான சில தனித்தன்மைகளை அடிப்படையாகக் கொண்டு இந்த நாடுகளை வகைப்படுத்த வேண்டியிருக்கிறது.

இதற்கு பலர் பலதரப்பட்ட கோட்பாடுகளைக் கையாள்வார்கள். ஆசிய நாடுகள், ஐரோப்பிய நாடுகள் என்று பேசுவதில்லையா? ஏழைநாடுகள், பணக்கார நாடுகள் என்றும் சிலர் வகைப்படுத்திப் பேசுவார்கள். அண்மைக் காலம் வரை உலக வங்கி நாடுகளை 6 குழுக்களாக வகைப்படுத்திப் பிரித்து வைத்திருக்கிறது

1. குறைந்த வருவாய் நாடுகள்:- பங்களாதேஷ், பர்மா, உகாண்டா, இந்தியா, சீனா, கெனியா, பாகிஸ்தான், வியட்நாம்.
2. எண்ணை இறக்குமதி நடுத்தர வருவாய் நாடுகள்:- பிலிப்பைன்ஸ், எகிப்து, சின்பாப்வே, நிகராகுவா, தாய்லாந்து, காங்கோ, துருக்கி, வடகொரியா, தென்கொரியா, கியூபா.
3. எண்ணை ஏற்றுமதி நடுத்தர வருவாய் நாடுகள்:- ஈரான், வெனிசுலா, மெக்சிகோ, இந்தோனேஷியா.
4. எண்ணை ஏற்றுமதி உயர்ந்த வருவாய் நாடுகள்:- ஓமன், லிபியா, சௌதி அரேபியா, குவைத், யு.எ.இ.
5. தொழில் மய சந்தை நாடுகள் :- யு.எஸ்.எ., பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா, மேற்கு ஜெர்மனி, ஸ்பெயின், பெல்ஜியம்.
6. கிழக்கு ஐரோப்பிய சந்தையில்லா நாடுகள் : ஹங்கேரி, போலந்து, சோவியத் யூனியன், ருமேனியா.

இனி ஆறாவது குழுவில் இருக்கும் நாடுகளை உலக வங்கி எந்தக் குழுப் பிரிவில் சேர்க்கப் போகிறது என்பது வேடிக்கையாகத்தான் இருக்கும்! 1991ஆம் ஆண்டு உலக வங்கியின் வளர்ச்சி அறிக்கையில் இந்த நாடுகளின் தனிப் பிரிவுக் கணக்கே குறிப்பிடவில்லை.

"ஏனைய பொருளாதார அமைப்புகள்" என்ற பெயரில் முன்னைய சந்தையில்லா நாடுகளின் புள்ளிவிவரக் கணக்குகள் குறிப்பிடப்பட்டிருந்தன. தற்காலிகமாக இந்தப் பிரிவைச் சார்ந்த நாடுகளைத் தவிர்க்கலாம்.

இதனால் பிரச்சினைகள் தீரப்போவதில்லை. எஞ்சிய நாடுகளை முழுக்க 1991ஆம் ஆண்டில் தனிநபர் வருவாய் அடிப்படையில்தான் வகைப்படுத்திப்

www.tamilarangam.net



பிரித்திருக்கிறது. இந்த அடிப்படையில் நான்கு வகையான நாடுகள் இருக்கின்றன! குறைந்த வருவாய் நாடுகள், குறைந்த நடுத்தர வருவாய் நாடுகள், உயர்ந்த நடுத்தர வருவாய் நாடுகள், உயர்ந்த வருவாய் நாடுகள். இந்த பிரிவினைப் படி எண்ணை ஏற்றுமதி நாடுகள் அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளுக்கிணையான இடத்தைப் பிடிக்கின்றன. இத்தகைய பிரிவினைகள் ஒவ்வொன்றுக்கும் அதற்கே உரிய நன்மையும் தீமையும் இருக்கின்றன. எண்ணை விலையேற்றத்தால் அண்மைக் காலத்தில் வருவாய் உயர்ந்தது என்பதனால் மட்டும் அரபு நாடுகளையும் தொழில்வள ஐரோப்பிய நாடுகளையும் ஒரே ரகத்தில் சேர்ப்பது சரியாகாது.

குறைந்த வருவாய் நாடுகள், குறைந்த நடுத்தர வருவாய் நாடுகள், உயர்ந்த வருவாய் நாடுகள் போன்றவைகளுடன், எண்ணை ஏற்றுமதி செய்யும் உயர்ந்த வருவாய் அரபு நாடுகளையும் வளரும் நாடுகள் என்று ஒரே ரகத்தில் சேர்ப்பதுதான் சரி. ஜப்பான், ஆஸ்த்ரேலியா, நியுசிலாந்து, அமெரிக்கா, கனடா, ஐரோப்பிய தொழில்வள நாடுகள் போன்றவற்றை வளர்ந்த நாடுகள் என்றே அழைக்கலாம். இந்த வகைப்படுத்தலைத் தான் ஐக்கிய நாடுகள் சபை ஏற்றுக் கொண்டிருக்கிறது. இந்த முறையில் புள்ளி விவரங்கள் கிடைத்த இறுதியாண்டு 1986. ஒவ்வொரு பிரிவு நாடுகளுடையவும் நிலப்பரப்பு, மக்கள் தொகை, உற்பத்தி அமைப்பு, சில முக்கியமான வாழ்க்கைத்தரப் புள்ளி விவரம் போன்றவற்றை பட்டியல் 1-1இல் பார்க்கவும்.

**வளர்ச்சியின்மையும் - வளர்ச்சியும்**

மொத்த நிலப்பரப்பில் ஏறத்தாழ 65 சதவிகிதமும் மக்கள் தொகையின் ஏறத்தாழ 80 சதவிகிதமும் இன்றைக்கு வளரும் நாடுகளுக்குள் அடக்கம்! வளரும் நாடுகளுக்கும் வளர்ந்த நாடுகளுக்கும் கண்கூடான வேற்றுமை, வருவாய் இடைவெளிதான். 1989இல் தான் கடைசிக் கணக்குகள் கிடைத்தன. அதன்படி வளரும் நாடுகளின் தனிநபர் வருவாய் 800 டாலர்; வளர்ந்த நாடுகளின் தனி நபர் வருவாய் 19100 டாலர்!

குறைந்த வருவாய் நாடுகளின் தனிநபர் வருவாய் வளர்ந்த நாடுகளின் இருபதில் ஒன்றுக்குக் கீழ்தான் வருகிறது. எண்ணை ஏற்றுமதி உயர்ந்த வருவாய் நாடுகளின் தனிநபர் வருவாய்கூட வளர்ந்த நாடுகளின் பாதிதான் வருகிறது (பட்டியல் 1.1 - பார்க்கவும்)

வளரும் நாடுகளின் வாழ்க்கைத் தரத்திற்கும் இந்த நாடுகளுக்கிடையான வருவாய் இடைவெளிக்கும் சீரான உறவிருப்பதாகச் சொல்ல முடியாது. ஏறத்தாழ உயர்ந்த வருவாய் பெறும் அரபு நாடுகளின் ஓரளவு தாழ்ந்த வாழ்க்கைத் தரத்துடன் ஒப்பிட்டால், குறைந்த வருவாய் பெறும் சீனாவின் உயர்ந்த வாழ்க்கைத் தரமும் இதைத்தான் உணர்த்துகிறது. ஆனால் வளர்ந்த நாடுகளுக்கும் வளரும் நாடுகளுக்குமிடையிலான எந்தப் புள்ளி விவரத்தை எடுத்துக் கொண்டாலும் வேடிக்கையான இடைவெளியைக் காணலாம். வளரும் நாடுகளின் மக்கள் தொகை சராசரி 2 சதவிகிதம் உயரும்போது வளர்ந்த நாடுகளில் மக்கள் தொகை, 8 சதவிகிதம் தான் உயர்கிறது. வளரும் நாடுகளில் குழந்தைகள் இறப்பு விகிதம் 67 ஆகவும்,

www.tamilarangam.net



## பட்டியல் - 1.1
## வளரும் நாடுகளும் வளர்ந்த நாடுகளும் பொதுவான சில புள்ளி விவரங்கள் - 1986

| புள்ளி விவரங்கள் | வளரும் நாடுகள் | | | | வளர்ந்த நாடுகள் |
|---|---|---|---|---|---|
| | தாழ்ந்த வருவாய் நாடுகள் | தாழ்ந்த நடுத்தர வருவாய் நாடுகள் | உயர்ந்த நடுத்தர வருவாய் நாடுகள் | எண்ணை ஏற்றுமதி உயர்ந்த வளரும் நாடுகள் | தொழில்வள சந்தை நாடுகள் |
| | (1) | (2) | (3) | (4) | (5) |
| நிலப்பரப்பு (கி.மீ) | 386 | 150 | 222 | 40 | 309 |
| மக்கள் தொகை (கோடி) | 249 | 69 | 58 | 2 | 74 |
| தனிநபர் வருவாய் (டாலர்) | 270 | 750 | 1890 | 6740 | 12960 |
| உற்பத்தியில் தொழில்-சேவைத் துறைகளின் பங்கு (சதவிகிதம்) | 56 | 63 | 75 | 49 | 85 |
| எரிசக்தி (1000 கிலோ எண்ணைக்கு சமமான யூனிட்டுகள்)314 | 316 | 1527 | 3313 | 4952 | |
| மக்கள் தொகை வளர்ச்சி (1980-1985) | 1.9 | 2.6 | 1.8 | 4.2 | 0.8 |
| குழந்தை இறப்பு | 69 | 77 | 50 | 62 | 9 |
| ஆயுள் நீடிப்பு | 61 | 59 | 67 | 64 | 76 |
| அன்றாட உணவு (கலோரி) | 2329 | 2511 | 2967 | 3213 | 3357 |
| 20-24 வயதினரில் உயர்கல்வி பெறுபவர்கள் (1981) | 4 | 9 | 14 | 8 | 37 |

(Source : World Development Report 1988)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வளர்ந்த நாடுகளில் 9 ஆகவும் இருக்கிறது. வளர்ந்த நாடுகளின் மக்களின் ஆயுட்காலம் வளரும் நாடுகளைவிட 15 ஆண்டுகள் கூடுதலாக இருக்கின்றன. கல்வி நிலவரத்தை எடுத்துக் கொண்டால் வளரும் நாடுகள் மிகவும் பின்தங்கியிருக்கின்றன. பாதிக்கு மேற்பட்டவர்கள் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாக இருக்கிறார்கள். பெரும்பான்மையான மக்களுக்குப் போதிய உணவு கூட இல்லை. ஆரோக்கியமின்மையும் அரைப்பட்டினியும் மலிந்த உலகம் அவர்களுடையது. செல்வச் செழிப்புமிக்க வளர்ந்த நாடுகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டவை.

உற்பத்தி அமைப்பு முறையிலும் வளரும் நாடுகளுக்கும் வளர்ந்த நாடுகளுக்கும் இடையில் பெரும் இடைவெளியைக் காணலாம். வளரும் நாடுகளின் தேசிய வருவாயில் பெருமளவு விவசாயம், சுரங்கம், மீன்பிடிப்பு போன்ற முதன்மைத் துறைகளிலிருந்துதான் கிடைக்கிறது. வளர்ந்த நாடுகளின் அடிப்படையே தொழில்களும் சேவைத் துறைகளும்தான். இவற்றின் தேசிய வருவாயில் விவசாயத்திலிருந்து 3.5 சதவிகிதம்தான் கிடைக்கிறது. அதேபொழுது குறைந்த வருவாய் நாடுகளின் தேசிய வருவாயில் 32 சதவிகிதம் விவசாயத்திலிருந்து கிடைக்கிறது. எண்ணை ஏற்றுமதி செய்யும் உயர்ந்த வருவாய் நாடுகளின் தனிநபர் வருவாய் ஏறத்தாழ உயர்ந்ததுதான். ஆனால் இதில் 5 சதவிகிதத்திற்குக் கீழ்தான் தொழில்களிலிருந்து கிடைக்கிறது. எண்ணைதான் அவர்களுடைய முதன்மையான உற்பத்தித்துறை.

சில தனித்தன்மை வாய்ந்த சூழ்நிலைகளால் கொரியா, தாய்வான், சிங்கப்பூர், ஹாங்காங், தென்கிழக்கு ஆசிய நாடுகள், லத்தீன் அமெரிக்க நாடுகள் போன்றவை குறிப்பிடத்தக்க தொழில் வளர்ச்சியைப் பெற்றன. இவற்றில் லத்தீன் அமெரிக்க நாடுகளில் தொழில் வளர்ச்சி கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக பின்னடைந் திருக்கிறது. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் இத்தகைய பின்னடைவு ஏற்படவில்லை. இந்த நாடுகளைக்கூட தொழில் வளர்ச்சி நாடுகள் என்று சிறப்பிக்க முடியாது. இன்றைக்கும் வளரும் நாடுகளின் பட்டியலில்தான் இவை இடம் பெற்றிருக்கின்றன.

வளரும் நாடுகளனைத்திற்கும் ஒரே மாதிரியான சரித்திரப் பின்னணியிருக்கிறது. இவை அனைத்தும் முன்னர் காலனிகள் அல்லது அரைக் காலனி நாடுகளாக இருந்தவை. இன்றைய வளர்ந்த நாடுகள் காலனி ஏகாதிபத்தியங்களாகவும் இருந்தன. காலனி ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற பிறகு, பொருளாதாரப் பின்னடைவிலிருந்து மீள வளரும் நாடுகள் முயன்று கொண்டிருக்கின்றன. இதனால் சிலர் இவற்றை முன்னேறிய நாடுகள் என்று அழைப்பதுண்டு. ஆனால் ஒரு சில நாடுகளைத் தவிர்த்து, வளரும் நாடுகளின் பின்தங்கிய நிலை விடைகிடைக்காத விடுகதையாகத் தொடர்ந்து கொண்டுதானிருக்கிறது.

பட்டியல் 1-2 வளரும் நாடுகளின் கடந்த இரண்டு நூற்றாண்டைய வளர்ச்சியின்மையின் வரலாற்றைக் கூறுகின்றன. 1800 இல் உலக உற்பத்தியின் 44 சதவிகிதம் இன்றைய வளரும் நாடுகளில்தான் இருந்தது. 1950 ஆவதற்குள் இது 17 சதவிகிதமாகக் குறைந்து விட்டது. 1950-லிருந்து 1980 வரையிலான கால அளவில்

www.tamilarangam.net



வளரும் நாடுகளின் உற்பத்தி விகிதம் 4 சதவிகிதமாக உயர்த்தப்பட்டது. எனினும் இதே கால அளவில் இந்த உற்பத்தியைப் பங்கிட வேண்டிய மக்கள் தொகையும் 8 சதவிகிதம் உயர்ந்து விட்டது. உலக உற்பத்தியின் 21 சதவிகிதமும் 75 சதவிகிதம் மக்களிடையேதான் பங்கிட்டாக வேண்டும். உலக வங்கியின் கணக்குப்படி, குறைந்த வருவாய் நாடுகள் என்றழைக்கப்படும் 47 சதவிகிதம் மக்கள் வசிக்கும் ஏழை நாடுகளின் இந்த 5 சதவிகிதம் சொற்பம்தான் என்பதையும் நினைவிற் கொள்ள வேண்டும். இந்த நாடுகளின் உற்பத்தி விகிதம் 1950களுக்கும் பிறகு குறைந்திருக்கிறது. ஏன் இந்த வளர்ச்சியின்மை? (பட்டியல் 1-2 பார்க்கவும்)

**பட்டியல் 1-2**

**உலகளாவிய உற்பத்தியிலும் மக்கள் தொகையிலும் வளரும் நாடுகள் விகிதம்**

| ஆண்டு | உலக உற்பத்தி (கோடி டாலர்) | வளரும் நாடுகளின் விகிதம் (சதவிகிதம்) | உலக மக்கள் தொகை (கோடி) | வளரும் நாடுகளின் விகிதம் (சதவிகிதம்) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1800 | 23,000 | 44 | 94 | 74 |
| 1900 | 97,000 | 19 | 167 | 66 |
| 1950 | 2,63,000 | 17 | 242 | 67 |
| 1980 | 11,72,000 | 21 | 433 | 75 |

(Source : World Development Report - 1984)

**காலனியாதிக்கம் - புதிய காலனியாதிக்கம்**

மேற்கத்தியர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வெள்ளையர்களின் அறிவாற்றலும் சுறுசுறுப்பும் காரணமில்லை. வெள்ளையர்கள் காட்டான்களாக அலைந்து திரிந்து கொண்டிருந்தபோது இன்றைய வளரும் நாடுகள் பல பண்டைய நாகரீகத்தின் மனிதத் தொட்டிலாக அல்லவா இருந்தன! ஆனால் இந்த பழம்பெரும் கலாச்சாரத்தின் வளர்ச்சி பல்வேறு காரணங்களால் தடைபட்டது. அதேபொழுது ஐரோப்பாவில் முதலாளித்துவ சமூக அமைப்பு தளிர்விட்டது. புதிதாகப் பிறந்த இந்தக் குழந்தையை, ஆசிய ஆப்பிரிக்கக் கண்டங்களில் படையெடுத்தும், கொள்ளையடித்தும் குவித்த செல்வத்தால் வெள்ளையர்கள் பாலூட்டி வளர்த்தனர். மனிதகுல வரலாற்றில் இந்த சாபக்கேடான அத்தியாயத்தை நம்புவது கடினமாகத்தான் இருக்கும்.

அமெரிக்கக் கண்டத்தின் தங்கத்தையும் வெள்ளியையும் மட்டும் வெள்ளையர்கள் கொள்ளையடிக்கவில்லை. ஒரு மனித சமூகத்தையே முழுக்கக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொன்று குவித்தனர். பிறகு அமெரிக்காவில் பிளாண்டேஷன் போன்றவை துவங்கிய போது உழைப்பதற்கு அமெரிக்கர்கள் மிஞ்சவில்லை. இதற்காக பத்து கோடி அமெரிக்கர்கள் சங்கிலியால் பிணைக்கப்பட்டு அமெரிக்காவுக்குக் கடத்தப்பட்டனர். வெள்ளையர்கள் ஆசியாவையும் விட்டு வைக்கவில்லை. பதினெட்டாவது நூற்றாண்டின் இறுதியில் வங்காளத்திலிருந்து மட்டும் பிரிட்டிஷ்காரர்கள் கடத்திச் சென்ற கொள்ளைச் செல்வம், பிரிட்டனின் அன்றைய வருடாந்திர மூலதனத் திரட்டலின் 30 சதவிகிதமாகும்! இந்த நிரந்தரக் கொள்ளைகளால் இந்தியாவில் ஏற்பட்ட மாபெரும் பஞ்சமும், பட்டினிச் சாவுகளும் 'கொடும்புகழ்' மிக்கவை! பதினெட்டாவது நூற்றாண்டின் இறுதியில் வங்கத்தில் ஏற்பட்ட இந்தக் கொடிய மாபெரும் பஞ்சத்தில் (The Great Famine) மூன்றில் ஒரு பகுதி வங்காளியர்கள் செத்து மடிந்தனர்.

இந்தக் கொள்ளைச் செல்வம் அனைத்தும் இங்கிலாந்திலும் ஐரோப்பியாவிலும் பெரும் தொழில்களுக்கான அஸ்திவாரமாகிவிட்டது. தொழில்கள் பெருகியதும், வணிகத்திற்கு கொள்ளை வழியமைத்துக் கொடுத்தது. இந்திய நெசவுத் தொழிலாளிகளின் பெருவிரல்கள் வெள்ளையர்களால் துண்டிக்கப்பட்டன. துணியை ஏற்றுமதி செய்த இந்தியன், பருத்தியை ஏற்றுமதி செய்தான். பதிலுக்கு இந்தியாவுக்கு மாஞ்செஸ்டர் துணி கிடைத்தது. இவ்வாறு ஒவ்வொரு தொழிலுக்கும் ஒவ்வொரு நாட்டை இரையாக்கினர்! இறுதியில் இங்கிலாந்து உலகின் பட்டறையாக (Work Shop) மாறியது.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் இறுதியானதும் இந்த நிலைமையையும் மாறியது. தொழில் துறையிலும், வங்கிதுறையிலும் ஏகபோகங்கள் உருவாயின. இவை ஒன்றோடொன்று கூட்டமாகப் பிணைந்து மிகப்பெரும் ஏகபோகங்களாக மாறின. இந்த ஏகபோகங்கள் சரக்குகள் மட்டுமின்றி மூலதனத்தையும் வளரும் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தன. வளர்ந்த நாடுகளில் எஞ்சிய மூலனத்திற்கே கூட கொள்ளை லாபம் கிடைக்கும் சூழ்நிலை உருவாகியது. காலனி நாடுகளில் மூலப்பொருட் களுக்கும் நிலத்திற்கும் விலை மலிவு; கூலியும் குறைவு! பலவற்றிற்கு விலையே கூடத் தேவைப்படவில்லை. விரைவிலேயே உலகை முழுக்க வளர்ந்த நாடுகள் பங்கு போட்டுக் கொண்டன. மேற்கொண்டு பங்குபோட காலனி நாடுகள் இல்லையென்ற நிலை ஏற்பட்டதும், இருப்பதையே மீண்டும் பங்குபோட சச்சரவு மூண்டது. இறுதியில் இதுவே முற்றி உலகப் போர் வரை முற்றியது.

19ஆவது நூற்றாண்டுடன் துவங்கும் புதிய காலகட்டத்தைத்தான் பொருளாதார அறிவியலில் ஏகாதிபத்தியம் என்று வர்ணிக்கப்படுகிறது. ஏகபோகங்களின் கட்டுக்குள் இருக்கும் மூலதனத்தை ஏற்றுமதி செய்து அன்னிய நாடுகளின் மக்களை, சுரண்டும் நாடுகளை, ஏகாதிபத்திய நாடுகள் என்கிறோம். சுருங்கக் கூறின் முதலாளித்துவப் பொருளாதார வளர்ச்சியில் ஒரு முக்கியமான கட்டம்தான் ஏகாதிபத்தியம்! வளர்ந்த முதலாளித்துவ நாடுகள் இந்த வளர்ச்சிக் கட்டத்தில்தான் இருக்கின்றன.

காலனி ஆதிக்கத்திற்கெதிராக பலம் வாய்ந்த தேசிய விடுதலைப் போராட்டங்கள் எழுந்தன. தொடர்ந்து காலனி நாடுகள் ஒவ்வொன்றாக விடுதலை

www.tamilarangam.net



பெற்றன. இரண்டாவது உலகப் போரில் ஏகாதிபத்திய நாடுகளுக்கு ஏற்பட்ட பொதுவான சோர்வு காலனி நாடுகளின் விடுதலையைப் பூர்த்தி செய்தது. ஆனால் காலனி ஆதிக்கம் ஒழிந்த பிறகும் ஏகாதிபத்தியமும் அதன் சுரண்டலும் தொடர்கிறது. ஏகபோகக் குத்தகையும், மூலதன ஏற்றுமதியும் அது வழியாக வெளிநாட்டுச் சுரண்டலும்தானே ஏகாதிபத்தியத்தின் இயல்புகள், ஏகபோகத்திற்கும் மூலதன ஏற்றுமதிக்கும் கடந்த நாற்பதாண்டுகளில் வியத்தகு வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. உதாரணத்திறகு அமெரிக்காவின் 500 கார்ப்பரேஷன்களையே எடுத்துக் கொள்வோம். 1950 இல் அமெரிக்கத் தொழிற்துறை மீது அவற்றிற்கு 25 சதவிகிதம் கட்டுப்பாடுதான் இருந்தது. 1975 ஆவதற்குள் அதில் 43 சதவிகிதம் உயர்ந்து விட்டது. பேங்கிங் துறையிலும் இந்த மையப்படுத்தும் போக்கு பலமுடைந்தது. வங்கிகளும், தொழிற்துறை அதிபர்களும் இந்த அளவு கைகோர்த்துக் கொண்டு முன்னெப்போதும் செயல்பட்டதில்லை.

இதே காலகட்டத்தில் வெளிநாட்டு மூலதனமும் ஏறத்தாழ 800 சதவிகிதம் உயர்ந்து விட்டது. முதலாவது, இரண்டாவது உலகப் போரின் போது வெளிநாட்டு மூலதனம் 50 சதவிகிதம்தான் உயர்ந்திருந்தது என்பதையும் நினைவு கூறவேண்டும். பண மூலதனத்தைவிட பிற நாடுகளில் ஆலைகள் நிறுவி தொழில் செய்வதில்தான் நாட்டமிருந்தது. இது பன்னாட்டு ஏகபோகமெனும் மூலதனக் குவிப்பை சர்வ சாதாரணமாக்கிவிட்டது. உலகின் மிகப் பெரிய 100 பொருளாதார அமைப்புகளை எடுத்துக் கொண்டால் (நாடுகளையும் அமைப்புகளையும் எடுத்துக் கொள்வோம்; நாடுகளை தேசிய வருவாய் அடிப்படையிலும் கம்பெனிகளை விற்பனை வரவுகளிலும் அடிப்படையிலும் ஒப்பீடு செய்யலாம்) இவற்றில் 50 ஆகிலும் பன்னாட்டு ஏகபோகங்களாக இருக்கும். இவற்றில் மிகப் பெரிய ஏகபோகமான எச்சண் கம்பெனியை விட 19 சுயாதிகார நாடுகள் மட்டுமே முன்னணியில் இருக்கக்கூடும்.

காலனியாதிக்கம் முடிவுற்ற பிறகும் ஏகாதிபத்தியச் சுரண்டல் தொடர்கிறது. இதற்காக ஏகாதிபத்திய நாடுகள் அமைத்திருக்கும் புதிய இயக்கங்களுக்கு நியோகொலோனியலிசம் (நவீன காலனியாதிக்கம்) என்று பெயர். வெவ்வேறு வகையிலான சர்வதேச ஒப்பந்தங்கள், அரசியல் வாதிகளுக்கான கையூட்டுகள், பொம்மை அரசுகளை அமைத்தல், ராணுவ அத்துமீறல்கள், படையெடுப்பு போன்ற தலையீடுகள், ஆராய்ச்சி-கல்வி- கலாச்சாரத் துறைகளில் செல்வாக்குப் பெறுதல் போன்றவைகள் இந்த இயக்கங்களில் உள்ளடங்கியிருக்கின்றன! பொருளாதாரத் துறையில் நவீன காலனியாதிக்க நடவடிக்கைகளில் உலக வங்கியும், சர்வதேச நாணய நிதி நிறுவனமும், வர்த்தகம்-காப்பு வரிக்கான பொது ஒப்பந்த அமைப்பும் (காட்) மிகவும் முக்கியமான பங்கு வகிக்கின்றன என்பதை இந்த நூலில் இருந்து தெரிந்து கொள்ளலாம். வெள்ளையர்களின் சுமை **(White Man's Burden)** என்று ஒரு வழக்குச் சொல் இருக்கிறது. முன்னர் காலனி நாடுகளை ஆண்டு கொண்டிருந்த வெள்ளையர்கள் ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும், அமெரிக்காவிலும் நாகரீகமற்ற மக்களைச் சீர்திருத்தும் பொறுப்பைத் தாங்கள்தான் சுமந்து கொண்டிருப்பதாகப் பீற்றிக் கொள்வார்கள். இன்று உலக வங்கியும், நாணய நிதி நிறுவனமும் அந்தப் பணியை மேற்கொண்டிருக்கிறது போலும்!

www.tamilarangam.net



வெள்ளையர்கள் இல்லாமல் எந்த வளரும் நாடாவது தாக்குப்பிடிக்க முடியுமா என்று ஐயப்படும் அப்பாவிகளும் இருக்கிறார்கள். "ஆப்பிரிக்கனை அமெரிக்கக் கோதுமை தானே ஊட்டி வளர்க்கிறது? இலவசமாகவும் சலுகை வட்டிக்கும் வளரும் நாடுகளுக்கு எவ்வளவு டாலர் அமெரிக்கா அள்ளிக் கொடுக்கிறது?" என்று வியக்கிறார்கள்.

இதைச் செவி மடுக்கும்போது '100 ரூபாய்க்குப் பொருள் வாங்கினால் ஒரு பரிசுச் சீட்டு இலவசம்' என்று அறிவிக்கும் 'வணிக வள்ளல்கள்' தான் நினைவுக்கு வருகின்றனர். 100 ரூபாய் செலவழித்தால் பொருளும், இலவசமாகப் பரிசுச் சீட்டும், அதிர்ஷ்டமிருந்தால் பரிசுப் பொருளான டெலிவிஷன் பெட்டியும் கிடைக்கும். ஆனால் இந்தச் சலுகை காலாவதி ஆவதற்குள் அதைவிடப் பன்மடங்கு தொகை லாபத்தை நமக்கு விற்ற 100 ரூபாய் பொருளிலிருந்தே வியாபாரி ஈடு செய்து கொண்டிருப்பான். இதை நாம் புரிந்து கொள்வதில்லை.

வளரும் நாடுகளனைத்திற்கும் சேர்த்து 1985 – உலக வங்கிக் கணக்குப்படி அதிகாரபூர்வ வெளிநாட்டு உதவியாக 3000 கோடி டாலர் கிடைத்திருக்கிறது. இதில் பெரும்பகுதியும் சலுகை அடிப்படையிலான கடன்கள் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். சில ஆண்டுகளுக்குப் பிறகு இந்த 'உதவியை நாம் திருப்பி அளிக்கக் கடன்பட்டவர்கள். அதாவது உண்மையான உதவி (சலுகை வட்டியும்-கிராண்ட்களும்) 500-600 கோடி டாலருக்கு மேல் போகாது. இவ்வாறு நமக்கு உதவும்போது வளர்ந்த நாடுகள் நம்மிடமிருந்து தட்டிப் பறிப்பது எவ்வளவு என்பதை யூகித்துப் பாருங்கள்! மிகவும் மிதமான கணக்குப்படி எடுத்துக் கொண்டாலும் இந்தத் தொகை 15,000 கோடி டாலராவது இருக்கும்.

ஆனால் ஒரு விஷயத்தை எச்சரிக்க வேண்டியிருக்கிறது. வளரும் நாடுகளிலிருந்து வட்டி, லாபம், கட்டணம் என்று எடுத்துச் செல்லப்படும் தொகைக்கு கணக்கே கிடையாது. அதிகாரபூர்வமாகக் கிடைத்த மொத்தக் கணக்குகூட நெடுங்காலக் கடன்களுக்கான வட்டிகளுக்குத்தான். உலக வங்கியின் கணக்குப்படி இது மட்டும் 4000 கோடி டாலர் ஆகிறது. இந்த வட்டியில் குறுகிய காலக் கடன்களின் வட்டி சேரவில்லை. அதையும் கணக்குப் போட்டால் வளர்ந்த நாடுகளுக்கு வட்டியாக மட்டும் 6000 கோடி டாலர் கிடைக்கும் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

வளரும் நாடுகளின் தொழிற்சாலைகள் மற்றும் வர்த்தகத்திலிருந்து கிடைக்கும் லாபத்தைப்பற்றி யூகிக்கத்தான் இயலும். அமெரிக்கப் பன்னாட்டு ஏகபோகங்களுக்கு வளரும் நாடுகளில் அவற்றின் முதலீட்டிலிருந்து 25 சதவிகிதம் லாபம் கிடைப்பதாக அன்க்டாடு (UNCTAD - யுனைடெட் நேஷனல் கான்ஃபரெஸ் ஆஃப் டிரேட் அண்டு டெவலப்மென்ட்) மதிப்பீடு செய்திருக்கிறது. இதன் அடிப்படையில் 1980இல் வணிக லாபமாகவும், தொழில் லாபமாகவும் 10,000--13,000 கோடி டாலர் தொகையை வளர்ந்த நாடுகள் நம்மிடமிருந்து தட்டிப் பறித்திருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இதைத் தவிர 700--1000 கோடி டாலர் பல்வேறு தொழில் நுட்ப உதவியாகவும், ராயல்டியாகவும்; ஃபீசாகவும் வேறு தனியாக எடுத்துச் செல்கின்றன.

www.tamilarangam.net



இவ்வாறு மிகவும் குறைவாகக் கணக்கிட்டால் கூட 15,000 கோடி டாலர் தொகையை வளர்ந்த நாடுகள் இங்கிருந்து எடுத்துச் செல்கின்றன. அவர்கள் நமக்குத் திருப்பிச் செய்யும் 'உதவி!' 500--600 கோடி டாலர் மட்டுமே! யார் யாருக்கு உதவுகிறார்கள்? யாருடைய பாரத்தை யார் சுமக்கிறார்கள்?

### வளர்ச்சியின் மீது விலங்குகள்

நவீன காலனியாதிக்கத்தின் சர்வதேச கட்டுமானம் தான் வளரும் நாடுகளில் பிணைத்திருக்கும் முக்கிய விலங்குகளில் ஒன்று. ஒரு வகையில் இன்றைய வளரும் நாடுகள் என்றைக்குமே வளர்ச்சி குன்றியிருக்கவில்லை. காலனியாதிக்கச் சுரண்டலோ, அதன் சிருஷ்டியான பிற்படுத்தப்பட்ட சூழ்நிலையோ, சமூக அமைப்புகளோ, அவற்றின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கவில்லை. இன்றைய வளரும் நாடுகளின் தன்மை எவ்வளவோ மாறுபட்டது என்பதை நாம் பார்த்து விட்டோம். இந்த நாடுகள் அனைத்தும் இன்றைக்கும்கூட அதிகமாகவோ குறைவாகவோ ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கு ஆட்பட்டுக் கொண்டுதானிருக்கிறது. இந்த ஆட்படுதல் நூற்றாண்டுகள் தொன்மையான சுரண்டல் பாரத்தைச் சுமந்து செல்லும் பணியைக் கடுமையாக்குகிறது.

மூலதனக் குவிப்பிற்கு மேற்கத்திய முதலாளிகளுக்கு இருந்த வழிகள் இன்றைய வளரும் நாடுகளுக்கு இல்லை. மேற்கத்திய முதலாளித்துவ வளர்ச்சிக்குத் தேவைப்பட்ட முக்கிய மூலதனத் திரட்டு, ஆசிய ஆப்பிரிக்கக் கண்டங்களில் மேற்கொண்ட மனித வேட்டைகளாலும், கொள்ளைகளாலும்தான் சாத்தியமாயிற்று என்பதைப் பார்த்தோம். வளரும் நாடுகளுக்கு இது சாத்தியப்படாது என்பது மட்டுமின்றி, சொந்த வளங்களிலேயே ஒரு பகுதியை வளர்ந்த நாடுகளுடன் பங்கு போட வேண்டிய கட்டாயத்தில்தான் இன்றைக்கும் வளரும் நாடுகள் இருக்கின்றன. அதைப் போலவே பண்டைய காலபாணியில் பொருட்களை விற்றழிக்க காலனி நாட்டுச் சந்தைகளைப் பிடிக்கவும் வளரும் நாடுகளால் இயலாது.

இதைப் போலவே, அதிக மக்கள் தொகைப் பெருக்கம் கொண்ட இந்தியா, சீனா போன்ற நாடுகளின் மக்கள் தொகை 'உபரி'யும் ஒர பிரச்சினையே! நவீன தொழில் அடிப்படைச் சமூகம் உருப்பெறுவதுடன் மரண விகிதமும் விரைவாகக் குறைவதைப் பார்க்க முடியும். ஆனால் பிறப்பு விகிதம் பல பத்தாண்டுகளுக்குப் பிறகுதான் குறைய ஆரம்பிக்கும். இதனால் மக்கள் தொகை விரைவில் பெருகுகிறது. இன்றைய வளர்ந்த நாடுகளில் இது நிகழ்ந்தபோது அவர்களுக்கு இரண்டு வசதிகள் இருந்தன. முதலாவதாக தொழில் வாய்ப்புகள் மிக வேகமாக வளர்ந்தன. பெருகும் மக்கள் தொகைக்கு தொழிற்துறையில் வேலையளிப்பது சாத்தியமாயிற்று இரண்டாவதாக, அமெரிக்கக் கண்டங்கள், ஆஸ்த்ரேலியா, தென்னாப்பிரிக்கா போன்ற இடங்களில் வெள்ளையர்களால் குடியேற முடிந்தது. எனவே மக்கள் தொகை உபரியால் அவர்களுக்குப் பிரச்சினை ஏற்படவில்லை. ஆனால் இந்தியா, சீனா, போன்ற நாடுகளில் காலனியாதிக்கக் காலகட்டத்தில்தான் மக்கள் தொகைப் பெருக்கத்தின் கட்டமே துவங்கியது. பெருகி வரும் மக்கள் தொகையை உட்கொள்ள தொழிற்துறை வளரவில்லை. இது மட்டுமின்றி, இருந்த கைத்தொழில்கள்

www.tamilarangam.net



போன்றவற்றையும் காலனியாதிக்கம் அழித்து விட்டது. இதனால் காலனியாதிக்கத்தின் உயிலாக, பூதாகரமான மக்கள் தொகை உபரிதான் நமக்குக் கிடைத்தது. இவர்களை இன்னொரு நாட்டில் குடியேற்ற முடியாது. சமகால தொழில் துறை இன்றைய வேகத்தில் வளர்ந்தால் எத்தனை காலமானாலும் மக்கள் தொகையில் ஒரு கணிசமான பகுதிக்கு உற்பத்தி முறையிலான தொழிலை இந்தத் துறைகளில் அளிக்கவே முடியாது. எனவேதான் இந்த நூற்றாண்டில் இந்தியாவின் 70 சதவிகித மக்களும் நெடுக விவசாயத் துறையிலேயே முடிங்கிக் கிடக்க வேண்டியதாயிற்று. இது பெரும்பான்மை மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கு தடையாக இருக்கிறது; வறுமையை நிரந்தரமாக்குகிறது.

பழைய சமூகக் கட்டுமானங்களையும் அமைப்புகளையும் தாக்கங்களையும் தகர்த்தெறியும் முழுமையான பூர்ஷ்வா சமூகப் புரட்சிகள் எந்த வளரும் நாடுகளிலும் இறுதியாக நடைபெறவில்லை. எனவே இதன் கடந்த காலம் இந்த நாடுகளின் வளர்ச்சிக்குப் பெரும் தடையாக இருக்கின்றன. இது மட்டுமன்றி, தத்தித் தத்தி நடைபோடத் துவங்கிய தொழில்களின் மீதெல்லாம், ஐரோப்பாவைப் போல் இரண்டு மூன்று நூற்றாண்டுகளில் உருவான ஏகபோகங்களின் ஆதிக்கம் நிலைபெற்று விட்டது. ஓரளவு எல்லா வளரும் நாடுகளுக்கும் இது பொருந்தும். உள்நாட்டு ஏகபோகங்களுடையவும் வெளிநாட்டு ஏகபோகங்களுடையவும் சேர்க்கையில் மட்டுமே வித்தியாசம் இருக்கும்.

இவைதான் தடைகள் எனில், முன்னர் இல்லாத சாதகச் சூழ்நிலைகளும் இருக்கின்றன. இவற்றில், நவீன அறிவியல்=தொழில் நுட்பப் புரட்சி குறிப்பிடத்தக்கது. சமகால தொழில் நுட்ப அறிவு, இன்றைய உலகில் வாழும் எல்லோருக்குமே சுபிட்சமாகப் பிழைக்கும் சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறது. சக்கரத்தை மீண்டும் கண்டுபிடிக்க நாம் முயற்சிக்க வேண்டாம். மனித குலத்தின் அறிவியல் பெட்டகத்திலிருந்து நாம் அதை எடுக்க முடியும். ஆனால், இது நடைமுறைக்கு வரவேண்டுமானால், ஒன்று இந்த அறிவியல் கண்டுபிடிப்புகளின் பயன் வளர்ந்த நாடுகளின் சுரண்டலுக்கு ஆட்படும் நிலை மாற வேண்டும். அல்லது இந்த அறிவியல் தொழில் நுட்ப ஆற்றல்களைப் பகுத்தாய்ந்து ஏற்றுக் கொள்ளவும் சொந்தக் காலில் நிற்கும் திறனை வளர்த்துக் கொள்ளவும் உதவும் சமூக மாறுதல்கள் வளரும் நாடுகளில் ஏற்பட வேண்டும்.

இதில் இரண்டாவதுக்கான முயற்சிதான், வளரும் நாடுகளனைத்திலும் உருவான தேசிய விடுதலைப் போர்கள். இந்தப்போர்களின் குணாம்சத்தில் மட்டுமின்றி அவற்றின் வாயிலாகஏற்பட்ட புதிய சமூகக்கட்டமைப்பின் குணாம்சத்திலும் வளரும் நாடுகளுக்கிடையே குறிப்பிடத்தக்க இடைவெளிகள் இருக்கின்றன. சீனா போன்ற நாடுகள் தங்களுடைய காலாவதியான கட்டமைப்பையும், வெளிநாட்டு ஏகாதிபத்தியத்தையும் பெரும்பாலும் துண்டித்துக் கொண்டு சோசலிசப் பாணியில் அமைந்த ஒரு வளர்ச்சிப் பாதையில் முன்னேறத்தான் முயன்றன. ஆனால் இந்தியா போன்ற நாடுகள் வளரும் நாடுகளில் இருப்பதைப் போன்று முதலாளித்துவ சமூக அமைப்பைப் பின்பற்றத்தான் முயன்றன. ஆனால் இந்த நாடுகளில் கூட எதிலுமே முதலாளித்துவத்தை நோக்கிச்

www.tamilarangam.net



செல்லும் பயணம் முற்றுப் பெறவில்லை. அது மட்டுமின்றி இந்தப் பயணம்கூட கடுமையான நெருக்கடியை எதிர்க்கொண்டிருக்கிறது. முதலாளித்துவ முன்னோடிச் சக்திகளுக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் உள்ள செல்வாக்குப் போன்றவை ஒவ்வொரு நாட்டிலும் மாபறுபட்டிருக்கும். இந்த நாடுகளின் முதலாளித்துவ வளர்ச்சியின் இன்றைய நிலை இதுதான். ஏகாதிபத்தியத்திடம் முழுதாகச் சரணடைந்து விட்ட நாடுகளும், ஏகாதிபத்தியத்தைச் சார்ந்திருப்பினும் ஓரளவு தன்னிச்சையான முடிவுகளை மேற்கொள்ளும் நாடுகளும் இருக்கின்றன. இந்த ஏற்றத் தாழ்வுகளை இங்கு விளக்கமாக ஆராயப் போவதில்லை.

ஓரளவு தன்னிச்சையான வளர்ச்சிப் பாதையைத் தேர்ந்ததெடுத்த நாடுகளில் இந்தியாவும் ஒன்று. ஏனைய வளரும் நாடுகளைத் தவிர்த்து இந்தியாவின் வளர்ச்சிக்கொள்கையில் மிகுந்த தனித்தன்மையைப் பார்க்கலாம். திட்டமிடுதல், பொதுத்துறை, சுயசார்பு, கடுமையான இறக்குமதிக் கட்டுப்பாடு போன்றவையே இவை. இவற்றை விளக்கமாக ஏழாவது அத்தியாயத்தில் ஆராய்ந்திருக்கிறோம். ஆயினும் இவை அனைத்துமே அண்மைக் காலப் பொருளாதார சீர்த்திருத்தங்கள் வாயிலாக திருத்தி எழுதப்பட்டுக் கொண்டிருக்கிறது. சுயசார்பிலிருந்து சரணாகதியை நோக்கித்தான் நாம் போய்க்கொண்டிருக்கிறோம். புதிய பாதை நம்முடைய பிரச்சினையைத் தீர்க்கப் போவதில்லை. அதோடு, விடுதலைப் போரின் பலனீட்டைக் கூட நாம் இழந்து விடும் நிலை இருக்கிறது.

ஆனால், இதற்கெதிராக நாடு தழுவிய எதிர்ப்புகள் கிளம்பவில்லை என்பது விந்தையே! 1981இல் இந்தியா சர்வதேச நாணய நிதி நிறுவனத்திடம் கடன் பெற முயன்ற போது எழுந்த எதிர்ப்பு கூட இன்றில்லை என்பது எதிர் பாராதது அல்ல! ஐரோப்பாவில் சோசலிசத்தின் வீழ்ச்சி நமது நாட்டு ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களில் ஒரு கணிசமான பகுதியை கொள்கையளவில் நிராயுதபாணிகளாக்கியிருப்பதாகத் தோன்றுகிறது! 1917இல் நடைபெற்ற சோவியத் புரட்சியும் ஐந்தாண்டுத் திட்டங்களும்தான், இந்தியாவின் தேசிய இயக்கங்களுக்குள் திட்டமிட்ட வளர்ச்சிப் பாதையைப் பின்பற்றுவதற்கான விவாதங்களுக்கு வித்திட்டன. சோவியத் யூனியன் வளர்ச்சியும், ஏகாதிபத்தியத்திற்கு எதிராக வலுவான சோசலிஸ்டு அணி உருப்பெற்றதும்தான், ஏறத்தாழ சுயேச்சையான ஒரு வளர்ச்சிப் பாதையைத் தெர்ந்தெடுக்க விடுதலைக்குப் பின் நமக்கு உதவியாக அமைந்தது. இந்த உலகச் சூழ்நிலையை இன்றைக்கு சோவியத் யூனியன் வீழ்ச்சி இல்லாதாக்கியதோடு, பொதுத்துறை திட்டமிடுதல், சுயசார்பு, சமூக நீதி போன்றவை அனைத்திலும் பல்வேறு தரப்பினரின் நம்பிக்கைகளையும் அசைத்து விட்டது. சோவியத் யூனியனுக்கே இந்த கதியென்றால் இந்தியாவுக்கு இனி என்ன வழி என்றுதான் எல்லோரும் நினைக்கின்றனர்! மிகப் பெரிய அறிவு மேதைகளின் ஆராய்ச்சி மூளைகளிலிருந்து சோசலிசத்துடன் ஏகாதிபத்தியமும் மறைந்து விட்டதாக கருத்து வெளியாகிக் கொண்டிருக்கிறது.

சோசலிசம், உலகெங்கிலுமுள்ள முற்போக்குவாதிகளின் எதிர்கால நம்பிக்கையாக இருந்தது. இதன் ஒளிதான் இப்போது மங்கியிருக்கிறது! இன்றைக்கு பரவலாகத் தென்படும் நிராதரவான நிலைக்கு இதுவே முக்கிய காரணம். இந்த

www.tamilarangam.net



உண்மையை எதிர்கொண்டுதான் முன்னோக்கிச் செல்ல முடியும். உலக வங்கியின் கணக்குகளிலிருந்து இன்றைக்கு தவிர்க்கப்பட்டிருக்கும் "முன்னாள் சந்தையில்லா கிழக்கு ஐரோப்பிய பொருளாதார அமைப்பு"களுக்கு என்ன நேர்ந்தது என்று ஒரு ஆரம்பப் பரிசோதனையாவது மேற்கொள்ளாமல்,இன்றைய உலகம் தொடர்பான இந்த விளக்கம் முழுமையடையாது.

**முதலாளித்துவமும் சோசலிசமும்**

சோசலிசப் பொருளாதாரத்திற்கும் முதலாளித்துவப் பொருளாதாரத்திற்கும் உள்ள இடைவெளியை கோட்பாடு அடைப்படையில் ஆராய்வதுதான் ஒரு வேளை பொருத்தமாக இருக்கும். இவை இரண்டுக்கும் இடையிலான மாறுபட்ட கோட்பாடுகளை எளிமையாகக் குறிப்பிடும் அட்டவணையைக் கீழே தருகிறோம்.

| | முதலாளித்துவம் | சோசலிசம் |
|---|---|---|
| உற்பத்திகளின் உடமை | முதலாளிகள் | பொதுவுடமை |
| மேலாண்மை வகிக்கும் வர்க்கம் | முதலாளிகள் | தொழிலாளிகள் |
| உற்பத்தியின் நோக்கம் | லாபம் | மக்களின் தேவை |
| பொருளாதார இயங்கு குணாம்சம் | போட்டி | ஒத்துழைப்பு |
| இயங்கு திசை | குழப்பத்தை நோக்கி | திட்டமிட்ட வளர்ச்சியை நோக்கி |
| இயங்கு பலன் | வறுமை | செழிப்பு |

மேலே குறிப்பிட்ட மாறுபட்ட பொருளாதாரங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள சில ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட ஒரு கட்டுரைப் பகுதியை மேற்கோளாக எடுத்துக் கையாண்டிருக்கிறோம். ஐரோப்பிய சோசலித்திற்கு ஏற்பட்ட வீழ்ச்சிசையைப் புரிந்துகொள்ள இந்த மேற்கோள் விளக்கத்திற்கு அடிப்படைத் திருத்தம் ஏதாவது தேவைப்படும் என்று தோன்றவில்லை.

"முதலாளித்துவ நாடுகளின் உற்பத்திச் சாதனங்கள்--தொழிற்சாலைகள், மூலப் பொருட்கள், வயல்கள்-போன்ற அனைத்தும் தனியார் உடைமையில் இருப்பவை. இவை ஒரு சில முதலாளிகளுக்கும் நிலப்பிரபுக்களுக்கும் சொந்தமானவை. உழைக்கும் பெரும்பான்மை மக்களுக்கு இவற்றின் மீது உரிமையில்லை. (இருப்பினும் அவை துச்சமானது; நிரந்தரமாக இழந்து கொண்டிருப்பவை) முதலாளிகள் தொழிலாளிகளை கூலிக்கு அமர்த்தி உற்பத்தியைப்பெருக்குகின்றனர். ஆனால் சோசலிஸ்டு நாடுகளில் முதலாளிகளும், நிலப்பிரபுக்களும் இல்லை. உற்பத்திச் சாதனங்கள் பொது உமையையில் இருக்கின்றன-சர்க்கார் அல்லது உழைப்பாளர் கூட்டுறவுச் சங்ககங்கள், அதுவும் இல்லாவிட்டால் ஒரு சிறு துறையில் சுய தொழில் புரிபவர்களுக்கிடையிலான ஒத்துழைப்பு. உற்பத்தியின் மீது அவர்களுடைய பிரதிநிதிகள் செலுத்தும் கட்டுப்பாடு-இவை தான் இந்த நாடுகளில் இருக்கும் உற்பத்தி உறவுகள்"

www.tamilarangam.net



"முதலாளிகள் லாபம் பெறுவதற்குத்தான் உற்பத்தியை ஒருங்கிணைக் கிறார்கள், லாபத்தை அடிப்படையாகக் கொண்டதுதான் முதலாளித்துவம். சோசலிச அமைப்பில் லாபம் பெறுவது உற்பத்தியின் நோக்க மல்ல! மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதே குறிக்கோள். இவ்வளவு லாபம் கிடைத்தால்தான் உற்பத்தி முறையாக நடைபெறும் என்பதில்லை. உற்பத்தியில் கிடைக்கும் உபரி, அதன் வினியோகம் போன்றவை முன்கூட்டியே தீர்மானிக்கப்படுகிறது. ஆனால் முதலாளித்துவ நாடுகளில் இத்தகைய மையப்படுத்திய திட்டமிடுதல் எதுவும் கிடையாது. ஒவ்வொரு முதலாளியும் ஒருவருக்கொருவர் கழுத்தறுப்புப் போட்டி நடத்தியவாறுதான் லாபம் சம்பாதிக்க முடியும்; முன்னேற முடியும். போட்டியின் அடிப்படையில் அமைந்தது முதலாளித்துவம். இந்தப் போட்டியின் சிருஷ்டியான அராஜக நிலை சோசலிசத்தில் கிடையாது."

"போட்டியையும் லாபத்தையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு பொருளாதார அமைப்பில், உற்பத்தி சுமுகமாக நடைபெறாது இடையிடையே உற்பத்தி "தேவையை மிஞ்சி"விடும். தேவையை மிஞ்சிவிடும் என்றால் மக்களின் தேவையை மிஞ்சிவிடும் என்று பொருளல்ல!"

"முதலாளிகளுக்கு, அவர்கள் எதிர்பார்க்கும் லாபம் கிடைக்கத் தேவைப்படுவதைவிடக் கூடுதலான உற்பத்தி என்றுதான் இதன் பொருள். முதலாளித்துவ உலகில் தேவைக்கும் தேவையின்மைக்கும் எல்லை வரம்பும் கிடையாது. மாறாக லாப நோக்கம் மட்டும்தான்! அனைத்தும் லாபத்திற்கு கீழ்ப்படிந்திருக்கிறது."

"இவ்வாறு ஏழெட்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை 'மித மிஞ்சிய உற்பத்திக் குழப்பம்' ஏற்படுகிறது. பொருட்கள் தேங்க ஆரம்பிக்கின்றன. வேலையில்லாத் திட்டாட்டம் பெருகுகிறது. வறுமை தலை விரித்தாடுகிறது. ஏன்? பொருட்களை வாங்க ஆளில்லையா? அதில்லை, அவர்களுக்கு பொருட்களை அளித்தால் லாபம் கிடைக்காது. பொருட்கள் தேவைக்குமேல் தேங்கியிருக்கின்றன. அவற்றை அழித்தால்தான் பொருளாதார அமைப்புச் சக்கரம் முன்னோக்கி உருளும்."

"சோசலிச நாடுகளிலும் பொருளாதார நெருக்கடிகள் ஏற்படலாம். சோசலிச நாடுகளில் பல அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளைவிட பொருளாதாரத் துறையில் இன்றைக்கு எவ்வளவோ பின்தங்கித்தான் இருக்கின்றன. இதனை ஒட்டிய பிரச்சினைகளும் இருக்கின்றன. ஆனால் முன்னர் குறிப்பிட்டதைப்போல் இடையிடையே 'மிதமிஞ்சிய உற்பத்திக் குழப்பம்' எனும் அராஜகம் எந்த சோசலிச நாட்டின் வளர்ச்சியிலும் பார்க்க முடியாது. ஏனென்றால் இந்தப் பொருளாதார அமைப்புகள் லாபத்தையும் போட்டியையும் அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. மாறாக, ஒத்துழைப்பையும், திட்டங்களையும் அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன என்பதே காரணம்"..

"இதனால் சோசலிச உலகில் மக்களின் வாழ்க்கைத் தரம் முறையாக முன்னேற்றமடைகிறது. முதலாளித்துவ அமைப்பில் வறுமைப் பிடிப்பு உச்சமடைகிறது. அதன் அளவில் ஏற்றத்தாழ்வுகள் இருக்கலாம். ஆயினும் இரண்டில்

www.tamilarangam.net



ஒன்று நிச்சயம். ஏனென்றால் உற்பத்தியில் உழைப்பாளிகளின் விகிதத்தை குறைத்தோ, ஓரளவு தளர்த்தவோ செய்யாமல் லாபப் போட்டியின் அடிப்படையிலான எந்தப் பொருளாதார அமைப்பும் முன்னேற முடியாது. ஏழை-பணக்காரன் இடைவெளி தவிர்க்க முடியாதது. (உலக வங்கியும்-சர்வதேச நாணய நிதி நிறுவனமும் 1986 - பக்கம் 11 - 14)

மேலே குறிப்பிட்ட மேற்கோள் விளக்கத்திற்கு எத்தகைய அடிப்படைத் திருத்தமும் தேவையில்லை என்பதன் பொருள் ஒரு திருத்தமும் கூடாது என்பதல்ல! சோசலிச சமூக அமைப்பு ஏட்டுத்தப்பட்டால் பிறகு வறுமையிலிருந்து வளமையை நோக்கிய பிரச்சினைகளற்ற முன்னேற்றம் தவிர்க்க இயலாது என்ற கருத்தை இந்த மேற்கோள் ஏற்படுத்துமானால் அது தவறு என்பதைச் சொல்லியே ஆகவேண்டும். பிரச்சினையின்றி முன்னேறுவதற்கான பொருளியல் சூழ்நிலையை மட்டும்தான் சோசலிச சமூக அமைப்பு உறுதி செய்கிறது. இந்தச் சூழ்நிலை பயன்படுத்தப்படுமா இல்லையா என்பது செயலாற்றுத் திறன்களைப் பொறுத்திருக்கிறது. முதலாளித்துவத்தில் குழப்பங்களும் வறுமையும் தவிர்க்க இயலாதது. அதுதான் முதலாளித்துவ இயக்க இயல். சோசலிசத்தில் இது தவிர்க்க இயலாதது அல்ல. பொருளாதாரக் குளறுபடிகளைத் தவிர்த்து, எல்லோருக்கும் வளர்ச்சியை உறுதி செய்ய சோசலிசம் இன்றிமையாதது. அது ஒரு அவசியமான நிபந்தனை **(Necessary Condition)** ஆனால் அது போதுமான நிபந்தனை அல்ல **(Sufficient Condition)** வேறு பலவும் தேவைப்படுகிறது.

சோசலிச உலகம் என்பது மனிதன் சுய உணர்வுடன் சிருஷ்டிப்பது. வரலாற்றின் விளையாட்டுக் கருவியாக இருப்பதற்கு மாறாக, முழுப் பொருளில் மனிதன் வரலாற்றின் சிருஷ்டிகர்த்தாவாக மாறுவது சோசலிசத்தில் மட்டுமே! இந்த சிருஷ்டிவேள்வி வெற்றிபெற வேண்டுமானால், கண்ணும் கருத்துமிக்க எச்சரிக்கையும் சோசலிச உணர்வும் இருந்தே ஆகவேண்டும். இல்லாவிடில் அபாயகரமான வீழ்ச்சிகள் ஏற்படலாம். இத்தகைய எண்ணற்ற வீழ்ச்சிகள் சோசலிச கட்டுமானப் பணியில் நேர்ந்தனவென்பதில் சந்தேகமில்லை. மேற்கூறிய நாடுகளில் சோசலிசத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி, இது தொடர்பான சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டது.

இந்த தவறுகள் என்னென்ன என்பதில் கருத்து வேற்றுமை இருக்கலாம். இறுதி வார்த்தை என்று எதையும் சொல்வதற்கில்லை. பல விஷயங்களை இன்னும் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே வீழ்ச்சிகளைப் பட்டியல் போட்டுச் சொல்ல முயலவில்லை. இருப்பினும் ஐரோப்பிய சோசலிச நாடுகளில் கடந்த முப்பதாண்டுகளாக நடைபெற்ற சீர்திருத்த முயற்சிகளையும், சீனா உட்பட ஆகிய சோசலிச நாடுகளில் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் சீர்திருத்தங்களையும், பொதுவாக ஆராய்ந்தால் சந்தைப் பொருளாதாரத்தை ஒரு எல்லை வரையிலாவது புனரமைக்கும் முயற்சி நடைபெறுவதை உணரலாம். சந்தையை முற்றும் புறக்கணித்தல் - திட்டமிடுதலில் எல்லையை மீறிய மையப்படுத்தல் - ஆகியவை முக்கிய வீழ்ச்சியாக பின்னோக்கும்போது தெரிகிறது.

www.tamilarangam.net



முதலாளித்துவமும் உருப்பெறுவதற்கு முன்னரே சந்தை இருந்தது. சோசலிசத்திலும் சந்தைக்கு இடமிருக்கிறது. ஆனால் இந்த சோசலிசச் சந்தை திட்டமிடுதலுக்குக் கீழ்படிந்துதான் செயல்படும். சந்தையையும் திட்டமிடுதலுக்கு ஒரு சாதனமாகக் கருத வேண்டும். இதற்கு மாறாக திட்டமிடுதலுக்கு நேர் எதிரானதாக சந்தையைக் கருத்திற்கொண்டு அதை முற்றிலும் புறக்கணித்தால்? அது பொறுப்பின்மைக்கு இட்டுச் செல்லும்.

எளிமையான ஒரு உதாரணத்தைக் கொண்டு இதை விளக்கலாம். பெரிய தொழிற்சாலையை எடுத்துக் கொண்டால் அதில் பல துறைகள் இருக்கும். ஒரு துணி ஆலையை எடுத்துக் கொள்வோம். அதில் நெசவு, பிரிண்டிங், பேக்கிங் என பல பிரிவுகள் இருக்கின்றன. ஒவ்வொரு பிரிவுகளுக்கிடையிலும் கொடுக்கல், வாங்கல் இருக்கும். ஆலையின் உற்பத்தியைத் திட்டமிடும்போது நிர்வாகம் இந்த உறவுகளைக் கருத்திற் கொள்ள வேண்டும். ஆனால் இவற்றினை சாதாரண தொழில் நுணுக்க உறவுகளைத்தான் அவர்கள் கணக்கிடுவார்கள். நெசவுத் துறைக்கான நூலை நூற்புத்துறை தயாரிக்க வேண்டும். நெசவுக்குப் பிறகு டிசைன் பதிப்பிக்க வேண்டியது பிரிண்டிங் பிரிவின் பணி. இவ்வாறுதான் சிந்திப்பார்கள். ஆனால் என்ன விலைக்கு நூற்புத்துறை நெசவுத்துறைக்கு நூல் விற்கிறது என்பதைப் போன்ற பொருளாதார உறவுகளை நிர்வாகம் கருத்திற் கொள்வதில்லை. காரணம் மிகத் தெளிவானதுதான். இந்தப் பரிமாற்றங்கள் அனைத்தும் ஒரே நிறுவனத்திற்குள் நடைபெறுகிறது. கணக்கெழுத எந்தத் தொகையை வேண்டுமானாலும் ஏற்றுக் கொள்ளலாம். ஒரு துறைக்கு ஏற்படும் நஷ்டம் இன்னொரு துறைக்கு லாபமாகலாம். எதுவானாலும் அந்த ஆலைக்குள்ளேயே வட்டமடிக்கிறது; அவ்வளவுதான்.

தேசத்தை முழுக்க ஒரு ஆலையாக எண்ணி வெவ்வேறு பொருளாதார அமைப்புகளுக்கும், பகுதிகளுக்கும் இடையில் நிலவும் உறவுகளை திட்டம் தீட்டுவோர் தன்னிச்சையாக நிர்ணயிக்க ஆரம்பித்தால், அது பிரச்சினைகளை ஆபத்திற்குத்தான் அழைத்துச் செல்லும். நாட்டை முழுக்க ஒரு தொழிற்சாலையைப் போல் கருத முடியாது. அந்த அளவுக்கு உற்பத்திச் சக்திகள் வளரவில்லை என்பதே உண்மை. (என்றைக்காவது அது நிகழுமா என்பதும் சர்சசைக்குரியது) எதுவாயினும் சோவியத் பொருளாதார அமைப்பு வெவ்வேறு துறைகளிலும்: வெவ்வேறு உடைமைகளிலும் (உதாரணம்: சர்க்கார் உடைமை, கூட்டுறவு உடைமை, சிறு சொத்துடைமை செயல்படும் எண்ணற்ற அமைப்புகளைக் கொண்டது. இவற்றுக்கிடையிலான உறவுகளை ஒரு சார்பாக மையப்படுத்தி முடிவெடுக்க இயலாது. இவற்றை நிர்ணயிப்பதில் சந்தைக்கு ஒரு முக்கியப் பங்கிருக்கிறது. இதை மறுப்பது பொறுப்பின்மைக்கும் தொழில் நுணுக்கச் சீரமைப்பிற்கும், உத்வேகச் சோர்வுக்கும்' இறுதியில் ஊழலுக்கும் பொய்க்கணக்குகளுக்கும் இழுத்துச் சென்று விடும்.

சந்தைப் புறக்கணிப்பு, ஒரு பெரிய வீழ்ச்சிதான். சோசலிசப் பரிணாமத்தில் உள்ளடங்கிய கால நீடிப்பையும், அதன் சிக்கல்களையுப் குறைத்து மதிப்பிட்டனர். இவ்வாறு பலவற்றைச் சுட்டிக்காட்ட இயலும். லெனின் வடிவமைத்த 'புதிய பொருளாதார முறை' ஸ்டாலின் தலைமையில் திடீரென்று நிறுத்தப்பட்டுக் கட்டாயக்

www.tamilarangam.net



கூட்டுப்பண்ணை முறையைக் கொண்டு வந்தது சோவியத் விவசாயத் துறைக்கு ஆற்ற முடியாத காயத்தை ஏற்படுத்தி விட்டதாகக் கூறும் சோசலிச மேதைகள் இருக்கிறார்கள். உற்பத்தியை எப்படியேனும் பெருக்க வேண்டுமென்ற ஆர்வத்தில் சூழ்நிலை விளைவுகளைப் புறக்கணித்ததும் அழிவுக்கு ஒரு காரணம் என்று என்னுபவர்களும் இருக்கிறார்கள். பொருளாதாரத் துறையில் அதிகார வர்க்க மயம், தொழிலாளிகளை அன்னியப்படுத்தல் போன்றவையும் பெரும் தலைவலியாக இருந்தது.... ஆயினும், நாங்கள் ஏற்கனவே கூறிவிட்டோமல்லவா' இந்தத் தவறுகளையெல்லாம் பட்டியல் போட விரும்பவில்லையென்று!

தவறுகள் நேர்வது சகஜம்தான். ஆனால், இந்தத் தவறுகள் சரியான சந்தர்ப்பத்தில் திருத்தப்படாமல் குவியலாகச் சேர்ந்து அமைப்பின் அழிவுக்கே வழி கோலிவிட்டது என்பதுதான் விடை காண முடியாத பிரச்சினையாக இருக்கிறது. முதலாளிகளுக்கும் பொருளாதார முடிவுகளில் பயங்கரமான வீழ்ச்சிகள் ஏற்படுவதுண்டு. பிரம்மாண்டமான கம்பெனிகள் பல உருக்குலைந்து அழிந்து போனதில்லையா? ஆம்; தவறைத் திருத்தாவிட்டால் முதலாளி திவாலாக வேண்டியதுதான். சந்தை அவருக்கும் பாடம் கற்றுக் கொடுக்கும். மிகவும் பொறுப்புணர்வுடன் முடிவெடுத்துச் செயல்படுபவர்களால் மட்டுமே முதலாளித்துவச் சந்தைப் போட்டியில் தாக்குப் பிடிக்க முடியும். சமூக அளவில் எத்தகைய பாதிப்புகள் ஏற்படினும் (முதலாளித்துவ அமைப்பைக் குறித்து நமது விமர்சனமும் இதுவே) பொருளாதாரத்துறையில் மெற்கொள்ளப்படும் பொறுப்பான முடிவுகள் சந்தையை பலப்படுத்தும். இவ்வாறு தானாக இயங்கும் ஒரு இயக்கம் சோசலி சத்தில் கிடையாது. உணர்வுபூர்வமாகச் செயல்பட்டு தவறைத் திருத்தியே ஆகவேண்டும். இந்தத் திருத்தல் பணி நிரந்தரமாக நடைபெற வேண்டுமானால், தவறுகளை சுட்டிக் காட்டவும், விமர்சிக்கவுமான உரிமையை எல்லோருக்கும் உறுதி செய்ய வேண்டும். உண்மையான ஜனநாயகம் உறுதி செய்யப்பட்டால்தான் நீண்ட காலச் சோசலிச முன்னேற்றத்தை எட்ட முடியும்.

உண்மையான ஜனநாயகம் என்பது செல்வத்தையும், அதிகாரங்களையும், மீடியாகக்ளையும் ஒரு சில ஏகபோகங்கள் கையடக்கும் முதலாளித்துவ அமைப்பில் சாத்தியமற்றது. ஆனால், இது முதலாளித்துவ அமைப்புக்கும் அதன் நீடிப்புக்கும் ஒரு பிரச்சினை அல்ல! பெயரளவு ஜனநாயகம்கூட முதலாளித்துவ அமைப்புக்குத் தேவையில்லை. மூன்றாவது உலக நாடுகளில் இருக்கும் பாராளுமன்ற ஜனநாயகம்கூட வளர்ச்சிக்குத் தடையாக இருப்பதாகத்தான் பல்வேறு 'வளர்ச்சி வல்லுனர்கள்' என்னுகின்றனர். "மிருதுவான ஆட்சிக்கும்" " திடமான ஆட்சிக்கும்" இருக்கும் வேறுபாடுகளையும் அது பொருளாதார வளர்ச்சியில் ஏற்படுத்தும் விளைவுகளையும் பாதிப்புகளையும் குறித்து 'அக்காடமி ஆய்வுகள்' நிரம்பச் சுட்டிக் காட்ட முடியும். முதலாளித்துவ உலகின் அரசியல் வரலாற்று ஏடுகளில், மன்னர்கள், ராணுவ சர்வாதிகாரிகள் மற்றும் பாசிசத்தின் கதைதான் இருக்கிறது. மேற்கத்திய ஜனநாயகம் ஒரு குறுகிய கால உண்மை மட்டுமே. ஆனால் சோசலிசத்தின் நீண்டகால முன்னேற்றம் உறுதி செய்யப்பட வேண்டுமென்றால் உண்மையான ஜனநாயகம் (அது எந்த உருவிலாகவும் இருக்கலாம்) மலர்ந்தே ஆக வேண்டும்.

www.tamilarangam.net



துரதிர்ஷ்டம் என்றே கூறவேண்டும் ஜனநாயகத்தை உறுதி செய்யும் நம்பிக்கையளித்த இயக்கங்கள் செயல்படவில்லை. விளைவு? தவறுகள் பெருகிக் குவிந்து, பொருளாதாரக் கட்டுமானம் முழுக்க அசைவற்ற நிலைக்குள் சருக்கி விழுந்து விட்டது.

இதைத் திருத்திச் சீர்படுத்த முயன்றவர்களும் மறுகிணர் தாண்டி சோசலிசச் சமூக அமைப்பே தேவையில்லை என்று வந்து விட்டார்கள். ஐரோப்பியச் சோசலிச அமைப்பின் இந்த கவிழ்ப்பு வேலையைப் பற்றி இங்கு ஆராய விரும்பவில்லை. மேற்கத்திய செய்தி, தகவல் ஒலி, ஒளி பரப்புச் சாதனங்களின் அடிப்படையில் அதற்கு முயற்சிப்பது முட்டாள்தனம். மூன்றாம் உலக நாடுகளின் ரத்தத்தைப் பிழிந்தெடுக்கும். மேற்கத்தியக் காட்டேரிகளின் மகிழ்ச்சிக் கூத்தாட்டத்திலிருந்து நாம் ஒன்றை உறுதி செய்யலாம். இடுக்கண்களின் நாட்கள் நம்மை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றன.

முற்போக்குச் சக்திகளுக்கு இந்தப் புதிய நிகழ்ச்சித் தொடர்கள் பலமான திருப்பித் தாக்குதல்தான்! ஆனால் இன்றைக்கும் மூன்றாம் உலகச் சோசலிச நாடுகள் இருக்கின்றன. கிழக்கு ஐரோப்பியாவிலும் உண்மையான சோசலிஸ்டுகள் முன்னுக்கு வருகிறார்கள். சோசலிசத்திற்காகவும், விடுதலைக்காகவும் போராடிக் கொண்டிருக்கும் கோடிக்கணக்கான மக்கள் உலகெங்களிலும் இருக்கிறார்கள். முதலாளித்துவச் சுரண்டல் தொடரும் வரை, அந்தச் சுரண்டலுக்கு முடிவு கட்டி ஒரு புத்துலகைச் சமைக்க விரும்பும் மனிதனின் வேட்கைக்கு கடிவாளம் போட யாராலும் முடியாது. ஏகாதிபத்தியம் இருக்கும்வரை விடுதலைக்கான தேசியப் போராட்டங்கள் தொடரும் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல் மூன்றாம் உலக நாடுகளைப் பொறுத்தவரை முதலாளித்துவம் ஒரு அடைபட்ட பாதை! வரலாறு இன்றுடன் முடியப் போவதில்லை. இந்த தவிர்க்க முடியாமையை மூன்றாம் உலக நாடுகளுடையவும் இந்தியாவினுடையவும் சமகால நெருக்கடியின் பின்னணியில் திரை விலக்கிப் பார்ப்பதே இந்த நூலின் குறிக்கோள்.

www.tamilarangam.net

# 2

# வெளிநாட்டுச் செலாவணியில் நெருக்கடி

வளர்ந்த முதலாளித்துவ நாடுகளுக்கும் வளரும் நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகள் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. மாறாக அது ஒருதலைச் சார்பு அடிப்படையிலானது. ஒத்துழைப்புக்கு மாறாக சுரண்டல் தன்மை வாய்ந்தது. இதன் வாயிலாக ஏகாதிபத்திய நாடுகள் நம்மைச் சுரண்டுகின்றன. இதைத்தான் கடந்த அத்தியாயத்தில் ஆராய்ந்தோம். நிரந்தரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தச் சுரண்டல், வளரும் நாடுகளில் எப்படிக் குழப்பங்களை உருவாக்குகிறது. வெளிநாட்டு நாணயச் செலாவணியில் நெருக்கடிக்கு வழிகோலுகிறது என்பதைத்தான் இனி ஆராய வேண்டும்.

### வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனை

வெளிநாட்டுக்குள் நுழையும் முன் நமது நாட்டுப் பரிவர்த்தனையை ஒரு முறை ஆராய்வோம். நமக்குத் தேவையான எல்லா பொருட்களையும் நாம் தயாரிப்பதில்லை; அதைப் போலவே நாம் தயாரிப்பதில் பலவற்றை நாம் பயன்படுத்துவதுமில்லை. இத்தகைய ஒரு சமூக அமைப்பில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பொருட்களையும் உதவிகளையும் தொடர்ந்து பெற்றுக் கொண்டும், விற்றுக் கொண்டும் பரிமாற்றம் செய்து கொள்ளாமல் நம்மால் வாழ முடியாது. இந்தக் கொடுக்கல் வாங்கல் பரிமாற்றத்தின் மையமாக இருப்பது பணம்தான். இந்தப் பரிமாற்றத்தில் அல்லது கொடுக்கல் வாங்கலில் பொருளின் விலையை நிர்ணயிக்கும் அளவுகோல் பணம் தான். எல்லாவற்றின் விலையையும் பணம் மூலம்தான் வெளிப்படுத்துகிறோம். பணம் இல்லாத ஒரு நிலையை எண்ணிப் பாருங்கள். ஒரு நவீன துக்ளக் பாணியில் இந்த வினாடியிலிருந்து பணம் தடை செய்யப்பட்டு விட்டது என்று வைத்துக் கொள்ளோம். பொருளாதார அடிப்படையே அசைவற்றுப் போய்விடும்.

www.tamilarangam.net



நாட்டில் பல பேர் திருவோடேந்த நேரிடும்! ஏனென்றால் பணம் விலையை நிர்ணயிக்கும் அளவுகோல் மட்டுமில்லை. நமது சம்பாத்தியச் சேமிப்பும் அதன்மூலம் தான் நிகழ்கிறது. இதைக் கூடச் சகித்துக் கொள்ளலாம். ஆனால் பணம் இல்லாவிட்டால் பரிமாற்றமே இயலாது போய்விடும். பரிமாற்றத்திற்கான மையம்தான் பணம்.

பணம் கைமாறாமல்கூட பரிமாற்றத்தை மேற்கொள்ளலாம். ஆனால் அது ஒரு சர்க்கஸ் வேலையாகத்தான் இருக்கும். உங்களிடம் ஒரு கன்றுக்குட்டி இருக்கிறது. ஆனால் உங்களுக்கு பத்து கிலோ அரிசி வேண்டும். இன்றைய அமைப்பில் நீங்கள் என்ன செய்வீர்கள்? முதலில் கன்றுக்குட்டியை விற்று பணம் பெறுவீர்கள். பிறகு அந்தப் பணத்தைக் கொண்டு பத்து கிலோ அரிசி வாங்குவீர்கள்.

ஆனால், பணம் தடை செய்யப்பட்டால் நீங்கள் திண்டாட வேண்டியதுதான். அரிசியை விற்க முன்வரும் ஒருவனைக் கண்டுபிடித்தால் மட்டும் பரிமாற்றம் நடைபெறாது. அரிசிக்கு மாற்றாக அவனுக்கு துணிதான் தேவையென்றால் நீங்கள் வேறு ஆளைத் தேடவேண்டியதுதான். அரிசிக்கு மாற்றாக கன்றுக்குட்டி தேவைப்படும் ஒருவனைக் கண்டுபிடித்தே ஆக வேண்டும்.

பிரச்சினை அதோடு முடியப் போவதில்லை. அரிசிக்காரனிடம் ஐந்து கிலோ அரிசிதான் இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். உங்களால் என்ன செய்ய இயலும்? கன்றுக் குட்டியைப் பங்கு போட்டு அரிசிக்குப் பணம் கொடுக்க முடியுமா? இன்னொருவனைத் தேட நேரிடும். இப்படித் தேடிக் கொண்டிருப்பதற்கிடையில் கன்றுக்குட்டிக்கு ஏதாவது நோய் ஏற்பட்டு அது செத்துவிட்டால் எவ்வாமே தொலைந்ததுதான்! பணம் இல்லையேல் ஏற்படும் சிரமங்களைப் பாருங்கள்!

பணம் இல்லாவிடில் நாடுகளுக்கிடையிலான பரிமாற்றத்திலும் அதாவது வெளிநாட்டுப் பரிவர்த்தனையிலும் இதே நிலைதான். ஆனால் வெளிநாட்டுப் பரிவர்த்தனைக்கு நமது நாட்டில் பயன்படுத்தப்படும் ரூபாயும் பைசாவும் போதாது. ஒன்று, நம்மிடம் தங்கம் இருக்க வேண்டும். அல்லது பிற நாடுகளுக்கும் உடன்பாடான நாணயம் தேவை. வெளிநாட்டினர் அனைவருக்கும் உடன்பாடான இத்தகைய நாணயங்கள் கீழ் வருமாறு:

அமெரிக்கா-டாலர், பிரிட்டன்-பவுண்ட், ஜப்பான்-யென், ஜெர்மனி-மார்க், ஃபிரெஞ்சு-ப்ராங்க், இவற்றில் மக்களிடம் பிரபலமானது அமெரிக்க டாலர் தான், வெளிநாட்டுடன் பரிமாறிக்கொள்ள தங்கம் அல்லது டாலர் தேவை என்று சொல்லலாம்.

ஒரு டாலர் எத்தனை ரூபாய்க்குச் சமம்? இதன் மாற்று அளவுதான், நாணய பரிவர்த்தனை எனப்படுவது. வெளிநாட்டு நாணயப் பரிமாற்றம், அன்னியச் செலாவணி மாற்று என்றெல்லாம் இது அழைக்கப்படுகிறது. வெளிநாட்டுப் பரிமாற்றம் என்றால் தேசிய நாணத்தையும், வெளிநாட்டு நாணயத்தையும் ஒன்றுக்கொன்று மாற்றிக் கொள்வது, கைமாறுவது என்று பொருள். இதை எப்படி நிர்ணயிப்பது? ஒரு டாலர் கொடுத்தால் எத்தனை கிராம் தங்கம் கிடைக்கும்? அந்த

www.tamilarangam.net



அளவு தங்கம் கிடைக்க எவ்வளவு ரூபாய் கொடுக்க வேண்டும். இதன் அடிப்படையில் டாலருக்கும் ரூபாய்க்கும் இடையிலான மாற்று மதிப்பை நிர்ணயிக்கலாம். ஆனால் இன்று தங்கத்தை இப்படி இஷ்டப்படி வாங்கவும் விற்கவும் முடியாது. தங்கத்தை ஏற்றுமதி செய்யவும் இறக்குமதி செய்யவும் சர்க்காருக்கு மட்டுமே உரிமையிருக்கிறது. எனவே வெளிநாட்டுப் பரிமாற்ற மதிப்பை நிர்ணயிக்க வேறு வழியைக் கையாள்கின்றனர். ஒரு குறிப்பிட்ட ரகப் பொருளுக்கு அமெரிக்காவில் என்ன விலை? இந்தியாவில் என்ன விலை? டாலருக்கும் ரூபாய்க்கும் இடையிலான கொள்முதல் விலையின் மீதம் இதிலிருந்து நமக்கு கிடைக்கும். இதை அடிப்படையாகக் கொண்டும் வெளிநாட்டுப் பரிமாற்ற மதிப்பை நிர்ணயிக்கலாம். நடைமுறையில் இப்படியெல்லாம் பரிமாற்ற மதிப்பு நிர்ணயிக்கப்படுவதில்லை என்பது வேறு விஷயம்.

அதிருக்கட்டும், முக்கியமான விஷயம் இதுதான். வெளிநாட்டுப் பரிமாற்ற மதிப்பு ஒரு முறை நிர்ணயிக்கப்பட்டு விட்டால், முடிந்தவரை அது நிலைத்து நிற்பதுதான் பரிமாற்றத்திற்கு நல்லது. ஏனென்றால் வெளிநாட்டு பரிமாற்றத்தில் மதிப்பை அளந்து திட்டப்படுத்துவதே இதன் அடிப்படையில்தானே! ஆனால் அளவுகோல் அடிக்கடி மாறிக்கொண்டிருந்தால் அளக்க முடியுமா? நமது சம்பாத்தியங்களை வெளிநாட்டு நாணயத்தில் சேமித்துப் பாதுகாத்தால் கடன் மற்றும் கொடுக்கல் வாங்கல் சிரமமானதாகி விடும்.

ஒரு டாலர் 31 ரூபாய்க்குச் சமம் என்று வைத்துக் கொள்வோம். வெளிநாட்டிலிருந்து பொருட்களையும் சேவைகளையும் இறக்குமதி செய்யவும், அன்னியக் கடன்களைத் திருப்பிச் செலுத்தவும் டாலர் தேவைப்படும். இந்தத் தேவைக்காக சர்க்காரை நாடுபவர்களுக்கு 31 ரூபாய்க்கு ஒரு டாலர் வீதம் கொடுக்க சர்க்காருக்குப் பொறுப்பிருக்கிறது. இந்திய அரசுக்கு இந்த டாலர் எங்கிருந்து கிடைக்கிறது? இந்தியாவிலிருந்து பொருட்களையும், சேவைகளையும் ஏற்றுமதி செய்யும்போது டாலர் கிடைக்கிறது. வெளிநாட்டுக் கடன்கள் மூலமும் டாலர் கிடைக்கும்.

இவ்வாறு ஒவ்வொரு ஆண்டும் அரசுக்கு வெளிநாட்டு நாணய வருவாயும், வெளிநாட்டு நாணயச் செலவும் ஏற்படுகிறது. ஏதாவது ஒரு ஆண்டில் வருவாயைவிட அதிகமாக வெளிநாட்டு நாணயச் செலவு ஏற்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். இத்தகைய சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவதற்காக ஒரு குறிப்பிட்ட தொகை வெளிநாட்டு நாணயத்தை சர்க்கார் தன்னுடைய இருப்பில் வைத்திருக்கும். இதைத்தான் அன்னியச் செலாவணி இருப்பு **(Foreign Exchange Reserve)** என்று சொல்கிறோம். வழக்கமாக டாலர், பவுண்ட், போன்று ஏதாவது நாணய உருவில்தான் இந்தச் செலாவணி இருப்பு வைக்கப்பட்டிருக்கும்.

ஆனால், தொடர்ந்து எல்லா ஆண்டுகளிலும் வெளிநாட்டு நாணயத்தில் அரசுக்கு அதிகச் செலவு ஏற்பட்டால் கையிருப்பு கரைய ஆரம்பிக்கும். பிறகு பரிவர்த்தனைக்கு தேவைப்படும் வெளிநாட்டு நாணயமும் இருக்காது. வெளிநாட்டுப் பரிமாற்றத்தில் நெருக்கடி ஏற்படும். உண்மையில் இருப்பு இல்லாமல் கூடப் போக

www.tamilarangam.net



வேண்டும். அப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டாலே போதும். வெளிநாட்டுப் பரிமாற்றத்தில் ஈடுபடுபவர்கள், வெளிநாட்டு நாணயத்தை வாங்கிப் பதுக்க முயல்வார்கள். சர்க்கார் டாலருக்கு நிர்ணயிக்கப்பட்ட விலை 31 ரூபாயாக இருக்கலாம். ஆனால் ஒரு டாலரை 35.40, ரூபாய் என்று வாங்க ஆட்கள் தயாராக இருப்பர்கள். எனவே வெளிநாட்டுப் பரிவத்தனையின் மீது கட்டுப்பாட்டைக் கொண்டுவர அரசு நிர்ப்பந்தத்திற்குள்ளாகும் நிலை உருவாகும்.

**பேலன்ஸ் ஆப் பேமண்ட்: ஏற்றுமதி-இறக்குமதி**

வெளிநாட்டுப் பரிமாற்ற நெருக்கடியைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு மிகவும் எளிமையான வழி ஏதாவது ஒரு நாட்டின் ஏற்றுமதி இறக்குமதிக் கணக்கை ஆராய்ந்தால் போதும். ஒரு நாட்டின் வருடாந்திர வெளிநாட்டு வர்த்தகச் செலவினக் கணக்கை (Balance of Payments) என்கிறோம். வழக்கமான வரவு செலவுக் கணக்குகள் போன்றதுதான் இதுவும். 1988-89 ஆண்டு இந்தியாவின் கணக்கை பட்டியல் 2-1இல் பார்க்கவும். அதனை இன வாரியாக எடுத்து ஆராயலாம்.

முதலாவது இனம் பொருட்களின் ஏற்றுமதியும் இறக்குமதியுமாகும். 1988-89 ஆண்டில் இந்தியா 20647 கோடி ரூபாய் பொருட்களை ஏற்றுமதி செய்திருக்கிறது. அதேபொழுது 34202 கோடி பொருட்களை இறக்குமதி செய்திருக்கிறது.

பொருட்களின் ஏற்றுமதியையும், இறக்குமதியையும் ஒப்பிட்டுக் கணக்குப் பார்ப்பதை வர்த்தக மிச்சம் (Trade Balance) என்று அழைக்கிறோம். 1988-89இல் இந்தியாவின் வர்த்தக மிச்சம் 13555 கோடி பற்றாக்குறையாக இருந்தது. எண்ணை ஏற்றுமதியில்லா வளரும் நாடுகள் அனைத்திற்கும்இது பொதுவான நிலை.

நாம் என்னென்ன பொருட்களை ஏற்றுமதி செய்கிறோம்? என்னென்ன பொருட்களை இறக்குமதி செய்கிறோம்? இந்தியாவின் இன்றைய மிகப்பெரும் இறக்குமதிச் செலவு, பெட்ரோல் இறக்குமதியில்தான் ஏற்படுகிறது. கணிசமான வளரும் நாடுகளின் நிலைமையும் இதுதான். தவிர, விவசாய நாடுகளாக இருப்பினும் விவசாய உற்பத்தியின் குறிப்பாக தானியங்கள், தாவர எண்ணை போன்றவை வளரும் நாடுகளின் இறக்குமதியில் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறது. உணவு தானியங்களின் இறக்குமதி நாடுகளின் விளைச்சலைப் பொறுத்து ஏறியும் இறங்கியும் இருக்கும். உதாரணத்திற்கு, 1975-76இல் இந்தியாவின் இறக்குமதியில் 2.5 சதவிகிதம் உணவுப் பண்டங்களாக இருந்தன.

**பட்டியல் - 2.1**

**இந்தியாவின் வருடாந்திர வெளிநாட்டு வர்த்தகக் கணக்கு 1988-89**

(கோடி ரூபாய்)

| | | வரவு | செலவு | மிச்சம் |
|---|---|---|---|---|
| A. | **கரண்ட் அக்கவுண்ட்** | | | |
| 1. | பொருட்கள் | 20647 | 34202 | |
| | வர்த்தக மிச்சம் | | | 13555 |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| | | | | |
|---|---|---|---|---|
| 2. | பயணம் | 2054 | 586 | |
| 3. | சரக்குப் போக்குவரத்து | 1300 | 1487 | |
| 4. | இன்ஷ்யூரன்ஸ் | 136 | 95 | |
| 5. | முதலீடு வருவாய் | 603 | 3081 | |
| 6. | சர்க்கார் (ஏனைய பிரிவுகளில் உட்படாதது) | 118 | 212 | |
| 7. | பலவகை | 2118 | 2287 | |
| 8. | கைமாற்ற அடைவுகள் (மறைமுக மிச்சம்) | 4598 | 33 | |
| | மொத்தம் கரண்ட் | | | +3146 |
| | அக்கவுண்ட் மிச்சம் | | | +10409 |
| **B.** | **மூலதன அக்கவுண்ட்** | | | |
| 9. | தனியார் முதலீடு | 6613 | 3363 | |
| 10. | பேங்கிங் | 698 | 963 | |
| 11. | அதிகாரபூர்வ கடன்கள் | 8465 | 27 | |
| 12. | கடனைத் திருப்பிச் செலுத்தல் | 15 | 3082 | |
| 13. | பலவகை | 5493 | 3544 | |
| | மொத்தம் மூலதன அக்கவுண்ட் மிச்சம் | | | +10305 |
| **C.** | **சர்வதேச நாணய நிதி** | | | |
| 14. | சர்வதேச நாணய நிதி | | -1547 | |
| | மொத்தம் அடைவு மிச்சம் | | | 1651 |
| 15. | விட்டுப் போனதும் சேர்த்துக் கொண்டதும் | | | +203 |
| 16. | இருப்புச் சேமிப்பிலிருந்து மாற்றப்பட்டது | | | +1448 |

(ஆதாரம் : Reserve Bank of India Bulletin August - 1991)

எண்ணையும் உணவுப் பொருட்களும் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் மட்டும்தான் இறக்குமதி செய்யப்படுகிறது என்பதில்லை. வளரும் நாடுகளின் செல்வந்தர்களுக்குப் பயன்படும் ஆடம்பரப் பொருட்களும் இறக்குமதியாகின்றன. வெள்ளைக்காரன் வெளியேறி விட்டாலும் 'ஃபாரின்' பிரமை நம்மை விட்டு அகலவில்லை.

இயந்திரக் கருவிகள்தான் வளரும் நாடுகளின் இறக்குமதியில் இன்னொரு குறிப்பிடத்தக்க இனம். இந்தியாவின் இறக்குமதியில் 20 சதவிகிதம் வரை இயந்திரக் கருவிகள்தான். அதேபொழுது இந்தியாவிலிருந்து 6 சதவிகிதம் இயந்திரக் கருவிகள் மட்டுமே ஏற்றுமதியாகின்றன.

ஏற்றுமதியில் முதலிடம் ஆரம்ப சுத்தீகரிப்பு மட்டுமே மேற்கொள்ளப்பட்ட காபி, தேயிலை, வைரம் போன்ற விவசாய- தாதுப்பொருட்களுக்குத்தான். இவை

www.tamilarangam.net



40 சதவிகிதம் வரை இருக்கும். தொழில் பொருட்கள் என்று சொல்லப்படுபவைகளும் இதே சதவிகிதம்தான். ஆனால் இவை முக்கியமாக சணல், கயிறு, கைத்தறி, தோல் போன்ற பாரம்பரியத் தொழில்துறையைச் சேர்ந்தது என்பதைக் குறிப்பாகக் கவனிக்க வேண்டும்.

தய்வான், தென்கொரியா, மெக்சிகோ, சிங்கப்பூர், பிரேசில் போன்ற வளரும் நாடுகளின் ஏற்றுமதிகள் மட்டும் தான் இதனிலிருந்து மாறுபடும். இந்த நாடுகளின் ஏற்றுமதியில் எலக்ட்ரானிக் கருவிகளும், ரசாயன உற்பத்திகளும், இயந்திரக் கருவிகளும் அதிகமாக இடம்பெற்று வருகின்றன. வளர்ந்த நாடுகளின் ஏறுமுகமான உற்பத்திச் செலவுகள் மற்றும் சமூகக் கட்டுதிட்டங்களிலிருந்து மீள்வதற்காக பன்னாட்டு ஏகபோகங்கள் வளரும் நாடுகளின் பக்கம் திரும்பிக் கொண்டிருக்கின்றன. இந்த வெளிநாட்டுக் கம்பெனிகளுக்கு தங்களுடைய பொருளாதார அமைப்புகளை நிபந்தனையின்றித் திறந்து விட்டும் அவற்றிற்குத் தேவையான அனைத்து அரசியல் சமூக ஒத்துழைப்பைக் கொடுத்தும், தொழில் வளர்ச்சி பெறத்தான் வளரும் நாடுகள் முயற்சிக்கின்றன.

சர்வதேச பணிப் பங்கீட்டில் வளரும் நாடுகளின் பங்களிப்பு மூலப் பொருட்களை உற்பத்தி செய்வதுதான். இதனால் ஏற்பட்ட ஒரு சருக்கல்தான் இந்த நாடுகளின் வரையறைக்குட்பட்ட தொழில் வளர்ச்சி என்பதில் சர்ச்சைக்கிடமில்லை. இதைத்தான் புதிய சர்வதேச பணிப்பங்கீடு என்று சிலர் தம்பட்டமடிக்கின்றனர். ஆனால் உலகின் ஒட்டுமொத்தப் பொருளாதாரக் கட்டமைப்பை ஆராய்ந்தால், குறிப்பிடத்தக்க எந்த மாறுதல்களையும் வளரும் நாடுகளின் ஏற்றுமதிக் கணக்குகளில் ஏற்படுத்த, பணிப் பங்கீட்டு முறையால் இதுநாள் வரை இயலவில்லை என்பதே உண்மை.

**துறைமுகக் கணக்குகளில் காணமுடியாத ஏற்றுமதியும்-இறக்குமதியும்**

சரக்குகளின் ஏற்றுமதி இறக்குமதிகளை பொதுவாக துறைமுகத்தின் கணக்குகளில் காண முடியும். ஆனால் சேவைகளின் வாத்தகத்திலிருந்து சிருஷ்டிக்கப்படும் வரவு-செலவுகளை துறைமுகக் கணக்குகளில் காண முடியாது. எனவே சேவைகளில் இருந்து கிடைக்கும் வரவு செலவுகளை மறைமுக இனங்கள் (Invisibles) என்று அழைக்கிறார்கள். இவற்றைத்தான் பட்டியல் 2.1இல் இரண்டிலிருந்து எட்டு வரையிலான இனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இரண்டாவது இனம் குறிப்பாக சுற்றுலா தொடர்பான வரவு செலவைக் குறிப்பிடுகிறது. பல்வேறு வளரும் நாடுகளுக்கு இது ஒரு முக்கியமான வருவாய்த்துறை. ஆனால் சுற்றுலா வளர்ச்சி, அளவுக்கு மீறுவதால் ஏற்படும் கலாச்சாரச் சீரழிவுகள் தெரிந்ததே. ஃபிலிப்பைன்ஸ், தாய்லாந்து, தென்கொரியா, போன்ற நாடுகள் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்க விபச்சாரத் தொழில் வரை ஊக்குவிக்கின்றன என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்....!

மூன்றாவது நான்காவது இனங்களில் சரக்குப் போக்குவரத்தும், இன்ஷ்யூரன்சும் உள்ளடங்கியிருக்கிறது. 1988-89இல் இவை இந்தியாவிக்கு 140

www.tamilarangam.net



கோடி ரூபாய் பற்றாக்குறையைத்தான் அளித்தது. ஆனால் இந்த விஷயத்தில் வேறு பல நாடுகளைவிட இந்தியாவின் நிலை மிக மிகப் பத்திரமானது என்பதைச் சொல்லித்தான் ஆகவேண்டும். இந்தியாவுக்கு ஓரளவு பலம் பொருந்திய சரக்குப் போக்குவரத்து அமைப்பு இருக்கிறது. ஆனால் ஏனைய வளரும் நாடுகள் பலவற்றிற்கு பன்னாட்டு ஏகபோக ஷிப்பிங்-இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளைத்தான் முழுக்கவும் நம்ப வேண்டியிருக்கிறது. இந்தக் கம்பெனிகள் நிர்ணயிக்கும் கட்டணங்களும், நிபந்தனைகளும் சர்வதேச அரங்கில் பல்வேறு சர்ச்சைகளுக்கு வழிகோலுவதுண்டு.

வட்டி, லாபம் தொடர்பான இனங்களில் வளரும் நாடுகளில் தங்களுடைய முதலீடுகளிலிருந்து ஏகாதிபத்திய நாடுகள் கடத்திச் செல்லும் தொகைதான் முதலீட்டு வருவாய் (இனம் 5). வெளிநாட்டு மூலதன முதலீட்டை ஒரு 'சேவை'யாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சர்வதேச நிதி நிறுவனம் விடாப்பிடியாக இருந்ததால்தான் முதலீட்டு வருவாய் இங்கு இடம் பிடித்துக் கொண்டது. இந்தியாவிலிருந்து 1988-89இல் 3081 கோடி ரூபாய் இந்த வகையில் வெளியேறியிருக்கிறது. அதேபொழுது 603 கோடி ரூபாய் வெளிநாட்டிலிருந்தும் வந்தது. வெளிநாட்டு வங்கிகளில் இந்தியா இருப்பு வைத்திருக்கும் வெநிாட்டு நாணயச் சேமிப்பிற்கு கிடைக்கும் வட்டிதான் இந்தியாவில் முதலீட்டு வருவாயின் பெரும்பகுதி, பல்வேறு வளரும் நாடுகளைப் பொறுத்தவரை மிகக் கடுமையான செலவுகளில் இநத் இனமும் ஒன்று.

ஆறாவது இனம், இந்தியாவில் இருக்கும் வெளிநாட்டு தூதரகங்கள், மற்றும் வெளிநாட்டில் இருக்கும் இந்திய தூதரகங்கள் தொடர்பான செவினங்களைச் சார்ந்தது. இந்தியாவைப் பொறுத்தவரை இது முக்கியமான ஒன்றல்ல ஆனால் அமெரிக்க ராணுவதளங்களை அனுமதித்திருக்கும் பிலிப்பைன்ஸ், தென்கொரியா, தைவான் போன்ற நாடுகளுக்கு இது ஒரு பெரும் வருவாய் ஈட்டு வழிமுறையாகும்.

இறுதியாகச் சேர்த்திருக்கும் (இனம் - 8) கைமாற்ற அடைவு (Transfer Payments) நான்காயிரத்து ஐநூறு கோடி ரூபாய்க்குமேல் வருவாய் ஈட்டியது. ஏற்றுமதிப் பொருட்களுக்கு அடுத்து இதுதான், இந்தியாவின் மிக முக்கிய வருவாய்ஈட்டு வழிமுறை. பிற நாடுகளில் இருந்து கிடைக்கும் நன்கொடைகள்; கிராண்டுகள், வெளிநாட்டில் பணியாற்றுபவர்கள் சொந்த நாட்டுக்கு அனுப்பும் வருவாய் போன்றவைகள் இதில் உள்ளடங்கும். வளைகுடா நாடுகளில் பணியாற்றுபவர்கள் அனுப்பும் வெளிநாட்டுப் பணம்தான் இத்தகைய பூதாகரமான தொகையை இந்தியாவுக்கு கிடைக்கச் செய்திருக்கிறது. எண்ணைக்கு அதிக விலை அளிக்க நேரிடினும் அரபு நாடுகளுக்குக் குடி பெயர்ந்தவர்களால் பல்வேறு ஆசிய நாடுகளின் வெளிநாட்டு வருவாய்க்கு வழி ஏற்பட்டிருக்கிறது.

மறைமுக இனங்களிலிருந்து கிடைக்கும் வரவு செலவுக் கணக்கை மொத்தமாக எடுத்துக் கொண்டால் 1988-89 ஆண்டில் இந்தியாவுககு 3146 கோடி ரூபாய் மிச்சம் கிடைத்திருக்கிறது. பெரும்பாலான வளரும் நாடுகளுக்கும் வர்த்தக மிச்சத்தைப் போன்றே மறைமுக இனங்களின் மிச்சமும் பற்றாக்குறைவாயதற்குத்

www.tamilarangam.net



தான் வாய்ப்பு. விடுதலைக்கு முன் இந்தியாவுக்கு பொதுவாகவே வர்த்தகத்தில் மிச்சம்தான். ஆனால் மறைமுக இனங்களில் இந்த மிச்சத்தைவிட பூதாகாரமான பற்றாக்குறைதான் ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவுக்கு ஏற்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவுக்கு அளித்த 'சேவைகளுக்கு' நாம் அளித்த விலை கொஞ்ச நஞ்சமல்ல! விடுதலைக்குப் பிறகுதான் இந்த நிலைக்கு மாற்றம் ஏற்பட்டது.

இந்தியாவைப் போன்ற நாடுகளை பழைய நிலைக்கு தள்ளிவிடத்தான் அமெரிக்கா முயன்று கொண்டிருக்கிறது. பொருட்களின் விஷயத்தைப் போன்றே, சேவைகள் வர்த்தகத்திலும் கட்டுப்பாடுகளைத் தளர்த்த வேண்டுமென்று அமெரிக்கா விரும்புகிறது. அமெரிக்காவின் 'போர்' என்னவென்பதைத் தெரிந்து வைத்திருக்கும் இந்தியாவைப் போன்ற நாடுகள் இந்த விருப்பத்தைக் கடுமையாக எதிர்த்து வந்திருக்கின்றன.

### பற்றாக்குறையும்-கடன் பொறியும்

பொருட்களின் வர்த்தகம் மற்றும் மறைமுக இனங்களின் கைமாற்ற வரவு செலவுகளின் மொத்த மிச்சம்தான். கரண்ட் அக்கவுண்ட் - நடப்பு கணக்கு (Current Account Balance) என்று அழைக்கப்படுகிறது. 1988-89இல் இந்தியாவின் கரண்ட் அக்கவுண்ட் மிச்சம் 10409 கோடி ரூபாய் பற்றாக்குறையாக இருந்தது. இந்தப் பற்றாக்குறை தொடருமானால் இன்றில்லாவிட்டால் நாளை நமது வெளிநாட்டுப் பரிமாற்றத்தில் நெருக்கடி ஏற்படுவது உறுதி.

ஆனால் நிதி நிறுவனத்தின் நிபுணர்கள் கரண்ட் அக்கவுண்டில் பற்றாக்குறை ஏற்பட்டதால் மட்டும் ஒரு நாடு 'பேலன்ஸ் ஆப் பேமண்டில்' பற்றாக்குறையைய எதிர்க் கொண்டிருக்கிறது என்று கூறமாட்டார்கள். கடன் வாங்கி இந்தப் பற்றாக்குடிறைடிய நிரப்ப முடியும் என்பது அவர்கள் கருத்து. இதன் பிறகும் பற்றாக்குறையை நிரப்ப முடியாவிட்டால்தான் பேலன்ஸ் ஆப் பேமண்டில் நெருக்கடியில் நாடு இருப்பதாக அவர்கள் பிரகடனம் செய்வார்கள். நெடுங்கால-குறுகிய கால கடன்கள் மற்றும் நேரிடைச் சேமிப்புகளின் வரவு செலவுக் கணக்குகள்தான் மூலதன அக்கவுண்டில் (பட்டியல் 2-1ல் பகுதி Bல்) குறிப்பிட்டிருக்கிறோம். சரக்குகள் மற்றும் சேலைகளின் வர்த்தக் கணக்குகளை அந்தந்த ஆண்டே முடிக்க வேண்டும். அதனால்தான் அதன் கணக்கை கரண்ட் அக்கவுண்ட்டி (பட்டியல் 2-1ல் பகுதி A) என்று அழைக்கிறோம். கரண்ட் அக்கவுண்டும் மூலதன அக்கவுண்டும் சேர்ந்து மொத்தமாக ஏற்படும் மிச்சத்தை ஆதாராமாகக் கொண்டுதான் நாட்டின் பேலன்ஸ் ஆப் பேமண்ட் கணக்கில் பற்றாக்குறையா, மிச்சமா என்று தீர்மானிக்கப்படுகிறது.

இந்தியாவின் மூலதனக் கணக்கை ஆராய்ந்தால் தெரியும் தனித்தன்மை என்னவென்றால், வெளிநாட்டுத் தனியார் மூலதனத்தின் வருகை ஏனைய வளரும் நாடுகள் பலவற்றை விட குறிப்பாக லத்தீன் அமெரிக்க நாடுகளையும் தென்கிழக்கு ஆசிய நாடுகளை விடக் குறைவு என்பதுதான். இருப்பினும் 1988-89இல் அசல் தனியார் மூலதனக் குவிப்பு (தனியார் கடன் உட்பட) இந்தியாவில் ஏற்பட்டிருக்கிறது. (பட்டியல் 2.1இல் 9ஆவது இனம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெளிநாட்டு கடன்கள் மற்றும் உதவிகளின் வடிகால் குறிப்பாக சர்க்கார் ஏஜென்சிகள் வழியாகத்தான் ஓடியது. 1988-89இல் இந்தியாவுக்கு 8465 கோடி ரூபாய் பல்வேறு வகைக் கடன்களாகக் கிடைத்தன. (இனம்-11) ஆனால் இந்தத் தொகையின் 40 சதவிகிதம் பழைய கடன்களைத் திருப்பிக் கட்டுவதற்காகவே பயன்படுத்த வேண்டியதாயிற்று என்பதைக் குறிப்பாகக் கவனிக்க வேண்டும். (இனம் - 12)

இந்தியாவின் மூலதன அக்கவுண்டில் 1988-89இல் 10305 கோடி ரூபாய் மிச்சமிருந்தது. ஆனால் இந்த மிச்சம் கரண்ட் அக்கவுண்ட் பற்றாக்குறையை நிரப்ப போதுமானதாக இருக்கவில்லை. 104 கோடி ரூபாய் குறைவாக இருந்தது. இதற்கப்பால் 1981இல் சர்வதேச நிதி நிறுவனத்திடம் பெற்ற கடன் தவணைக்கு 1547 கோடி ரூபாய் திருப்பி அடைக்க நேர்ந்தது. (பட்டியல் 2.1 இல் பகுதி C) இது உட்பட மொத்தம் பேலன்ஸ் ஆப் பேமெண்ட் பற்றாக்குறை 1651 கோடி ரூபாயாக இருந்தது. வெளிநாட்டுப் பரிமாற்றச் சேமிப்பிலிருந்து வெளிநாட்டு நாணயத்தை எடுத்து பற்றாக்குறையை நிரப்ப வேண்டியதாயிற்று. இவ்வாறு செலாவணி இருப்பிலிருந்து வெளிநாட்டு நாணயத்தை தொடர்ச்சியாக எடுத்துக் கையாண்டால் என்ன நேரும் என்பதை விளக்கத் தேவையில்லை. வெளிநாட்டுச் செலாவணி இருப்பு கரைந்து இல்லாதாகிவிடும். பரிவர்த்தனை நெருக்கடிக்குள்ளாகும். 1991இல் இதுதான் நடைபெற்றது.

இதைச் சரி செய்வதற்காக இந்தியா சர்வதேச நிதி நிறுவனத்திடமிருந்து மீண்டும் கடன் பெறுகிறது. கடன் பெற்றதும் நம்முடைய வெளிநாட்டு நாயணச் சேமிப்பு உயரும். நெருக்கடி தற்காலிகமாகத் தீரும். ஆனால் பிரச்சினை தீராது. இதைத்தான் கவனிக்க வேண்டும்.

பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதியிலிருந்து கிடைக்கும். உண்மையான வருவாயை விட அதிகமாகச் செலவழித்துக் கொண்டுதான் பொருளாதாரக் கட்டமைப்பு நிலைத்துக் கொண்டிருக்கிறது. எனவே இன்றைக்கு பிரச்சினையை எப்படி சரிக்கட்டினாலும் நாளைக்கு அது திரும் தலைதூக்கும் என்பது நிச்சயம். கடன்களையும், முதலீடுகளையும் வட்டியுடன் சேர்த்து நாளைக்குத் திருப்பித்தரவேண்டியிருக்கும். புதிய கடன்களால் பழைய கடன்களின் வட்டியையும் கடன் தவணைகளைக் கூட (இதைத் தான் கடன் சர்வீஸ் செலவுகள்) திருப்பி அடைக்கப் பற்றாக்குறை ஏற்பட்டு விடும். இந்த அவிழ்க்க முடியாக முடிச்சைத்தான் கடன்பொறி என்கிறோம்.

இன்றைக்கு சர்வ சாதாரணமாகப் பயன்படுத்தப்படும் இந்த முறையை ஒரு உதாரணம் வாயிலாக விளக்கலாம். ஆண்டுக்கு 1000 கோடி ரூபாய் வீதம் பத்தாண்டு காலத்திற்கு ஒரு நாடு கடன் பெறும் நிர்ப்பந்தத்திற் குள்ளாகிறது. என்று வைத்துக் கொள்வோம். 20 ஆண்டுகளுக்குள் இந்தக் கடனை ஒவ்வொன்றாகத் திருப்பி அடைத்தாக வேண்டும். அதாவது ஆண்டொன்றுக்கு 50 கோடி ரூபாய் வீதம் ஒவ்வொரு ஆண்டுக் கடன் களிலிருந்தும் திருப்பிச் செலுத்தினால் போதுமானது. வட்டி விகிதமும் மிகவும் நியாயமானதுதான்; பத்து சதவிகிதம் மட்டுமே. ஆனால் அந்தந்த ஆண்டு வட்டியை அதே ஆண்டில் செலுத்தி விட வேண்டும் பத்து

www.tamilarangam.net



வருடங்களுக்குப் பிறகு அந்த நிலை என்னவாகும் என்பதை பட்டியல் 2-2யிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

**பட்டியல் - 2.2**
**கடன் பொறியின் மாதிரி**
**(அனைத்தும் கோடி ரூபாயில்)**
**கடன் சர்வீஸ் செலவுகள்**

| வருடம் | புதிய கடன் | வட்டி | கடன் திருப்பி அடைத்தல் தவணைகள் | மொத்தம் | கிடைக்கும் அசல் கடன் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | 1000 | 100 | 50 | 150 | 850 |
| 2 | 1000 | 195 | 100 | 295 | 705 |
| 3 | 1000 | 285 | 150 | 435 | 565 |
| 4 | 1000 | 370 | 200 | 575 | 430 |
| 5 | 1000 | 450 | 250 | 700 | 300 |
| 6 | 1000 | 525 | 300 | 825 | 175 |
| 7 | 1000 | 595 | 350 | 945 | 55 |
| 8 | 1000 | 660 | 400 | 1060 | -60 |
| 9 | 1000 | 720 | 450 | 1170 | -170 |
| 10 | 1000 | 775 | 500 | 1275 | -275 |

(ஆதாரம் : Paul Sweezy, 'Two Faces of Third World Debt' Monthly Review)

ஒவ்வொரு ஆண்டும் இறுதியில் புதிய கடன்களிலிருந்து கடன் சர்வீஸ் செலவுகள் நீங்கலாகக் கிடைக்கும் அசல் வட்டியில் தொகை குறைந்து கொண்ட வருகிறது. எட்டாவது ஆண்டு துவங்குவதோடு கடன் சர்வீஸ் செலவுகள் 1060-கோடி ரூபாயாகிவிடும். கடனோ ஆயிரம் ரூபாய் மட்டும். பழைய கடனை சர்வீஸ் செய்ய, வேறு கடனைத் தனியாக வாங்க நேரிடும். இதற்குத்தான் கடன் பொறி என்று பெயர்.

**சில தீர்வு வழிகள்**

எனவே கடன் வாங்குவது 'பேலன்ஸ் ஆப் பேமெண்ட்' பற்றாக்குறைக்கு நிரந்தரமான ஒரு தீர்வாகாது. கரண்ட் அக்கவுண்டின் பேலன்ஸ் ஆப் பேமெண்ட் தொடர்பாக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

மிகவும் எளிமையான வழி இறக்குமதியைக் குறைத்துக் கொள்வதுதான். இறக்குமதிக்குச் சுங்க வரியை ஏற்படுத்தலாம். இதன் மூலம் இறக்குமதிப் பொருட்களின் விலை உயரவும், உள்நாட்டில் டிமாண்ட் குறையவும் செய்யும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதுவுமில்லா விட்டால், சில வகை இறக்குமதிகளைத் தடைட செய்யவோ. ஒவ்வொரு வகைப் பொருட்களின் இறக்குமதிக்கும் கோட்டா முறையை ஏற்படுத்தவோ செய்யலாம். ஆனால் இந்த இறக்குமதிக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள், வளரும் நாடுகளின் சுயசார்பையும், வளர்ந்த நாடுகளின் வெளிநாட்டு வர்த்தகத்தையும் மற்றும் பொருளாதார அமைப்பையும் எதிரிடையாகப் பாதிக்கும் என்பது உறுதி.

இன்னொரு வழி என்னவென்றால், தங்களுடைய ஏற்றுமதிப் பொருட்களுக்கு விலையேற்றுவதுதான். ஆனால்இன்றைக்கு மாறாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வளரும் நாடுகளின் ஏற்றுமதி விலை தாழ்ந்து கொண்டிருக்கிறது. அதேபொழுது இறக்குமதியின் விலையோ உயர்ந்து கொண்டிருக்கிறது. இதற்குத் தீர்வுதான் என்ன? பெட்ரோல் ஏற்றுமதி நாடுகள் நமக்கு ஒரு தீர்வைச் சுட்டிக் காட்டியிருக்கின்றன. அந்த நாடுகள் ஒன்று சேர்ந்து 'ஓபெக்' என்று ஒரு அமைப்பை ஏற்படுத்தியிருக்கிறன. பிறகு எண்ணை விலையை செங்குத்தாக உயர்த்தின வளர்ந்த நாடுகளில் இந்த விலையேற்றம் ஏற்படுத்திய கெடுதிகள் கொஞ்ச நஞ்சமல்ல! இவ்வாறு ஒவ்வொரு கச்சாப்பொருட்களையும் ஏற்றுமதி செய்யும் நாடுகள், தங்களுக்குள் கூட்டமைப்பை உருவாக்கி தத்தம் பொருட்களின் விலையை உயர்த்தினால் அது வளர்ந்த நாடுகளில் என்ன விளைவை ஏற்படுத்தும் என்பதை எண்ணிப் பாருங்கள்! வளர்ந்த நாடுகள் இதை அனுமதிக்காது. 'ஓபெக்' அமைப்பையே இன்றைக்கு அவர்கள் பிளந்து விட்டார்கள்.

பற்றாக்குறையை நிரப்ப மேலும் ஒரு மாற்று வழி இருக்கிறது. வெளிநா நாணயப் பயனளிப்பின் மீது கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும். இதற்காக வெளிநாட்டுப் பரிவர்த்தனை ஈடுபாடுகளை ரிசர்வ் வங்கியில் மையப்படுத்தி சர்க்கார் அனுமதியின்றி, வெளிநாட்டு நாணயம் பயன்படுத்துவதைக் கடுமையாகத் தடை செய்ய வேண்டும்.

பிறிதொரு ஏற்பாடும் இருக்கிறது. வெளிநாட்டு நாணயத்தை தவிர்த்து விட்டு, ஒரு நாட்டுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். ஒப்பந்த நாட்டிலிருந்து இறக்குமதியாகும் பொருட்களுக்கு ஏறத்தாழ சமமாக அந்த நாட்டிற்குப் பொருட்களை ஏற்றுமதி செய்து இதைச் சாதிக்கலாம். இந்தியாவும் சோவியத் யூனியனும் ஏறத்தாழ இந்த அடிப்படையில்தான் வர்த்தக உறவு வைத்துக் கொண்டிருந்தன. இதுவுமில்லாவிடில், இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு அதன் முக்கியத்துவத்துக்கேற்ப வெவ்வேறு பரிமாற்ற விலைகளை நிர்ணயிக்கலாம்.

பிரசீல் மேற்கொண்ட ஒரு நடவடிக்கை மிகவும் ருசிகரமானது, ஒரு ஆண்டில் எவ்வளவு வெளிநாட்டு நாணயம் கிடைத்திருக்கிறது என்பதைச் சர்க்கார் கணக்கிடும். பிறகு இந்த நாணயத்தை ஏலம் போட்டு தேவைப்படுபவர்களுக்கு அளித்து விடும். கூடுதல் விலை அளிக்க முன்வருபவர்களுக்கு நாணயம் கிடைக்கும். மற்றவர்களுக்கு கிடைக்காது. இத்தகைய நடவடிக்கைகள் சுதந்திரமான சர்வதேச வர்த்தக வளர்ச்சியைத் தடைப்படுத்தும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

www.tamilarangam.net



வெளிநாட்டு நாணயம் முக்கியமாக மூலதன வருவாய்க்காகத்தான் செலவழிக்கப்படுகிறது. வெளிநாட்டு மூலதனத்தை தேசவுடைமையாக்குவதே இதற்கு அடிப்படைத் தீர்வாகும். சோசலிஸ்டு நாடுகள் புரட்சிக்குப் பின்னர் மேற்கொண்ட நடவடிக்கைகளுள் இதுவும் ஒன்று. இத்தகைய நடவடிக்கையை ஓரளவேனும் (நஷ்ட ஈடளித்தும், சில குறிப்பிட்ட பகுதிகளில் மட்டும் அமுலாக்கியும்) மேற்கொண்ட லத்தீன் அமெரிக்க நாடுகளில் ராணுவ ரீதியில் அத்துமீறக்கூட அமெரிக்கா தயங்கவில்லை. எனவே தான் இத்தகைய கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ள பல நாடுகள் தயங்குகின்றன.

அண்மைக் காலத்தில் வெளிநாடுக் கடனுக்கு 'மொரோட்டோரியம்' – "கடன் திருப்பி அளிக்க ஒத்திவைப்பு" ஏற்படுத்த வேண்டும் என்ற கோஷம் எழுந்திருக்கிறது. கியூபாவின் ஃபிடல் காஸ்ட்ரோ இதில் முக்கியமானவர். வளரும் நாடுகளின் மொத்தக் கடன் இப்போது 90,000 கோடி டாலர் அளவுக்கு எட்டியிருப்பதாக்க் கருதப்படுகிறது. இதற்கு கடன் சர்வீஸ் செலவுகள் ஆண்டுக்கு 11,400 கோடி டாலராகிறது. முன்னர் போல் கடனளிக்க வளர்ந்த நாடுகள் முன்வருவதில்லை. இதனால் புதிதாகக் கிடைக்கும் கடன்கள், கடன் சர்வீஸ் கட்டணத்திற்குக் கூடப் போதவில்லை. இந்த நிலையில் இக்கடன்களை அடைக்க முடியவில்லை என்று அறிவிக்க வேண்டும்; கடனுக்கு 'மொரொட்டோரியம்' பிறப்பிக்க வேண்டும் என்ற கருத்து பலமடைந்து கொண்டிருக்கிறது.

இந்த அளவுக்கு நிகழாவிட்டாலும், ஏதாவது ஒரு குறிப்பிட்ட கடனாளி நாடு, கடனை அடைக்க முடியாமல் திவாலாகி விட்டதாக தன்னை அறிவித்துக் கொண்டால் ஏற்படும் விளைவுகள் கற்பனைக்கப்பாற்பட்டதாகத் தானிருக்கும்! வளரும் நாடுகளுக்கு கடன் கொடுத்தவர்களில் முக்கியமானவர்கள் வெளிநாட்டு அரசுகள் அல்ல; தனியார் வங்கிகளே! கடன் குளறுபடிகள் இந்த வங்கிகளில் அழிவுக்கும், அதன் மூலம் வளர்ந்த நாடுகளில் முழுக்க பொருளாதார அராஜக நிலை ஏற்படவும் வழிகோலிவிடும்.

சுருங்கக் கூறினால், பேலன்ஸ் ஆப் பேமெண்ட் பற்றாக்குறையை நிரப்ப வளரும் நாடுகள் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் பலவும், ஏகாதிபத்திய நாடுகளின் நலன்களுக்கு எதிரானதாகி விடும். சர்வதேசப் பொருளாதார உறவுகளின் நிலைப்பாட்டையே கேள்விக் குறியாக்கிவிடும். இதைத் தவிர்க்க வேண்டும். இதற்காக வளர்ந்த நாடுகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க வேண்டும். வெளிநாட்டுப் பரிமாற்ற உறவுகளின் முரண்பாடுகளை வரம்புக்குள் நிறுத்தக் கூடிய உள்நாட்டுக் கொள்கைகளை, வளரும் நாடுகளை மேற்கொள்ளச் செய்ய வேண்டும் இதற்கான கட்டமைப்புகள் உருவாக வேண்டும்.

இங்குதான் சர்வதேச நிதி நிறுவனமும், உலக வங்கியும் 'காட்' அமைப்பும் முக்கியத்துவம் பெறுகின்றன. இரண்டாவது உலகப் போரைத் தொடர்ந்து இவை உருவானபொழுது இல்லாதிருந்த முக்கியத்துவம் இந்த நிதி நிறுவனங்களுக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது. அடுத்த அத்தியாயத்தில் இந்த சர்வதேச அமைப்பு உருவாக்கப் பின்னணியை ஆராயலாம்.

www.tamilarangam.net

# 3
# புதிய காலனிய மும்மூர்த்திகளின் தோற்றமும் வளர்ச்சியும்

இரண்டாம் உலகப் போரின் சிருஷ்டியான உலக அரசியல் சூழ்நிலைதான், உலக வங்கியும், சர்வதேச நிதி நிறுவனமுதும், 'காட்' அமைப்பும் தோன்றுவதை தவிர்க்க முடியாததாக்கி விட்டது!

முதலாவதாக சோவியத் யூனியன் ஒரு உலகச் சக்தியாக உயர்ந்தது. கிழக்கு ஐரோப்பியாவின் முக்கிய நாடுகள் அனைத்தும் சோசலிச அமைப்புக்கு மாறின. இந்தச் சூழ்நிலையில் ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையில் பொருளாதாரச் சச்சரவுகளை முன்போல் வளர விடக் கூடாதென்ற நிலை ஏற்பட்டது.

இரண்டாவதாக, ஐரோப்பிய மேலாதிக்கங்கள் போர் ஓய்ந்ததும் சோர்ந்து போயின. போர்க் கெடுதிகளிலிருந்து தப்பிவிட்ட அமெரிக்காவோ பன்மடங்கு பலம் பெற்று விட்டது. அமெரிக்காவின் நலன்களுக்கேற்ப சர்வதேசப் பொருளாதார உறவுகளை உருவாக்குவது அந்த நாட்டின் தேவையாக இருந்தது.

மூன்றாவதாக, போர் மூலம் அழிந்துவிட்ட ஐரோப்பிய ஜப்பானியப் பொருளாதாரக் கட்டமைப்புகளைப் புனரமைக்க வேண்டியது உலக முதலாளித்துவத்தின் தேவையாக இருந்தது. இந்த நாடுகளின் இடதுசாரிகள் எழுச்சி, கலக்கத்தை ஊட்டுவதாக அமைந்தது.

நான்காவதாக, காலனி நாடுகள் ஒவ்வொன்றாக விடுதலை பெற்றன. பழைய காலனி ஆதிக்கம் ஒழிந்தது. இந்தச் சூழ்நிலையில் புதிதாக விடுதலை பெற்ற நாடுகளில் ஏகாதிபத்திய நலன்களை எப்படிப் பாதுகாப்பது என்ற கேள்வி எழுந்தது.

இவை அனைத்திற்கும் ஆரம்பத் தீர்வாக சர்வதேசப் பொருளாதார அமைப்பை புதிதாக மாற்றி அமைக்க வேண்டுமென்பதில் அமெரிக்கா ஐயப்படவில்லை! முதலாவது உலகப் போருக்கு முன் பிரிட்டிஷ் மேலாண்மையின் கீழ் சீராக நடைபெற்றுக் கொண்டிருந்த சர்வதேச நாணய அமைப்பும் உலகளாவிய

www.tamilarangam.net



வர்த்தக முறையும் மீண்டும் வர முடியாதவாறு மறைந்து விட்டது. புதியவற்றைப் படைத்தாக வேண்டும். இங்குதான் நிதி நிறுவனமும், உலக வங்கியும், 'காட்'டும் இடம் பிடிக்கின்றன. இதில் நுழைவதற்கு முன் சர்வதேச நாணய அமைப்பைக் குறித்து சில ஆரம்பச் சிந்தனைகள் தேவைப்படுகின்றன!

**தங்கமூல அமைப்பு**

மிகவும் பண்டைய காலத்திலிருந்தே நாணயமாகத் தங்க உலோகம்தான் பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்தத் தங்கத்தை நேரிடையாக நாணயமாகப் பயன்படுத்தும் நடைமுறையை தங்க நாணய அமைப்பு முறை என்று அழைக்கிறோம். ஆனால் இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் தங்கத்திற்குக மாற்றாக டோக்கன் நாணயங்களும், கரன்சி நோட்டுகளும் பயன்படுத்தும் முறை பிரபலமாயிற்று. இந்த கரன்சி நோட்டுகள் மற்றும் டோக்கன் நாணயங்களைத் தயாரித்து புழக்கத்தில் விடும் பொறுப்பை அரசுகள் மேற்கொண்டன. யாராவது கேட்டால் நோட்டுக்கு மாற்றாக தங்கம் கொடுக்கும் பொறுப்பும் அரசுக்கு இருக்கிறது. அரசிடம் திடமான நம்பிக்கை கொண்டிருப்பதால் பெரும்பாலும் யாரும் கேட்பதில்லை. அவ்வளவுதான்! ஆனால் வெளிநாட்டு வர்த்தகம் போன்றவற்றிற்காக குறிப்பிட்ட அளவேனும் தங்கத்தை இருப்பு வைக்க வேண்டும். இவ்வாறு தங்கத்தை அடிப்படையாகக் கொண்ட நோட்டுச் செலாவணி நடைமுறைக்குத்தான் தங்கமூல அமைப்பு என்று பெயர்.

தங்கமூல அமைப்பின் தனித்தன்மைகள் கீழ்வருமாறு: நோட்டுகள் / நாணயங்கள் புழக்கத்தில் இருப்பது தங்கத்திற்கு மாற்றாகத்தான். அவற்றின் மதிப்பு நாட்டுக்கு வெளியே மட்டுமின்றி உள்நாட்டிலும் ஒரு குறிப்பிட்ட எடை தங்கத்திற்கு சமமாகப் பிணைக்கப்பட்டிருக்கிறது. தங்கம் கொடுத்தாக வேண்டும். அரசுக்கு இந்தப் பொறுப்பிருக்கிறது. எனவே அரசின் வசமிருக்கும் தங்கத்திற்கேற்பத்தான் கரன்சி நோட்டுகள் அல்லது பணத்தின் புழக்கத்திலும் மாறுதல் செய்ய முடியும்.

அனைத்து நாடுகளின் கரன்சி நோட்டுகளும்/நாணயங்களும் ஒரு குறிப்பிட்ட எடை தங்கத்தின் மதிப்புடன் பிணைக்கப்பட்டிருப்பதால் தேசிய நாணயங்களுக்கிடையேயான மாற்று மதிப்பு அதாவது வெளிநாட்டு நாணயப் பரிமாற்ற விலையை நிர்ணயிப்பது எளிதாக இருந்தது. இது மட்டுமின்றி, குறிப்பாக உணர்பூர்வமான தலையீடு எதுவும் இல்லாமலேயே தங்கமூல அமைப்பினுடையவும், சுதந்திரமான வர்த்தகத்தினுடையவும் நடவடிக்கை வாயிலாக வெளிநாட்டுப் பரிமாற்ற மதிப்பு நிலைபெற்றிருந்தது. அது எப்படி என்பதைப் பார்ப்போம்.

தங்கமூல அமைப்பின்கீழ் ஏதாவது ஒரு நாட்டுக்கு பேலன்ஸ் ஆப் பேமெண்டில் பற்றாக்குறை ஏற்பட்டது என்று வைத்துக் கொள்வோம். இதன் பொருள் அந்த நாட்டுக்குத் தேவையான அளவு வெளிநாட்டு நாணயம் இல்லை; வெளிநாட்டு நாணயம் பெரிதும் விரும்பப்படுகிறது; வெளிநாட்டு நாணயத்தை விட தேசிய நாணயத்தின் மதிப்பு குறைகிறது என்பதுதானே! இப்படி ஒரு வரை முறையை மீறி வெளிநாட்டுப் பரிமாற்ற மதிப்பு தாழ்ந்து விட்டால் இறக்குமதிகளுக்கு விலையாக

www.tamilarangam.net



வெளிநாட்டு நாணயத்தை அளிப்பதைவிட தங்கத்தை அளிப்பதே லாபகரமானது என்ற நிலை ஏற்பட்டு விடும்! ஏனென்றால் தேசிய நாணயத்தின் / நோட்டின் வெளிநாட்டு மதிப்பு குறைந்து விட்டாலும் அல்லாதவிடினும், தங்கமூல அமைப்பின் விதிப்படி தேவைப்படுபவர்களுக்கு அறிவிக்கப்பட்ட மதிப்பு விலையில் நோட்டுகள் / நாணயங்களுக்கு மாற்றாக தங்கத்தை அளிக்கும் பொறுப்பு அரசுக்கிருக்கிறதல்லவா? வர்த்தகர்கள் மதிப்பிழைத்துப் போன நோட்டுகள் / நாணயங்களை அரசுக்களித்து பதிலுக்குத் தங்கத்தைப் பெற்றுக் கொள்வார்கள். இந்தத் தங்கம் இறக்குமதியின் விலையாக வெளிநாட்டிலிருந்து அளிக்கப்படும். இவ்வாறு பற்றாக்குறை நாட்டிலிருந்து தங்கம் வெளியே போகிறது.

அப்பொழுது என்ன நடைபெறுகிறது? தங்கக்கையிருப்பு குறையும்போது கரன்சி நோட்டு அச்சிட்டு வெளியிடுவதைக் குறைத்துக் கொள்ளும் கட்டாயம் அரசுக்கு ஏற்படுகிறது. இதன்மூலம் பணப்புழக்கம் குறைகிறது. பணநெருக்கடி பொருளாதார அமைப்பில் இரண்டு பின்விளைவுகளை ஏற்படுத்தும். அதாவது விலைகள் இறங்கும்'. வட்டி விகிதங்கள் உயரும்!

நாட்டில் விலைகள் இறங்கும்போது இறக்குமதி செய்ய வேண்டுமென்ற ஆர்வம் குறையும். இதுமட்டுமின்றி ஏற்றுமதி அதிகரிக்கவும் செய்யும். இறக்குமதி குறைந்து ஏற்றுமதி பெருகும்போது வர்த்தகப் பற்றாக்குறை அகன்று உபரி ஏற்படும். வெளிநாட்டு நாணய வருவாய் அதிகரிக்கும்.

இதைப்போலவே வட்டி விகிதங்கள் உயரும்போது வெளிநாட்டிலிருந்து கடன் மூலதனம் உயர்ந்த வட்டியைப் பெறுவதற்காக பற்றாக்குறை நாடுகளை நோக்கிப் பெருக்கெடுத்துப்பாய ஆரம்பிக்கும்.

வெளிநாட்டு நாணய வருவாயில் ஏற்படும் இந்த வளர்ச்சி வெளிநாட்டுப் பரிமாற்ற விகிதங்களை பழைய நிலைக்குக் கொண்டுவந்து விடும். மேலும் ஒரு நாட்டின் பேலன்ஸ் ஆப் பேமெண்ட் உபரியாக இருப்பின் இதுவரை கூறி வந்த நிலைமைகள் நேர் எதிரிடையாகச் செயல்படத் துவங்கி விடும். உபரி நாடுகளின் வெளிநாட்டுப் பரிமாற்ற விகிதம் உயரும்; தங்கம் இறக்குமதி செய்யப்படும்; பண வீக்கம் ஏற்படும்; வட்டி இறங்கும். இவற்றின் பயனாக இறக்குமதி அதிகரிக்கும். (வியாபாரப் பற்றாக்குறை ஏற்படும்); கடன் மூலதனம் வெளியேறும். இவை இரண்டும் வெளிநாட்டு நாணய வருவாயை சுருக்கிவிடும். வெளிநாட்டுப் பரிமாற்ற விகிதம் முன்னைய நிலைக்குத் தாழ்ந்துவிடும். இதன் நிலைப்பாடுதான் கீழ்க்காணும் அட்டவணையில் தெரிவது.

www.tamilarangam.net



**பேலன்ஸ் ஆப் பேமெண்ட் பற்றாக்குறை நாடு**

பேலன்ஸ் ஆப் பேமெண்ட்-பற்றாக்குறை → வெளிநாட்டுப் பரிமாற்ற-மதிப்பு உயர்வு → தங்கம் ஏற்றுமதி-யாகிறது → பணப்புழக்கம் குறைகிறது

விலை இறக்கம் → ஏற்றுமதி அதிகரிப்பு → வெளிநாட்டு நாணய வருவாய் அதிகரிப்பு

வட்டி உயர்வு → கடன் மூலதனம் வருகை → வெளிநாட்டு நாணய வருவாய் அதிகரிப்பு

பேலஸ் ஆப் பேமெண்ட் பற்றாக்குறை நிரப்பு

வெளிநாட்டுப் பரிமாற்ற விகிதம் இறக்கம்

**பேலன்ஸ் ஆப் பேமெண்ட் உபரி நாடு**

பேலன்ஸ் ஆப் பேமெண்ட்-உபரி → வெளிநாட்டுப் பரிமாற்ற-விகிதம் இறக்கம் → தங்கம் இறக்குமதி-அதிகரிப்பு → பணவீக்கம் ஏற்படுகிறது

விலை ஏற்றம் இற்றுமதி அதிகரிப்பு

வட்டி இறக்கம் கடன் மூலதனம் வெளியேற்றம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெளிநாட்டு நாணய வருவாய் குறைகிறது — வெளிநாட்டு நாணய வருவாய் குறைகிறது

↓

பேலஸ் ஆப் பேமெண்ட் உபரி மறைகிறது

↓

வெளிநாட்டுப் பரிமாற்ற விகிதம் உயர்கிறது

**தங்கமூல அமைப்பின் அழிவு**

இவ்வாறு முதல் உலகப் போருக்கு முந்தைய அமைப்பில் பேலன்ஸ் ஆப் பேமெண்ட் முறைகேடு நிலை, அல்லது வெளிநாட்டுப் பரிமாற்று நெருக்கடியை தானே சீர்திருத்தக்கூடிய சில இயல்பான நிலைபாடுகள் சர்வதேச பொருளாதார உறவுகளில் கலந்திருக்கின்றன. இவை செயல் வடிவம் பெற வேண்டுமானால் வெளிநாட்டு வர்த்தகத்தின் மீது கட்டுப்பாடுகள் கூடாது; தங்கத்தின் ஏற்றுமதி, இறக்குமதிகளில் கட்டுப்பாடு கூடாது. பரிமாற்ற விகிதத்தில் ஏற்படும் மாறுதல்களுக்கேற்ப விலை நிலவரம், வட்டி விகிதம், உற்பத்தித் தரம் போன்றவற்றில் மாற்றம் நிகழ்வதைத் தடுக்கக் கூடாது.. இவ்வாறு பலப்பல...சர்வ சுதந்திரமான முதலாளித்துவப் போட்டியில்தான் இந்த இயல்பான இயக்கம் செயல்படும்.

முதலாவது உலகப்போருக்கு முன் பிரிட்டனில் இருந்த சர்வதேச மேலாதிக்கம், அனைத்து நாடுகளும் இந்தப் போட்டியின் சட்டதிட்டங்களைக் கடைப்பிடிக்கும் என்று உறுதிப்படுத்தியது. ஆனால் முதலாவது உலகப் போருடன் பிரிட்டனின் பலம் குன்ற ஆரம்பித்தது. பழையபடி இல்லமல் கிழட்டு நாயின் பல் கூர்மை மழுங்கி விட்டது. ஒவ்வொரு நாடும் தங்களுடைய சொந்த நலன்களைப் பேணும் கொள்கைகளை ஏற்கத் துவங்கின. வெளிநாட்டுப் பரிமாற்ற மதிப்பைக் கட்டுக்குள் கொண்டுவர, தங்களுடைய உள்நாட்டுப் பொருளாதார அமைப்பில் விலை ஏற்றத்தையும் தேக்க நிலையையும் சிருஷ்டிக்க அவை மறுத்தன. பொருட்களின் இறக்குமதியின்மீது கட்டுப்பாடுகள் விதிக்க போட்டியும் போட்டன. படிப்படியாக தங்களுடைய சரக்குகளின் ஏற்றுமதியைப் பெருக்க பரிமாற்ற விகிதத்தில் செயற்கையான மாறுதல்களை ஏற்படுத்தின. அனைத்து நாடுகளும் இப்படி ஆரம்பிக்கவே சர்வதேச வர்த்தகமே சாத்தியமற்றது என்ற நிலை உருவானது. 1930களின் கடுமையான பொருளாதார நெருக்கடிகளைத் தொடர்ந்து சுதந்திரமான வர்த்தகமும், தங்கமூல அமைப்பும் அனைத்து நாடுகளிலிருந்தும் மறைந்து விட்டது.

பிரிட்டன் தன்னுடைய காலனிகளையெல்லாம் சேர்த்து ஒரு ஸ்டெர்லிங் பிளாக், அதாவது பிரிட்டிஷ் நாணயமான ஸ்டெர்லிங் பௌண்டில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெளிநாட்டுப் பரிமாற்றத்தைக் கையாளும் நாடுகளின் ஒரு தனிப்பட்ட பாதுகாப்பு மண்டலத்தை உருவாக்கியது. ஏனைய ஏகாதிபத்திய நாடுகளின் இறக்குமதிகளை இந்த மண்டலத்திற்குள் ஊக்கப்படுத்தாமல் வர்த்தக மந்த நிலையிலிருந்து ஒரு எல்லைவரை பிரிட்டனால் மீள முடிந்தது. இதைப்போல் ஒவ்வொரு ஐரோப்பிய மேலாதிக்கமும் நடவடிக்கைகளை மேற்கோண்டது.

அமெரிக்காவைத்தான் இந்த நடவடிக்கை மிகவும் எதிரிடையாகப் பாதித்தது. 1929இல் 540 கோடி டாலராக இருந்த அமெரிக்க ஏற்றுமதி 1935இல் 210 கோடியாகக் குறைந்தது; வெளிநாட்டுப் பரிவர்த்தனை விகிதம், மற்றும் வர்த்தகம்மீது அதிகரித்துக் கொண்டிருக்கும் கட்டுப்பாடுகள் அமெரிக்க மூலதனங்களையும் 'எதிரிடையாகப் பாதித்தது.

உலக வர்த்தகம் மற்றும் முதலாளித்துவ வளர்ச்சியை மூச்சுத் திணற வைக்கும் கட்டுப்பாடுகளை அகற்றி சுதந்திரமான வர்த்தகச் சூழ்நிலையை உருவாக்க வேண்டியது அமெரிக்காவைப் பொறுத்தமட்டில் மிகவும் உயர் முக்கியத்துவம் பெற்றது. 1941-லேயே பிரிட்டனுக்குப் போர்க் கருவிகள் போன்றவற்றைக் கடனாக அளிப்பது தொடர்பான பேச்சுவார்த்தையின் போதே அமெரிக்கா தன்னுடைய விருப்பத்தை வெளிப்படுத்தியிருந்தது. 1944ல் உலகப் பொருளாதார அமைப்பைக் குறித்து விவாதிக்க ப்ரெட்டன்வுட்ஸ் என்ற இடத்தில் கூடிய சர்வதேச மாநாட்டில், அமெரிக்காவுக்கு தன்னுடைய சுயவிருப்பத்திற்கேற்ப காரியமாற்ற முடிந்தது.

**அமெரிக்காவின் நோக்கங்கள்**

போருக்குப் பிந்திய உலகப் பொருளாதாரக் கட்டுமானம் தொடர்பான அமெரிக்காவின் நோக்கம் மிகவும் தெளிவானது. அதை அவர்களுடைய அரசியல் தலைவர்களின் வார்த்தைகளிலேயே விளக்குவதுதான் பொருத்தமானது. அமெரிக்காவின் ஸ்டேட் செக்ரடரி கோர்டல்ஹள் அமெரிக்கக் காங்கிரசில் அறிவித்தார்: போருக்குப் பிந்திய வெளிநாட்டுச் சந்தைகள் நம்மைப் பொறுத்தவரை மிகவும் முக்கியத்துவமுடையதாக இருக்கும். இதில் அண்மையில் எந்த மாறுதலும் விளையப் போவதில்லை. வெளிநாட்டு வர்த்தகக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்கும் நமது உற்பத்தியின்பால் காட்டும் பாகுபாட்டை முடிவுக்குக் கொண்டு வரவும் பலம் வாய்ந்த ஒரு இயக்கம் ஏற்பட்டே தீரவேண்டும்.

தேசியத் திட்ட அசோசியேசன் செக்ரடரி ஸ்டேடி டே 1943இல் கூறினார், பெரும் முதலீடுகளைச் செலுத்தும் வாய்ப்புக்களைத் தேடும் பிரம்மாண்டமான சேமிப்புச் செல்வம் நம்மிடம் வந்தடையுமென்பது நிச்சயம். போர்க்காலத்தில் வந்து குவிந்த நிதி, போர்க்கால உறுதி பத்திரம் சேமிப்பு கணக்குகள் போன்றவற்றையெல்லாம் கருத்திற் கொள்ள வேண்டும். இவற்றை மூலதன முதலீடுகளாகச் செலுத்தும் வாய்ப்புக்களை உறுதி செய்ய வேண்டும்.

போர்க்காலப் பொருளாதார விஷயங்களின் ஆபீஸ் டைரெக்டராக இருந்த சார்ல்ஸ் பி. டாஃப்ட் 1944இல் கூறினார்; நமது உலோகங்கள் சுருங்கிக் கொண்டிருக்கின்றன எண்ணை வளமும் பற்றாக்குறைதான். வேறு பல அவசியப்

www.tamilarangam.net



பண்டங்களும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்ய நேரிடும். அடுத்த 50 ஆண்டுகளுக்குள் பிரிட்டிஷ்காரர்களைப் போல் நமது வாழ்க்கைக்குத் தேவையான பலவற்றையும் இறக்குமதி செய்ய நாம் தூண்டப்படுவோம்....

இவ்வாறு அமெரிக்கப் பொருட்களுக்கு கட்டுப்பாடற்ற சந்தை, உபரி மூலதனத்திற்கு பாதுகாப்பான முதலீட்டு வாய்ப்புகள், குறைந்த செலவில் சுலபமாகக் கச்சாப்பொருட்களைப் பெறுதல் இவை மூன்றும்தான் அமெரிக்கா குறிவைத்த இலக்குகள். இதில் உலக வங்கிக்கும் சர்வதேச நிதி நிறுவனத்திற்கும் என்ன பாத்திரம்?

அமெரிக்கக் காங்கிரசின் நாணய-பேங்கிங் கமிட்டியின் சேர்மனாக இருந்த மிஸ்டர் டில்லன் கூறியதைப் படியுங்கள். மிகவும் உணர்ச்சிவசப்படுத்தும் பொருளாதாரப் பிரச்சனைகளின் சுயாதிகார நாடுகளுக்கு அறிவுரை கூறவும், கடன் சுமைக்குத் தீர்வுகளை மேற்கொள்ளத் தூண்டவும், ஏனைய சுயாதிகார நாடுகளைவிட ஒரு சர்வதேச அமைப்பால்தான் இயலும். என்னுடைய கருத்துப்படி இது ஒரு அடிக்கோடிட வேண்டிய விஷயம்.

இவ்வாறுதான் போர்க்காலத்துக்குப் பிந்திய நிதி ஆதார அமைப்புக்கு உருவம் கொடுக்க ப்ரெட்டன் வுட்ஸ் மாநாட்டில் 1944-இல் உலக வங்கியும், சர்வதேச நிதி நிறுவனமும் தோன்றின. உலக வங்கிக்கும், நிதி நிறுவனமும் தோன்றின. உலக வங்கிக்கும், நிதி நிறுவனத்திற்கும் இணையான உலகளாவிய வர்த்தக முறைக்குத் தலைமையேற்க ஒரு சர்வதேச வர்த்தக அமைப்பைக்கூட உருவாக்கும் எண்ணமிருந்தது. ஆயினும் போருக்குப்பிந்திய பொருளாதார முறையின் நெடும் தூண்களில் ஒன்றாக உருவாக வேண்டியிருந்த சர்வதேச வர்த்தக நிறுவனம் (I.T.O.) பல்வேறு காரணங்களால் உருப்பெறவில்லை. உயிரற்றுப்போன சர்வதேச வணிககநிறுவனத்தின் இடத்தைத்தான் 1947இல் உருவான "வர்த்தகம் மற்றும் சுங்கவரிக்கான பொது ஒப்பந்தம்" (General Agreement on Tariffs and Trade) அதாவது 'GATT- காட்' அமைப்பு இன்றைக்கு அலங்கரித்துக் அமெரிக்கவுக்குப் பிறந்த இந்த மும்மூர்த்திகளிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகள் என்னென்ன?

**உலக வங்கி, நிதி நிறுவனம், 'காட்' அமைப்புகளின் தோற்றம்**

பழைய தங்க மூல அமைப்பைத் திருப்பிக் கொண்டுவர இயலாது; அதன் அவசியமும் இல்லை. இதை எல்லோரும் ஒப்புக் கொண்டனர். இன்றைக்கு உலகில் எங்குமே தங்க மூலஅமைப்பு கிடையாது. சந்தேகமிருந்தால் ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்து ரிசர்வ் வங்கியிடம் கொடுத்துப் பாருங்கள். பதிலுக்கு வங்கியிலிருந்து உங்களுக்குத் தங்கம் கிடைக்காது. மாறாக இன்னொரு நோட்டுதான் கிடைக்கும். ரிசர்வ் பேங்க் கவர்னர் அளிக்கக்கூடிய உத்திரதிலும் அச்சிட்ட வாசகம் இதைதான் கூறுகிறது: "நான் இதை வைத்திருப்பவருக்கு 100 ரூபாய் தொகை அளிப்பேன் என்று இதனால் வாக்குறுதி அளிக்கிறேன்!"

எனவே ப்ரடெட்டன் வுட்ஸ் மாநாட்டில் கீழ்க்காணும் முடிவு ஏற்பட்டது : ஒவ்வொரு நாடும் தன்னுடைய நாணயத்தின் வெளிநாட்டுப் பரிமாற்ற மதிப்பை

www.tamilarangam.net



ஒரு குறிப்பிட்ட எடை தங்கத்திற்கு, அல்லது டாலருக்குச் சமமாக நிலைப்படுத்த வேண்டும். டாலரின் மாற்று மதிப்பு விகிதத்தை 35 டாலர் =ஒரு அவுண்ஸ் தங்கம் என்ற விகிதத்தில் நிலைப்படுத்தலாம் என்று அமெரிக்கா ஏனைய நாடுகளிடம் உறுதியளித்தது. யார் கேட்டாலும் டாலவருக்கு மாற்றாக தங்கம் கொடுக்க அமெரிக்காவுக்குப் பொறுப்பிருக்கிறது. ஆயினும் சர்வ வல்லமை படைத்த அமெரிக்காவை யார்தான் சந்தேகிக்கிறார்கள்? தங்கத்திற்குப் பதில் டாலர் வெளிநாட்டு நாணய மாற்றுக்கு அடிப்படைக் காரணியாகிவிட்டது. உண்மையில் ப்ரெட்டன் வுட்ஸ் மாநாட்டில் டாலர் நாணய அமைப்புதான் உருவானது எனக் கூறலாம்.

ஒவ்வொரு நாடும் தங்களின் விருப்பத்திற்கேற்ப வெளிநாட்டு நாணய மாற்று விகிதத்தில் மாறுதல் செய்யக் கூடாது. ஏனைய நாடுகளுடன் கலந்து விவாதித்து ஒப்புதல் பெற்றுத்தான் ஆகவேண்டும். இந்த நடவடிக்கை களையெல்லாம் மேற்பார்வையிடத்தான் சர்வதேச நிதி நிறுவனம் என்றுதான் கருதப்பட்டது!

சர்வதேச நாணய நிதியத்தில் உறுப்பினராவதற்கு முன் தங்களுடைய நாணயத்தின் வெளிநாட்டு மாற்று மதிப்பை அறிவிக்க வேண்டும். பேலன்ஸ்ஆப் பேமெண்ட் பற்றாக்குறையால் இந்த மாற்று விகிதத்தை நிலைப்படுத்த முடியாவிட்டால் சர்வதேச நிதி நிறுவனத்திடமிருந்து கடன் பெற்று சிக்கலைச் சமாளிக்கலாம். இதற்காக 3000 கோடி ரூபாய் மூலதன அளவு பங்குகளையும் நாணய நிதி நிறுவனத்திற்காக ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஒவ்வொரு நாட்டின் அன்றைய பொருளாதாரப் பெருக்கத்திற்கேற்பத் தான் அந்தந்த நாட்டுக்கும் நிதிநிறுவனத்தின் மூலதனப் பங்குகள் பகுத்தளிக்கப்பட்டன, சர்வதேச நிதி நிறுவனத்தின் பங்குகளுக்கு 'கோட்டா' என்று பெயர். கோட்டாவின் 25 சதவிகிதத்தை தங்கமாகவும் மீதியை சொந்த நாணயத்திலும் நிதி நிறுவனத்திற்கு அளித்தால் போதுமானது.

ஒவ்வொரு நாட்டுக்கும் நிதி நிறுவனத்திடம் கடன் பெறும் அருகதை கோட்டாவின் அளவைப் பொறுத்திருக்கிறது. கோட்டாவின் 125 சதவிகிதம் வரை ஒவ்வொரு நாடும் வெளி நாணயத்தை கடனாகப் பெறலாம். ஆனால் ஒரு ஆண்டுக்குள் 25 சதவிகிதத்திற்கு மேல் கடன் பெறக் கூடாது. ஆரம்ப காலத்தில் இதுதான் சட்டமாக இருந்தது.

இவ்வாறு கடன் பெற்ற பிறகும் வெளிநாட்டு நாணய மாற்று விகிதத்தைக் கட்டுப்படுத்த முடியாவிட்டால் உறுப்பு நாடு சர்வதேச நிதி நிறுவனத்திடம் ஆலோசனை பெற வேண்டும். நிதிநிறுவனத்தின் ஒப்புதலுடன் வெளிநாட்டு மாற்றுவிகிதத்தை புதுப்பித்துக் கொள்ளலாம். சுருங்கக் கூறின், மாற்று விகிதம் நிலைத்திருக்க ஊக்குவிப்பது; மாற்றின் மீதான கட்டுப்பாடுகளை படிப்படியாக ஒழிப்பது; பேலன்ஸ் ஆப் பேமெண்டின் முறைகேடுகளை அகற்ற நிதி நிறுவனம் உறுப்பு நாடுகளுக்கு கடனளித்து உதவுவது; இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சர்வதேச பொருளாதார அமைப்பை பலப்படுத்துவது- போன்றவைதான் சர்வதேச நாணய நிறுவனத்தின் குறிக்கோளாக இருந்தன.

www.tamilarangam.net



உலக வங்கி ஒரு மாறுபட்ட பாத்திரத்தை ஏற்க வேண்டியிருந்து. போரில் சீர்குலைந்த மேற்கத்திய நாடுகள் மற்றும் வளரும் நாடுகளின் புனர் நிர்மானப் பணிகளுக்கும் வளர்ச்சிக்கும் பெரிய அளவில் நெடுங்கால மூலதன முதலீடு தவிர்க்க முடியாதது. சர்வதேச நிதி நிறுவனம் தரும் கடன் இதற்குப் பயன்படாது. ஏனென்றால் இந்தக் கடன்கள் பேலன்ஸ் ஆப் பேமெண்ட் பற்றாக்குறையை நிரப்புவதற்கான குறுகிய காலக் கடன்கள் மட்டுமே! இந்தக் குறையை தீர்ப்பதுதான் உலக வங்கியின் குறிக்கோள். பிரிட்டனால் ப்ரெட்டன்வுட்ஸ் கூட்டத்தில் உருக்கொடுக்கப்பட்ட வங்கியின் பெயர் உலக வங்கி என்பதல்ல! புனர்நிர்மானம் மற்றும் வளர்ச்சிக்கான சர்வதேச வங்கி (International Bank For Reconstruction and Development) என்று பெயர்.

உலக வங்கியின் பங்குதாரர்கள் தனி நபர்கள் அல்ல! சர்வதேச நிதி நிறுவனத்தில் உறுப்பினர்களாகும் நாடுகள்தான் உலக வங்கியில் பங்குதாரர்களாக இருக்க முடியும். அந்தந்த நாட்டின் பொருளாதார நிலை அடிப்படையில்தான் பங்குளை வினியோகிப்பார்கள். பங்கு தொகையில் ஒரு பகுதியை ரொக்கப்பணமாக அளிக்கலாம்; மீதியை எப்போது கேட்டாலும் கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும். இந்த கேரண்டியின் பின் பலத்துடன் சர்வதேச மூலதனச் சந்தையிலிருந்து உலக வங்கி கடன் பெறுகிறது. பெரிய அளவில் வெளிநாட்டு நாணயத்தைச் சேமித்து வைத்திருக்கும் நாடுகளிடமிருந்து தான் உலக வங்கி கடன் பெறுகிறது. நாடுகளே பங்குதாரர்களாக இருக்கும் உலகின் மிகப் பாதுகாப்பான வங்கியாக இருப்பதால்தான் மிகவும் மலிவான வட்டிக்கு உலக வங்கியால் கடன் பெற முடிகிறது. எனவே உலக வங்கி அளிக்கும் கடன்களுக்கு வட்டி விகிதம் சந்தை விகிதத்தைவிடக் குறைவாகவே இருக்கும். நெடுங்காலக் கடனுக்கு 8-10 சதவிகிதம்தான்.

உலக வங்கி பொதுத் தேவைகளுக்கு கடனளிப்பதில்லை. குறிப்பிட்ட திட்டங்களுக்குகத்தான் கடன் தருகிறது. இந்தத் திட்டங்கள் உற்பத்திக்கானதாக இருக்க வேண்டும். சராசரி லாபத்தையாவது ஈட்ட வேண்டுமெண்பதும் வங்கிக்கு மிகவும் கட்டாயம். இதற்கு மேலாக இவை தனியார்துறையில் இருப்பதைத்தான் வங்கி மிகவும் விரும்புகிறது. பொதுத்துறையில் இருந்தால் நேரிடையாகவோ மறைமுகமாகவோ தனியார் துறையை அதனுடன் பிணைக்கவும் வங்கி முயற்சிப்பதுண்டு.

'காட்'டின் முக்கியக் குறிக்கோள் உலக நாடுகளுக்கிடையே சுதந்திர வர்த்தகத்தை ஊக்குவிப்பதே! போருக்கு முந்தைய இரண்டு பத்தாண்டுக் காலம் வரை சர்வதேச வர்த்தகத்துறை கேட்பாரற்றுக் கிடந்தது. பெரும்பான்மை நாடுகளிலும் வெளி உலகுடன் மேற்கொள்ளும் வர்த்தகத்தை ஊக்கமிழக்கச் செய்யும் கொள்கைதான் கோலோச்சியது. ஒருவருக்கொருவர் நம்பிக்கையற்ற இந்தச் சூழ்நிலை சர்வதேச வர்த்தகம் மற்றும் உற்பத்தியை பெரிதும் எதிரிடையாகப் பாதித்தது. பெரும்பாலான முதலாளித்துவ நாடுகள் பொருளாதார அழிவையும், மந்த நிலையையும் சந்திக்க நேர்ந்தது. போருக்கு முன் ஏற்பட்ட இந்த கசப்பான அராஜக நிலைதான் ஒரு சர்வதேச வர்த்தக அமைப்பைப் பற்றிச் சிந்திக்க அமெரிக்காவையும் பிரிட்டனையும் தூண்டியது.

www.tamilarangam.net



சர்வதேச வர்த்தக நிறுவனம் அமைவது வரை உலகளாவிய வர்த்தகத்திற்கு தலைமை ஏற்க ஒரு இடைக்கால உடன்படிக்கை என்ற அளவில்தான் 'காட்' உருவானது. சர்வதேச வர்த்தக நிறுவனம் என்ற கொள்கை கைவிடப்பட்டதும் 'காட்' ஒரு நிலையான அமைப்பாக மாறிவிட்டது; அவ்வளவுதான். உலக வங்கி, சர்வதேச நாணய நிதி நிறுவனம் போன்று பன்னாட்டு அமைப்பெனும் உரிமை கொண்டாட 'காட்'டுக்கு இன்றளவும் இயலவில்லை. உலகளாவிய வர்த்தகத்தை மேற்பார்வையிடும் பெரும் பெறுப்பைச் சுமந்து கொண்டிருப்பினும் நாடுகளுக்கிடையிலான உடன்படிக்கை அதாவது ஒப்பந்தம் எனும் பதவி மட்டும்தான் 'காட்'டுக்கு இருக்கிறது. 'காட்'டுக்கு உறுப்பினர்கள் கிடையாது. 'காண்டிராக்டிஸ் கட்சியினர்' (காண்டிராக்ட் - ஒப்பந்தம் செய்து கொட்ணவர்கள்) மட்டுமே இருக்கிறார்கள் என்று கூறப்படுவதும் வெறுமமே அல்ல! 'நிறுவனம் அல்ல; ஆனால் நிறுவனமே' என விடுகதைகளை நினைவூட்டும் 'காட்'டின் இன்றைய செயல்முறையை நிலைநாட்டுவதுதான் அமெரிக்கா உள்ளிட்ட ஏகாதிபத்திய மேலாதிக்கங்களின் நோக்கம். முடிவெடுப்பது மற்றும் நடைமுறைப்படுத்துவது போன்ற நடவடிக்கைகளின் 'காட்'டின் தெளிவின்மை திரைமறைப்பாக ஏகாதிபத்திய நோக்கங்களுக்குப் பயன்படுகிறது. காண்டிராக்டிஸ் கட்சியினருக்கு (இனிமேல் உறுப்பினர்கள்) சம அதிகாரங்கள் மற்றும் ஓட்டுரிமை இருப்பதாகத்தான் சொல்லப்படுகிறது. ஆனால் வாக்குப்பதிவு மிகவும் அபூர்வமாகத்தான் நடைபெறும். வளர்ந்த நாடுகளின் தலைமையில் நடைபெறும் அதிகாரபூர்வமற்ற விவாதங்களின் முடிவுகளை பொதுத்தீர்மானங்களாக அரசியல் மற்றும் பொருளாதார பலத்தைப் பயன்படுத்தித் திணிக்கும் ஒரு தனிப்பாணியைத் தான் 'காட்' அமைப்பின் மூலம் ஏகாதிபத்தியம் கையாண்டு வருகிறது.

பொருளாதாரக் கோட்பாடுகளில் உலக வங்கி மற்றும் நிதி நிறுவனத்தின் பார்வைதான் 'காட்'டுக்கும் இருக்கிறது. சுதந்திரமான வர்த்தகம் பொருளாதார வளர்ச்சிக்கு முதன்மையான காரணியாக இருக்கிறது. உலக நாடுகளுக்கிடையில் வர்த்தகம் சர்வ சுதந்திரமாகவும். கட்டுப்பாடுகளின்றியும் வளர்ச்சி பெறவேண்டும். சுதந்திரமான வர்த்தகத்தை செழுமைப்படுத்த தேவையான பணம் முதலீடு, பேங்கிங் வசதி போன்றவற்றைச் செய்து முடிக்கும் பணியைத்தான் உலக வங்கியும் நிதி நிறுவனமும் மேற்கொண்டு வருகின்றன. சர்வதேச வர்த்தகத்துடன் நேரிடைத் தொடர்புடைய பிரச்சினைத் துறைகளில்தான் 'காட்' செயல்படுகிறது. சர்வதேச வர்த்தகச் சர்ச்சைகளை ஒருங்கிணைத்து வர்த்தகக் கட்டுப்பாடுகளை அகற்றுவது, சர்வதேச வர்த்தக உடன்படிக்கைகள் மற்றும் சட்ட திட்டங்களை உறுப்பு நாடுகள் அனைத்தும் கடைபிடிக்கின்றனவா என்று உறுதி செய்வது போன்ற பணிகளைச் செய்வது 'காட்'டின் பொறுப்பு.

**வளர்ச்சியின் புதிய மூலங்கள்**

கடந்த நான்கு பத்தாண்டுகளுக்கிடையில் உலகப் பொருளாதார நிலைமைகளைக் கட்டுப்படுத்துவதில் கேள்வி எழுப்ப முடியாதவாறு ஒரு இடத்தை இந்த மூன்று நிறுவனங்களும் கைப்பற்றியிருக்கின்றன. உலக நாடுகள் 'காட்' உடன்படிக்கையை மதிக்கவும், சுதந்திரமான வர்த்தக நியதிகளை ஏற்றுக் கொள்ளவும்

www.tamilarangam.net



ஆரம்பித்தன. 'காட் சுற்று' என்று அழைக்கப்படும் சர்வதேச வர்த்தகச் சர்ச்சைகள் வாயிலாக சுங்கத் தீர்வுகளை கணிசமாகக் குடிறக்க முடிந்திருக்கிறது. 'காட்'டின் எட்டாவது சுற்றுதான் இப்போது நடைபெற்றுக் கொணடிருக்கிறது.

பேலன்ஸ் ஆப் பேமெண்டின் சமசீரற்ற நிலைமையை முடிவுக்குக் கொண்டு வர, நாணய நிதி நிறுவனத்தின் திறனை வளர்க்கும் மூலதன பலம் அதாவது கோட்டா பலமுறை அதிகரிக்கப்பட்டது. 1944இல் 8-8 பில்லியன் டாலராக இருந்த மொத்தக் கோட்டா 1990இல் அதிகரித்த பிறகு ஏறத்தாழ 150 பில்லியன் டாலருக்குச் சமமாகப் பெருகியிருக்கிறது. மொத்தக் கோட்டாவின் பெருக்கத்திற்கப்பால், சில குறிப்பிட்ட கடன் வசதிகளைத் துவக்கவும் நிதிநிறுவனத்தால் முடிந்திருக்கிறது. ஏற்றுமதி வருவாய் எதிர்பாராதவிதமாகச் சரிவதன் மூலம் சிரமத்துக்குள்ளாகும் நாடுகளைக் கருத்திற் கொண்டு தயார் செய்யப்பட்ட நஷ்டயீடு நிதி உதவி (Compensatory Financing Facility), எண்ணையின் பெருகிய இறக்குமதிச் செலவை எதிர்கொள்ளும் எண்ணை உதவி (Oil Facility) கட்டமைப்புத் தொடர்பான பேலன்ஸ் ஆப் பேமெண்ட் பிரச்சினைகளைச் சந்திக்கும் நாடுகளுக்கு நெடுங்காலக் கடன்களை அனுமதிக்கும் விரிவுபடுத்தப்பட்ட நிதி உதவி (Extended Fund Facility) போன்றவை சில குறிப்பிடத்தக்க முக்கியக் கடன் வசதிகளாகும். நிதி நிறுவனம் அதன் கட்டுப்பாட்டிலுள்ள வெளிநாட்டு நாணயச் சேமிப்பைப் பெருக்குவதற்காக மேற்கொண்ட மிக முக்கியமான நடவடிக்கை விசேஷக் கடன் வசதிகளுக்குப் பயன்ப்டும் 'சிறப்பு கடன்பெறும் உரிமை' (Special Drawing Rights) என்றழைக்கப்படுகிற சர்வதேச நாணயத்தைப் படைத்தது தான். 1970, 1971, 1972 என மூன்றாண்டுகளில் ஏறத்தாழ 1000 கோடி எஸ்.டி.ஆர். (S.D.R.) சிருஷ்டிக்கப்பட்டது. துவக்கத்தில் ஒரு எஸ்.டி.ஆரின் மதிப்பு ஒரு டாலருக்கு இணையாக நிர்ணயிக்கப்ட்டிருப்பினும் சுமார் பதினாறு முக்கிய நாணயங்களின் மதிப்புடன் இணைத்து நிர்ணயிக்கப்படும் நடைமுறைதான் இப்போதிருக்கிறது.

சுதந்திரமாக நோட்டச்சடிக்கும் இந்த உரிமை, சர்வதேச நாணய நிதி நிறுவனத்தை ஒரு சூப்பர்சர்க்காராக்கப் போதுமானது. ஆனால் அமெரிக்காவுங்கு இதில் உடன் பாடில்லை. தன்னுடைய கட்டுப்பாட்டில் நிதி நிறுவனத்தை ஒரு சூப்பர் வங்கியாக நிலைப்படுத்தத்தான் அமெரிக்கா விரும்புகிறது. பூதாகாரமான பேலன்ஸ் ஆப் பேமெண்ட் பற்றாக்குறையை எதிர்கொள்ளும் வளரும் நாடுகள் மற்றும் உலக வர்த்தகத் துறையின் தேவைக்கேற்ப சர்வதேச நாணய மாற்று திறனை உயர்த்த நிதி நிறுவனம் தயாராயில்லை. உலகளாவிய வர்த்தகத் துறையில் பயன்படுத்தப்படும் நாணயமாற்றுத் திறனின் பத்திற்கு ஒன்றுகூட வராது நிதி நிறுவனத்தின் மூலதனம். எஞ்சிய 90 சதவிகிதமும் ஏகாதிபத்திய அரசுகள் மற்றும் பன்னாட்டு ஏகபோகங்களின் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் பொறுப்பில் 2.5 சதவிகிதம் மட்டுமே நிதி நிறுவனத்திடம் பெற்ற கடன். அதாவது நிதி நிறுவனத்தின் பலத்தைக் கணக்கிட, அதன் நேரிடையான கடனளிக்கும் திறனைக் கூர்ந்து பார்ப்பதால் பயனில்லை. மாறாக நிதி நிறுவனத்தின் உடைமைக்கு வெளியே இருக்கும் நாணய மாற்றுச் சேமிப்பின் மீது அது செலுத்தும்

www.tamilarangam.net



கட்டுப்பாட்டில்தான் நிறுவனத்தின் ஆற்றல் குடிகொண்டிருக்கிறது. சர்வதேச நாணய நிதி நிறுவனத்தின் சர்டிபிகேட் இல்லாவிட்டால் இந்தியா போன்ற நாடுகளுக்கு ஏனைய அமைப்புகளிலிருந்து சர்வதேக் கடன் கிடைக்காது. இங்குதான் சமகால உலகில் நிதி நிறுவனத்தின் முக்கியத்துவம் வெளிப்படுகிறது. இந்த நிலை எப்படி ஏற்பட்டது? இதன் விளைவுகள் என்ன? என்பனவற்றை அடுத்த அத்தியாயத்தில் ஆராயலாம்.

உலக வங்கியின் ஆற்றலிலும் இதற்குச் சமமான வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு உலக வங்கிக்கு மூன்று கிடைகள் இருக்கின்றன. முதலாவது 1944இல் உருவாக்கப்பட்ட I. B. R. D. இதில் 148 உறுப்பு நாடுகள் இருக்கின்றன. இவற்றின் மொத்தப் பங்கு மூலதனம் 5885 கோடி டாலர். 1985இல் மட்டும் I. B. R. D. 44 நாடுகளுக்கு 131 திட்டங்களுக்காக 1100 கோடி டாலர் கடனளித்திருக்கிறது.

1960இல் சர்வதேச வளர்ச்சி நிறுவனம் அதாவது (I. D. A-International Delelopment Association) என்ற கிளை அமைப்பு உருவாகிறது. I. B. R. D. யிடம் கடன் பெறக் கடுமையான நிபந்தனைகளால் அலைக்கழிக்கப்பட்ட வளரும் நாடுகள் சலுகை வட்டி விகிதத்தில் மிகவும் நெடுங்காலக் கடனளிக்கும் (40-50 ஆண்டுக்காலம்) ஒரு வங்கியை ஐ. நா. சபையின் கட்டுப்பாட்டில் அமைத்திட நெருக்க ஆரம்பித்தன. SUNFED (Special United Nations Fund for Econoomic delvlopment) என்ற பெயரில் சலுகைக் கடனளிக்கும் ஒரு புதிய வங்கி தோன்றுவது பெரும்பாலும் உறுதியாகி விடவே, அதுவரை இந்த திட்டத்தை தீவிரமாக எதிர்த்து வந்த உலக வங்கி பிளேட்டை திருப்பிப் போட்டது. தாங்களே அத்தகைய ஒரு ஏஜென்சியைத் துவங்குகிறோம் என்று உலக வங்கி கூறியது. அமெரிக்காவின் முடிவும் உலக வங்கிக்கு சாதகமாக இருந்தது. இதன் விளைவுதான் I D A யின் தோற்றம்

உலக வங்கயின் பங்குதாரர்கள்தான் I D Aயில் உறுப்பினராக முடியும். இன்று I D Aயில் 133 நாடுகள் உறுப்பினர்களாக இருக்கின்றன. தனிநபர் வருவாய் 761 டாலருக்கு கீழ் இருக்கும் (1953-விலை நிலவரம்) நாடுகளுக்குகத் தான் I D Aயிலிருந்து கடன் கிடைக்கும். சர்வீஸ் சார்ஜுக்கான பெயரளவு வட்டி வகிதம் மட்டுமே இந்தக் கடனுக்கு வசூலிக்கப்படுகிறது. அதேபொழுது 40-50 ஆண்டுகளுக்குள் இந்தக் கடன்களைத் திருப்பிச செலித்தினால் போதுமானது. (கடந்த உலக வங்கியின் வருடாந்திர மாநாட்டில் இந்த காலக் கெவை 30 ஆண்டுகளாகக் குறைத்திருக் கிறார்கள்.

மூலதனத்தை ஏற்றுமதி செய்யும் உறுப்பு நாடுகள் வட்டியில்லாக் கடனாக மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை ஒரு தொகையை I D A க்கு அளிப்பதால்தான் சலுகை விகிதத்தில் கடனளிக்க முடிகிறது. இவ்வாறு பலமுறை கடன் வாங்கப்பட்டன. ரீகனுக்கு இந்த வழிமுறையில் நாட்டமில்லாததால் 8ஆவது கணக்கெடுப்பு ஒரு நெருக்கடிக்குள்ளானது. ஆனால் 1986 செப்டம்பரில் 1150 கோடி டாலர் தொகையை அடுத்த மூன்றாண்டுகளுக்கான உதவித் திட்டத்தை I D A இறுதியாக ஏற்றுக் கொண்டது. இதையும் சேர்த்து I D Aயின் மொத்தப் பணபலம் 4480 கோடி டாலரை எட்டியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மிகவும் கவர்ச்சியான I D A கடன்களுக்காக ஓரளவு வளர்ந்த நாடுகள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்கின்றன. அதன் காரணமாகவே அந்த நாடுகளை ஒரு வரையறைக்குள் நிறுத்தி வைக்க இந்தக் கடன்கள் உலக வங்கிக்குச் சிறந்த ஆயுதமாகப் பயன்படுகிறது.

உலக வங்கிகள் மூன்றாவது துணை நிறுவனமான சர்வதேச ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் அதாவது I F C (International Finance Corporation 1956இல்தான் அமைக்கப்பட்டது. I F Cயின் அறிவிக்கப்பட்ட கொள்கையே தனியார் கார்ப்பரேட் மண்டலத்திற்கு உதவுவதுதான். I B R D-யும் தனியார் மண்டலத்திற்கு கடன் அளிப்பினும் இந்தக் கடன்களுக்கு அந்தந்த சர்க்கார்கள் கேரண்டி அளிக்க வேண்டும் என்ற நிபந்தனை இருக்கிறது. சர்க்கார் கேரண்டியுடன் வரும் தலையீடுகளை பன்னாட்டு ஏகபோகங்கள் விரும்புவதில்லை. எனவே அவர்களுடைய வசதிக்காகத்தான் I F C உருவாக்கப்பட்டது. I F C-யின் தனித்தன்மை, அது கம்பெனிகளுக்கு கடன் அளிக்கிறது என்பதோடு கம்பெனிகளில் நேரிடையாகவே பங்குதாரர் ஆகவும் செய்கிறது என்பதுதான். இவ்வாறு I F C-யின் வாயிலாக பன்னாட்டு ஏகபோகங்களும் பங்குதார உரிமையாளர் உறவுகூட உலக வங்கிக்கு இருக்கிறது. 1985இல் I F C அளித்த 900 கோடி டாலர் பண உதவியில் 75 கோடி டாலர்கள் 'பங்கு' வாங்கப் பயன்படுத்தப்பட்டது. 1985இல் I F C-யால் பங்குகள் வாங்கப்பட்ட கம்பெனிகளின் மொத்தம் மூலதன பலம் 275 கோடி டாலர். I F C-யும் உலக வங்கியின் உதவியுடன் சர்வதேச மூலதனச் சந்தையிலிருந்து குறைந்த வட்டிக்கு கடன் பெற்றுத்தான் தனக்கு வளம் சேர்த்துக் கொள்கிறது.

இவ்வாறு 1985இல் I B R D, I D A. I F C போன்ற துணை அமைப்புகள் வாயிலாக உலக வங்கி 1500 கோடி டாலர் வரை வினியோகம் செய்திருக்கிறது. ஆனால் உலக வங்கியின் ஒத்துழைப்புடன் நடைபெறும் திட்டங்களில் செலுத்தப்பட்ட மொத்தத் தொகை இதைவிட எவ்வளவோ பூதாகாரமானது. கூட்டு நிதியளிப்பு (Co-Financing) இணையான நிதியளிப்பு (Matching Grant) போன்ற இரண்டு டெக்னிக்குகள் மூலம்தான் உலக வங்கி இதைச் சாதிக்கிறது.

உலக வங்கியின் திட்டங்களில் ஏனைய சர்வதேச ஏஜென்சிகளையும், தனியார் வங்கிகளையும் முதலீடு செய்யுமாறு வங்கியால் வற்புறுத்தப்படுகிறது. இதை கோ-பைனான்சிங் என்று அழைக்கிறோம். 1985இல் 104 திட்டங்களில் 480 கோடி டாவலர் கோ-பைனான்சிங் நடைபெற்றது. உலக வங்கியின் திட்டங்களில் அந்தந்த நாடுகளின் அரசுகள் முதலீடு செய்வதைத்தான் 'மேச்சிங்-கிராண்ட்' என்று சொல்கிறோம். பல்வேறு திட்டங்களுக்காக உலக வங்கியால் அளிக்கப்படும் தொகைக்கு ஏற்ப மேச்சிங்-கிராண்ட் அளிக்க வளரும் நாடுகளின் அரசுகளுக்குப் பொறுப்பிருக்கிறது. இவற்றைப் பார்க்கும்போது உலக வங்கியின் செல்வ வளம் அதிகாரப்பூர்வக் கணக்குகளில் காணப்படுவதைவிட எவ்வளவோ பெரிது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

**அமெரிக்கச் சார்புநிலை**

www.tamilarangam.net



பொருளாதாரப் பிரச்சினைகளில் முதலாளித்துவ உலகின் 'மூளை வங்கியாக' நிதி நிறுவனமும், உலக வங்கியும் இன்றைக்கு வளர்ந்து விட்டன! வளர்ந்த நாடுகள் மற்றும் வளரும் நாடுகளின் மிகச் சிறந்த பொருளாதார 'மூளை' களை வங்கியும், நிதி நிறுவனமும் விலை பேசி வாங்கிவிடுகின்றன. 5000 ஊழியர்களுக்குமேல் பணியாற்றும் உலக வங்கியின் ஆராய்ச்சி மற்றும் நிர்வாகச் செலவுகள் மட்டும் 70 கோடி டாலர் என்றால், வங்கியின் ஊழிய - ஊதிய முறைகளை யூகித்துக் கொள்ளலாம்.

இவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒவ்வொரு ஆண்டும் உலக நாடுகளைப் பற்றியும், அந்த நாடுகளின் பிரச்சினைகளைப் பற்றியும் நுனுக்கமான பொருளாதார ஆய்வுகளை மேற்கொள்கின்றனர். இந்த ஆய்வுகள் பத்தாயிரக்கணக்கான பக்கங்களைக் கொண்டவை. இந்த 'ஆராய்ச்சிப் பண்டத்தில்' ஒரு சிறு பகுதியை மட்டும்தான் வெளியே விடுவார்கள். சர்வதேச நாணய நிதி நிறுவனத்தின் அறிக்கைகள் (International Monetary Fund Staff Papers) என்றும், உலக வங்கியின் மஞ்சள் உறை செயல் குறிப்புகள் (Yellow Cover Working Papers) என்றும் பிரசுரிக்கப்படும் தொடர்கள்தான் வெளியிடுபவைகளில் முக்கியமானவை. இந்த ஆய்வுகள் அறிவுஜீவிகளையும், போட்பாடுகளை வகுக்கும் நிபுணர்களையும் ஈர்த்து அவர்களிடம் பெரும் செல்வாக்குப் பெறுகின்றன.

ஆனால் இவை எதுவும் - செழிப்பாற்றல், தொழில் நுட்பத் திறன், செல்வாக்கு-உலக வங்கியை சுதந்திரமான ஒரு நடு நிலை வங்கியாக மாற்ற வில்லை. உலக வங்கியையும் நிதி நிறுவனத்தையும் அமெரிக்கச் சர்க்கார்தான் கட்டுப்படுத்துகிறது என்ற கூற்றில் தவறில்லை. அமெரிக்க ஜனாதிபதிகள் மாறி மாறி வரும்போது, அதற்கேற்ப வங்கியும், நிதி நிறுவனமும் குரலை மாற்றுவது வழக்கம். வளரும் நாடுகளின்பால் இவர்களுடைய கொள்கை எப்போதுமே அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையின் பிரதிபலிப்பாகவே இருக்கும். அலண்டேயின் 'சிலி'யை வங்கியும், நிதி நிறுவனமும் தவிர்த்தே வந்தன. அலண்டே அரசு கவிழ்க்கப்பட்டதும் 'தாவா'க்களும் தீர்ந்து விட்டன. இப்படி எத்தனை உதாரணங்கள் வேண்டுமானாலும் கூறலாம்.

வெளித் தோற்றத்திற்கு ஐ.நா. சபையை ஒட்டித்தான் உலக வங்கியும், நிதி நிறுவனமும் செயல்படுவதாகக் கூறப்படினும், ஐ.நா. சபையின் 'ஒரு நாடு, ஒரு ஓட்டு' தத்துவமெல்லாம் இங்கு செல்லுபடியாகாது. ஒவ்வொரு நாட்டுக்கும் அதனுடைய கோட்டா அல்லது பங்கு அடிப்படையில் தான் ஓட்டுரிமை.

சர்வதேச நாணய நிதி நிறுவனம் உருவாக்கப்பட்ட போது அமெரிக்காவின் கோட்டா 35 சதவிகிதமாக இருந்தது. பிறகு பொருளாதார பலப்பரீட்சையில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாக அமெரிக்காவின் கோட்டா குறைக்கப்பட்டது. ஏனைய நாடுகள், குறிப்பாக ஐரோப்பிய சக்திகள் ஜப்பான் போன்றவற்றின் கோட்டா கூடிவிட்டன. அமெரிக்காவின் கோட்டா இன்றைக்கு 20 சதவிகிதம் மட்டுமே. இருப்பினும் அமெரிக்காவின் கட்டுப்பாடு ஆளுகைக்கு எந்த குறைவும் ஏற்படவில்லை. ஏனென்றால் எல்லா முடிவுகளுக்கும் 80 சதவிகிதம் ஆதரவு தேவை.

www.tamilarangam.net



அமெரிக்காவின் ஆதரவில்லாமல் எந்த முடிவையும் எடுக்க முடியாது என்று பொருள்.

உலக வங்கியின் நிலைமையும் இதுவே தான். அமெரிக்காவின் 'பங்கு' 20 சதவிகிதம்! இதன் மூலம் தனக்குப் பிடிக்காத எந்த முடிவையும் 'வீட்டோ' செய்ய அமெரிக்காவுக்கு உரிமையிருக்கிறது. உலக வங்கியின் தலைவரை உறுப்பு நாடுகள் அனைத்தும் சேர்ந்துதான் தேர்ந்தெடுக்கின்றன. இருப்பினும் அமெர்க்க ஜனாதிபதியின் 'நாமினி'யைத்தவிர இதுவரை வேறு யாரும் வங்கியின் தலைவராக இருந்ததில்லை. சர்வதேச நிதி நிறுவனத்தின் விஷயத்தில் அமெரிக்கா சற்று விட்டுக் கொடுக்க முன்வந்தது. ஐரோப்பியப் பிரஜையைத்தான் வழக்கமாக மேனேஜிங் டைரக்டர் ஆக்குவார்கள். ஆனால் ஒரு அமெரிக்க டிப்டி மேனேஜிங் டைரக்டரும் அவசியம் இருந்ததாக வேண்டும்.

ப்ரெட்டன்வுட்ஸ் மாநாட்டில், இந்த நிதி நிறுவனங்களின் மீது அமெரிக்கா செலுத்தும் கட்டுப்பாடு ஒரு பிரச்சினையாகிப் பெரும் சர்ச்சையைக் கிளப்பி விட்டது. பிரபல பொருளாதார அறிஞராக இருந்த கெயின்ஸ் பிரபு, இந்த இரு அமைப்புகளும் முற்றிலும் சுதந்திரமாகச் செயல்படும் நிதி நிறுவனங்களாக இருக்க வேண்டும் என்று விரும்பினார். ஆனால் அமெரிக்கா அதைச் செவிமடுக்க மறுத்து விட்டது. அது மட்டுமின்றி, இந்த நிறுவனங்களின் இருப்பிடம் அவற்றின் மிகப் பெரிய பங்கு உரிமையாளரின் நாட்டிலேயே இருக்க வேண்டும் என்று எழுதியும் வைத்து விட்டது! அமெரிககாவின் நிதிமூலத் தலைநகரான நியூயார்க் நகரில் வங்கி மற்றும் நிதி நிறுவனத்தின் செயலகம் நிறுவப்படவில்லை. மாறாக அரசியல் தலைநகரான வாஷிங்டனில்தான் என்பதை 'சிம்பாலிக்' ஆக இங்கு குறிப்பிடாமலிருக்க முடியவில்லை!

www.tamilarangam.net

# 4

# கடன் பொறிக்கு அழைத்துச் செல்லும் நிதி நிறுவனம்

ப்ரெட்டன்ஸ் வுட்ஸ் மாநட்டில் சர்வதேச நாணய நிதி நிறுவனம் உருவாக்கப்பட்ட போது, கெயின்ஸ் பிரபு வெளியிட்ட ஐயப்பாடுகள் உண்மையாகி விட்டன. அமெரிக்கச் சார்பு நிலை புதிய நாணய அமைப்புக்கு வினையாகி விட்டது.

கடந்த அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டதைப் போல் பிரெட்டன் வுட்ஸ் மாநாட்டு முடிவுக்கேற்ப டாலர் சர்வதேச நாணய மாற்றின் அடிப்படையாகி விட்டது. அதாவது உலக நாணயம்! வெளிநாட்டு வர்த்தகம், மற்றும் வெளிநாட்டுச் சம்பாத்தியங்களைச் சேமித்துப் பாதுகாப்பது போன்றவற்றிற் கெல்லாம் டாலர்தான் பயன்படுத்தப்படுகிறது.

அமெரிக்காவுக்கு வந்த அதிர்ஷ்டத்தைப் பாருங்கள். நமது நாட்டில் பற்றாக்குறைக்கு நோட்டை அச்சிட்டும் குவிப்பதைப் போல் சர்வதேச நாணயத்தை, அதாவது டாலரை அச்சிட்டு வெளியிடும் உரிமை அமெரிக்காவுக்கு கிடைத்து விட்டது! இந்த உரிமையின் மீது நிதி நிறுவனத்திற்கு எந்தக் கட்டுப்பாடும் கிடையாது. சர்வதேச அரங்கில் நாணயக் குளறுபடிகளின் வேர்கள் இங்கிருந்துதான் துவங்குகிறது என்று சொல்லலாம்.

### ப்ரெட்டன் வுட்ஸ் நாணய அமைப்பின் வீழ்ச்சி

நாடுகள் அனைத்திற்கும் சர்வதேச கொடுக்கல் வாங்கலுக்கு டாலர் தேவை. அமெரிக்காவைத் தவிர மற்ற நாடுகளுக்கு டாலர் எப்படிக் கிடைக்கும்? இதற்கு அமெரிக்காவுடன் மேற்கொள்ளும் வர்த்தகத்தில் உபரியைப் பெற வேண்டும். ஏனைய நாடுகளுக்கு அமெரிக்காவுடன் மேற்கொள்ளும் வர்த்தகத்தில் உபரியேற்பட்டால் அமெரிக்காவுக்கு பற்றாக்குறைதான் என்பதைச் சொல்லத் தேவையில்லை. சர்வதேச மாற்றுத் திறத்தின் அல்லது நாணயத்தின் ஊற்று

www.tamilarangam.net



அமெரிக்க பேலன்ஸ் ஆப் பேமெண்ட் கணக்கின் பற்றாக்குறை என்றாகிறது அமெரிக்காவின் பேலன்ஸ் ஆப் பேமெண்ட பற்றாக்குறை அதிகரித்தால் உலக நாணயத்தின் புழக்கமும் அதிகரிக்கும். பற்றாக்குறை குறைந்தால் புழக்கமும் குறையும்.

சர்வதேச நாணயத்தை அச்சிட்டு வெளியிடும் விசேஷ உரிமையைப் பயன்படுத்தி அமெரிக்கா பெற்றுக் கொண்டிருக்கும் லாபத்தைத்தான் சீனியோரேஜ் **(Seigniorge)** என்று அழைக்கப்படுகிறது. சர்வதேச நாணய மாற்றுச் சேமிப்பாக உலக நாடுகள் அனைத்தும் முக்கியமாக டாலரைத்தான் குவிக்கின்றன! அமெரிக்காவின் காகித நோட்டான டாலரைப் பெற மற்றவர்கள் பொருட்களையும், சேவைகளையும் கொடுக்க வேண்டியிருக்கிறது. இவ்வாறு கிடைக்கும் டாலர்கள் உடனடியாக அமெரிக்கப் பொருட்கள் வாங்க பயன்படுத்தப்படவில்லை. மாறாக சர்வதேச மாற்றுச் சேமிப்பாக இருப்பு வைக்கப்படுகிறது. கூடுதல் சேமிப்பை இருப்பு வைப்பது சொந்த நாட்டிலாக இருந்தால் வட்டிகூட கிடைக்காது. டாலர் நோட்டு ஜாமீனில் மற்றவர்கள் அமெரிக்காவுக்கு வட்டியில்லாக் கடன் கொடுப்பதற்கு ஈடானது இந்த ஏற்பாடு! ஏற்றுமதி வருவாயிலிருந்து கிடைக்கும் டாலரின் ஒரு பகுதியை, வெளிநாட்டு நாணயச் சேமிப்பாக இருப்பு வைத்துக்கொள்ளும் இந்தியாவும் உண்மையில் அமெரிக்காவுக்கு வட்டியில்லாக் கடனைத்தான் அளிக்கிறது! டாலர் நோட்டை அச்சடித்து அதன் ஜமீனில் பிறருடைய பொருட்களை வாங்கிப் பயன்படுத்த அமெரிக்காவுக்கு இந்த வாய்ப்புதான் சீனியேரேஜின் ஊற்றிடம்.

சர்வதேச நாணயமாக எங்கும் அங்கீகாரம் பெறத் துவங்கிய டாலரை அச்சடித்து, பிற நாடுகளின் பொருட்களையும், சேவைகளையும் விருப்பம்போல் வாங்கிக்குவிக்கக் கிடைத்த பொன்னான வாய்ப்பை அமெரிக்கர்கள் சரியாகப் பயன்படுத்திக் கொண்டனர். ராணுவம்-மற்றும் ராணுவமில்லாத உதவிகளுக்கும், சோசலிச உலகுக்கெதிரான ராணுவ தளங்களுக்கும், போர்த் தயாரிப்புகளுக்கும், அனைத்திற்கும் மேலாக வெளிநாட்டுக் கம்பெனிகளை வாங்கிக் குவிப்பதற்கும் டாலர் ஏராளமாகப் பயன்படுத்தப்பட்டது. வெளிநாட்டில் மூலதனத்தைப் புகுத்த அறுபதுகளில் ஆண்டுக்கு 500 கோடி டாலர் வரை அமெரிக்கா இவ்வாறு செலவிட்டது. அமெரிக்காவின் தாராளம் அதிகரிக்க அவர்களுடைய பேலன்ஸ் ஆப் பேமெண்ட் பற்றாக்குறையும் பெருகிக்கொண்டேயிருந்தது. பிற நாடுகளுக்கு பேலன்ஸ் ஆப் பேமண்ட் பற்றாக்குறை என்பது ஒரு கடுமையான பொருளாதார பிரச்சினை. ஆனால் அமெரிக்கப் பற்றாக் குறையோ உலக நாணய அமைப்பின் சீரான இயக்கம் மற்றும் முன்னேற்றத்திற்கு தவிர்க்க முடியாத ஒரு காரணியாகத்தான் புகழ்ந்துரைக்கப்பட்டிருந்தது! அமெரிக்காவுக்கு பற்றாக்குறை ஏற்பட்டால்தான் மற்றவர்களுக்கு வெளிநாட்டு நாணச் சேமிப்பு கிடைக்குதமல்லவா? அமெரிக்காவுக்கும் இதனால் மகிழ்ச்சியே. பற்றாக்குறையை நிரப்ப டாலரை அச்சிட்டு ஏற்றி அனுப்பினால் போதுமல்லவா? ஆனால் பேலன்ஸ் ஆப் பேமெண்ட் பற்றாக்குறை முறையற்று அதிகரித்து, டாலர் புழக்கம் மடைதிறந்து பெருக்கெடுத்தவுடன் குளறுபடிகளும் ஆரம்பமாயின. டாலரின் உண்மையான

www.tamilarangam.net



மதிப்பு மற்றும் மாற்று விகிதம் சரியக்கூடிய பொய்ப்புக்களைப் பற்றி கதைகளும், கட்டுக் கதைகளும் பரவ ஆரம்பித்தன.

மிகவும் பாதுகாப்பான கரன்சி என்று கருதப்பட்ட டாலரைக் கையில் வைத்திருக்க பலர் பயந்தனர். வியட்னாம் போரில் எதிர்த் தாக்குதல் ஏற்பட்டதும் அமெரிக்கா பதுங்கவேண்டியதாயிற்று! டாலர் இருப்புச் சேமிப்பை வேறு நாணயங்களாகவும் அல்லது தங்கமாகவும் மாற்ற அலைபாய ஆரம்பித்தது. டாலரின் மாற்று மதிப்பு 35 டாலருக்கு ஒரு அவுன்ஸ் தங்கம் என்ற மதிப்பில் நிலையாக வைத்திருப்போம் என்றல்லவா அமெரிக்கா பிற நாடுகளுக்கு உறுதியளித்திருந்தது. அதன் அடிப்படையில் அல்லவா ப்ரெட்டன் வுட்ஸ் நாணய அமைப்பு உருவானது. ஆரம்பத்தில் அமெரிக்கா' இந்த திட்டத்தின்படித்தான் நடந்து கொண்டது.

ஆனால் அமேரிக்காவின் தங்கச் சேமிப்பு நெடுகச்சரிய ஆரம்பித்ததும் நிலைமை கவலைக்கிடமானது. 1950இல் 2500 கோடி டாலருக்குச் சமமாக இருந்த தங்க இருப்பு 1968 ஆனதும் 1000 கோடி டாலராகக் குறைந்துவிட்டது. தாக்குப் பிடிக்க முடியாத நிலை ஏற்பட்டதும் 1971 ஆகஸ்டு பதினைந்தாம் நாள், டாலருக்கு மாற்றாக தங்கம் தர முடியாது என்று அமெரிக்க ஜனாதிபதி நிக்சன் அறிவிக்க வேண்டியதாயிற்று! இது ப்ரெட்டன் வுட்ஸ் நாணய அமைப்பை முடிவுக்கு கொண்டு வந்து விட்டது!

டாலரின் மாற்று மதிப்பைப் பற்றிய அமெரிக்காவின் வாக்குறுதி மீறப்பட்டதும் மாற்று மதிப்பில் அதுவரை இருந்த ஸ்திரத்தன்மை மறைந்து விட்டது. பல நாடுகள் தங்களின் நிலையான மாற்று விலையை அங்குமிங்கும் மிதக்கவிட்டு, சந்தையின் பலப்பரீட்சைக்கேற்ப (Floating Exchange Rate System) ஊசலாடும் மாற்று விலை முறையை அனுமதித்தன. இந்தியாவைப் போன்ற நாடுகள் அவற்றின் நாணய மதிப்பை சில முக்கியமான கரன்சிகளின் மதிப்புடன் இணைத்து நிர்ணயிக்கும் வழக்கத்தைக் கையாண்டன. இதன் காரணமாக அளவுக்கு மீறிய ஊசலாட்டத்தைத் தவிர்க்கவும், தேசிய நலனை முன்னிட்டு மாற்று விலைமீது கட்டுப்பாடுகளை ஏற்படுத்தவும் முடிகிறது.

டாலர்-தங்க உறவு துண்டிக்கப்பட்டவுடன் உலக நாணயக் கட்டமைப்பின் மீதான கட்டுப்பாட்டை அமெரிக்கா இழந்து விடடதாகக் கருத வேண்டாம். ஜப்பான், ஜெர்மனி, இங்கிலாந்து, பிரெஞ்சு போன்ற நாடுகளின் நாணயங்களும் இன்றைக்கு சர்வதேச மாற்றுக்குப் பயன்படுத்தப்படினும், டாலர்தான் இப்போதும் முக்கிய வெளிநாட்டு நாணயமாக இருந்து கொண்டிருக்கிறது.

அமெரிக்கா உலக நாணய அரங்கில்டாலரின் இடத்தை நிலைநாட்டியது. நிதி நிறுவனத்தின் எஸ் டி ஆர் வெளியிடும் உரிமைக்கு கடிவாளமிட்டுக் கொண்டுதான் என்பதைக் கவனிக்க வேண்டும். முடிவுக்கேற்ப நடக்காத அமெரிக்காவின் டாலருக்கு மாற்றாக உலக வணிகத்தின் நாணய மாற்றுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய கூடுதல் எஸ் டி ஆர் அதாவது சர்வதேச நிதி நிறுவனத்தின் நாணயத்தை வெளியிட்டிருக்க வேண்டும். இம்மாதிரி உலகளாவிய நாணயத் திட்டத்தை தன்னுடைய கட்டுக்குள் வைத்திருக்குமாறு செழிப்பாற்றலைப்

www.tamilarangam.net



பெருக்க வேண்டும் என்பதுதான் மூன்றாம் உலக நாடுகளின் கருத்து. அமெரிக்கா இதற்கு எதிராக இருக்கிறது. இன்று புழக்கத்திலிருக்கும் சர்வதேச மாற்று பலத்தின் 10 சதவிகிதம்கூட இருக்காது நிதி நிறுவனத்தின் பண வளம். பேலன்ஸ் ஆப் பேமெண்ட் பற்றாக்குறையைச் சந்திக்கும் நாடுகளுக்குச் சொந்தப் பொறுப்பில் உதவும் ஆற்றலும் நிதி நிறுவனத்திடம் குறைந்து கொண்டேயிருக்கிறது.

நிதி நிறுவனத்தின் இந்த வரையறைதான் பன்னாட்டு ஏகபோக வங்கிகளின் பலமாக இருக்கிறது .அவைதான் மாற்று விகித நெருக்கடியைச் சந்திக்கும் வளரும் நாடுகளுக்கு கடனளிக்கும் ஊற்றிடமாக இருக்கின்றன. சர்வதேச ஃபைனான்ஸ் கார்ப்பரேஷனின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்; அவற்றின் நலன்களைப் பாதுகாக்க, தேவையான நிபந்தனைகளை வளரும் நாடுகளின்மீது திணிப்பது போன்ற 'தர்மப்பணி'களைத் தான் நிதி நிறுவனம் செய்து கொண்டிருக்கிறது. சர்வதேச ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் (IFC) மூலதனத்தின் முக்கிய அமைப்பாளன் என்ற பதவிதான், நிதி நிறுவனத்திற்கு இன்று, பொருளாதாரஅரங்கில் ஒப்பிடற்கரிய இடத்தைப் பெற்றுத் தந்திருக்கிறது.

சர்வதேச நிதி நிறுவனத்தின் உருவாக்கப் பேச்சு வார்த்தையின்போது வளரும் நாடுகள் ஒரு பிரதானப் பிரச்சினையாக இருக்கவில்லை. ஆனால் நிதி நிறுவனம் உருவாகி அதிகநாள் ஆவதற்குள்ளேயே, கச்சாப் பொருட்களின் விலைச்சரிவைத் தொடர்ந்து ஏற்பட்ட பேலன்ஸ் ஆப் பேமெண்ட் பற்றாக்குறையை நிரப்புவதற்காக, முதலில் லத்தீன் அமெரிக்க நாடுகளும் பிறகு ஆசிய ஆப்பிரிக்க நாடுகளும் கடனுக்காக நிதி நிறுவனத்தை அணுக ஆரம்பித்தன. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, வளரும் நாடுகள் இறக்குமதி மற்றும் வெளிநாட்டு மாற்றும் விகிதப் பயனடைவின்மீது விதித்த கட்டுப்பாடுகளை நீக்க நிதி நிறுவனம் வற்புறுத்த ஆரம்பித்தது. சிறிது காலத்திற்குப் பிறகு கடன் பெற வேண்டுமானால் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டே ஆகவேண்டும் என்ற நிலை ஏற்பட்டது.

படிப்படியாக சர்வதேசப் பேச்சுவார்த்தைகளில் வளரும் நாடுகளுக்கான உதவியளிப்பு மற்றும் கொடுக்கல் வாங்கல்களில் நிதி நிறுவனத்தின் பாத்திரம் அதிகரிக்க ஆரம்பித்தது. வெளிநாட்டு உதவியின் குணாம்சத்தைப் பற்றி ஏற்கெனவே சுட்டிக்காட்டியிருக்கிறோம். ஒரு வகையில் 'வெளிநாட்டு உதவி' வளர்ந்த நாடுகளுக்கும் கூடத் தேவைதான். வெளிநாட்டு நாணயம் இல்லாவிட்டால் வளரும் நாடுகளுக்கான ஏற்றுமதிகள் நின்று, அது உலகளாவிய வர்த்தகத்தையும், முதலாளித்துவ நாடுகளின் வளர்ச்சியையும் எதிரிடையாகப் பாதிக்கும்.

துவக்கக் காலத்தில் வெளிநாட்டு உதவியின் தனிப்பெரும் மையமாக அமெரிக்காதான் இருந்தது. இந்த 'அமெரிக்க உதவிப்பணத்தை' பயன்படுத்தி வளரும் நாடுகள் ஐரோப்பிய-ஜப்பானியப் பொருட்களை வாங்க ஆரம்பித்ததும், அமெரிக்கா தன்னுடைய உதவியை அமெரிக்கப் பொருட்களுடன் இணைக்க ஆரம்பித்தது. அது மட்டுமின்றி ஜப்பானிலிருந்தும் ஐரோப்பாவிலிருந்தும் பொருட்களை இறக்குமதி செய்ய, அந்த நாடுகளையே பண உதவி செய்ய

www.tamilarangam.net



வைக்கவும் அமெரிக்கா முயற்சிகளை மேற்கொண்டது. இவ்வாறு வளர்ந்த முதலாளித்துவ நாடுகளனைத்திலும் அவர்களுடைய 'வெளிநாட்டு உதவி'த் திட்டங்கள் உருவாயின. இந்தக் கடன்களின் வினியோகம், கடன் அடைப்புப் பிரச்சினைகள் போன்றவற்றை ஒருங்கிணைப்பது அவசியமாயிற்று. இதற்கான ஏற்பாட்டுக்கு 'வெளிநாட்டு உதவிக் கிளப்' என்று பெயர். ஒவ்வொரு வளரும் நாட்டின் 'உதவிக் கிளப்'பிலும் அந்த நாட்டுக்குப் பண உதவி அளிக்கும் அனைத்துப் பிரதான நாடுகளும் இடம் பெற்றிருக்கும்.

ஐம்பதுகளின் இறுதியில் இந்தியா பெரும் வெளிநாட்டு நாணயக் குளறுபடியில் சிக்கியதாலும், கடன்களின் பாதுபாப்பைப் பற்றிய அச்சத்தின் காரணத்தாலும், இந்தியாவுக்கு உதவ வளர்ந்த் நாடுகள் தனித்தனியாக நடவடிக்கை எடுக்கத் தயங்கியபோதுதான் முதன் முதலாக இத்தகைய 'உதவிக் கிளப்புகள்' உருவாயின.

இந்த கிளப்புகளின் அமைப்பாளன் சர்வதேச நிதி நிறுவனமும் தலைவர் உலக வங்கியின் பிரதிநிதியும் ஆவர். கடன் தரும் நாடுகளின் 'கார்ட்டல்*களாக'த்தான் இந்த கிளப்புகள் இன்றைக்குச் செயல்படுகின்றன. 'உதவி' தொடர்ந்து கிடைக்க வேண்டுமென்றால் நாட்டின் பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பாக நிதி நிறுவனம் முன் வைக்கும் ஆலோசனைகளை கடன் பெறும் நாடு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிலை இருந்து கொண்டிருக்கிறது.

அதிகாரபூர்வ 'உதவி'க்கு மட்டுமின்றி, சர்வதேச ஏகபோக வங்கிகளிட மிருந்து கடன்களை அனுமதிப்பதிலும் உலக வங்கியும், நிதி நிறுவனமும், இன்றைக்கு நிர்ணயிக்கும் அமைப்புகளாக இருக்கின்றன.

இந்தச் சூழ்நிலை உருவாகக் காரணம், பிரேசில், மெக்சிகோ போன்ற லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு வெளிநாட்டு ஏகபோக வங்கிகள் அள்ளி அள்ளி கடன் கொடுத்து ஏமாந்ததுதான்! ஏதோ தனிப்பட்ட பாசத்தால் அள்ளி வழங்கப்பட்டது என்று நிதி நிறுவனமும், வளரும் நாடுகளும் தவறாகப் புரிந்து எகொள்ள வேண்டாம். அராபியர்கள் கொண்டு வந்து டெபாசிட் செய்த பிரம்மாண்டமான பெட்ரோ டாலர் தொகைக்கு, நியாயமான வட்டியளிக்க முன்வரும் கடன் பெறுவோரைக் கண்டடைய ஏகபோக வங்கிகளுக்கிடையே நடைபெற்ற போட்டிதான் இந்த நிலைமையை உருவாக்கியது! அதிருக்கட்டும்....

லத்தீன் அமெரிக்க நாடுகள் இன்றைக்கு திவாலாகும் நிலைமைக்கு வந்துவிட்டன. கடன் தொகையைத் திருப்பிக் கட்டுவது ஒரு பக்கமிருக்க, வட்டியைக்கூட ஒழுங்காகக் கட்ட முடியாத நிலை அவற்றிற்கு. வங்கிகள் ஒரு நெருக்கடியை சந்தித்துக் கொண்டிருக்கினறன. சுயாதிகார நாடுகளின் பொருளாதாரக் கொள்கைகளை ஆராயவோ, கட்டுப்படுத்தவோ அவர்களுக்கு எந்த அதிகாரமும் இல்லை. ஆயினும் தங்களுடைய கடனாளிகள் மேலும் திவாலாகாமலிருக்க மேலும் கடன் கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் அவை இருக்கின்றன.

---

★ சர்வதேச வியாபார கூட்டு சேர்க்கைகள்

www.tamilarangam.net



இத்தகைய சிக்கல்களில் மாட்டாமலிருக்கத் தான் சர்வதேச ஏகபோக வங்கிகள், பெரிய அளவிலான கடன்களுக்கு நிதி நிறுவனத்தின் ஆலோசனைகளை ஒரு முன்மாதிரியாகக் கொண்டிருக்கின்றன. பழைய கடன்களை 'ரீஷெட்யூல்' செய்வது போன்ற பேச்சுவார்த்தைகளுக்கெல்லாம் மத்தியஸ்தம் வகிப்பது உலக வங்கியும், நிதி நிறுவனமும்தான்! (பழைய கடன்கள் திருப்பச் செலுத்தப்படாமல் தவணைகள் காலாவதியாகும்போது மீண்டும் அவற்றைப் புதிய கடன்களாக மாற்றுவதற்குத்தான் ரீ ஷெட்யூலிங் என்று பெயர்) சுருங்கக் கூறின், வளரும் நாடுகளின் கடன் வசதிகளில், உலக வங்கிக்கும் நிதி நிறுவனத்திற்கும் ஓரளவு ஏகபோகக் கட்டுப்பாடு கைவந்து விட்டது.

**சர்வதேச நாணய நிதி நிறுவனத்தின் நிபந்தனைகள்**

சர்வதேச நிதி நிறுவனத்தின் கடனளிப்பு நிபந்தனைகள் மேலும் கடுமையாகின்றன. நிபந்தனைகள் என்று கூறினால் அது கடனடைப்புக்கான காலக் கெடுவையோ, வட்டி விகிதங்களையோ குறிப்பிடுபவை அல்ல. நிதி நிறுவனத்தின் கடனடைப்புக்கான காலக்கெடு வழக்கமாக மூன்று அல்லது நான்காண்டுகள்தான். இப்போது பத்தாண்டுகள்வரை கூட கால நீடிப்பு அனுமதிக்கப்படுகிறது. இங்கு இதைப் பற்றிக் கூறவில்லை. மாறாக விகிதம், உள்நாட்டு வளர்ச்சிக் கொள்கை போன்றவை தொடர்பாக கடனாளி நாடு கடைபிடிக்க வேண்டிய நிதி நிறுவனத்தின் கோட்பாட்டு நடைமுறைகளைத்தான் நிபந்தனை என்கிறோம்.

இந்த நிபந்தனையின் கோட்பாட்டுக் கலவை மற்றும் கண்டிப்பு நாட்டுக்கு நாடு மாறுபட்டிருக்கும். கடனின் பெருப்பளவும் தன்மையும் இந்த நிபந்தனைகளின்மீது செல்வாக்குப் பெறலாம். நிதி நிறுவனத்திடம் பலதரப்பட்ட கடன் வசதிகள் இருப்பதை கடந்த அத்தியாயத்தில் குறிப்பிட்டிருந்தோ மல்லவா? சில வகைக் கடன்களுக்கு கூடுதல் கடுமையான நிபந்தனைகளைக் கடைபிடிக்க நேரும். மிகப் பழையதும் வழக்கமாகப் பயன்படுத்துவதுமான கடன் வசதிதான் 'டிராஞ்செ கடன் வசதி'. இதன்படி ஒவ்வொரு உறுப்பு நாடும் கோட்டாவின் 125 சதவிகிதம் வரை கடன் பெறலாம். முதல் 25 சதவிகிதத்திற்கு குறிப்பிட்ட எந்த நிபந்தனையும் கிடையாது. இரண்டாவது 25 சதவிகிதத்திற்கு தளர்ந்த நிபந்தனைகளே போதுமானது. எஞ்சிய 75 சத்விகிதத்திற்கு கடுமையான நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் இதைத் தவிர விசேஷத் தேவைகளுக்கான விசேஷக் கடன்களும் இருக்கின்றன. இந்த விரிவுப்படுத்தப்பட்டகடன் வசதிப் பிரிவின்படித்தான் (Extented Fund Facility) 1981இல் இந்தியா 500 கோடி டாலர் தொகையை கடன் பெற்றிருக்கிறது. இதன்படி உறுப்புநாடுகள் கோட்டாவின் 140 சதவிகிதம் வரை கடன் பெற முடியும். 1974இல் எண்ணையின் விலையேற்றத்தால் இறக்குமதி நாடுகளுக்கு பெருமளவு பேலன்ஸ் ஆப் பேமெண்ட் பற்றாக்குறை ஏற்பட்டபோதுதான் இந்தக் கடன் வசதி செய்யப்பட்டது. உயர்ந்த நிபந்தனைகளைக் கடைப்பிடிக்க வேண்டிய கடன்வசதி இது!

பொதுவாகச் சொன்னால் கடன்களுக்காக நிதி நிறுவனம் முன்வைக்கும் பல்வேறு கலவைகளின் நிபந்தனைகள் கீழ் வருமாறு:

www.tamilarangam.net



1. இறக்குமதிக் கட்டுப்பாடுகளையும், வெளிநாட்டு நாணய மாற்றுக கட்டு திட்டங்களையும் ஒழிப்பது; வியாபார ஒப்பந்தங்களை ரத்து செய்துவது; ஏற்றுமதியை ஊக்குவிப்பது; சுருங்கக் கூறின், சுயசார்பு மற்றும் தன்னிறைவை பொருளற்றதாக்குவது....

2. உண்மையான மாற்று விகித்தை அமல் நடத்துவது. இன்று பெரும்பாலான வளரும் நாடுகளின் நாணயமாற்று விகிதம் செயற்கைத்தனமாக உயர்த்தப்பட்டிருப்பதாகவும், அவற்றை (Devaluation) மதிப்பிறக்கம் செய்ய வேண்டுமென்றும் நிதி நிறுவனம் கருதுகிறது. பேலன்ஸ் ஆப் பேனெண்ட் பற்றாகுறையை நிரப்புவதற்காக மேற்கொள்ளப்படும் ஒரு முக்கியமான நடவடிக்கை இந்த மதிப்பிறக்குப் பணி!

3. இவ்வாறு புதுப்பித்த வெளிநாட்டு மாற்று விதித்தை நிலைத்திடச் செய்ய, கடனாளி நாட்டின் உள்நாட்டு நிதி நிலைக் கோட்பாடுகளில் மாறுதல் செய்ய வேண்டும். நிலையான திட்டம் (Stabilisation Programme) என்றழைக்கப்படும் இந்த நடைமுறைத் தந்திரம் கீழ்வரும் கட்டங்களைக் கொண்டது. A) வங்கிக் கடன்களைக் குறைப்பது, வட்டி விகிதங்களை உயர்த்துவது; அரசுப் பற்றாக்குறையை நிரப்புவது; இதற்காக சமூக நலத் திட்டங்களுக்கான செலவுகளைக் குறைப்பது; பொதுத்துறை உற்பத்திப் பொருட்களின் விலையை உயர்த்துவது; ரேஷன் போன்றவைகளுக்கான மானியங்களை நிறுத்துவது. B) கூலியை மறந்துவிடச் செய்தல். C) செயற்கையான விலைக் கட்டுப்பாடுகளை ஒழிப்பது.

4. உற்பத்தியைப் பெருக்குவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். உற்பத்திப் பெருக்க சமூக நீதியை இயல்பாகவே படிப்படியாக உறுதி செய்யலாம். நாணய நிதி நிறுவனத்தின் உற்பத்தி நடைமுறைத் தந்திரம் கீழ் வருமாறு. A) நேரிடை வரிகளைக் குறைப்பது. முதலீடு ஊக்குவிப்புகளை அதிகரிப்பது. B) தனியார் துறை மீதான கட்டுப்பாடுகளை நீக்குவது. பொதுத் துறையின் பங்காற்றுதலைக் குறைப்பது. C) வெளிநாட்டு மூலதனத்தையும், வெளிநாட்டு தொழில் நுட்ப ஒத்துழைப்பையும் வரவேற்பது; இதற்குத் தடையாக இருக்கும் முதலீடு மற்றும் லாபப் பங்கீட்டின் படி இருக்கும் முட்டுக் கட்டைகளை அகற்றுவது.

இந்த பொதுத் திட்டத்தில் என்னென்ன பிரிவுகளை எப்படியெல்லாம் அமுல் நடத்தலாம் என்பதை, கடன் பெறும் நாடும் நிதி நிறுவனத்தின் அதிகாரிகளும் மேலோட்டமாக விவாதித்து முடிவெடுக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. உண்மையில் விவாதம் துவங்குவதற்கு முன்னரே நிதி நிறுவனத்தின் இயக்குனர்களின், குறிப்பாக அமெரிக்க இயக்குனரின் மேற்பார்வையில் ஒரு நகல் திட்டத்தை உருவாக்கியிருப்பார்கள். வழக்கமாக இதில் எத்தகைய மாறுதலைச் செய்யவும் நிதிநிறுவனம் அனுமதிக்காது. வளரும் நாடுகளின் அதிகாரிகளில் பலர் உலக வங்கி போன்றவைகளின் பயிற்சி மையங்களில்' பயின்றவர்களால் அதுவும் சுமூகமான உடன்பாட்டுக்கு சாதகமாகி விடுகிறது.

www.tamilarangam.net



உடன்பாட்டுக்குப் பிறகு ஒரு சுவையான நாடகம் அரங்கேறும். நிதி நிறுவன அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் கடன் கோரும் நாடு ஒரு விண்ணப்பத்தைத் தயார் செய்கிறது. இந்த விண்ணப்பத்தில் நிதி நிறுவனம் திணித்த திட்டம், கடன் பெறும் நாட்டுச் சர்க்காரின் தேசியக் கோட்பாடாகச் சித்தரிக்கப்பட்டிருக்கும். இந்தக் கடிதம் **(Letter of Intent)** என்று அழைக்கப்படும். இந்தக் கடிதம் 'மிக ரகசிய தஸ்தாவேஜ்' ஆகக் கருதப்படும். இவ்வாறுதான் முன்னாள் நிதியமைச்சர் வெங்கட்ராமன் 1981இல் கடனுக்காக நிதி நிறுவனத்திற்கனுப்பிய கடிதத்தை இந்துப் பத்திரிகை நிருபரான என்.ராம் பகிரங்கப்படுத்தி அமளியேற்படுத்தினார்.

கடன் கோரும் விண்ணப்பத்திலிருந்து தெரியவரும் கொள்கைத் திட்டங்களைப் பார்த்து, நிதி நிறுவனத்தின் டைரக்டர் போர்டு மகிழ்ச்சி தெரிவித்த கையோடு கடன் வசதிக்கான பாதை திறக்கப்பட்டு விடும். ஆனால் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட 'காலக்கெடு' நடைமுறையைக் கடைப்பிடிக்காவிட்டால் கடன் அளிப்புத் தவணைகளை இடையில் நிறுத்தவும் நிதி நிறுவனத்திற்கு உரிமை யிருக்கிறது. ஒவ்வொரு மும்மாதமும் நிபந்தனையைக் காக்கும் 'புரோக்கிரஸ் ரிப்போர்ட்' அளிக்க நிதி நிறுவனத்திடம் இந்திய அரசு ஒப்புக் கொண்டிருந்தது!

## நிதி நிறுவனத்தின் திட்டம் - ஒரு பழைய இந்திய வரலாறு

பேலன்ஸ் ஆப் பேமெண்ட் பற்றாக்குறையை நிரப்புவதற்கு நிதி நிறுவனம் கடனளிக்கும்; அதற்கு விலையாக வெளிநாட்டு நாணய மாற்று மற்றும் வெளிநாட்டு வர்த்தகத்தின் மீது சுமத்தப்பட்ட கட்டுப்பாடுகளை நீக்க வேண்டும். இதுதான் நிதி நிறுவனத்தின் பொதுத் திட்டத்தில் முதல் பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்த நடவடிக்கைகள் பேலன்ஸ் ஆப் பேமெண்ட் பற்றாக்குறையை உயர்த்தத்தான் பயன்படும் என்பதைக் கண்டறிவது பெரிய கம்ப சூத்திரமல்ல! வெளி நாட்டு வர்த்தகம் தாராளமாக்கப்படும்போது, இறக்குமதி அதிகரிக்குமென்பது திண்ணம். ஆனால் ஏற்றுமதி பெருகும் என்பதற்கு எந்த உத்திரவாதமும் இல்லை. அது பிற நாடுகளின் முடிவையும் ஒட்டித்தான் அமையுமல்லவா? அவர்கள் ஏன் நம்மிடமிருந்து கூடுதலாக வாங்கப் போகிறார்கள்?

இதனால் எல்லாம் நிதி நிறுவனம் கலக்கமடையவில்லை. நிதி நிறுவனம் இவ்வாறு விளக்கம் தரலாம். ஒரு நாட்டின் பேலன்ஸ் ஆப் பேமெண்ட் பற்றாக்குறை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டிருந்தால் அதன் பொருள், அந்த நாட்டின் வெளிநாட்டு மாற்று விகிதத்தில் ஏதேனும் தவறியிருக்கிறது என்பதுதான். வெளிநாட்டு நாணயத்திற்கு உரிய மதிப்பளிக்கவில்லை. அதன் மதிப்பு குறைக்கப்பட்டிருக்கிறது. அதை உயர்த்த வேண்டும். அதாவது தேசிய நாணயத்தின் மாற்று மதிப்பைக் குறைக்க வேண்டும். இதுதான் நிதி நிறுவனத்தின் பொதுத் திட்டத்தில் இரண்டாவது பிரிவு.

நிதி நிறுவனத்தைப் பொறுத்தவரை பேலன்ஸ் ஆப் பேமண்ட் பற்றாக்குறையென்றால் வெளிநாட்டு நாணயத்தின் டிமாண்டுக்கும், சப்ளைக்கும் இடையிலான ஏற்றத் தாழ்வுதான். பொருட்கள் மற்றும் சேவைகளின்

www.tamilarangam.net



ஏற்றுமதியின்போதும், வெளிநாட்டுக் கடன் வருகையின் போதும்தான் வெளி நாணயம் 'சப்ளை' ஆகிறது. பொருட்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதியின் போதும் கடன்களை அடைக்கும் போதும் ஏற்படும் செலவுதான் வெளி நாணய 'டிமாண்ட்' டிமாண்ட் சப்ளையை விடக்கூடும்போது (செலவு வரவைவிடக் கூடும்போது) பற்றாக்குறை ஏற்படுகிறது. இதற்கான தீர்வு வெளிநாட்டு நாணயத்தின் விலையை, அதாவது வெளி நாணய மாற்று மதிப்பை குறைய அனுமதிக்க வேண்டும் என்பதுதான். தேவைக்கு பற்றாக்குறையாக இருக்கும் எந்தப் பொருளானாலும், அதன் விலையேறுவதைப் போலவே, வெளி நாணய விலையேற்றத்தையும் அனுமதிக்க வேண்டும். அதனால் ஏற்றத் தாழ்வுகள் தானாக மறைந்து சமனாகிவிடும்.

நிதி நிறுவனம் சொல்வதைப் போல் சங்கதிசுளுவாகவா இருக்கிறது? பழைய இந்திய 'வரலாறு' ஒன்றைச் சொல்கிறோம். 1966 ஜூன் மாதம், நிதி நிறுவனம், மற்றும் உலக வங்கியின் பிடிவாதத்திற்குப் பணிந்து இந்தியா தன்னுடைய ரூபாயின் மதிப்பைக் குறைத்தது. அதுவரை நம்முடைய 4.75 ரூபாய் ஒரு டாலருக்குச் சமமாக இருந்தது. 1966 ஜூனில் இருந்து ஒரு டாலரின் மதிப்பு 7.50 ரூபாயாக உயர்ந்து விட்டது. இந்திய ரூபாயின் மதிப்பு 37.5 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது.

இந்த நடவடிக்கையை நாமாக விரும்பி மேற்கொள்ளவில்லை. ஆனால் உலக வங்கியையும், நிதி நிறுவனத்தையும் அனுசரித்துப் போவதைத் தவிர வேறுவழியில்லை. விடுதலை பெற்றபோது நம்மிடம் இருந்த ஆயிரம் கோடிக்கும் மேற்பட்ட வெளிநாணயச் சேமிப்பை முழுக்க ஒரு பத்தாண்டுக் காலத்தில் தலை முழுகியிருந்தோம்! சுயசார்பு என்றெல்லாம் கூறப்படினும் திட்டங்களுக்காக ஏராளமாக இயந்திரங்களை இறக்குமதி செய்ய நேர்ந்தது. அறுபதுகள் ஆனதும் நாம் மிகவும் நெருக்கடிக்குள்ளானோம். நிதி நிறுவனத்திடமிருந்து இரண்டாவது டிராஞ்செ கடனையும் பெற்றிருந்தோம்.

உலக வங்கி இந்திய 'உதவிக்கிளப்' அமைத்து ஓரளவு ஆறுதலளித்தது. ஆனால் பாகிஸ்தான் போரை ஒட்டி அமெரிக்கா உதவி செய்வதை நிறுத்திவிட்டது; மூன்றாண்டுகளுக்கு நிறுத்தி வைக்கப்பட்டது.

மீண்டும் உதவியைத் துவக்க அமெரிக்கா ஒப்புக் கொண்டது. ஆனால் அதற்கும் உலக வங்கியுடன் இந்தியா ஒரு கருத்தொற்றுமைக்கு வர வேண்டும். இந்திய உதவிக் கிளப்பின் அமைப்பாளன் என்ற முறையில் அமெரிக்க தூதரைவிட, உலக வங்கியின் பிரதிநிதி இந்தியாவுக்கு ஏற்புடையவராக இருந்தார். உலக வங்கியின் தூதுக்குழுக்கள் பல வந்து போயின. எல்லோரும் ஊன்றிக் கூறிய விசயம் இந்தியா ரூபாயின் மதிப்பைக் குறைக்க வேண்டும் என்பதுதான்.

உலக வங்கியின் பேக்கேஜ் திட்டம் இந்தியாவின் பெரிய ஆவேச உணர்வு எதையும் ஏற்படுத்தவில்லை. 1957இல் உலக வங்கி இந்தியாவுக்களித்த 'அறிவுரை' மற்றும் அதற்கான பதிலை பத்திரிகைகளுக்கு அளித்து கைத்தட்டல் வாங்கிய டி.டி. கிருஷ்ணமாச்சாரிதான் அப்போதும் நிதியமைச்சராக இருந்தார். ரூபாயின் மதிப்பு வீழ்ச்சிக்கு எதிராக கிருஷ்ணமாச்சாரி வெளிநாட்டு வர்த்தக இலாகாவை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விட்டு ஒரு அறிக்கை விடச் செய்தார். ஆனால் இம்முறை உலகக்கெதிரான குரல் அபக்குரலாகி விட்டது. கிருஷ்ணமாச்சாரிக்கு வேலை போனதுதான் மிச்சம். உலக வங்கிக்கு கீழ்ப்படிவதைத் தவிர வேறு போக்கிடம் தென்படவில்லை. வெளிநாட்டு நாணய மாற்று நெருக்கடி அந்த அளவுக்கிருந்தது. ஐந்தாண்டுத் திட்டத்திற்கு பெருமளவில் வெளிநாட்டு உதவி கிடைத்தே ஆக வேண்டும். இவ்வாறு 1966 ஜூன் மாதம் இந்திய ரூபாயின் மாற்று மதிப்பு குறைக்கப்பட்டது.

உலக வங்கி அளித்த வாக்குறுதி என்ன? ரூபாய் மதிப்பின் வீழ்ச்சியால் இறக்குமதி குறையும். ஏனென்றால் முன்னர் ஒரு டாலர் பெறுமான வெளிநாட்டுப் பொருளை இறக்குமதி செய்ய நம்முடைய 4.75 ரூபாய் கொடுத்தால் போதுமானதாக இருந்தது. ஆனால் ரூபாயின் மதிப்பு வீழ்ச்சிக்குப் பிறகு ஒரு டாலர் பொருளை இறக்குமதி செய்ய ரூ. 7.50 கொடுக்க வேண்டியிருந்தது. இறக்குமதி விலை உயரும்; இறக்குமதி குறையும்.

அது மட்டுமின்றி, மாற்று மதிப்பு குறைக்கப்பட்ட பிறகு அதன் பயனான ஏற்றுமதி அதிகரிக்கும். ஏற்கனவே ஒரு டாலருக்கு 4.50 ரூபாய் பெறுமான பொருள்தான் வெளிநாட்டானுக்குக் கிடைத்துக் கொண்டிருந்தது. ஆனால் மாற்று விகிதம் சரிந்த பிறகு 7.50 ரூபாய் பெறுமான பொருள் கிடைக்கும். ஏற்றுமதி பொருட்களின் விலையை வெளி நாணயத்தில் கணக்கிட்டால் 37.5 சதவிகிதம் குறையும்; ஏற்றுமதி அதிகரிக்கும்.

தவிர, 90 கோடி டாலராவது ஒவ்வொரு ஆண்டும் வெளிநாட்டு உதவியை இந்தியா எதிர்பார்க்கலாம் என்று உலக வங்கி உறுதியளித்தது. புதிய கொள்கையில் மகிழ்ந்து போய் இந்தியாவுக்கு வர இருக்கும் வெளிநாட்டுத் தனியார் முதலீடுகளைத் தவிர்த்துத்தான் இந்த உதவி, இவற்றை பயன்படுத்தி இநதியப் பொருளாதார முன்னேற்றத்தை விரைவுபடுத்தலாம்.

**நாணய மாற்று வீழ்ச்சியால் ஏற்பட்ட விளைவு -**

**இந்திய வரலாறு தொடர்கிறது**

என்ன நேர்ந்தது? பட்டியல் 4-1 அந்த வரலாற்றைத் தான் கூறுகிறது. மாற்று விகிதம் குறைக்கப்படுவதற்கு முன்னிருந்த ஐந்தாண்டுக் காலமும், அதற்கடுத்த ஐந்தாண்டுக் காலமும் இந்தியாவின் பேலன்ஸ் ஆப் பேமெண்ட் கணக்கு எப்படியிருந்தது என்பதை இந்தப் பட்டியலில் ரத்தினச் சுருக்கமாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. (பட்டியல் 4-1 பார்க்கவும்)

பட்டியலில் வர்த்தகத் தவணை பாக்கிதான் முதலாவது இனம், நாணய மதிப்பு குறைக்கப்பட்டதற்குப் பிறகு வர்த்தகத்தில் பற்றாக்குறை குறைவதற்கு மாறாகக் கூடியிருக்கிறது. இந்தியாவின் ஏற்றுமதி வருவாய்கூடவில்லை. ஆனால் இறக்கமதிச் செலவு கூடிவிட்டது. ஏன்?

இறக்குமதியின் கணிசமான பகுதி உணவு தானியங்கள் மற்றும் இயந்திர சாதனங்கள்தான்! விலை கூடினாலும் குறைந்தாலும் அவற்றை இறக்குமதி செய்தே ஆக வேண்டும் தவிர இறக்குமதி தாராளமாக்கப்பட்டதற்குப் பிறகு

www.tamilarangam.net



அத்தியாவசியமற்ற பண்டங்களின் இறக்குமதியும் பெருகிவிட்டன. விளைவு இறக்குமதிச் செலவு கூடிவிட்டது.

அதேபொழுது இந்தியாவின் முக்கிய ஏற்றுமதிப் பொருட்களான தேயிலை, புகையிலை, முந்திரி போன்றவற்றிற்கும் பழைய விலைக்கே வெளிநாட்டுச் சந்தையில் போட்டியிட எந்த சிரமும் இருக்கவில்லை. அதனால்

பட்டியல் - 4.1

இந்தியாவின் பேலன்ஸ் ஆப் பேமெண்ட் கணக்கு 1961-62 / 1970-71

(வருடாந்திர சராசரி)

(கோடி ரூபாயில்)

| கரண்ட் அக்கவுண்ட் | 1961-62/1965-66 | 1966-67/1970-71 |
|---|---|---|
| 1. வர்த்தக பாக்கி | - 474.7 | - 514.7 |
| 2. கைமாற்ற பேலன்ஸ் ஆப் பேமெண்ட் தவிர்த்த மறைவின் பாக்கி | - 36.8 | - 153.1 |
| 3. கைமாற்ற பேலன்ஸ் ஆப் பேமெண்ட் பாக்கி | +122.5 | +154.5 |
| 4. கரண்ட் அக்கவுண்ட் பேலன்ஸ் ஆப் பேமெண்ட் பாக்கி | -389.0 | -513.3 |
| மூலதனக் கணக்கு | | |
| 5. தனியார் மூலதன முதலீடு | +1.5 | -12.5 |
| 6. பேங்கிங் | -2.6 | -1.4 |
| 7. அதிகாரப்பூர்வ கடன்கள் | +461.6 | +850.3 |
| 8. கடனைத் திருப்புதல் | - 59.7 | - 271.8 |
| 9. பலவகை | +8.0 | +47.5 |
| 10. மொத்தம் மூலதன அக்கவுண்ட் | +408.8 | +612.4 |
| 11. விட்டுப் போனதும் தவறுகளும் | - 21.0 | - 54.8 |
| 12. சேமிப்பு இருப்பில் ஏற்படும் மாற்றம் | +1.2 * | - 44.3* |

(*கூடுவது -; குறைவது+)

(ஆதாரம் : ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா புல்லட்டின்)

ஏற்றுமதிக் கம்பெனிகள் ஏற்றுமதி விலையைக் குறைக்க மறுத்தன, நாணய மதிப்பு வீழ்ச்சியடைந்தது அவர்களுக்கு பரிசுச் சீட்டு விழுந்ததைப் போல் ஆகிவிட்டது. மிகப்பெரிய லாபத்தை அவை அறுவடை செய்து குவித்தன. இதில் தேயிலை, புகையிலை போன்றவற்றின் ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தியது இந்தக் கம்பெனிகள்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது. இறுதியில் ஏற்றுமதி விலையைக்

www.tamilarangam.net



குறைக்க முயன்ற இந்திய சர்க்காருக்கு, ஏற்றுமதியின் மீது இந்திய சர்க்காருக்கு, ஏற்றுமதியின் மீது வரி விதிக்க வேண்டியதாயிற்று. கொள்ளை லாபத்தில் ஒரு பகுதியாவது நமது கஜானாவுக்கு வந்து சேருமல்லவா?

வேறு சில இனங்களில் ஏற்றுமதிக் கம்பெனிகளுக்கிடையிலான கடும் போட்டியால் விலைகள் சரிகின்றன. ஆனால் உலக வங்கி கூறியதைப் போல் ஏற்றுமதி அதிகரிக்கவில்லை! காரணம் மிகவும் எளிதானது. பொருட்களின் விலை உயர்வு இவற்றின் ஏற்றுமதிப் பெருக்கத்திற்கு தடையாக இருக்கவில்லை. மாறாக வேறு பல காரணங்கள் இருந்தன. கேரளத்தின் கயிறு இதற்குச் சிறந்த உதாரணமாகும். இத்தகைய ஏற்றுமதி இனங்களில் நாணய மதிப்புச் சரிவால் மொத்த ஏற்றுமதி வருவாய் பெருகவில்லை என்பதோடு குறையவும் செய்தன.

வெளிநாட்டு மாற்று தாராளமாக்கப்பட்டதனால் போக்குவரத்துக்கும் இன்ஷ்யூரன்சுக்கு தேவைப்பட்ட வெளிநாட்டு நாணயச் செலவு அதிகரித்துவிட்டது. வெளிநாட்டு கம்பெனிகள் இந்தியாவிலிருந்து கொண்டு சென்ற முதலீட்டு வருவாய் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்தது. இதன் விளைவாக வெளிநாட்டு இந்தியர்கள் அனுப்பும் வருவாயை (இனம்-3) தவிர்த்தால் மீதம் மறைவினங்களின் வருவாய் அதிகரித்தது (இனம்-2)

இவற்றின் விளைவாக கரண்ட் அக்கவுண்ட் பேலன்ஸ் ஆப் பேமெண்ட் பற்றாக்குறை நாணய மதிப்புச் சரிவுக்கு முன் 389 கோடி ரூபாயாக இருந்தது சரிவுக்குப் பின் 513 கோடி ரூபாயாக உயர்ந்தது.

சொல்ல வந்ததன் சாராம்சம் இதுதான். மாற்று மதிப்பின் குறைப்பினால் பயன்பெற வேண்டுமானால் வர்த்தக நாடுகள் ஒரே மாதிரியான பொருட்களைத் தயாரிப்பவர்களாக இருக்க வேண்டும். அப்படியானால் தான் மாற்று மதிப்புக் குறைப்பால் ஏற்றுமதி விலை குறைந்து, அதன் விளைவாக ஏற்றுமதி அதிகரிப்பை உறுதி செய்ய முடியும். இல்லாவிட்டால், ஏற்றுமதி பெருகினாலும் விலைக் குறைப்பால் ஏற்றுமதி வருவாய் குறையத் தான் செய்யும். இறக்குமதியைப் பொறுத்தவரை அவசியப் பொருட்களாகையால் விலை கூடினாலும்; இறக்குமதி குறையாது. இதன் விளைவாக வளரும் நாடுகளின் பேலன்ஸ் ஆப் பேமெண்ட் பற்றாக்குறை குறைவதற்கு மாறாக பெரும்பாலும் கூடத்தான் செய்யும்.

ஆனால் மூலதனக் கணக்கில், நாணய மதிப்பு வீழ்ச்சிக்குப் பின் இந்தியாவுக்கு ஏற்படும் மிச்சம் அதிகரித்தது. 461 கோடி ரூபாய் வெளிக்கடன் பெற்று வந்தது, 850 கோடி ரூபாயாக உயர்ந்ததால்தான் இந்த வாய்ப்புக் கிட்டியது. (இனம்-7) ஆனால் புதிய வெளிநாட்டுக் கடனில் 30 சதவிகிதத்திற்கும் மேல் பழைய கடனை அடைப்பதற்குத்தான் பயன்படுத்த வேண்டியதாயிற்று. (இனம்-8) வெளிநாட்டு நாணயப் பரிமாற்றம் தாராளமாக்கப்பட்டதை சாமர்த்தியமாகப் பயன்படுத்தி 'தோட்டத்தொழில்' போன்ற பாரம்பரியத் துறைகளிலிருந்து பெருமளவுக்கு மூலதனத்தை வெளியே கொண்டு சென்றதால்தான் புதிய காலகட்டத்தில் தனியார் மூலதன முதலீட்டில் பற்றாக்குறை ஏற்பட்டது. (இனம்-5) விட்டுப் போனதும், தவறுகளும் என்ற இனத்தில் (இனம்-11) ஏற்பட்ட பற்றாக்குறை

www.tamilarangam.net



அதிகரிப்பையும் கவனிக்க வேண்டும். இது பல்வேறு முறைகளில் தனியார் மூலதனங்களை முக்கியமாக குறுகிய கால முதலீடுகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டதன் மூலமாகத்தான் ஏற்பட்டது. இவை போன்ற காரணங்களால் வெளி நாணய மாற்று விகிதம் குறைக்கப்பட்ட பிறகும் இந்தியாவின் மொத்தம் பேலன்ஸ் ஆப் பேமெண்ட் நிலைக்கும் பாதுகாப்பேற்படவில்லை. வெளிநாட்டு நாணயக் கையிருப்பில் 44 கோடி ரூபாய் அதிகரிப்பு மட்டும்தான் ஏற்பட்டது. வெளிநாட்டு உதவிச் சார்பு நிலையும் அதிகரித்து விட்டது.

**நிதி நிறுவனத்தின் திட்டம்-**
**ஒரு புதிய இந்திய வரலாறு துவக்கம்**

பழைய இந்திய வரலாறு இவ்வாறு துயரமாக முடிந்ததினால் நிதி நிறுவனம் வியந்திருக்க வழியில்லை. நிதி நிறுவனம் இவ்வாறுதான் கூறும்: உரித்தான உள்நாட்டுக் கொள்கையைக் கடைபிடிக்கத் தயங்கியதால்தான் இவ்வாறு நேர்ந்தது; தேர்தல் தோல்வியால் ஆட்சியாளர்கள் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள மறுத்தனர்; இந்திய மக்கள்தான் இதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும்.

வெளிநாட்டு நாணய மாற்று மதிப்புக் குறைப்பு மற்றும் தாராளமாக்கும் நடவடிக்கைகளுடன் கூடவே, உள்நாட்டுத் தேவையை (டிமாண்ட்) கட்டுப்படுத்தவும் முயன்றிருக்க வேண்டும். இங்குதான் சர்வதேச நாணய நிதி நிறுவனத்தின் பொதுத் திட்டத்தில் மூன்றாவது பிரிவாகச் சேர்க்கப்பட்டிருக்கும் 'திடப்படுத்தும் திட்டம்' முக்கியத்துவம் பெறுகிறது. இந்தக் கொள்கையின் மீதான மக்களின் எதிர்ப்பைக் குறைக்கும் பொருட்டு நிதி நிறுவனம் சில பொழுது இதை 'விலையேற்ற எதிர்ப்பு நடவடிக்கை, என்று சிறப்பித்து அழைப்பதுண்டு.

ஆனால் இந்த 'விலையேற்ற' எதிர்ப்பு நடவடிக்கைகள் மொத்தச் சந்தை விலைகளில் எத்தகைய விளைவை ஏற்படுத்தினாலும், மக்களைப் பொறுத்தவரை வாழ்க்கைச் செலவு பெருமளவு அதிகரிப்பாகத்தான் அமையும். பொது வினியோக நடைமுறை குழிபறிப்பதும், அத்தியாவசியப் பண்டங்களின் விலைக்கட்டுப்பாட்டை அகற்றுவதும், பஸ், ரயில், மின்சாரம் போன்றவற்றின் கட்டணத்தை உயர்த்துவதும், உணவு மானியங்களை நிறுவத்துவதும் வாழ்க்கைச் செலவினை தலைக்குமேல் உயர்த்திவிடும்.

அதே பொழுது மக்களின் வருவாயும் குறையும்; கூலியை உறையச் செய்வதினால் மட்டும் இது நிகழவில்லை பொருளாதாரத் தேக்க நிலையால் வேலையில்லாத் திண்டாட்டமும் பெருகும். சர்க்கார் செலவுகள் குறைக்கப்படுவதும், வட்டியை உயர்த்துவதும், வங்கிகள் பணமுடைய ஏற்படுத்துவதும்தான் பொருளாதாரக் கட்டமைப்பில் பொருளாதாரத் தேக்கத்தைச் சிருஷ்டிக்கிறது. சுருங்கக் கூறினால், வெளிநாட்டுப் பற்றாக்குறையை நிரப்பும், பொறுப்புச் சுமையை மக்களின் தலையில் ஏற்றுவதுதான் நிதி நிறுவனத்தின் தந்திரமாக இருக்கிறது.

தங்களுடைய கோட்பாடுகளால் விளையும் பொருளாதாரத் தேக்கத்தைப் பற்றி நித நிறுவனத்திற்கு கவ்லையில்லை. அடிக்கடி இத்தகைய தேக்க

www.tamilarangam.net



நிலைபொருளாதாரக் கட்டமைப்பில் ஏற்படுவது நல்லது என்பதே நிதி நிறுவனத்தின் கருத்து! எப்படியென்றால் அது சோம்பேறிகள், திறமையற்றவர்கள், மற்றும் போட்டியாற்றல் இல்லாதவர்களையெல்லாம் ஒழித்துக்கட்டி பொருளாதாரக் கட்டமைப்பை பலப்படுத்துகிறதாம். இயற்கையின் மீற முடியாத நியதிகளை நாங்கள்தான் பொருளாதாரத் துறையில் அமுல் செய்கிறோம் என்று நிதி நிறுவனம் பாவனை செய்கிறது. கட்டுப்பாடற்ற முதலாளித்துவம் தான் இயற்கையின் நியதியாம். தனியார் போட்டியும் லாபமும்தான் முன்னேற்றத்தின் வழித்தடமாம்.

உள்நாட்டு 'டிமாண்ட்' இல்லாமை தொழில்மயத் திட்டத்திற்குத் தடையாக இருக்க வேண்டாம். ஏற்றுமதியின் மூலம் இதை நிவர்த்தி செய்து விடலாம். இந்த ஏற்றுமதி வளர்ச்சித் தந்திரம் வெற்றியடைய என்ன செய்ய வேண்டும்? இதற்கான வழிமுறைதான் நிதி நிறுவனத்தின் பொதுத் திட்டத்தில் நான்காவது பிரிவாக இணைக்கப்பட்டிருக்கிறது.

பொருளாதாரக் கட்டமைப்பை நோக்கிப் பாய்ந்து வரும் வெளிநாட்டு மூலதனம்தான் வளர்ச்சிக்கான முக்கிய ஊக்குவிப்பு மையம்! பன்னாட்டு ஏகபோகங்கள் கொண்டு வரும் மூலதனம், நிர்வாகத்திறன், தொழில் நுட்ப அறிவு ஏற்றுமதிச் சந்தை போன்றவை பொருளாதாரக் கட்டமைப்பில் புதிய உணர்புகளை ஏற்படுத்துகிறது. பொருளாதாரக் கட்டமைப்பை நவீனப்படுத்த உதவுகிறது. இது காறும் இறக்குமதிப் பாதுகாப்புக்குள் சுக வாழ்வு கண்ட உள்நாட்டுக் கம்பெனிகளை தங்களைத் தாங்களே சுயமாக நவீனப்படுத்திக் கொள்ளத் தூண்டுகிறது.

பொதுத்துறையை, தனியார் ஊக்னகத்தைக் குறைக்கும் திறனில்லாமை மற்றும் விரயமான அமைப்பாகத்தான் நிதி நிறுவனம் பார்க்கிறது. தொழிற்சங்கங்கள்தான் பிரதான குளறுபடி அமைப்புகள், தனியார் துறையின் கட்டுப்பாடுகளற்ற செயற்பாடுதான் வளர்ச்சிக்கு உத்திரவாதம். தொல்லை தரும் கட்டுதிட்டங்கள், உற்சாகத்தைக் குறைக்கும் வரி விதிப்புகள் போன்றவற்றில் மாறுதல் செய்ய வேண்டும். மக்களின் வயிற்றை இறுக்கிக் கட்டத் தூண்டும் நிதி நிறுவனத்தின் லாபத்தின் மீது எத்தகைய கட்டுப்பாடுகளும் இருக்கக் கூடாதென அடம் பிடிக்கிறது.

இந்த நிதி நிறுவனக் கோட்பாடுகளுக்கும் இந்தியாவின் புதிய பொருளாதாரா கொள்கைக்கும் இடையே சில அடிப்படை ஒற்றுமை தென்படுகிறது என்றால் அது எதிர்பாராதது அல்ல! 1981இல் சர்வதேச நிதி நிறுவனத்திடம் கையெழுத்திட்டுக் கொடுத்து உடன்படிக்கைக்கேற்ப பல அம்சங்கள் இதில் உள்ளடங்கியிருக்கின்றன. நிதி நிறுவனத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தம் ஒரு புதிய 'இந்திய வரலாற்றின்' துவக்கமே! இதன் இரண்டாவது காட்சியைத் தான் இந்தியா இன்று அரங்கேற்றிக் கொண்டிருக்கிறது. இந்த வரலாற்றுக் கதையின் இறுதிக் காட்சி எப்படியிருக்கும்? ஜோசியம் சொல்ல விரும்பவில்லை. ஆனால் இத்தகைய சோதனைகளை மேற்கொள்ள ஸ்ரீலங்காவிலிருந்து லத்தீன் அமெரிக்க நாடுகள் வரையிலான துயரக் கதைகளை நாம் படிப்பினையாகக் கற்றுக் கொள்ள வேண்டும்.

www.tamilarangam.net



**ஸ்ரீலங்காவின் படிப்பினை**

ஸ்ரீலங்காவைத் தேர்ந்தெடுத்ததற்கு காரணம் இருக்கிறது அது நமது அண்மை நாடு என்பது மட்டுமில்லை... ஸ்ரீலங்காவின் பொருளாதார அமைப்பிற்கு கேரளத்துடன் பல ஒற்றுமைகள் இருக்கின்றன. நெல், தென்னை, பாக்கு, தேயிலை போன்றவை ஸ்ரீலங்காவின் முக்கிய விளைச்சல்களாகும், கயிறும் தேங்காய் எண்ணையும் பிரதான தொழில்கள். இவையனைத்தையும் விட பல காரணங்களால் கேரளத்தைப் போலவே உயர்ந்த கல்வியறிவு விகிதம், மிகவும் தாழ்ந்த குழந்தை இறப்பு விகிதம், எந்த வளரும் நாடும் பெருமையுறத்தக்க சமூக நலத்திட்டம் போன்றவையும் ஸ்ரீலங்காவின் தனித்தன்மையாகும். இவ்வாறு நம்முடையது போன்ற அந்த நாட்டின் பொருளாதார அமைப்பில், உலக வங்கி மற்றும் நிதி நிறுவனத்தின் கொள்கைகள் என்ன விளைவை ஏற்படுத்தியிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள ஆர்வமிருக்கும்தானே?

1977இல் நடைபெற்ற தேர்தலில் ஜெயவர்த்தனா வெற்றி பெற்ற பிறகுதான் ஸ்ரீலங்காவில் உலக வங்கி மற்றும் நிதி நிறுவனத்தின் யுகம் ஆரம்பிக்கிறது. தேர்தல் மூலம் ஆட்சி பீடமேறிய ஒரு சர்க்கார் தன்னிச்சையாக உலக வங்கியினுடையவும் நிதி நிறுவனத்தினுடையவும் கொள்கைக்கு ஒத்துழைக்கப்புக் கொடுத்தது இதுவே முதல் தடவை. ஜெயவர்த்தனா சர்க்காரின் இந்த அனுகுமுறை இவ்விருநிதி அமைப்புகளிலும் ஏற்படுத்திய 'உல்லாசம்' கொஞ்ச நஞ்சமல்ல!

ஸ்ரீலங்காவிற்காக நிதி நிறுவனம் அதன் நிரந்தரக் கொள்கையின் கராறான ஒரு 'பேக்கேஜை'யே (திட்டம்) தயாரித்தது. ஸ்ரீலங்கா ரூபாய் நூறு சதவிகிதம் மதிப்பு குறைக்கப்பட்டது. தாராள மயம், தனியார் மயம் திடப்படுத்தும் திட்டம் போன்றவற்றிற்கு நிதி நிறுவனம் நிச்சயிப்பதுதான் வரைமுறையல்லவா? உலக வங்கியும் பெரும் வளர்ச்சித் திட்டங்களுடன் முன் வந்தது. ஸ்ரீலங்காவின் புதிய யுகத்தை வாழ்த்தி மலையாளப் பத்திரிகைகளில் கூட செய்தி வெளியாயிற்று.... ஆனால் ஸ்ரீலங்காவின் இன்றைய பொருளாதார நிலைமையைப் பற்றி எந்தச் செய்தியையும் காணோம். ஒருவேளை, கூடுதல் சுவையான செய்திகள் அந்நாட்டில் நடைபெறும் உள்நாட்டுப் போரிலிருந்து கிடைப்பதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

ஸ்ரீலங்காவில் நிதி நிறுவனத்தின் கொள்கைகள் ஏற்படுத்திய பின் விளைவுகள் என்ன? 1978லிருந்துதானே நிதி நிறுவனக் கோட்பாடுகள் அமலாயின. தொடர்ந்து நான்காண்டுக் கணக்குகள்தான் கிடைத்திருக்கின்றன. அதன்படி 1978-1981 கால அளவில் இறக்குமதி 45 சதவிகிதம் உயர்ந்தது. ஆனால் ஏற்றுமதி 2 சதவிகிதம் மட்டும்தான் அதிகரித்தது. இறக்குமதி விலைகள் 182 சதவிகிதம்அதிகரித்தன. ஆனால் ஏற்றுமதி விலைகள் 28 சதவிகிதம் மட்டுமே உயர்ந்தன அதன் விளைவு? பேலன்ஸ் ஆப் பேமெண்ட் பற்றாக்குறை கூடிவிட்டது. கடன் பொறுப்புக்கள் அதிகரித்தன, 1977 துவக்கத்தில் 440 கோடி ரூபாயாக இருந்த வெளிநாட்டுக் கடன்கள் 1981 ஆவதற்குள் 3000 கோடி ரூபாயாகப் பெருகிவிட்டது. இந்த வெளிநாட்டுக் கடன்களுக்கான வட்டியைச் செலுத்த மேலும் கடன் வாங்க வேண்டிய நிலையில் ஸ்ரீலங்கா இன்றைக்கிருக்கிறது.

www.tamilarangam.net



வெளிநாட்டு முதலீடு மூலதனம் பெரிய அளவில் நுழைந்து விட்டது. ஆனால் அவர்களுக்காக தனியாகத் தயாரித்த சுதந்திர வர்த்தகத்துறை மீது அவர்களுக்கு நாட்டமில்லை. அவர்களுடைய குறிக்கோள் ஸ்ரீலங்காவின் உள்நாட்டுச் சந்தைதான்! புதிய தொழில்களை நிறுவுவதற்கு மாறாக அந்த நாட்டு மக்களிடமிருந்தும், பொதுத் துறையிலிருந்தும் பழைய தொழில்களைக் கைப்பற்றுவது தான் அவர்களுடைய நோக்கமாக இருந்தது. இ.தன் இறுதி விளைவு தொழில்துறை முழுக்க வெளிநாட்டு உடைமையாக மாற்றப்பட்டது. புதிதாக உருவாக்கப்பட்ட தொழில்களும் எதிர்பார்ப்பின் அக்கம் பக்கம் கூட நெருங்கவில்லை. வாய்ந்த தொழில்களும் நவீன தொழிற்கூடங்களாக இருக்கவில்லை. ஏற்றுமதிக்கான ரெடிமேட் ஆடைத் தொழிற் சாலைகள்தான் குறிப்பாக வெளிநாட்டு மூலதனம் புதிதாகக் கொண்டு வந்தவை. 1978இல் தேசிய வருவாய் அனைவரும் மகிழ்ச்சியுறத்தக்க நிலையில் ஆறு சதவிகிதம் உயர்ந்தது. ஆனால் அடுத்த ஆண்டே அது நான்கு சதவிகிதமாகக் குறைந்தவிட்டது. அதற்கடுத்த ஆண்டு 3.6 சதவிகிதமாகிவிட்டது. 1982இல் 2.3 சதவிகிதமாகச் சுருங்கி இன்றைக்கு வளர்ச்சியே இல்லை என்ற நிலைமைக்கு வந்து விட்டது.

ஆனால் விலை ஏற்றத்திற்கு எந்தக் குறையும் இல்லை. 1977இல் 12 சதவிகிதமாக இருந்த விலையேற்றம் நிதி நிறுவனத்தின் கொள்கைகள் அமலான பிறகு 35-40 சதவிகிதமாக அதிகரித்து விட்டதுதான் மிச்சம்.

உண்மையான கூலி நான்காண்டுக் காலத்தில் 30 சதவிகிதமாகக் குறைந்துவிட்டது. அதே பொழுது சமூக நலச் செலவுகள சர்க்கார் குறைத்து விட்டது. நிதி நிறுவனத்தின் வருகைக்கு முன் சர்க்கார் பட்ஜெட்டில் 41 சதவிகிதம் சமூக நலத் திட்டச் செலவுகளுக்காக ஒதுக்கப்ட்டிருந்தது. இன்றைக்கு அது 17 சதவிகிதம் மட்டுமே. ரேஷன் நிறுத்தப்பட்டதால் மட்டும் சர்க்காருக்கு ஆண்டுக்குக 65 கோடி ரூபாய் கிடைத்தது. மக்களின் வாழ்க்கையில் இவை எத்தகைய பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்கும் என்பதை நீங்களே யூகித்துக் கொள்ளலாம்.

ஏற்றத்தாழ்வுகள் பெருகின. 1973இல் மிகவும் பணக்காரர்களான 10 சதவிகிதம் குடும்பங்களின் தேசிய வருவாய் 30 சதவிகிதமாக இருந்தது. இன்று அந்த பணக்காரர்களின் வருவாய் 40 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது.

வறுமை பெருகியது. கிடைத்த கூலிக்கு உழைக்கத் தயாரான பெண்கள், புதிய ரெடிமேட் ஆடைத் தொழிற்சாலைகளுக்கு மட்டுமின்றி, அரபு நாடுகளுக்குச் செல்லவும் ஆரம்பித்தனர். ஒரு லட்சம் ஸ்ரீலங்கா இளம் பெண்கள் இவ்வாறு அரபு நாடுகளில் வீட்டுவேலை செய்கின்றனர். இவர்களுடைய வருவாய் இருந்தும் என்ன நிலைமை என்பதற்கு இதோ ஒரு உதாரணம்.

1979இல் குழந்தை இறப்பு விகிதம் அதிகாரப்பூர்வக் கணக்குப்படி 1000க்கு 38 ஆக இருந்தது. உலக வங்கியின் ஒரு ரகசிய அறிக்கையின்படி 1981இல் அது 49 ஆக உயர்ந்தது. இரண்டாண்டுகளுக்குள் குழந்தை இறப்பு விகிதம் ஆண்டுக்கு 19 சதவிகிதம் அதிகரித்து விட்டது.

www.tamilarangam.net



இறக்காமல் தப்பும் குழந்தைகளின் நிலைமையும் சிரமம்தான். ஸ்ரீலங்கா அரசு 1979-1982 காலகட்டத்தில் மேற்கொண்ட ஒரு ஆய்வின்படி கடுமையான சத்துணவுப் பற்றாக்குறை (Chronic Malnutrition) இருக்கும் ஒரு வயதுக்குக் கீழன குழந்தைகள் விகிதம் 11.8 சதவிகிதம். இதுவே ஐந்துமுதல்ஆறு வயதுப் பருவக் குழந்தைகளின் விகிதத்திற்கு வரும்போது 46.2 சதவிகிதமாக உயர்கிறது. 1975யை விட சத்துணவுக் குறைவு கணிசமாக அதிகரித்துவிட்டதாக இந்த ஆய்வு ஒப்புக்கொள்கிறது.

பஞ்ச காலத்து அசாதாரண நிலையில்தான் இப்படியெல்லாம் நடைபெறும்.

உலக வங்கி மற்றும் நிதி நிறுவனத்தின் கொள்கைகளுக்கு ஸ்ரீலங்கா மக்கள் அளித்த அரசியல் விலைதான் ராணுவ ஆட்சியும், நாட்டின் சீர்குலைவும். கடுமையான பொருளாதார நெருக்கடிகளுக்கு ஜனநாயக அடிப்படையில் தீர்வுகாண முடியாத பொழுது, சீர்குலைவுப் பிளவு மனப்பான்மைகள் ஆக்கம் பெறுகின்றன. பிரிவினைப் போக்கைக் காரணம் காட்டி நாடு ராணுவமயமாக்கப்படுகிறது. இன்றைக்கு இத்தகைய துன்ப வளையத்துக்குள் சிக்கித் தவிக்கிறது ஸ்ரீலங்கா!

ஸ்ரீலங்கா ஒரு சின்னஞ்சிறு நாடுதானே, ஆனால் நாம் ஒரு துணைக் கண்டமல்லவா என்று தேற்றிக் கொள்பவர்களுக்கு லத்தீன் அமெர்க்கக் கண்டத்தின் இன்றைய நிலையாதவது ஒரு படிப்பினையாக இருக்க வேண்டும். பிரசீல், மெக்சிகோ போன்ற நாடுகளெல்லாம் அண்மைக் காலம் வரை நிதி நிறுவனத்தின் வெற்றிக் கொள்கையின் முன்னுதாரணமாகப் புகழ்ந்துரைக்கப் பட்டவையே! ஆனால் இன்று அந்த நாடுகளனைத்தும் கடன் பொறிக்குள் சிக்கித் தத்தளித்துக் கொண்டிருக்கின்றன. முணுமுணுத்துக் கொண்டே ஆயினும் இந்த நாடுகள் இன்றைக்கும் நிதி நிறுவனத்தின் நிபந்தனைகளைக் காப்பாற்றி வருகின்றன. ஆனால் பயன் என்ன?

**லத்தீன் அமெரிக்கா**

ஒரு வகையில் நிதி நிறுவனத்தின் கொள்கைகள் வெற்றிகரமானது என்றே சொல்ல வேண்டும்-பன்னாட்டு ஏகபோகங்களுக்கு அவைகளின் வட்டியையும் லாபத்தையும் தவறாது கிடைக்கச் செய்வதில்! வரலாற்றில் முதன் முறையாக லத்தின் அமெரிக்க நாடுகளின் வர்த்தக வரவு செலவு இன்று உபரியில் இருக்கிறது. 1984இல் வர்த்தக உபரி 3760 கோடி டாலராக இருந்தது. ஆனால் வெளி நாட்டினருக்கு 1984இல் வட்டியாகவும் லாபமாகவும் மட்டும் 3730 கோடி டாலர் கொடுக்க நேரிட்டது!

இந்தக் கட்டுப்படுதலுக்கு அன்பளிப்பாக 1981-1984 ஆண்டுகளில் மொத்தம் 12,490 கோடி டாலர்கள் புதுக் கடன்களை பல்வேறு தடங்களில் நிதி நிறுவனம் லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு திரட்டிக் கொடுத்தது. ஆனால் இந்த நான்காண்டு காலத்துக்கு கடன் சர்வீஸ் சார்ஜ் எவ்வளவு தெரியுமா? 22,380 கோடி டாலர்! புதிய கடன் வரவு, கடன் சர்வீஸ் செலவுகளுக்குக் கூடப் போதுமானதாக இல்லை. இந்த நான்சாண்டுகளில் 9890 கோடி டாலர் மூலதனம் லத்தீன் அமெரிக்ககாவிலிருந்து வெளிறேயிருக்கிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்த நிலை 1984 உடன் முற்றுப் பெறவில்லை. தொடர்ந்த ஆண்டுகளிலும் லத்தீன் அமெரிக்காவுக்கு வர்த்தகத்தில் உபரி அதிகரிக்கத்தான் செய்தது. ஆனால் அதோடு பொருளாதார அமைப்பிலிருந்து செல்வம் வெளியேறுவதும் பெருகிக் கொண்டேயிருந்தது. அதன் விளைவு?

இந்த கண்டத்தின் தனி நபர் வருவாய் 1980களில் 10 சதவிகிதம் குறைந்து விட்டது. அர்ஜெண்டீனா, பெரு நாடுகளின் தனிநபர் வருவாய் 25.30 சதவிகிதம் தாழ்ந்து விட்டது. விலை உயர்வை எடுத்துக் கொண்டாலும் 1980-89 காலகட்டத்தில் ஆண்டொன்றுக்கு 161 சதவிகிதம் வரை உயர்ந்துவிட்டது. 1990இல் அர்ஜெண்டீனாவில் உண்மையான கூலி 1981ஆம் ஆண்டு நிலவரத்தின் 68 சதவிகிதமாக குறைந்து விடடது. பிரசீல், மெக்சிகோவிலும் முறையே, 85, 75 சதவிகதமாகக் குறைந்து விட்டது. பெரு நாட்டில்தான் திடுக்கிடச் செய்யும் சீரழிவு ஏற்பட்டது. 1991இன் உண்மையான கூலி, 1981இல் 44 சதவிகிதமாக மட்டுமே இருந்தது.

இன்றைக்கு லத்தீன் அமெரிக்காவின் கடன் சுமையைக் குறைக்க நிதி நிறுவனத்தின் மத்தியஸ்தத்தில் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிக்கின்றன. சில 'தள்ளுபடி'கள் பெற முடிந்திருக்கிறது. ஆனால் இதற்கு பலத்த விலை அளிக்க வேண்டியிருக்கிறது. கடனில் கணிசமான பகுதியை பங்கு மூலதனமாக மாற்றும் ஒப்பந்தம்தான் உருவாகியிருக்கிறது. **'Debt Equity Conversion'** என்ற செல்லப் பெயரில் அறியப்படும் இந்தத் திட்டத்தின்கீழ் லத்தீன் அமெரிக்காவின் முக்கியமான தொழிற்சாலைகள் சுரங்கங்கள், பலவற்றையும் வெளிநாட்டினர் வாங்கிக் குவிக்கின்றனர்! சில நாடுகள் மீன் பிடிக்கும் உரிமையைக் கூட பன்னாட்டு ஏகபோகங்களுக்குத் தாரை வார்க்கின்றன!

இந்தத் துயரம் லத்தீன் அமெரிக்காவை மட்டுமின்றி வளரும் நாடுகளை முழுக்கப் பயமுறுத்திக் கொண்டிருக்னகிறது பட்டியல் 4-2இல் குறிப்பிட்டிருப்பதைப் போல் வளரும் நாடுகளை மொத்தத்தில் எடுத்துக் கொண்டால் 80களில் வளர்ந்த நாடுகளிடமிருந்து கிடைத்த கடன் மூலதன முதலீட்டைவிட கூடுதல் தொகை கடனை அடைக்கவும் வட்டி கொடுக்கவும் செலவிட வேண்டியிருந்தது என்பதை அறியலாம். வளரும் நாடுகளுக்கு 1980இல் புதிய கடனாக மொத்தம் 8000 கோடி டாலர் கிடைத்தது! 1985 ஆவதற்குள் அது 4080 கோடி டாலராகக் குறைந்து விட்டது. கடன் சர்வீஸ் செலவுகளுக்காக வளரும் நாடுகள் அளிக்க நேரிட்ட தொகை இதே கால அளவில் 7760 கோடி டாலரில் இருந்து 1140 கோடி டாலராக உயர்ந்தது. 1980இல் 720 கோடி டாலர், வளர்ந்த நாடுகளுக்குத் திரும்பப் போய்விட்டது. இத்தகைய திரும்பிச் செல்லுதல் தொடர்ந்த ஆண்டுகளில் மேலும் வேகமடைந்தது. 1985இல் 7360 கோடி டாலர் அதிகார பூர்வச் சேனல்கள் வழியாக வளர்ந்த நாடுகளுக்கு பேலன்ஸ் தொகையாகக் கிடைத்தது.

1985-க்குப் பிறகும் நிலைமையில் மாறுதல் ஏற்படவில்லை. ஆனால் பட்டியல் 4-2இல் கொடுக்கப்பட்டிருக்கும் முறையில் கணக்குகளைத் தொடர்ந்த ஆண்டுகளிலும் எழுதி முடிக்க இயலாதவாறுதான் இப்போது கணக்குகள்

www.tamilarangam.net



வெளியாகின்றன. எனவே தற்சமயம் அதற்கு முயற்சிக்கவில்லை. ஆனால் ஒன்றை மட்டும் சொல்லி வைக்கிறோம். உலக வங்கியின் 1991ஆன் ஆண்டு வளர்ச்சி அறிக்கையின்படி (இது, பட்டியல் 4-2ன் கணக்குடன் முழுதும் ஒப்பிட முடியாதது) 1990இல் 957 கோடி டாலர்கள் கடன் மூலதனமும் வட்டியும் வளரும் நாடுகளில் இருந்து வெளியே சென்று கொண்டிருக்கிறது.

இதுதான் சர்வதேச நாணய நிதி நிறுவனம் கடைபிடித்துக் கொண்டிருக்கும் நெறிமுறை கடுமையான பொருளாதாரக் கட்டுப்பாடுகளைத் திணிப்பதன் மூலம் வளர்ந்த நாடுகளுக்கு முதலும் வட்டியுமாக காலம் தவறாது கிடைக்கும் என்று உத்திரவாதம் பெறுவது!

**பட்டியல் - 4.2**

**வளரும் நாடுகளின் கடன் சுமை 1980 - 1985**

| ஆண்டு | புதிய கடன் | வட்டி | கடன் திருப்பிக் கட்ட தவணைகள் | மொத்த கடன் காலீஸ் செலவுகள் (3 + 4) | கிடைக்கும் அசல் கடன் (2 - 5) | ஆண்டிறுதி பேலன்ஸ் கடன் சுமை |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1980 | 8000 | 3930 | 3830 | 7760 | + 240 | 49970 |
| 1981 | 9000 | 5340 | 4380 | 9720 | - 720 | 58970 |
| 1982 | 8670 | 6110 | 4520 | 10630 | - 1960 | 67640 |
| 1983 | 4540 | 5870 | 4310 | 10180 | - 5640 | 72180 |
| 1984 | 3790 | 6460 | 4620 | 11080 | - 7290 | 75970 |
| 1985 | 4080 | 6420 | 5020 | 11440 | - 7360 | 80050 |

(ஆதாரம் : ஃப்ரெட்ரிக் மோண்டெ, ஜான் காவானாக்)

(Third World Debt : The Approaching Holocaust)

www.tamilarangam.net

# 5
# உலக வங்கி-வளர்ச்சித் திட்டங்களின் மூலம் உள்ளே புகுதல்

சர்வதேச நாணய நிதி நிறுவனத்தின் பொதுக் கொள்கைத் திட்டங்களையும், அதன் வஞ்சகக் குழிபறிப்புகளையும் கடந்த அத்தியாயத்தில் ஆராய்ந்தோம். இனி உலக வங்கியின் நடவடிக்கைகளைக் கண்ணோட்டமிடலாம். வங்கியின் பொதுக் கொள்கைகளைத் தனியாக ஆராய்வதில் பயனில்லை. வங்கியின் கண்ணோட்டமும் நிதி நிறுவனத்தினுடையதான். வங்கிக்கும் நிதி நிறுவனத்திற்கும் அலுவலகங்கள் வாஷிங்டன் நகரில் இருப்பது மட்டுமின்றி ஒரே வளாகத்தில் அமைந்திருக்கின்றன. ஒரே மாதிரியான பலமாடிக் கட்டிடங்களில் ஒன்றிலிருந்து இன்னொன்றுக்குச் செல்ல வெளியே வரக்கூடத் தேவையில்லை. அவைகளை பல தடங்களில் ஒன்றோடொன்று இணைக்கும் இடைவழிகளில் ஒன்றில் நடந்து சென்றாலே போதும்.

**திட்டங்கள் வாயிலாக பொதுக் கொள்கையை நோக்கி**

நிதி நிறுவனத்தின் பொறுப்புகளில் முக்கியம் வெளிநாட்டு நாணயப் பரிமாற்றம் எனில், வங்கியின் முக்கியப் பொறுப்பு உள்நாட்டு வளர்ச்சித் திட்டங்களாகும்! உலக வங்கி ஏதேனும் வளர்ச்சித் திட்டங்களுக்கு மட்டும்தான் கடனளிக்கும். ஆனால் இது சாதாரண வங்கிகள் அளிக்கும் கடன் போன்றது அல்ல! சாதாரண வங்கிகள் கடன் கோருபவன் விரும்பும் திட்டத்திற்கு கடனளிப்பவை. ஆனால் உலக வங்கியிடம் கடன் பெற வேண்டுமென்றால் வங்கி விரும்பும் திட்டத்தை அமுல் நடத்த தயாராயிருக்க வேண்டும்.

உலக வங்கியின் நிபுணர்கள் அனைத்து நாடுகளைக் குறித்தும் நுண்ணிய ஆய்வுகளை மேற்கொள்வதுண்டு. இவைகளின் அடிப்படையில் ஒவ்வொரு நாட்டின் வளர்ச்சித் திட்டங்களுக்கும் அவர்கள் சில முன்னுரிமை முறைகளை வகுத்திருக்கிறார்கள். இந்தப் பட்டியலில் இருந்து நாடுகள் தங்களுக்கு வேண்டியவற்றை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். இதுதான் முதல் கட்டம்.

www.tamilarangam.net



அடுத்து இதன் 'புரொஜெக்ட் புரஃபோசல்' தயாரிக்க வேண்டும். வங்கியின் மொழியில் இவைகளைத் தயாரிக்க வளரும் நாடுகள் சர்வதேச ஏஜென்சிகளின் உதவியை நாடலாம். வங்கியே இதற்கு முன்னிற்கிறது. இந்த புரொஜெக்ட் புரஃபோசல் வாஷிங்டனிலிருக்கும் வங்கியின் தலைமையகத்தால் அக்கக்காக ஆராயப்படுகிறது. இதற்காக வங்கியின் நிபுணர் குழுக்கள் பல முறை வளரும் நாடுகளுக்குப் பயணம் செய்ய நேரிடுகிறது. சர்க்காருடன் நெடிய விவாதங்களை மேற்கொள்வார்கள். திட்டத் தயாரிப்பில் புரொஜெக்டை மதிப்பீடு செய்வதுதான் முக்கியமான கட்டம்!

மதிப்பீட்டில் (Economic Cost Benefit Analysis) என்ற சில்லுண்டி வேலைதான் நிர்ணயிப்பு மையமாக இருக்கிறது. புரொஜக்டால் பொருளாதாரக் கட்டமைப்புக்குக ஏற்படும் உண்மையான செலவுகளும் வருவாயும் கணக்கிட்டு சராசரி லாபமாவது கிடைக்குமா என்ள இதன் மூலம் ஆராயப்படுகிறது. வளரும் நாடு என்ன கணக்குப் போட்டாலும் அதை வங்கி ஏற்றுக் கொள்ளாது. வங்கிக்கு தனக்கே உரிய பாணியுண்டு. உதாரணமாக வங்கி நமது நாட்டு விலையைக் கணக்குப் போடப் பயன்படுத்துவதில்லை. மாறாக சர்வதேச விலைகளைத்தான் எடுத்துக் கொள்கிறது!

காரணம் என்ன தெரியுமா? உள்நாட்டு உற்பத்திக்கும் வெளிநாட்டு உற்பத்திக்கும் இடையே பாரபட்சம் காட்ட வங்கி தயாராயில்லை. ஒரு பொருளை உள்நாட்டில் தயாரிப்பதைவிட விலைமலிவாக வெளியிலிருந்து இறக்குமதி செய்ய முடியுமானால் வங்கியைப் பொறுத்தவரை அதுதான் ஏற்புடையது. வளரும் நாடுகள் இறக்குமதியில் ஏற்படுத்தும் கட்டுப்பாடுகள் மற்றும் 'சப்சிடி' (மான்யம்) களால் உள்நாட்டு விலை சர்வதேச விலையைவிட கூடியோ குறைந்தோ இருக்கலாம். இதைத் தவிர்ப்பதற்குத்தான் வரவுக்காக இருப்பினும், செலவுக்காக இருப்பினும் புரொஜக்ட் கணக்கில் சர்வதேச விலைகளை வங்கி பயன்படுத்துகிறது. சர்வதேச முறையில் லாபகரமாக இருந்தால் மட்டுமே திட்டத்திற்கு உதவி கிடைக்கும் என்றாகிறது!

ஒரு புரொஜெக்ட் லாபகரமாக்கவும், நஷ்டப்படுத்தவும் சில விந்தைகள் இருக்கின்றன. எனவேதான் 'எக்கனாமிக்காஸ்டு பெனிஃபிட் அனாலிசிஸ்'சை சில்லுண்டி வேலை என்று சொன்னோம். ஒரு புரொஜெக்ட் லாபகரமாக இல்லை என்று வைத்துக் கொள்வோம். நிராசைப்பட வேண்டாம்! புரொஜெக்டை எப்படி லாபகரமாக்கலாம் என்பதைக்குறித்து வங்கியின் நிபுணத்துவ ஆலோசனையை நீங்கள் எப்போது வேண்டுமானாலும் இலவசமாகப் பெறலாம். சம்மந்தப்பட்ட தரப்பு பேச்சுவார்த்தைகளில் இதுவும் ஒரு கட்டம்.

உதாரணத்திற்கு ஒரு ரெயில்வே வளர்ச்சித் திட்டம் பிரச்சினையை உருவாக்குகிறது என்று வைத்துக் கொள்வோம். அதை லாபகரமாக்க வங்கி சில கருத்துக்களை முன்வைக்க விரும்பும். ரெயில் கட்டணங்களை உயர்த்த வேண்டும்! அதற்காக ரயில் கட்டண விகிதங்களை மாற்றி அமைக்க நேரிடும்! ரயில்வே செலவுகளைக் குறைப்பதும் ஒரு தீர்வு. அதையொட்டி கம்ப்யூட்டர் மயமாக்குவது

www.tamilarangam.net



போன்ற நடவடிக்கை; வேலைப்பளுவை திணிப்பது போன்ற ஆலோசனைகளைக் கூறும். மேலும், ரெயில் பெட்டிகளைத் தயாரிக்கும் பொதுத்துறை நிறுவனத்தின் பணி சரியாக இல்லை, எனவே பெட்டிகளை இறக்குமதி செய்துஅந்த நிறுவனத்திற்குப் பாடம் கற்றுத்தர வேண்டும். அல்லது ரயில்வேயின் ரூட்களில் ஒன்றை மாற்றி அமைக்கலாம். ரெயில்வே நிர்வாகத்தை தனியாரிடம் ஒப்படைக்கலாம்.... இவ்வாறு பலப்பல யோசனைகள்.... மொத்தத்தில் போக்குவரத்துத் துறை முழுக்க ஒரு மறுபுனரமைப்பு தேவை என்ற நிலை உருவாகும்.

இந்த விவாதங்களில் இரண்டு விஷயங்கள் தவிர்க்க முடியாமல் தலைதூக்கும். ஒன்று, தனியார் துறைக்குத் திட்டத்தில் என்ன பங்கு என்பதைப் பற்றியது. துவக்கக் காலத்தில் எந்தத் திட்டமாக இருந்தாலும், தனியார் துறைக்கும் அதில் பங்கிருக்க வேண்டும் என்று உலக வங்கி அடம்பிடித்துக் கொண்டிருந்தது. இவ்வாறு லத்தீன் அமெரிக்க நாடுகளில் அத்தியாவசிய சர்வீஸ்களில் பலதனியார் துறையிடம் அதுவும் வெளிநாட்டுத் தனியார் துறையிடம் போய்விட்டது.

ஆயினும் பொதுத் துறையைத் தவிர்க்க முடியாது தானே....! எனினும் பொதுத் துறையின் செயற்பாடு குறித்தும் உலக வங்கிக்கு சில கருத்துக்கள் இருக்கின்றன. விலை நிர்ணயிப்பு, தொழில் உறவு போன்ற பிரச்சினைகளில் தனியார் துறையைப் போன்றே பொதுத்துறையும் செயல்பட வேண்டும்.

இரண்டாவது விஷயம், சர்வதேச டெண்டர் தொடர்பானது. உலக வங்கி அளிக்கும் கடன் தொகையை உள்நாட்டிலேயே செலவழிக்கலாம் என்று கருதவேண்டாம். உள்நாட்டுக் கம்பெனிகள் வெளிநாட்டுக் கம்பெனிகளுடன் போட்டியிட்டு டெண்டர்களைப் பெற்றே ஆக வேண்டும். 1985 வரை இவ்வாறு மொத்தம் 6000 கோடி டாலர் பொருட்கள் வளர்ந்த நாடுகளிலிருந்து பெறப்பட்டிருக்கின்றன. இதில், அமெரிக்காவிலிருந்து 25 சதவிகிதமும், ஜப்பான் மேற்கு ஜெர்மனியிலிருந்து தலா 15 சதவிகிதமும், பிரிட்டனிலிருந்து 10 சதவிகிதமும் பெறப்பட்டிருந்தன. உலக வங்கியளித்த கடன் தொகையில் 65 சதவிகிதமும் வெளிநாட்டுப் பொருட்களை வாங்கத்தான் செலவழிக்கப் பட்டிருக்கிறது. 1981 வரையிலான கணக்கை எடுத்துக் கொண்டால் இது 80 சதவிகிதத்துக்கும் அதிகம் என்பதை அறியலாம். அமெரிக்காவின் வெளிநாட்டு மாற்றுப் பங்கு குறைந்து கொண்டிருக்கும் சூழ்நிலையில் மனம் நோகக் கூடாதென்பதற்காக உலக வங்கியின் ஆண்டறிக்கையில் மன்னிப்புக் கோரும் குரல் தொனிக்கிறது. "உள்நாட்டுப் பொருட்களுக்கும், சேவைகளுக்கும், சாதாரண முறையில் கிடைக்கும் வருவாயில் மறைமுகமாக வெளிநாட்டு மாற்றுப் பங்கும் சேர்ந்திருக்கிறது"

ரோடு வேலைகளுக்குக்கூட சில பொழுது சர்வதேச டெண்டர் கோரவேண்டுமென்று நிபந்தனை விதிக்கப்படுகிறது. மெக்சிகோ நாடு ரோடு வளர்ச்சித் திட்டத்திற்கு கடன் பெற்றபோது ஒரு தந்திரம் கையாளப்பட்டது. திட்டம் சிறுசிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு டெண்டருக்குவிட ஏற்பாடு செய்யப்பட்டது. உள்நாட்டுக் காண்டிராக்டர்களுக்கும் ஒரு பங்கு கிடைக்கட்டுமே என்றுதான்!

www.tamilarangam.net



ஆனால் வங்கி இவ்வாறு சொல்லிவிட்டது: "எந்த டெண்டரும் 2 கோடி டாலருக்குக் குறைவாக இருக்கக் கூடாது".

இவ்வாறு திட்டம் தொடர்பான ஒவ்வந்தத்தில் கையெழுத்திடுவதற் குள்ளேயே அந்த திட்டப் பகுதியின் பொது வளர்ச்சிக் கொள்கைகள் பலவற்றை மாற்றி அமைக்கும் கட்டாயத்திற்கு வளரும் நாடுகள் உள்ளாகின்றன. திட்டங்களின் வாயிலாக பொது வளர்ச்சிக் கொள்கைகளின் மீது செல்வாக்குப் பாணியாக இருக்கிறது. ஆனால் நிதி நிறுவனம் பொதுக் கொள்கைத் திட்டங்களின் மூலம் வளர்ச்சித் திட்டங்களின் மீது செல்வாக்குப் பெறும் பாணியைக் கடைப்பிடிடிக்கிறது. இரண்டமைப்புகளின் செயற்பாடுகளும் ஐக்கியப்பட்டே இருந்தன.

**மின்சார பகாசுரன்களும்மீமின் வளர்ச்சித் திட்டங்களும்**

இதுவரையில் உலக வங்கிக் கடன்களை மொத்தமாக எடுத்துக்கொண்டால் 30-35 சதவிகிதம் வரை ரோடு, ரெயில்வே, தகவல் தொடர்பு, மின்சாரம் போன்ற வசதிகளை ஏற்படுத்துவதற்குத்தான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை அறியலாம். இதற்கு ஏன் இவ்வளவு முக்கியத்துவம்? இந்தப் பின்னணி வசதிகள் ஒரு சந்தைப் பொருளாதார அமைப்புக்கு அவசியம் தேவைப்படுகிறது என்பதே காரணம்? வியாபாரப் பெருக்கத்தின் மூலம் உலகம் முழுக்க ஒரே சந்தையாக மாற வேண்டுமென்றால், செலசுவ குறைந்த ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட போக்குவரத்து வசதிகள் இன்றியமையாததாகும்.

சாலை, ரயில்வே போன்றவைகள் எல்லா நாடுகளுக்கும் தேவைதான். ஆனால் உலக வங்கிக்கு தன்னுடைய கடனளிப்பின் மூலமாகவே போக்குவரத்தின் திசைகளையும் தன்மைகளையும் கட்டுப்படுத்த முடிகிறது. நாட்டின் வளர்ச்சி முன்னுரிமை முறைக்கேற்பத்தான் புதிய திட்டங்கள் இருக்க வேண்டுமென்பதில்லை. சமூக அளவில் பார்த்தால் சாலையைவிட ரெயில்வேயும் நீர்ப் போக்குவரத்தும்தான் சிக்கனமான போக்குவரத்து வசதிகளாகும். ஆனால் இப்போது வழக்கமாக சாலைப் போக்குவரத்துக்குத் தான் உலக வங்கி கடனளிக்கிறது. இந்த சாலைகள் சர்வதேச தரம் வாய்ந்தவையாகவும் இருக்க வேண்டுமென்பது கட்டாயமாகும். அப்போதுதானே வெளிநாட்டில் தயாரித்த வாகனங்கள் அதில் ஓடமுடியும்.

பல்வேறு போக்குவரத்து வளர்ச்சித் திட்டங்களும் ஏதாவதொரு வெளிநாட்டுக் கம்பெனி மையத்துடன் அல்லது நிதியுறைவிடத்துடன் தொடர்பு கொண்டு தானிருக்கும். இது எதிர்பாரததல்ல! உலக வங்கியின் மின் திட்டங்கள்கூட இப்படித்தான். மொத்தக் கடன்களில் 21 சதவிகிதம் மின்சாரத் திட்டங்களுக்காகத்தான் செலவிடப்பட்டிருக்கிறது. உற்பத்திச் செலவு மிகவும் குறைவான பெரிய நீர் மின் திட்டங்கள்தான் உலக வங்கிக் கடனுக்குத் தகுதி பெற்றவை! இந்தத் திட்டங்களால் ஏற்படும் சுற்றுச் சூழல் பிரச்சினைகள், திட்டப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் மாற்றுக் குடியிருப்பு வசதிகள், போன்றவற்றில் உலக வங்கியின் பல்வேறு திட்டங்களும் 'மோசமான சாதனைக்'குரியவை களாகத்தான் இருந்தன. இதைவிட, இந்தச் செலவு குறைந்த எரிசக்தி பெரும்பாலும் வளர்ந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத்தான் என்பதும் கவனிக்கத்தக்கது. ஆனால் இது மின்கம்பி வழியாக இல்லை;

www.tamilarangam.net



மிகவும் சக்தி வாய்ந்த சுத்தீகரித்துச் செறிவூட்டப்பட்ட உலோகப் பொருட்களை ஏற்றுமதி செய்வதன் மூலன் நடைபெறுகிறது. பல்வேறு பிரபல நீர்மின் திட்டங்களும் இத்தகைய ஏற்றுமதி தொழிற்சாலைகளுடன் இணைத்தே உலக வங்கியால் உருவாக்கப்பட்டிருக்கிறது.

இதோ -சில உதாரணங்கள்; ஐஸ்லாண்டின் பர்ஃபெல் நீர்வீழ்ச்சித் திட்டம் (சுவிட்சர்லாந்துப் பன்னாட்டு ஏகபோகமான ஐஸ்லாண்டிக் கம்பெனிக்காக) வெனிசுலாவில் குரி அணைக்கட்டுத் திட்டம் (அமெரிக்கப் பன்னாட்டு ஏகபோகமான ரெய்னால்டின் ஸ்மெல்ட்டருக்காக) கயானா நதி நீர்த் திட்டம் (உலகின் மிப்பெரிய அலுமினிய ஏகபோகம் ஆல்கனுக்காக) காமரூன் நதி நீர்த் திட்டம் (ஜெர்மனியில் பிச்சினே உகின் குஹல்மான் ஸ்மெல்மான் ஸ்மெல்டருக்காக)....

இவற்றில் மிகவும் கொடும் பிரபலமானவை கானாவில் வோல்டா நதி நீர் மின் திட்டம்தான். கானாவின் பாக்சைட் சுரங்கங்களை விரிவுபடுத்த விரும்புகிறது கானா அரசு இதனுடன் ஒத்துழைக்க அமெரிக்க ஏகபோக கம்பெனிக்கு அதைவிட விருப்பம். அலுமினியத்துக்கு மிக முக்கியமான மூலாதாரம் என்று சொல்லக்கூடிய மின்சாரம் தேவைக்கேற்பக் கிடைக்கவில்லை என்பது ஒரு தடங்கலாகி விட்டது.

இதற்கென்று ஒரு அணையைக் கட்ட கானா சர்க்காருக்கு 20 கோடி டாலர் கடன் தர உலக வங்கி முன்வந்தது. ஆனால் ஒரு முக்கிய நிபந்தனையை முன் வைத்தது. சர்வதேசச் சந்தையில் போட்டியிடச் சாதகமாக கைசர் கம்பெனிக்கு மலிவு விலையில் மின்சாரமளிக்க வேண்டும். கானா சர்க்கார் ஒப்புக்கொள்ள நேரிட்ட மின்சார விலை எவ்வளவு தெரியுமா? ஒரு கிலோவாட் மணிக்கு 2.625 மில்ஸ். அதாவது 3¼ பைசாவுக்குக் கீழ். அந்தக் காலத்தில் (அறுபதுகளின் துவக்கத்தில்) அமெரிக்காவில் ஸ்மெல்டர் பிளண்டுகளுக்குக் கிடைத்த சராசரி மின்சார விலை இதன் மூன்று மடங்காக இருந்தது. தெர்மல் மின்சாரத்தை பயன்படுத்திய அதே கைசர் கம்பெனியின் அமெரிக்கத் தொழிற்சாலையில் மின்சாரச் செலவு கிலோ வாட் மணிக்கு 12 மில்ஸ் ஆக இருந்தது.

முப்பது ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் எழுதப்பட்டது. இருப்பினும் எழுபதுகளின் மத்தியில் இரக்கப்பட்டு வங்கியும் கைசரும் சேர்ந்து மின் விலையை 3.25 மில்சாக உயர்த்திக் கொடுத்தன. இந்தக் கூட்டிய விலை கூட மின்னுற்பத்திச் செலவின் பக்கம்கூட வரவில்லை. உலக வங்கியின் கடனைத் திருப்பி அடைக்க தனியாகப் பணம் திரட்ட வேண்டியிருந்தது. இதற்கு ஏனைய நுகர்வோர் மின் விலையை உயர்த்துவதுதான் ஒரே மாற்று வழியாக இருந்தது. இவ்வாறு மற்றவர்களுக்கான சராசரி மின் விலை 22 மில்சாக உயர்த்தப்பட்டது

ஆனால் இதை விட கானாவை அலட்டிய பிரச்சினை இந்த அலுமினிய ஸ்மெல்டர்காரணமாக வேறு புதிய தொழில்களைத் துவக்க மின்சாரம் கிடைக்க வில்லை என்பதுதான்! மின் உற்பத்தியில் 65 சதவிகிதத்தையும் கைசர் எடுத்துச் சென்று விடும். இறுதியில் ஐவரிகாஸ்டில் இருந்து மின்சாரம் இறக்குமதி செய்ய நேரிட்டது! தெர்மல் பிளாண்ட் அமைப்பு முடிவடைந்ததும் மின் பற்றாக்குறையைப் போக்க முடியுமென்று கானா தன்னைத்தானே தேற்றிக்கொள்கிறது.

www.tamilarangam.net



இதைவிடச் சுவையானது கானாவின் பாக்சைட் வளம் இன்றும் மண்ணுக்கடியிலேயே இருக்கிறது என்பதுதான். கைசர் கம்பெனியின் அமெரிக்காவிலுள்ள லூசியானா தொழிற்சாலையில் தேவைக்கதிகமாகவே அலுமினா சுத்தீகரிக்கப் படுகிறது. இதை அலுமினாவை இறக்குமதி செய்து அலுமினியமாக்குவதைத்தான் கானா தொழிற்சாலை மேற் கொண்டிருக்கிறது. அப்படியானால் இந்தத் திட்டத்திலிருந்து கானாவுக்கு என்ன கிடைத்தது? திட்டப் பிராந்தியத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்டு இன்றைக்கும் ஒரு சமூகப் பிரச்சினையாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் 80,000 கானாப் பிரஜைகளுக்கு என்ன கிடைத்தது?

இன்னும் ஒரு குட்டிக்கதையைக் கேளுங்கள்: 1952-53 வரை கைசர் கம்பெனியின் டைரக்டர் போர்டு உறுப்பினரான இருந்தவர் ஜார்ஜ் வுட். இவருக்கு வங்கியுடன் இருந்த தொடர்பு குறித்து முன்னரே முணு முணுப்பிருந்தது. 1963இல் மிஸ்டர் வுட் வங்கியின் தலைவரானதும் ஐயமெல்லாம் நீங்கிவிட்டது. 1968இல் வங்கியில் இருந்து ஓய்வு பெற்றதும் மிஸ்டர் வுட் கைசர் ஃபௌண்டேஷனின் தலைவர் பதவியை ஏற்றுக் கொண்டார்.

**சுரங்கக் கம்பெனிகளுக்கான இன்ஷ்யூரன்ஸ் பாலிசி**

சுரங்கங்கள் ஆதிநாட்களிலேயே மேற்கத்திய மூலதன முதலீட்டின் முக்கிய மண்டலமாகத் திகழ்ந்தவைதான். காலனியாதிக்கக் கொள்ளையின் திடுக்கிடச் செய்யும் முன்னுதாரணங்களில் சுரங்கச் செல்வங்கள் சுரண்டப்படுவதும் ஒன்று! எனவேதான் பல்வேறு வளரும் நாடுகளில் சுரங்கங்களின் மீதான வெளிநாட்டுக் கட்டுப்பாடுகளுக்கு எதிரான தேசிய இயக்கங்கள் உருவாயின. பல சுரங்கங்கள் தேசவுடைமையாக்கப்பட்டன. அதேபொழுது மிக எளிதாகத் தோண்டியெடுக்கக் கூடிய படிவங்களெல்லாம் அதிவேகமாகத் தீர்ந்து கொண்டிருந்தன. புதிய சுரங்கம் ஒன்றைத் தோண்ட வேண்டுமானால் பிரமாண்ட மூலதனம் தேவைப்பட்டது. புதிய சூழ்நிலையில் பிரம்மாண்ட முதலீட்டுக்கு பன்னாட்டு ஏகபோகங்கள் தயங்க ஆரம்பித்தன.

ஆனால் 1978இல் உலக வங்கியின் ஆண்டறிக்கையில் கூறுவதைப் போல், எரிபொருள் தவிர்த்த சுரங்கச் செல்வங்கள் மற்றும் சுலபமாக எரிபொருள் கிடைப்பிடம் பெறுவது, சர்வதேசப் பொருளாதாரக் கட்டமைப்பின் ஆரோக்கியத்துக்கு இன்றியமையாததாகும். அண்மைக் காலத்தில் சுரங்கச் செல்வத்தை எப்படிச் சுரண்டுவது என்பதைக் குறித்து வளர்ந்த நாடுகளுடையவும், வெளிநாட்டு முதலீட்டாளர்களுடையவும் பார்வைகள் ஒற்றுமையாக இல்லை.... வெளிநாட்டு கம்பெனிகள் இந்தத் துறையில் பெரிய அளவுக்கு முதலீடு செய்யத் தயங்குகின்றன.... சர்வதேச நிறுவனங்கள்... சுரங்க வளர்ச்சித் திட்டங்களில் நடுவர் பணியாற்றுவதன் மூலம் உற்பத்தி நாடுகளுக்கும் வெளிநாட்டுக் கம்பெனிகளுக்கும் இடையே இணைப்புப் பாலமாகச் செயலாற்ற முடியும். உலக வங்கி இன்றைக்கு மத்தியஸ்தர்ப் பணியை மட்டும் செய்யவில்லை. இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியின் வேலையைச் செய்து கொண்டிருக்கிறது. உலக வங்கியின் பங்கேற்பின் மூலம், கடனாளி நாடுகள் உடன்படிக்கையை மீளமாட்டாதென் உத்திரவாதத்தை பன்னாட்டு ஏகபோகங்கள் பெற்று விடுகின்றன.

www.tamilarangam.net



உலக வங்கியின் மேற்பார்வையில் உலகளாவிய சுரங்கத் தொழிலின் முகத்தோற்றமே மாறிக் கொண்டிருக்கிறது.

–ஒரே ஒரு கம்பெனி மூலதனத்தை இறக்குமதி செய்வதற்கு மாறாக பல்வேறு வெளிநாட்டுக் கம்பெனிகள் ஒன்று சேர்ந்து குறிப்பாக பயன்பெறும் தொழில் முனைவர்களே கூட்டாகச் சேர்ந்துதான் இந்தச் சுரங்கங்களில் மூலதனம் போடுகிறார்கள். வளர்ந்த நாடுகளின் வரி விதிப்பு முறையில் முக்கியமான மாறுதல்கள் ஏற்பட்டு விட்டன. தோண்டி எடுக்கப்படும் கணிமங்களின் எடைக்கேற்ப முன்னர் வசூலித்துக் கொண்டிருந்த ராயல்டிக்கு மாறாக லாபத்தின் மீதான வரிக்கு முக்கியத்துவம் வந்து விட்டது.

–மூலதனப் பங்குக்கு மாறாறக கடன் மூலதனத்தைத் தான் சுரங்கக் கம்பெனிகள் கூடுதலாகச் சார்ந்திருக்கின்றன. இதன் மூலம் வட்டிச் செலவு அதிகரிக்கிறது. லாபம் குறைகிறது. லாபத்தின் மீதுதானே வரி விதிக்கப்படுகிறது.

–சுரங்கத்திற்கு தேவையான பின்னணி வசதிகளை அந்தந்த நாட்டு சர்க்கார்களே ஏற்படுத்த வேண்டும். முன்னர் இதைக் கம்பெனிகள்தான் மேற்கொண்டிருந்தன. அந்தந்த நாட்டு அரசுகள் கம்பெனியில் பங்குதாரர்களாக இருப்பதும் வரவேற்கப்படுகிறது.

–பின்னணி வசதிகளுக்கும், கம்பெனி வளர்ச்சிக்கும் உலக வங்கி கடனளிக்கிறது. வெளிநாட்டு ஏஜென்சிகளையும் கடனளிக்க வைக்கிறது. ஆனால் இந்தக் கடன்களுக்கெல்லாம் அந்தந்த நாட்டு அரசுகள் 'கேரண்டி' அளிக்க வேண்டும். உடன்படிக்கையைக் கடைப்பிடிப்போம் என்று வங்கிக்கு உத்திரவாதமளிக்க வேண்டும்.

1031 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும், 17 லட்சம் மக்கள் தொகையும் கொண்ட மௌரிட்டானியா பழைய பிரெஞ்சுக் காலனியாக இருந்த ஒரு சின்னஞ்சிறு நாடு. உலக வங்கியின் சுரங்கத்துறைக் கடனளிப்பு முறைக்கு சிறந்த முன்னுதாரணமாக மௌரிட்டானியாவின் சுரங்க வளர்ச்சித் திட்டத்தை எடுத்துக்கொள்ளலாம்.

1960இல் **Mferma** என்ற சுரங்கக் கம்பெனி உலக வங்கியின் ஆசியுடன் உருவாக்கப்பட்டது. இந்தக் கம்பெனியின் மூலதன அமைப்பைப் பார்ப்போம்.

| | சதவிகிதம் |
|---|---|
| R.I.M. (மௌரிட்டானியா அரசு) | 5.0 |
| B.R.G.M. (பிரெஞ்சு அரசு) | 23.9 |
| D.N.E.L. (பிரெஞ்சு பன்னாட்டு ஏகபோகம்) | 14.5 |
| Rothschild (பிரெஞ்சு பன்னாட்டு ஏகபோகம்) | 15.3 |
| British Steel (பிரிட்டீஷ் உள்நாட்டு ஏகவோகம்) | 19.0 |
| Italian Steel (இத்தாலியன் உள்நாட்டு ஏகபோகம்) | 15.2 |
| ஜெர்மன் ஸ்டீல் தொழில் முனைவர்கள் | 5.0 |

www.tamilarangam.net



பின்னணி வசதிகளின் வளர்ச்சிக்கு மௌரிடானிய அரசுக்கு ஒரு பெரும் வங்கிக் கடனும் கிடைத்தது. இந்தத் திட்டம் மௌரிட்டானியாய்வின் முகத் தோற்றத்தையே மாற்றி விடும் என்றும், தொழில்மய யுகத்தின் கதவு திறக்கப்படும் என்றும் அறிவிப்புகள் எழுந்தன. ஆனால் 25 ஆண்டுகளுக்குப் பிறகும் மௌரிட்டானியாவின் நிலை என்ன?

இரும்புச் சுரங்கம் மௌரிடானியாவின் பொருளாதாரக் கட்டமைப்பில் ஒரு முக்கியமான இடத்தை வகிக்கிறது என்பது உண்மைதான். தேசிய வருவாயில் 30 சதவிகிதம் இந்த ஒரே ஒரு கம்பெனியிலிருந்து கிடைக்கிறது. ஏற்றுமதியின் முக்கால் பகுதியும் இரும்புத் தாதுக்கள்தான். தனிநபர் வருவாய் அவ்வளவு மோசமாகவும் இல்லை. 450 டாலர் கிடைக்கிறது.

ஆனால், இரண்டு பத்தாண்டுகளுக்குப் பிறகும் மௌரிட்டானியாவின் வளர்ச்சியில்லா நிலைக்கு மாற்ற மேற்படவில்லை. தேசிய வருவாயின் 4 சதவிகிதம் மட்டும் தான் இன்றைக்கு தொழில்களிலிருந்து கிடைக்கிறது. தனி நபர் உற்பத்தி உயர்ந்திருக்கலாம். ஆனால் மக்களின் நிலையைப் பாருங்கள். பெரும்பான்மை மக்களுக்கு குறைந்தபட்ச கலோரி உணவுகூடக் கிடைப்பதில்லை ஆயுள் எதிர்பார்ப்பு 46 ஆண்டுகள் மட்டுமே. குழந்தை இறப்பு விகிதம் 1000க்கு 33ஆக இருக்கிறது. பள்ளிப் பருவக் குழந்தைகளில் 37 சதவிகிதம் மட்டுமே கல்விப் பயிலச் செல்கிறது. ஏன் இப்படி நிகழ்ந்தது? இங்குதான் உலக வங்கித் திட்டங்களின் சாயம் வெளுக்கிறது!

சுரங்கத்திலிருந்து மௌரிட்டானியன் அரசுக்கு வரி வருவாய் எதிர்பார்த்ததைப் போல் கிடைக்கவில்லை. கம்பெனியின் இரும்பு தாதுக்களுக்கு எப்போதுமே சந்தையை விடக் குறைந்த விலைதான் கிடைத்துக் கொண்டிருந்தது. எனவே லாபம் மிகவும் குறைவாக இருந்தததது. இரும்பு தாது முழுக்க பெரும்பான்மைப் பங்குதாரர்களாக இருந்த பயன்பெறுவோரே வாங்கினர் என்பது வேறு விஷயம்.

கம்பெனியின் மொத்த வருவாய் கீழ்வருமாறு பங்கிடப்பட்டிருக்கிறது.

| | | (சதவிகிதம்) | |
|---|---|---|---|
| மௌரிட்டானியாவின் வருவாய் | | | |
| | வரி | 16.8 | |
| | மற்றவை (4800 ஊழியர்களின் சம்பளம் உட்பட) | 11.3 | |
| | | | 28.1 |
| வெளிநாட்டினரின் வருவாய் | | | |
| | வெளிநாட்டினர் சம்பளம் (800 பேர்) | 9.4 | |
| | வேறு வெளிநாட்டு வகைகளில் | 38.4 | |
| | லாபம் | 24.1 | |
| | | | 71.9 |
| | மொத்த வருவாய் | | 100. |

www.tamilarangam.net



மௌரிட்டானியாவுக்குக் கிடைத்த வரி வருவாயில் முக்கால் பகுதியும் வெளிநாட்டினரின் கடனையும், வங்கியின் கடனையும் அடைக்கவே செலவாயிற்று. ஊழியர்களின் சம்பளத்திலும் கணிசமான பகுதி அத்தியாவசியப் பண்டங்களின் இறக்குமதிச் செலவாக நாட்டை விட்டுப் போய் விட்டது.

கால்நூற்றாண்டுக்குப் பிறகு சுரங்கம் மெலிய ஆரம்பித்தது. மிக விரைவிலேயே எதிர்காலத்தில் அதை மூட நேரிடும். எல்லாம் முடியுந்தருவாயில் தங்களின் தேசியச் செல்வம் கசிந்துபோய் மௌரிட்டானியாவுக்கு என்ன மிஞ்சப் போகிறது? வெடிப்பு விழுந்த பாலைப் பிரதேசம்-அதன் மத்தியில் ஒரு சிறிய கான்க்ரீட் நகரம்... அங்கிருந்து துறைமுகம் வரை சர்வதேசத் தரத்தைப் பேணும் ஒரு சாலை... அவ்வளவுதான்.

**எண்ணைக் கடன்கள் - 'ஒபெக்'குக்கு முன்னும் பின்னும்**

அண்மைக் காலத்தில் எண்ணை உற்பத்திக்கும் ஆராய்ச்சிக்கும் உலக வங்கி கடன் அளிக்கத் துவங்கியிருக்கிறது. 1960 களின் துவங்கியிருக்கிறது. 1960களின் துவக்கத்தில் இந்தியாவின் எண்ணை ஆராய்ச்சிக்கு உதவ உலக வங்கி மறுத்து விட்டது என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தியத் திட்டம் வங்கியின் கணிப்புக்கு ஏற்ப லாபகரமாக இல்லை என்பதே காரணம். எண்ணை இறக்குமதி எளிதாக இருக்கும்போது ஏன் கிணறு தோண்ட வேண்டும்?

ஏழு சகோதரிகள் என்ற மாற்றுப் பெயரில் அறியப்படும் சர்வதேச ஏகபோகக் கம்பெனிகள், எண்ணை உற்பத்தி மற்றும் வர்த்தகத் துறையை அக்காலத்தில் தங்களின் முழுக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தன. புதிதாக எண்ணை வசதிகள் வளர்ச்சிப் பெறுவது அவற்றின் நலன்களுக்கு எதிராக இருந்தன. இந்தியாவும் அப்போது பாகிஸ்தான் போரின்போது தன்னுடைய தேவைக்கேற்ப எண்ணைக் கிடைப்பதற்குத் தடையாக இருந்த வெளிநாட்டுக் கம்பெனிகளை தேசவுடைமையாக்கிய நாடாக இருந்தது.

இந்தியா சொந்தக் காலில் நிற்க முயற்சித்தது. O.N.G.C. என்ற பொதுத்துறை நிறுவனம் உருவாக்கப்பட்டது. சொந்தமாக ஆராய்ச்சியை மேற்கொண்டு பம்பாய்க்கு அருகாமையில் கடலில் பெரும் எண்ணை ஊற்றைக் கண்டுபிடித்தது. பிறகு, பம்பாய் எண்ணைக் கிணறு உற்பத்தியை வர்த்தக அடிப்படையிலாக்குவதற்காக 1977-1980 ஆண்டுகளில் உலக வங்கி இந்தியாவுக்கு இரண்டு நெடுங்காலக் கடன்களை அனுமதித்தது. 1980இல் அளித்த கடன் 40 கோடி டாலர்.

உலக வங்கியின் மனமாற்றத்திற்கு என்ன காரணம்? அது மிகவும் எளிமையானது. 1973இல் 'ஒபெக்' உருவானதும் பிரபல எண்ணை ஏற்றுமதி நாடுகளின் வளங்களை ஆதிக்கம் செய்து கொண்டிருந்த பன்னாட்டு ஏகபோகங்களின் பிடி தளர்ந்து விட்டது. ஒபெக்கை அழிக்க எண்ணை உற்பத்தியை துரிதமாகப் பெருக்க வேண்டிய கட்டாய மேற்பட்டது. பொதுத் துறையிலானாலும் பரவாயில்லை. உலகெங்கும் எண்ணை இறைப்பு வளர்ச்சி பெற்றாக வேண்டும்.

www.tamilarangam.net



ஆனால், உலக வங்கியின் கடனுக்கு இந்தியா பெரும் விலையளிக்க வேண்டியதாற்று. அது என்ன? 1980இல் இந்தியாவின் இரண்டாவது எண்ணை வளர்ச்சிக் கடன் தொடர்பான உலக வங்கியின், அதிகாரப்பூர்வ அறிக்கையிலிருந்தே மேற்கோள் காட்டலாம்:

"எண்ணை ஆராய்ச்சி தொடர்பாக இந்திய அரசுக்கும் O.N.G.C. க்கும் உலக வங்கியால் உதவ முடியும். அண்மைக் காலம் வரை இந்திய சர்க்காரின் எண்ணைக் கண்டுபிடிப்பு தொடர்பான கொள்கை, எண்ணைத் தொழிலுக்கு ஊக்கமளிப்பதாக இல்லை என்றே சொல்ல வேண்டியிருக்கிறது. ஆயினும் இந்தப் பிரச்சினையில் இன்றைக்கு முக்கியமான கொள்கை மாற்றத்தை அறிவிக்க இந்திய அரசு தயாராக இருக்கிறது. வெளிநாட்டுக் கம்பெனிகளுடன் எண்ணை ஆராய்ச்சிக்கு ஒத்துழைப்பு உடன்படிக்கைகளை மேற்கொள்ள இந்தியா முன்வந்திருக்கிறது. இந்த விஷயத்தில் உலக வங்கி இந்திய அரசுக்கு மூன்று விதத்தில் உதவுகிறது: 1) வெளிநாட்டு எண்ணைக் கம்பெனிகளுடன் ஒத்துழைப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கான பொதுக் கொள்கை அணுகுமுறையை உருவாக்குவது. 2) மாடல் காண்டிராக்டுகளை ஏற்படுத்துவது. 3) பெர்மிட்டுகள் அளிக்கப்பட்ட பிறகு வெளிநாட்டு எண்ணைக் கம்பெனிகளின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளை O.N.G.C. மூலம் மேற்பார்வையிடுவது...."

பழைய சுய சார்புக் கொள்கையைக் கைவிடும் கட்டாயத்திற்கு இந்திய அரசு உள்ளாகியிருக்கிறது. எண்ணை ஆராய்ச்சி மற்றும் உற்பத்தியில் தேசியத் தொழில் நுட்ப அறிவு வளர்ச்சியடைந்து வரும் கால கட்டத்தில்தான் இந்த சருக்கல் நிகழ்ந்திருக்கிறது என்பதையும் கவனிக்க வேண்டும்! இதுதான் உலக வங்கியின் செயலயாற்றல்....!

எண்ணை ஆராய்ச்சிக்குத்தான் வெளிநாட்டுக் கம்பெனிகளுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்ட்டிருப்பினும், எண்ணை கண்டுபிடிக்கப்பட்ட பிறகு அதன் உற்பத்தியிலும் பன்னாட்டு ஏகபோகங்களுக்கு பங்கிருக்கும் என்று தான் தெரிகிறது.

இந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டுத்தான் எகிப்து, மெடகாஸ்கர், பாகிஸ்தான், துருக்கி போன்ற நாடுகளின் எண்ணை வளர்ச்சித் திட்டங்களுக்கு உலக வங்கி கடனளித்திருக்கிறது. இங்கெல்லாம் எண்ணைத் தொழில் வெளிநாட்டு மூலதன முதலீடு நிபந்தனைகள் தளர்த்தப்பட்டு விட்டன.

**தொழில்மயமாக்க வங்கியின் குறுக்கு வழி**

இதுவரை வங்கி அளித்த மொத்தக் கடன் அளிப்பில் 15 சதவிகிதமும் (I F S கடன்கள் இல்லாமலேயே) தொழில் வளர்ச்சித் திட்டங்களுக்குத்தான் அளிக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து தொழில் மயமாக்கும் முயற்சிகள் அனைத்தையும் எதிர்ப்பது என்னும் கொள்கையை உலக வங்கி கடைப்பிடிக்கவில்ல என்பது தெளிவாகிறது. ஆயினும் வளரும் நாடுகளின் இன்றைய தொழில் மயப்படுத்தும் கொள்கையில் மொத்தத்தில் உலக வங்கிக்கு கருத்தொற்றுமையில்லை!

www.tamilarangam.net



வங்கியின் கடும் எதிர்ப்பைப் பெறக்கூடிய ஒருமுன் மாதிரித் தொழில்மயக் கொள்கையைத்தான் ஐம்பதுகளிலேயே இந்தியா மேற்கொண்டிருந்து. இறக்குமதிக்கு மாற்றான தொழில்மயமாக்கத் (Import Substitution Industrialisation) தந்திரம் காலனியாதிக் காலனியாதிக் கக்காலகட்டத்தில் சுதந்திரமாக இறக்குமதி செய்யப்பட்டுக்கொண்டிருந்த தொழில் பொருட்களை இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் வாயிலாகத் தடுத்து நிறுவத்துவது! இந்த இறக்குமதிப் பொருட்களுக்குப் பதிலாக பொருட்களை உள்நாட்டிலேயே தயாரிப்பது. இந்தத் தந்திரத்தின்படி தேசியத் தொழில்களின் வளர்ச்சிக்கு சுங்கப் பாதுகாப்பு மிக மிக அவசியமாகிறது.

உலக வங்கியின் கருத்துப்படி, குறுகிய எண்ணத்தின் விளைவே இந்தக் கொள்கை! தொலை நோக்கு பார்வை இல்லாமையின்விளைவு முடியாத காரியத்தை செய்யமுனைவது. சுங்கப் பாதுகாப்பு எனும் ஊன்றுகோலைப் பயன்படுத்தாமலேயே இறக்குமதிகளுடன் போட்டியிட்டு வெற்றி பெறும் தொழில்களைத்தான் ஊக்குவிக்க வேண்டுமாம். சர்வதேச அளவில் போட்டியிட்டு வெல்லும் ஆற்றல் மிக்கத் தொழில்களில்தான் கவனம் செலுத்த வேண்டும். அதுதான் தொழில்மயமாக்கத் திற்கான பாதையாம். இத்தகைய தொழில்களுக்குத்தான் வங்கியின் கடன் கிடைக்கும். நமது நாட்டுக்குத் தேவையான தொழில்மயமாக்கத்திற்கு மாறாக சர்வதேச அளவில் அசைவான தொழில்மயமாக்கத்தைத் தான் வங்கி விரும்புகிறது என்று பொருள்.

உலக வங்கி மூன்று வகையில்தான் தொழில் துறையில் செயல்படுகிறது:

முதல் வகை : வங்கியே நேரடியாக தொழில் கம்பெனிகளுக்கு கடனளிப்பது. வங்கியின் தொழிற் கடனளிப்புகளில் இது 40 சதவிகிதம். இதில் கூட உரத் தொழிற்சாலைகளுக்கும் அதற்கடுத்து ஸ்டீல் தொழிலுக்கும்தான் அதிக முக்கியத்துவம் தரப்பட்டிருக்கிறது. இந்தியாவில் நங்கல் மற்றும் சிந்த்ரியில் இருக்கும் பொதுத்துறை உரத் தொழிற்சாலைகள் உலக வங்கியின் உதவியால் நிறுவப்பட்டவை யாகும். ஆனால் இந்த உதவியைப் பெற்ற கையோடு உர உற்பத்தியைப் பொதுத்துறையில் ஒருங்கிணைக்கும் கொள்கையைக் கைவிட வேண்டியதாயிற்று.

அறுபதுகளில் உலக வங்கியின் பசுமைப் புரட்சித் தந்திரத்தை ஏற்றுக் கொண்டதன் மூலம் செயற்கை உர உற்பத்தியை விரைந்து உயர்த்த வேண்டியதாயிற்று. உலக வங்கயின் உதவிக்குக விலையாக உரத் தயாரிப்புத்துறை பன்னாட்டு ஏகபோகங்களுக்குத் திறந்து விடப்பட்டது. மணலியிலுள்ள சென்னை உரத்தொழிற்சாலை அமெரிக்காவின் ஸ்டாண்டர்டு ஆயில் கம்பெனியின் சொந்த நிறுவனமாகும். இந்தியாவில் இருப்பதைப் போன்றே ஏனைய வளரும் நாடுகள் அனைத்திலும் பசுமைப் புரட்சியின் பகுதியாக பன்னட்டு உரக் கம்பெனிகள் உலக வங்கயின் உதவியுடன் நிலைபெற்று விட்டன! சர்வதேச உர உற்பத்தித் தொழில் அந்த காலகட்டத்தில் சந்திக்க நேர்ந்த கொடிய நிலைக்கு இந்த நிகழ்ச்சிப் போக்குகளால் ஓரளவு தளர்ச்சி ஏற்பட்டது.

இரண்டாவது வகை : உலக வங்கியின் அங்கீகாரம் பெற்ற ஒன்று அல்லது இரண்டு தொழில் வளர்ச்சி வங்கிகள் அனைத்து நாடுகளிலும் இருக்கின்றன. தனியார்

www.tamilarangam.net



தொழில் கம்பெனிகளுக்கு உதவுவதுதான் இந்த வங்கிகளின் குறிக்கோள். இந்தியாவில் (I C I C I - Industrial Credit and Investment Corporation of India) மற்றும் (I D B I - Industrial Development Bank of India) வும் தான் இத்தகைய நிறுவனங்கள். இவற்றில் அரசு முக்கியப் பங்குதாரராக இருப்பினும், முற்றிலும் சுதந்திரமாக இயங்கும் வங்கிகளாகும். அப்போதுதான் உலக வங்கயின் உதவியைப் பெற முடியும்.

பிற நாடுகளில் தேசியக் கம்பெனிகளுக்கு மட்டுமின்றி, வெளிநாட்டு ஏகபோகங்களுக்கும் இத்தகைய வங்கிகளில் பங்குரிமைகளும், டைரக்டர் போர்டில் உறுப்பினர் பதவிகளும் இருக்கும். உலக வங்கிக் கடன்களில் 56 சதவிகிதமும் இத்தகைய தொழில் வளர்ச்சி வங்கிகளின் வாயிலாகத்தான் அளிக்கப்படுகிறது. அந்தக் கடன்களுக்கு இணையான நிதி அளிக்ககவும், மலிவு விலையிலோ இலவசமாகவோ கடனளிக்கவும் தேசிய அரசுகளுக்கும் பொறுப்பிருக்கிறது. இந்தத் தேசியத் தொழில் வளர்ச்சி வங்கிகளின் மறைவில் மிகவும் பரந்த அளவில் தேசியக் கடன் சந்தையின் மீது செல்வாக்குப் பெறவும் உலக வங்கியால் முடிகிறது! இந்தச் சுதந்திர நிறுவனங்களின் உயரதிகாரிகளைப் பயிற்றுவிப்பதற்காக உலக வங்கிக்குக விசேஷ அமைப்புகள் இருக்கின்றன.

மூன்றாவது வகை: உலக வங்கியின் தொழிற்துறை ஈடுபாடுகளில் I F C யும் உள்ளடங்குகிறது. இந்த இணைப்பு ஸ்தாபனத்தின் னவேலைத் திட்டங்களைப் பற்றி மூன்றாவது அத்தியாயத்தில் குறிப்பிட்டிருந்தோம். கடனளிப்பது மட்டுமின்றி, தனியார் முயற்சிகளில் அதன் 'பங்குகளையும்' I F C பெற்றுக் கொள்கிறது. I F C யின் தனித்தன்மையே கூட்டு முயற்சிகளுக்கு (Joint Ventures) அது அளிக்கும் அழுத்தம்தான்! வெளிநாடு மற்றும் தேசிய மூலதனங்களை ஒன்று சேர்த்து முதலீடு செய்து நிறுவப்படும் கம்பெனிகளுக்குத்தான் கூட்டு முயற்சி என்று பெயர். I F C தொடர்புடைய கம்பெனிகளில் 60 சதவிகிதமும் இத்தகைய கூட்டு முயற்சிகள்தான் வளரும் நாடுகளின் தேசிய ஊற்றிடத்தின் ஒரு பகுதியாக இருப்பவர்கள் வளர்ந்து வரும் தொழில்முனைவோர். அவர்களை சர்வதேச மூலதனத்திற்கு எதிராக இல்லாமல் ஒத்துழைப்பின் பாதைக்கு அழைத்து வருவதுதான் I F Cயின் குறிக்கோள்.

அண்மையில் சிறப்புத் தொழிற்சாலைகளுக்கு அளிக்கும் கடன்களைத் தவிர, தொழில் வளர்ச்சிக்கான பொதுக்கடன்களையும் அளிக்கத் துவங்கியிருக்கிறது உலக வங்கி! தொழில் புனரமைப்புக்கான கடன்கள் (Structural Adjustment Loans) என்று பெயர். இறக்குமதிக்கு மாற்றான தொழில் மயமாக்கக் கொள்கைக்கு மாறும் அமைப்பு ரீதியிலான முயற்சிகளுக்கு உதவத்தான் இந்தக் கடன்கள்! இந்தமாற்றத்திற்கு இசைவான இடைக்காலக் கொள்கைகளை உருவாக்கவும் வளரும் நாடுகளுக்கு உதவ வங்கி தயாராக இருக்கிறது. துருக்கி, கென்யா, ஸ்ரீலங்கா, ஃபிலி ப்பைன்ஸ் போன்ற நாடுகள் இத்தகைய கடன்களைப் பெற்றிருக்கின்றன.

முழுமையான புனரமைப்பு சிரமமானது என்றால் தொழில்மய மாக்கத்திற்கு வங்கி சுட்டிக்காட்டும் ஒரு குறுக்கு வழியும் இருக்கிறது. அதுதான் சுதந்திரமான

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வர்த்தக மண்டலம் எனும் கோட்பாடு. (Free Trade Zone) துறைமுகத்துகு அருகாமையில் ஏற்றுமதியைக் குறிக்கோளாகக் கொண்டு தேசிய மற்றும் வெளிநாட்டு ஏகபோகங்களுக்கு சர்வ சுதந்திரமாகத் தொழிலையும் வர்த்தகத்தையும் மேற்கொள்வதற்கான விசேஷ மண்டலங்கள் இவை. தேசிய மூலதனச் சட்டம், வரிச்சட்டம், எதுவும் இதற்குப் பொருந்தாது. தொழில் உறவுச் சட்டங்களும் அப்படித்தான். இங்கு தயாரிக்கப்படும் பொருட்களை உள்நாட்டுச் சந்தையில் விற்கக்கூடாது; அவ்வளவுதான்.

இந்தியாவும் இத்தகைய சுதந்திர வர்த்தக மண்டலங்களை உருவாக்க முன்வந்திருக்கிறது தமிழகத்தில் தாம்பரத்திலும் இத்தகைய ஒரு மண்டலம் இருக்கிறது. ஆனால் அனுபவம் ஏமாற்றமளித்ததுதான் மிச்சம்! இந்த மண்டலங்களால் "ஸ்க்ரூ டிரைவர் டெக்னாலஜி"யை அடிப்படையாகக் கொண்ட அசெம்ப்ளிங் தொழில்களை மட்டும்தான் ஈர்க்க முடிந்திருக்கிறது.

சுரந்திர வர்த்தக மண்டலம் என்பது ஒரு தற்காலிகத் தந்திரம் மட்டுமே.... நாட்டை முழுக்க, ஒரே ஒரு சுதந்திர வர்த்தக மண்டலமாக மாற்றுவதுதான் உலக வங்கியின் தலையாய கொள்கை.

**சமூக காடுகள் ஏமாற்று வேலை–**

**சாஸ்திர சாகித்ய பரிஷத்தின் விமர்சனம்**

உலக வங்கியின் மக்கள் விரோதக் கொள்கைக்கு எதிராக கடுமையான விமர்சனம் எழுந்தது. அதைத் தொடர்ந்து வறுமை ஒழிப்பு, மக்களின் அடிப்படைத் தேவை, சுற்றுச் சூழல் பாதுகாப்பு போன்றவைகளைக் குறித்து உலக வங்கி குகரலெழுப்பிக் கொண்டிருக்கிறது. குடி நீர் வினியோகத்திற்கும், குடியிருப்புகள் அமைக்கவும் கடன் வசதிகளைச் செய்கிறது. வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கும்போது சுற்றச்சூழல் விரச்சினைகளையும் கருத்திற் கொள்ள வேண்டுமென்று கருத்துத் தெரிவிக்கிறது.

ஆனால் உலகளாவிய சுற்றுச்சூழல் சமசீரற்ற நிலைக்கு உலக வங்கியின் ஒருங்கிணைந்த கைங்கர்யம்தான் காரணம் என்று கூறலாம். வங்கியின் வனவளர்ச்சிக் கொள்கையைத்தான் இங்கு குறிப்பிடுகிறாம். உலக வங்கியின் உதவியுடன் வன வளர்ச்சியின் பெயரால்நடைபெறும் சமூக காடுகள் திட்டம் தொடர்பாக கேரள சாஸ்திர சாகித்ய பரிஷத் (KSSP) மேற்கொண்ட விமர்சனங்கள் எல்லோரையும் கணதிறக்கச் செய்திருக்க வேண்டும்.

உலக வங்கி, இயற்கை வளங்களை பொருளாதார அமைப்புக்கு அவசியமான ஒரு பின்னணியாகக் கருதவில்லை. இயற்கை சூழல் அமைவு என்ற நிலையில் Species பன்னிலைகளில் அவற்றின் முக்கியத்துவத்தை ஒப்புக் கொள்ளவில்லை. நீர்ச்சக்கரப் பாதுகாப்பு, நுண்கால நிலைக் கட்டுப்பாடு, மண்வளப் பாதுகாப்பு போன்றவைகளில் வனங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. கேரளத்தில் உலக வங்கியின் உதவி பெறும்வனவளர்ச்சித் திட்டத்தின் அடிப்படைத் தவறே கேரளப் பொருளாதார அமைப்பில் மேற்குத் தொடர்ச்சி மலைக் காடுகளின் முக்கியத்துவத்தை மறந்ததுதான்!

www.tamilarangam.net



ஒரு பழமொழி நினைவுக்கு வருகிறது. குருடான பிறகு தான் கண்ணின் அருமை தெரியும். இது முற்றிலும் உண்மை. வனங்களை அழிப்பதால் ஏற்படும் கெடுதிகளை இனிமேல்தான் நாம் அனுபவிக்கப் போகிறோம். சாஸ்திர சாகித்ய பரிஷத்தின் ஆய்விலிருந்து வெளிப்பட்ட ஒன்றிரண்டு உண்மைகள் இதோ:

(...இடுக்கி நீர்த்தேக்கப் பகுதியில் வன அழிப்பு காரணமாக மண் சரிவும் சகதித் தேக்கமும் ஏற்பட்டிருக்கிறது. சகதித் தேக்கத்தின் விகிதம் நடப்பு ஆண்டில் 1.0 சதவிகிதம் என்று வைத்துக் கொள்வோம். (இது உண்மையான விகிதத்தை விட மிகவும் குறைவு) இதன் விளைவாக ஓராண்டு மின்னுற்பத்தியில் 2.5 கோடி யூனிட் குறைந்து விட்டது. 2.5 கோடி யூனிட் மின்சாரம் என்றல் 20 லட்சம் வேலை நாட்கள் அல்லது 10 கோடி ரூபாய் அளவு உற்பத்தி என்று பொருள். அடுத்த ஆண்டு மின் உற்பத்தி 5 கோடி யூனிட் குறைகிறது. அதாவது 40 லட்சம் வேலை நாட்கள் இழப்பு. 20 கோடி ரூபாய் உற்பத்திக்கும் இழப்பேற்படுகிறது. இது மின்சாரம் கிடைக்காததால் ஏற்படும் இழப்பு மட்டுமே...! நீர்த் தேக்கத்தில் நீர் இல்லாவிட்டால் விவசாய உற்பத்தியும் குறைந்து விடும். ஒரு ஹெக்டர் அடர் வனம் சேமிக்கும் நீர் மூன்று ஹெக்டர் பயிர் நிலத்துக்கு தாராளமாகப் போதுமானது...ஒரு ஹெக்டர் வனம் அழிந்தால் அதனால் 12,000-15,000 ரூபாய்வரை விவசாயத் துறையில் இழப்பேற்படும்-அழிந்து விட்ட ஒரு நீர்த்தேக்கத்தைச் செப்பனிட முடியாது. மண் கரைந்த நிலத்தை மீட்டெடுக்க இயலாது?

ஆனால் உலக வங்கியைப் பொறுத்தவரை வனவளர்ச்சியென்றால் மரத்தை வெட்டி விற்று பணம் பண்ணுவது தான்.... பணம் குவிக்க முடியாத எதுவும் அவர்களுடைய வளர்ச்சித் திட்டத்தில் கிடையாது. கேரளத்தின் சமூக வளர்ச்சித் திட்டத்தின் 'புரொஜெக்ட் ரிப்போர்ட்'டிலவருந்து இதோ சில மேற்கோள்கள்:

"க்ளீயர் ஃபெல்லிங் (மரம் வெட்டுதல்) நிறுத்திவிட அரசு முடிவெடித்து விட்டதால் ஒவ்வொரு ஆண்டும் வெட்டப்பட வேண்டிய மரத்தின் உற்பத்தி குறைந்துவிட்டது. நெடுங்கால அடிப்படையில் இதன் பாதிப்பு மிக அதிகம். ஏனென்றால் தோட்டம் போட எதிர்காலத்தில் இடமே இருக்காது".

"...க்ளீயர் ஃபெல்லிங்குக்கு கிடைத்த வனத்தின் பரப்பளவை ஆண்டு தோறும் அரசு குறைத்துக் கொண்டே வந்தது. வனம் மற்றும் வனவிலங்குப் பாதுகாப்புதான் காரணமாம். உற்பத்தி மற்றும் பாதுகாப்பு நலன்களுக்கிடையே சனநிலையை நிலைநாட்டும் வழியை ஆராயவில்லை. எனவே சமசீரற்ற நிலை இருந்துகொண்டேயிருக்கிறது.

தேவைக் கதிகமாகவே வனக்கொள்ளையர்கள் இங்கு இருப்பதால்தான் என்னவோ, வனவளர்ச்சிக்கு வெளிநாட்டு ஏகபோகங்களை அழைக்க உலக வங்கி அடம் பிடிக்காமலிருக்கிறது போலும். உலகளாவிய வனச் செல்வத்தின் 75 சதவிகிதமும் இன்றைக்கு அரை டஜன் பன்னாட்டு ஏகபோகங்களின் கட்டுப்பாடில்தான் இருக்கிறது. உலக வங்கியின் உதவியுடன் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கு வனத்தை 'வளர்ச்சி'ப்படுத்தியவாறு அவர்கள் முன்னேறுகின்றனர்.

www.tamilarangam.net



1960இல் சுகர்ணோவைக் கவிழ்த்து விட்டு ஆட்சியைக் கைப்பற்றிய ராணுவ ஆட்சிக்காக ஏற்றுமதி வளர்ச்சிக்கான துறைகளைத் தேடிக் கொண்டிருப்பதற் கிடையில்தான் உலக வங்கியின் கவனம் காடுகளின் பக்கம் திரும்பியது. 1968இல் ஒரு கோடி டாலர் பெறுமான மரத்தை ஏற்றுமதி செய்த இந்தோனேஷ்யா 1971 ஆனதும் ஏற்றுமதியை 160 கோடியாக விரிவுபடுத்தியது. இதைப் பார்த்த பிலி ப்பைன்ஸ் கூடுதல் சலுகைகளை அளித்து பன்னாட்டு ஏகபோகங்களை தங்கள் நாட்டுக்கு அழைத்தது. இன்றைக்கு பிலிப்பைன்சில் வனங்களெல்லாம் அழிந்துவிட்ட நிலை. எனவே வனக் கொள்ளையர்கள் மலேசியாவுக்குள் நுழைந்து விட்டனர். வனங்ககளை வெட்டி அழித்து எண்ணைப் பனைகள் வளர்க்கும் உலக வங்கித் திட்டமும் இந்தக் காலகட்டத்தில் மலேசியாவுக்கு பெரும்பேறாக வந்து வாய்த்தது. வியர் ஹௌசர் என்ற அமெரிக்கக் கம்பெனிக்கு மட்டும் 10 லட்சம் ஏக்கர் காட்டுநிலம் இந்த வளர்ச்சித் திட்டத்தின் பெயரால் அளிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு பல பேருக்கும் அளித்திருக்கிறார்கள். மலேசிய அரசு எங்கே மனம் மாறிவிடுமோ என்றெண்ணி காட்டை அழித்துத் திருத்த ஒரு பெரும் போட்டியே நடைபெற்றது. மலேசிய மரங்கள் கேரளம் வரை ஏற்றுமதியாகும் ரகசியம் இதுதான்.

இதைவிட பயங்கரமானது உலக வங்கியின் தலைமையில் லத்தீன் அமெரிக்காவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காடுகள் அழிப்பாகும். அமேசான் காடுகளில் பெரும் பகுதியும் வெட்டி அழிக்கப்பட்டு பிரம்மாண்டமான கால்நடை வளர்ப்பு பெரும்பண்ணைகள் ஏற்படுத்தும் திட்டங்கள் அங்கு அரங்கேற்றப் படுகின்றன. பிரசீல் நாட்டு வன அழிப்பில் (1966-75 காலகட்டத்தில்) 65 சதவிகிதமும் இத்தகைய உலக வங்கியின் நிதியுதவித் திட்டங்களுக்காகத் தான் மேற்கொள்ளப்பட்டது. உலக வங்கியின் கணக்குப்படி அடுத்த 50 ஆண்டுகளுக்குள் இன்றைய இயற்கை வளங்கள் சுரண்டப்பட்டு விடும்.

உலக வங்கிக்கு இது தவறாகத் தெரியவில்லை. வெப்ப மண்டலக் காடுகளில் மரங்கள் முற்றி வளர 50-100 ஆண்டுகள் வரை ஆகலாம் என்பதால், வங்கியைப் பொறுத்தவதை இவற்றைப் பாதுகாக்க வேண்டியதில்லை. மாறாக 'தோண்டி'த் தீர்க்க வேண்டியதுதான். பதிலுக்கு இங்கெல்லாம் தொழில் தெவைகளுக்காக குறைந்த கால அளவில் முற்றி வளரும் மரங்களின் தோட்டங்களை பெரிய அளவில் அமைக்க வேண்டும்.

இதற்கெல்லாம் தலைமை ஏற்கும் உலக வங்கியே வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லதாம் காடழிப்பின் பாவச் சுடடிய விறகு பொறுக்கும் ஏழைகள் மற்றும் குடியேற்ற விவசாயிகளின் தலையில் கட்டிவிடுகிறது. காட்டு நிலங்களின் குடியேற்ற விவசாயம் தொடர்பான ஆய்விலிருந்து தெரியும் உண்மை இதுதான். பொதுவாக வனக்கொள்ளையயடிக்கும் கம்பெனிகள் காட்டை அழித்து சீர்படுத்தியதும் அந்த நிலங்களில்தான் குடியேற்ற விவசாயிகள் புகுவார்கள். மரக் கம்பெனிகள் ஒவ்வொரு ஆண்டும் 2 லட்சம் கிலோமீட்டர் காடுகளை அழிக்கின்றன. அதில் ஒரு சிறு பகுதியை மட்டும்தான் உதிரியான விவசாயிகள் கைப்பற்றுகின்றனர். எஞ்சியவை கால்நடைகளின் மேய்ச்சல் நிலங்களாகவும் ஏகபோகக் கம்பெனிகளின்

www.tamilarangam.net



தோட்டங்களாகவும் மாறுகின்றன. கேரளத்திலும் காடுகள் அழிப்புக்கு மூல காரணம் விறகு சேகரிப்புதான் என்று உலக வங்கியால் கண்டறியப்பட்டிருக்கிறது!

அமல்படுத்தப்படும் சமூக காடு வளர்ப்புத் திட்டம் இதற்கு மாற்றானதாம். 85,000 ஹெக்டேர் நிலத்தில் மரம் நடுவதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது. இதில் 69,000 ஹெக்டரும் ஒரு ஹெக்டருக்குக் கீழ் வரும் பயிர் நிலங்களே. . . இந்த சிறு விவசாயிகள் 34 கோடி மரக்கன்றுகளை, அதுவும் கால்நடைத் தீவனங்களுக்குக் கூடப் பயன்படாத விற்பனைக்கான விறகு மரங்களைத்தான் நடுவார்கள் என்று திட்டத்தை உருவாக்கிய சூத்திரதாரிகள் எதிர் பார்க்கின்றனர். சாஸ்திர சாகித்ய பரிஷத் பரந்த அளவு சர்வே ஒன்றை மேற்கொண்டது. அதன்படி ஒரு ஹெக்டருக்கு கீழான நிலப்பரப்பு விவசாயிகள் 10 கோடிக்கு மேற்பட்ட மரங்களை வாங்க ஆர்வம்கூட தெரிவிக்கவில்லை. அதற்கே 60 சதவிகிதம் கனிமரக் கன்றுகள் தேவைப்படும். யார் யரை ஏமாற்றப் பார்க்கிறார்கள்? கேரள அரசு உலக வங்கியையா, உலக வங்கி கேரள அரசையா? அல்லது இருவரும் சேர்ந்து மக்களையா?

காடுகளின் அழிப்பு வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு உண்மையான காடுகள் 2500-3000 சதுர கிலோமீட்டருக்கு மேல் இருக்காது. எஞ்சியவை ஒன்று தரிசு நிலமாக இருக்கும், அல்லது கடுமையாகக் காயப்படுத்தப்பட்டதாக இருக்கும். எஞ்சிய வனங்களையாவது பாதுகாக்க வேண்டும். விஞ்ஞான முறைப்படி வளர்க்க வேண்டும். கோயில்களிலும் தரிசு 'வனப்பிராந்தியங்களிலும்' மரங்களை நட்டு வளர்க்க வேண்டும். இதற்கு மாறாக காட்டிலிருக்கும் மரங்களை வெட்டுவதும், ஊருக்குள் மரம் நடுவதுமான தலைகீழ்க் கொள்கையைத் தான் உலக வங்கியும், கேரள அரசும் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றன. மேற்குத் தொடர்ச்சி மலைப் புல்மேடுகளில் மறு சிந்தனையின்றி, மரக்கன்றுகளை நட்டு வளர்த்து இலக்கைப் பூர்த்தி செய்ய இரவு பகலாக உழைத்துக் கொண்டிருக்கிறது கேரள சர்க்கார்.

நாட்டுப் புறத்திலும், மரங்களை நட்டு வளர்க்க வேண்டியது அவசியம்தான். ஆனால் அது விவசாயத்தின் செலவில் நடைபெறக் கூடாது. காடுகளின் செலவிலும் நடைபெறக் கூடாது. கேரளத்தில் அதுதான் வார்த்தைக்கு வார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சமூக வளர்ச்சித் திட்டத்திற்கு உலக வங்கி அளிக்கும் பொருளுதவிக்கு கேரள அரசு இணை நிதி அளிக்க வேண்டும். இன்றைக்கு காட்டிலாகாவின் பட்ஜெட்டிலிருந்துதான் இந்தப் பணத்தை எடுக்கிறார்கள். இருக்கும் பணத்தை வைத்துக் கொண்டே பாதுகாப்பையும், மறுவாழ்வையும் மேற்கொள்ள சிரமப்படும் நிலையில் . . . இருக்கிற பட்ஜெட்டும் கசிய ஆரம்பித்தால் என்ன செய்வது? உலக வங்கியின் வனவளர்ச்சி என்பது இயற்கை வனங்களின் அழிவைத்தான் குறிக்கும்.

**உணவுத் தன்னிறைவு அபத்தமானதாம்!**

எழுபதுகள் வரை விவசாயத்துறை மீது உலக வங்கி பெரிய சிரத்தை எதுவும் எடுத்துக் கொள்ளவில்லை! ஆனால், வறுமை ஒழிப்பு சம்மந்தமான வார்த்தை ஜாலங்கள் துவங்கிய பிறகு விவசாயத்துறைக்காக மேலும் மேலும்

www.tamilarangam.net



கடனளிக்கப்படுகின்றன. 1985இன் மொத்தக் கடன்களில் 35 சதவிகிதம் வரை விவசாயத்துறை தொடர்பான கடன்களாகும். உலக வங்கியின் புகழ்மிக்க உலக வளர்ச்சி அறிக்கையின் 1986ஆம் ஆண்டு இதழில் விவசாயத்துறையின் வளர்ச்சிப் பிரச்சினைகள்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதிலிருந்து விவசாயத்துறைக்கு வங்கி இன்றளித்துக் கொண்டிருக்கும் முக்கியத்துவத்தை உணரலாம்!

வளரும் நாடுகளின் விவசாயத்துறையை நவீனப்படுத்தும் - பசுமைப் புரட்சியின் 'பிதாமகன்களில் ஒருவர்' என்ற பாவனையுடன் உலக வங்கி உலா வருகிறது. வெற்றி வாகை சூடும் பசுமைப் புரட்சிக் கொள்கைக்கு இந்தியாவைத்தான் வங்கி சுட்டிக்காட்டுகிறது. நாற்பது சதவிகிதம் மக்களுக்கு குறைந்தபட்ச கலோரி உணவுகூடக் கிடைக்காத நமது நாடுதான் பசுமைப்புரட்சிக் கோட்பாட்டின் வெற்றிக்குச் சாட்சியம் என்றால், பிற நாடுகளின் நிலைமையை யூகிக்கத்தான் முடியும்.

பசுமைப் புரட்சி விதைத்த வினைகள் தொடர்பான ஆய்வுகள் இன்றைக்கு நிரம்பக் கிடைக்கின்றன. 1) கலப்பட விதைகள் பரவலாகியதின் விளைவு தேசிய ஸ்பீஷ்கள், மற்றும் ஸ்பீஷ்களின் பன்னிலைத் தன்மை மறைந்து விட்டது. பாரம்பரிய விதைகள் பன்னாட்டு ஏகபோகக் கம்பெனிகளின் விதை வங்கிகளுக்குச் சென்று கொண்டிருக்கின்றன. 2) புதிய கலப்பு விதைகள் பலனளிக்க வேண்டுமென்றால் உயர்ந்த அளவில் நீரும், எருவும், பூச்சிகொல்லிப் பாதுகாப்பும் கிடைத்தே ஆகவேண்டும். இது கிடைக்காததால் கலப்பட விதைகள் பல இடங்களிலும் விபரீதப் பலன்களைத்தான் தந்தது. 3) கேள்விப்படாத புதுப்புது நோய்கள் விவசாயத்தைப் பீடிக்கின்றன! 1974-75இல் இந்தோனேஷ்யாவில் 5 லட்சம் ஏக்கர் கலப்பு விதை நெற்பயிர் ஒரு வகை வைரஸ் நோயால் பீடிக்கப்பட்டு அழிந்தது பெரும் துயர நிகழ்ச்சியாகும். இத்தகைய எண்ணற்ற சுற்றுச்சூழல் பிரச்சினைகள் இன்றைக்கு பத்திரிக்கைச் செய்திகளாக வந்து கொண்டிருக்கின்றன. 4) சந்தையை அதிகமாகச் சார்ந்திருக்க வேண்டிய நிலை விவசாயிகளில் கணிசமான பகுதியை திவாலாக்கி விடுகிறது. விவசாயத் துறையில் ஏற்றத்தாழ்வும் அதிகரிக்கிறது.

இதற்கெல்லாம் மேலாக பசுமைப் புரட்சி விவசாய மண்டலத்தில் வெளிநாட்டுச் சார்பு நிலையையும் அதிகப்படுத்திவிட்டது. உரம் பூச்சிகொல்லி மருந்து போன்றவற்றில் கணிசமான பகுதியை பன்னாட்டு ஏகபோகங்கள்தான் கட்டுப்படுத்துகின்றன. பெரிய நீர்த்தேக்கத் திட்டங்களுக்கான கடன் பொறுப்புகளும் பெருகிவிட்டன. ஏன்? விதைகளுக்குக் கூட வெளிநாட்டினரை நாடவேண்டி யிருக்கிறது!

இதையெல்லாம் கூடச் சகித்துக் கொள்ளலாம். பசுமைப் புரட்சியால் வளரும் நாடுகளின் விவசாயத் தேக்க நிலையைப் போக்க முடிந்ததா? இந்தியாவில்கூட விவசாய வளர்ச்சி விகிதத்தை கிழிறங்காமல் பார்த்துக் கொள்ளத்தான். பசுமைப் புரட்சியால் முடிந்திருக்கிறது என்றுதான் நன்னம்பிக்கை கொண்டவர்கள்கூடச் சொல்ல முடியும்! உலக வங்கியின் கணக்குகள் வியப்பு ஏற்படுத்தக் கூடியவை. முன்னர் தன்னிறைவு பெற்ற நாடுகள்கூட குறிப்பாக ஆப்பிரிக்க நாடுகள்

www.tamilarangam.net



உணவுதானியங்களை இறக்குமதி செய்ய வேண்டியதாயிற்று. ஆப்பிரிக்காவின் தனிநபர் உணவு உற்பத்தி கடந்த பத்தாண்டு காலமாகக் குறைந்து கொண்டே யிருக்கிறது.

இந்த நிலைமைக்கு என்ன காரணம்? தீர்வுதான் என்ன? இது தொடர்பான முழு விளக்கமும் 1986 ஆம் ஆண்டில் உலக வங்கி அறிக்கையில் தெளிவாக இருக்கிறது. அந்தப் பெரிய அறிக்கையை ஒரு சில பக்கங்களில் இங்கு ஆய்வு செய்ய இயலாது. வளரும் நாடுகளின் விவசாய மந்த நிலைக்கு உலக வங்கியின் தீர்வை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

உலக வங்கியின் கருத்துப்படி முதலில் வளரும் நாடுகளின் பொது வளர்ச்சித் திட்டச் சீரமைப்பைத்தான் மேற்கொள்ள வேண்டும். இன்றைக்கு அவை விவசாயத்திற்கு எதிரானதும், விவசாயத்தின் செலவில் தொழிலை வளர்க்கக் கூடியதாகவும் இருப்பதாக உலக வங்கி கருதுகிறது. மிகப் பெரிய தவறு, இறக்குமதிக்கு மாற்றாக தொழில் மயமாக்கும் கொள்கைதான். இந்த கோட்பாடினால் தொழில் தொழில் உற்பத்திப் பொருட்களின் உள்நாட்டு விலை உயர்கிறது. இது விவசா உற்பத்தித் துறையின் லாபத்தை எதிரிடையாகப் பாதிக்கிறது. விவசாயத் துறையின் மீதான இந்தப் பாகுபாடுதான் அந்தத் துறையின் தேக்க நிலைக்கு அடிப்படைக் காரணம். உள்நாட்டு-விவசாய-தொழில்-வர்த்தக (terms of trade) விலைகளை நிர்ணயிக்கும் அமைப்புகள் என்ன? வளரும் நாடுகளின் அனுபவம் எத்தகையது? இவை தொடர்பான விளக்கமான ஒரு தொழில் நுட்ப விமர்சனத்திற்கு இங்கு முயற்சிக்கவில்லை. வளரும் நாடுகளின் விவசாயக் கொள்கைகள் விவசாயிகளுக்குச் சாதகமானது என்றும் வாதிக்க விரும்பவில்லை. உலக வங்கியின் விமர்சனத்தில் சில பாதி உண்மைகளும் உள்ளடங்கியிருக்கின்றன என்பதுதான் பல வேளைகளில் வங்கியைக் காப்பாற்றுகிறது. ஆயினும் வளரும் நாடுகளில் விவசாயத்தின் அடிப்படை எதிரி தொழில்தான் என்பதைப் போன்ற விளக்கங்களின் உண்மையான நோக்கம் என்னவென்பதும் நமக்குப் புரிகிறது!

அடுத்ததாக உலக வங்கி, வளரும் நாடுகளின் விவசாயத் துறைக் கோட்பாடுகளைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்கிறது. விலைக்கொள்கைகள் வரிக் கொள்கைகள், சேமிப்பு ஏற்பாடுகள், உற்பத்தியிலும் வின விமர்சனத்துக் குள்ளாக்கப்படுகிறது. உற்பத்தி, விவசாயிகளிடமும் (பெரும் நிலப்பிரபுகளுக்கு என்று பொருள்) வர்த்தகம், வியாபாரிகளிடமும் விட்டு விட வேண்டும். அதுதான் சிறந்ததும் பொருத்தமானதுமாகும். யூக வியாபாரிகள் ஏற்படுத்தும் பிரச்சினைகள் அரசின் பொறுப்பின்மையை விட லகுவானதான். பேராசிரியர் டி.என். கிருஷ்ணன் குறிப்பிட்டதைப் போல் விவசாய மண்டலத்தின் வளர்ச்சி தொடர்பாக அசையாத நம்பிக்கைகளைக் கொண்டிருக்கிறது வங்கி. வேகமாக வளர்ந்து உருவாகும் விஞ்ஞான தொழில் நுட்ப அறிவுகளை மாற்றத்திற்கு உட்பட்ட ஒரு அசையும் கோட்பாடுதான் தேவை. இத்தகைய கோட்பாட்டில் வளரும் நாடுகளின் பின்னணிச் சூழ்நிலையில். விவசாயத் துறையில் சர்க்கார் முக்கியப் பங்காற்ற நேரிடும்.

இன்றைய விவசாயக் கொள்கைகளில், உணவுத் தன்னிறைவுக்கு அளிக்கப்படுவதும் முக்கியத்துவத்தைத் தான் அதன் அடிப்படைக் குறைபாடாக

www.tamilarangam.net



வங்கி கருதுகிறது. அதிக லாபம் தரக்கூடிய விளைச்சலைப் பயிரிட விவசாயிகளுக்கு இது தடையாக இருக்கிறது. உணவுப் பற்றாக்குறையை ஒரு பிரச்சினையாகவே வங்கி கருதவில்லை. அமெரிக்க, கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளால் மட்டும் உலகனைத்துக்கும் தேவைனா தானியங்களை மிரமான விலைக்குத் தர முடியுமாம்!இன்று, கோதுமையை விற்க முடியாமையால் இந்த நாடுகளின் பயிர் நிலங்களில் கணிசமான பகுதி தரிசாகக் கிடக்கிறது என்பதுதான் உ ண்மை! இந்தியாவின் உணவு தானியச் சேமிப்புகூட கடுமையான விமர்சனத்துக்கு உளளாக்கப்படுகிறது. 80களின் துவக்கத்தில் இந்தியாவின் தானிய மொத்த சேமிப்பு இருப்பு வைத்துக் கொள்வதைவிட, உணவு தானியச் சரிவைச் சரிக்கட்ட இறக்குமதியைச் சார்ந்திருப்பதுதான் இந்தியாவுக்கு நல்லது என்பது உலக வங்கியின் அறிவுரையாகும். அதேபொழுது அமெரிக்கா 15 கோடி டன்கள் வரை கோதுமையை கிடங்குகளில் சேமித்து வைத்திருப்பதை. உலக வங்கி ஒரு பெரும் பிரச்சினையாக எடுத்துக் கொள்வதில்லை. இது தான் அறிவுரையின் மறுபக்கம்....

உணவுப் பிரச்சினையில் தன்னிறைவு என்பது பொருளாதார லாப நஷ்டக் கணக்கிற்கு மாறாக அரசியல் சுயாதிகாரத்தின் பிரச்சினை! உலக வங்கி 'ஒண்ணும் தெரியாத பாப்பா'வாக நடித்தாலும் உணவுக்காகச் சார்ந்த திருப்பதின் முக்கியத்துவத்தை அமெரிக்க சி.ஐ.ஏ நன்கு உணர்ந்திருக்கிறது. 1947இல் தயாரிக்கப்பட்ட 'உணவு ஒரு ஆயுதம்' **(Food as a Weapon)** என்ற புகழ்பெற்ற ஆவணத்தில் கீழ்வருமாறு குறிப்பிட்டிருக்கிறது: 'உணவு தானியங்களுக்குாக ஏனைய நாடுகள் அமெரிக்காவைச் சார்ந்திருக்கும் நிலை அதிகரிக்கத்தான் போகிறது. இது என்றைக்குமில்லத ஒரு அந்தஸ்தை அமெரிக்காவுக்கு அளிக்கப் போகிறது...(மோசமான விளைச்சல் ஆண்டுகளில்) தேவைகளை எதிர்நோக்கும் கோடிக்கணக்கான மகக்ளின் வாழ்வுக்கும் சாவுக்கும் மத்தியில் அவர்களுடைய விதியின்மீது வாஷிங்டனுக்கு ஆதிக்கம் கைவரப் போறிது...."உலக வங்கியின் அறிவுரைகள் ஆப்பிரிக்க நாடுகளின் நிலைமைக்கு இந்தியாவைத் தள்ளிவிடும்.

விவசாயத் துறையில் நடைமுறைப்படுத்த வேண்டிய நிலச்சீர்திருத்தத்தை, பரிசீலனைக்குரிய ஒரு பிரச்சினையகக்கூட உலக வங்கி கருதவில்லை. நிலச்சர்திருத்தம் என்றால் நாம் என்ன பொருள் கொள்கிறோமோ அதுவல்ல வங்கியின் கருத்து. மூலதன மோகம் கொண்ட பொருளாதார பலம் படைத்தவர்களிடம் நிலத்தை ஒப்படைப்பது தான் நிலச்சர்திருத்தமாம்! ஆப்பிரிக்க நாடுகளில் கிராமங்களின் பொதுச் சொத்தான நிலத்தையெல்லாம் வளைத்துப் போட்டு தனியாரிடம் தாரை வார்ப்பதுதான் வங்கியின் நிலச் சீர்திருத்தம், லத்தீன் அமெரிக்காவில் அரசு ஆதரவுடன் விவசாயிகளை வெளியேற்றி விட்டும், காடுகளை வெட்டி அழித்தும், தரிசுகளை பட்டா போட்டுக் கொடுத்தும் பெரும் எஸ்டேட்டுகளையும், கால்நடை பண்ணைகளையும் (இவை ஆயிரக்கணக்கான ஏக்கர் கொண்டவை) உருவாக்குவதுதான் உலகன வங்கியின் நிலச் சீர்திருத்தம். ஸ்ரீலங்காவில் உலக வங்கியின் உதவியுடன் 400 கோடி டாலரில் மஹாவலி நீர்த்தேக்கம் உருவாகிக் கொண்டிருக்கிறது. இந்தத் திட்டப் பகுதியில் ஒரு லட்சம் ஏக்கரா நிலம் வெளிநாட்டுக் கம்பெனிகளிடம் குத்தகைக்கு வடப்பட்டிருக்கிறது.

www.tamilarangam.net



லத்தீன் அமெரிக்காவிலும் ஆப்பிரிக்காவிலும் உலக வங்கிக் கோட்பாட்டின் கீழ் நிலங்களைத் தன்னகப்படுத்துவது அதிகரித்துக் கொண்டிருப்பதாகக் கணக்குகள் தெரிவிக்கின்றன. இந்தியாவில் இனிமேல் கேரளத்தில் மேற்கொண்டதைப் போல் ஒரு நிலச்சீர்திருத்தம் நடைமுறைச் சாத்தியமற்றது என்பதுதான் உலக வங்கியின் கருத்து!

பெரும் பயிர் நிலங்களை உருவாக்க முடியாத இடங்களில் ஒப்பந்த அடிப்படையிலான விவசாய முறையை உலக வங்கி ஊக்குவிக்கிறது. பெரும் வேளாண் வள பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களுக்காக ஒப்பந்த அடிப்படையில் வேளாண்மையில் ஈடுபடும் விவசாயிகளின் எண்ணிக்கை பெருகி கொண்டே இருக்கிறது. கென்யாவில் தேயிலையை ஒப்பந்த அடிப்படையில் ப்ரூக்பாண்ட் கம்பெனி பயிரிடுகிறது. உலகெங்கும் பரவிக் கிடக்கும் பத்து லட்சத்துக்கும் மேற்பட்ட தங்களுடைய புகையிலை விவசாயிகளை பல்வேறு ஒப்பந்தங்களின் வாயிலாகத்தான் பிரிட்டிஷ் அமெக்கன் டுபாக்கோக் கம்பெனி இயக்கிக் கொண்டிருக்கிறது. பத்தாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் வாழை, பைனாப்பிள் பயிர்களை விளைவித்து 'பனானாக் குடியரசுகளை' ஆண்டு கொண்டிருந்த டெர்மோண்டெ, யுனைடெட் ஃப்ரூட் கம்பெனி போன்றவைகளும் ஒப்பந்த முறையைத்தான் பெரிதும் கையாண்டு வருகின்றன. உலக வங்கியின் வேளாண்மைக் கடன்களில் பெரும் பகுதியும் இந்த ஏகபோகங்களின் திட்டங்களுடன் இணைக்கப் பட்டுதான் அளிக்கப்பட்டு வருகிறது. வளரும் நாடுகளின் விவசாயத்துறையை நவீனப்படுத்தும் பணியில் இத்தகைய பன்னாட்டு ஏகபோகங்களுக்கு உலக வங்கியின் பார்வையில் 'கண்' போன்று இடமளிக்கப்பட்டிருக்கிறது! அவை விவசாயிகளுக்கும் புதிய தொழில் நுட்ப ஞானத்தையும், வேளாண் முறைகளையும் கற்றுத் தருகின்றன; மூலதனம் கிடைக்கச் செய்கின்றன; சந்தையைக் கண்டுபிடித்துக் கொடுக்கின்றன; விவசாய உபரியைப் பறித்துக்கொள்ளவும் செய்கின்றன. (கடைசியில் கூறியதை உலக வங்கி ஒப்புக் கொள்வதில்லை, அவ்வளவு தான்!)

**சர்க்கரை கசக்கும் காலகட்டம்**

உலக வங்கியின் வேளாண்மைச் சீர்திருத்தத்தின் மூன்றாவது சரத்து விவசாய வளத்தின் வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பானது. அதன் முக்கிய அம்சம் வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பான அனைத்துக் கட்டுப்பாடுகளையும் நீக்க வேண்டும் என்பதுதான்! ஏற்றுமதி வாய்ப்புகள் அதிகமாக இருக்கும் விளைபொருட்களுக்கு மட்டும் தான் முக்கியவத்துவம் அளிக்க வேண்டும். உணவு தானியங்களைஇறக்குமதி செய்ய நேரிடுவதில் பக்குவமின்மை எதுவும் கிடையாது. செயற்கையாக விலைகளை உயர்த்த முயற்சிப்பது பயனற்றது என்றும் வங்கி நம்மை எச்சரிக்கிறது. ஏதாவது ஒரு நாடு செயற்கையாக விலைகளை ஏற்றினால் பிற நாடுகளின் அந்த விளைபொருளின் விவசாயம் வளர்ச்சியடையும். முதலில் குறிப்பிட்ட நாட்டின் போட்டித் திறன் தளர்ந்துவிடும். தேயிலை உற்பத்தியில் இந்தியாவும் ஸ்ரீலங்காவும் தோற்பது இதனால்தான். பாமாயில் (பணை எண்ணை) ஏற்றுமதியில் மலேசியா நைஜீரியாவிடம் தோற்றுப்போவதற்கும் இதுவே காரணம்.

www.tamilarangam.net



ஆனால் ஏற்றுமதி நாடுகள் ஒன்று சேர்ந்து கார்டல்களை உருவாக்கி விலைகளை உயர்த்தினால்? இதுவும் பயனற்றது என்று வங்கி எச்சரிக்கிறது. காபி, தேயிலை, ரப்பர், கொக்கோ போன்ற விளைபொருட்கள் தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட சர்வதேச ஒப்பந்தங்களெல்லாம் உருக்குலைந்து போன வரலாற்றை வரிசைப்படுத்தி விட்டு உலக வங்கி கேட்கிறது: "சர்வவல்லமை படைத்த 'ஒபெக்' நிறுவனம் என்னவாயிற்று? இந்த விளக்கமளிக்கும்போது வங்கி தனது வசதிக்கேற்ப மறந்துவிடும் சில உப கதைகள் இருக்கின்றன. சர்வதேச முடிவுகளை தலைகீழாகப் புரட்டிவிட அமெரிக்காவும், வளர்ந்த முதலாளித்துவ நாடுகளும் மேற்கொண்ட சதித்திட்டங்கள், கொடுக்கப்பட்ட கையூட்டுகள், தலைமையெற்று நடத்திய ராணுவ அதிரடிப் புரட்டுகள், ஆட்சிக் கவிழ்ப்புகள் போன்றவையே அது!

உலக வங்கி வளரும் நாடுகளுக்கு இன்னொன்றையும் நினவூட்டுகிறது. விலைகளை ஏற்றினால் பன்னாட்டு ஏகபோகங்கள் விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு மாற்றாக செயற்கைப் பொருட்களைத் தயாரிக்க முயற்சிக்கும். இது வேளாண்மையின் எதிர்காலத்தையே பாழடித்து விடும். எனவே வளரும் நாடுகள் தங்களுடைய உற்பத்தித் திறனை வளர்க்க ஓயாது உழைக்க வேண்டும்.

விவசாயப் பண்டங்களின் வர்த்தகத்தை சர்வ சுதந்திரமாக இயங்கவிட்டால் ஏற்படும் நன்மைகளை, எவ்வளவு தான் வர்ணித்தாலும் உலக வங்கிக்கு சளைக்காது! அதற்கு அத்தாட்சியாக கணக்குகளை முன் வைப்பதற்கும் குறைச்சலில்லை. மிகவும் சுவையான சில கணக்குகள் இதோ; "வளரும் நாடுகள் தாங்களாகவே முன் வந்து, ஒரேடியாக தங்களுடைய வெளிநாட்டு வேளாண் வர்த்தகக் கட்டுப்பாடுகளை நீக்கி, சுதந்திரமாக இயங்க விட்டனர் என்றே வைத்து கொள்வோம். இதன் பயனாக வளரும் நாடுகள் பெறும் அசல் வருவாய் எவ்வளவு தெரியுமா? 2820 கோடி டாலர்! வளரும் நாடுகள் இன்றுள்ள கட்டுதிட்டங்கள் எதையும் நீக்காமலேயே கிடைக்கும் வருவாய்க் கணக்கு இதுவென்பதையும் நினைவிற்கொள்ள வேண்டும். அவர்கள் சுதந்திர வர்த்தகத்துக்கு வராவிட்டால் இழப்பு நமக்கில்லை; அவர்களுக்குத்தான்! எவ்வளவு என்கிறீர்களா? 1020 கோடி டாலர்!" ஓ! நம்முடைய பழைய காலனியாதிக்க எஜமானகர்களுக்கு பாடம் கற்றுத்தர உலக வங்கி நமக்களிக்கும் படைக்கலனைப் பார்த்தீர்களா? இந்தக் கணக்குச் செப்படி வித்தையின் மூலத்தைக் கண்டறியச் சிரமப்படாதீர்கள். பெரும் கம்ப்யூட்டர்களால், நுட்பமாகக் கணிக்கப்பட்டுக் கண்டறியப்பட்டவை இவை! எவ்வளவு அரும் பெரும் கம்ப்யூட்டர்களாக இருப்பினும் 'தப்புக் கணக்கு' சரியாகி விடுமா?

சர்வதேச வேளாண் செல்வச் சந்தை என்றால் நம்முடைய நாட்டுப் புறத்து காய்கறிச் சந்தையல்ல! விளைபொருட்களை விற்க வரும் விவசாயிகளும் அதை வாங்க வரும் நுகர்வோரும் ஒன்று கூடும் இடமல்ல இது. சர்வதேசச் சந்தையில் உலக வங்கியின் கொள்கைகளைப் பின்பற்றி ஒருவருக்கொருவர் கழுத்தறுப்புப் போட்டியில் ஈடுபடும் எண்ணற்ற நாடுகள் இருக்கின்றன. ஆயினும் பொருட்களை வாங்க ஒரு சில பன்னாட்டு ஏகபோகங்கள் மட்டுமே இருக்கும். இந்த ஏகபோகங்களுக்கு சந்தையின் மீது இருக்கும் கட்டுப்பாடுதான், சர்வதேச வேளாண்

www.tamilarangam.net



வர்த்தகத்தின் அடிப்படை நிலையாகும். உலக வங்கியும் இதைத்தான் மூடிவைக்கிறது!

வேளாண் துறையை ஒன்றிரண்டு ஏற்றுமதி விளை பொருட்களுடன் மையப்படுத்தும் துயரக் கதைகளும் நிரம்ப இருக்கின்றன. 1930களில் விலை வீழ்ச்சியைத் தடுக்க மூன்று கோடிச் சாக்குப்பைக் காப்பிக் கொட்டையை எரிக்க நேர்த்த பிரசீலின் கதை மிகவும் பிரசித்தமானது. 1950களில் நாடெங்கும் கொக்கோ பயிரிட்டது கானா; கொக்கோ விலை டன்னுக்கு 1000 டாலராக இருந்தது. 400 டாலராகச் சரிந்த பிறகு அதன் நிலை என்ன? 1960களில் முந்திரியை மட்டும் பயிரிட்டு ஏற்றுமதியைப் பெருக்க முயற்சித்தது செனகல். பிறகு முந்திரி வளர்ச்சி நெருக்கடிக்குள்ளானதும் ஒரு பன்னாட்டு ஏகபோகத்தின் தலைமையில் ஐரோப்பாவுக்கு காய்கறிகளை ஏற்றுமதி செய்யும் பிராந்தியமாக மாற முயன்று கடனாளியாகிவிட்ட செனகலின் கதை பல்வேறு புத்தகப் பக்கங்களின் விரவிக் கிடக்கிறது! நூலில், இடம் இன்மையால் அதனுள் நுழைய விரும்பவில்லை.

சர்க்கரை ஏற்றுமதி நாடுகள் இன்றைக்கு எதிர்க் கொண்டிருக்கும் நெருக்கடியை மட்டும் குறிப்பிட விரும்புகிறோம். வளரும் நாடுகளில் இருந்து ஏற்றுமதியாகும் மிக முக்கியமான வேளாண் விளைபொருட்களில் சர்க்கரை குறிப்பிடத்தக்கது. சர்க்கரை சமையலறைத் தேவைக்கு மட்டுமின்றி, அதைவிட குளிர்பானம் போன்ற தொழில் தேவைகளுக்கும் பயன்படும் முக்கியமான மூலப் பொருளாகும். சர்க்கரை இரண்டு வகையான மாற்றுப் பொருட்களுடன் போட்டியிட வேண்டியிருக்கிறது. அதில் சோளத்திலிருந்து தயாரிக்கப்படும் இனிப்புத் திரவம் முதலாவதாகும். அதாவது High Fructose Corn Syrup எனப்படுவது. சர்க்கரையை விட இதற்கு விலை மலிவு. வளர்ந்த நாடுகளின் தொழிற்சாலைகளில்தான் இது தயாரிக்கப்படுகிறது. இரண்டாவது, சாக்கரின் போன்ற இனிப்புப் பொருட்கள். வளர்ந்த நாடுகளில் இன்றைக்கு சாக்கரினைவிட அஸ்பார்டைம் என்ற இனிப்புப் பொருள் தான் பிரபலமாக இருக்கிறது.

அமெரிக்காவின் சர்க்கரை இறக்குமதியில் பத்து சதவிகிதத்தையும் கொக்ககோலா கம்பெனிதான் பெற்றுக் கொண்டிருந்தது. இவ்வாறு ஒருடஜன் கம்பெனிகள் சேர்ந்தால் சர்க்கரைக் கொள்முதலின் 50 சதவிகிதக் கொக்ககோலா, பெப்சிகோலா கம்பனிகளின் டைரக்டர்ஸ் போர்டுகள் சர்க்கரைக்கு மாறாக சோள இனிப்புகளைப் பயன்படுத்த கொள்கையளவில் முடிவெடுத்தன. அமெரிக்க அதிகாரிகள் அஸ்பார்டைமுக்கு அனுமதி அளித்தவுடன் ஜாம், ஐஸ்கிரீம், பேக்கரித் தயாரிப்புகள், சுயிங்கம் போன்றவற்றுக்கு மிகவேகமாக இந்த இனிப்பு பயன்படுத்தப்பட்டது. விளைவு? அமெரிக்காவில், சராசரி மனிதனின் தனிநபர் சர்க்கரைத் தேவை 1979இல் 89 ராத்தலாக இருந்தது 1984 ஆவதற்குள் 68 ராத்தலாகக் குறைந்து விட்டது.

விலையும் அதேபோல் ஒரேயடியாக இறங்கி விட்டது. சர்க்கரையின் இன்றைய உண்மை விலை 1960ஐ விடக் கீழுக்கு வந்து விட்டது. 1960இல் ஒரு டன் சர்க்கரைக்கு 6.3 டன் எண்ணை கிடைத்திருந்தது. 1982இல் 0.7 டன்

www.tamilarangam.net



எண்ணைதான் கிடைத்தது. 1960இல் 24 டன் சர்க்கரைக்கு ஒரு 60 H.P. டிராக்டர் வாங்க முடிந்தது. 1982இல் அதே டிராக்டரை வாங்க 115 டன் சர்க்கரை கொடுக்க நேரிட்டது. இவ்வாறு ஒவ்வொரு பொருளுக்கும் சர்க்கரை ஏற்றுமதி நாடுகள் மிக் கடுமையான நெருக்கடியைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றன.

இந்த நெருக்கடி மேலும் கடுமையாகும் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கின்றனர். சர்க்கரை ஏற்றுமதியின் சாவுமணி ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. டொபாகோ பிரதமர் விடுத்த அறிக்கை சர்க்கரையுற்பத்திச் சிதைக்கு தீ மூட்டப்பட்டு நிகழ்த்திய இரங்கல் உரையாகிவிட்டது. “இருபதாம் நூற்றாண்டில் இறுதிப் பத்தாண்டில் ஒரு முக்கியமான ஏற்றுமதித் தொழில் என்ற நிலையில் நமக்கெல்லாம் நன்கு அறிமுகமான சர்க்கரைத் தொழில் உயிரிழந்து விடும். . . இது கசக்கும் சர்க்கரையின் கால கட்டம்,”

சாவுமணி முழங்குவது சர்க்கரைத் தொழிலுக்கு மட்டுமில்லை. இந்த நூற்றாண்டு முடிவதற்குள்ளேயே பயோ டெக்னாலஜி, தேயிலை, காபி, கொக்கோ போன்றவற்றிற்கு மாற்றாக செயற்கைப் பொருட்களைத் தயாரித்து விடும்! இயற்கை எதிர்கொள்ளும் நிலைமையும் மாறுபட்டதல்ல! இது விஞ்ஞானிகள் விடுக்கும் முன்னெச்சரிக்கை! இந்தப் பின்னணி, விவசாய, வளர்ச்சிக்கான ஒரே மூலிகையாக ஏற்றுமதி பொருள் வேளாண்மைக்குள் நம்மை தள்ளிவிடும். உலக வங்கியின் அறிவுரை அபாயத்தை பன்மடங்கு அதிகரிக்கச் செய்கிறது. வளர்ச்சிக்கு மாறாக தளர்ச்சிக்குத்தான் உலக வங்கியின் கொள்கைகள் நாட்டை இழுத்துச் செல்கின்றன. . .

www.tamilarangam.net

# 6

# காட் - அபினிப்போரிலிருந்து உருகுவே சுற்றுவரை

எங்களுக்கு அபினி வேண்டாம் என்று சீனர்கள் கூற, இல்லை நீங்கள் அபினியைத் தின்றே ஆகவேண்டும் என்றனர் பிரிட்டிஷ்காரர்கள். இறுதியில் பிடிவாதமாகச் சீனர்களை அபினியுண்ணச் செய்ய ஒரு போரல்ல, பல போர்ளை மேற்கொண்டது பிரிட்டன்! மேற்கத்திய உற்பத்திப் பொருட்கள் மற்றும் வர்த்தகத்தின் மீது பாராமுகமாக இருந்த ஆட்சியாளர்களையும் மக்களையும் வழிக்குக் கொண்டுவர பலாத்காரத்தையும் போரையும் அவித்துவிடும் காலம் மலையேறி விட்டது. ஆயினும் மறுத்தவனுடைய தொண்டைக்குள் அபினியையும் அதைவிட வீரியம் மிக்க போதைப் பொருட்களையும் திணிக்கும்பழையவாடிக்கை இன்னமும் தொடர்கிறது. அமெரிக்காவின் பேங்கிங்-இன்ஷ்யூரன்ஸ்-ஷிப்பிங்-டூரிசம் தொடர்பான கம்பெனிகளின் சேவை தங்களுக்குத் தேவையில்லையென்று இந்தியர்கள் மறுக்கிறார்கள். காலம் மாறிவிட்ட சூழ்நிலையிலும் தங்களுடைய சேவையை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டுமென்று வர்த்தகத்துறையின் அதே வாக்கியங்களை அமெரிக்கா திரும்பக் கூறுகிறது. ஆனால் பலாத்காரமும் போரும் இல்லாமலேயே தர்க்கங்களுக்கு எப்படித் தீர்வு காணப்படுகிறது? பதில் மிகவும் எளிமையானதுதான்! அறியப்பட்ட அனைத்துப் போர்க்கருவிகளையும் மிஞ்சக் கூடிய, தாக்குத் திறன்மிக்க கோட்பாடுகளும், அவற்றிற்குப் பக்கபலமாக பிரச்சார சாதனங்கள் மற்றும் அமைப்புகள் இருக்கும் போது பழமையான படைக்கலன்கள் எதற்காக? பதினெட்டாவது - பத்தொன்பதாவது நூற்றாண்டுகளில் அரங்கேறிய போர்களின் தலையாய லட்சியங்களுக்கும் 'காட்' உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளின் செயல்பாடுகளுக்கும் இடையே வியத்தகு ஒற்றுமையிருக்கிறது.

**கொள்கைப் பிரச்சாரத்திற்கு முதலிடம்**

ஜெனரல் எக்ரிமெண்ட் ஆன் டாரிஃப்ஸ் அண்டு டிரேட் (காட்-GATT) அமைப்பின் குறிக்கோள் நாடுகளுக்கிடையிலான வர்த்தகத்திற்கு தடையாக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருக்கும் கட்டுத் திட்டங்களை நீக்குவதுதான். வர்த்தகக் கட்டுப்பாடுகளுக்கெதிராக காட் பிரகடனம் செய்யும் சிலுவைப் போரில் நேரிடையான பலப்பிரயோகத்திற்கு இடமில்லை. வர்த்தகக் கட்டுப்பாடுகளுக்கு எதிராக இன்றைக்குப் பயன்படுத்தப்படும் ஆயுதங்களின் கொள்கைப் பிரச்சாரத்திற்குத்தான் முதலிடம். 'காட்'டின் சகோதர நிறுவனங்கள் மற்றும் ஏகபோக மீடியாக்களின் உதவியுடன் உலகின் அனைத்து மூலை முடுக்குகளையும் சென்றடையும் இந்த பொதுமக்கள் தகவல் தொடர்புத் திட்டத்தை விளக்க இந்த நூலில் இடமில்லை. 'காட்' பரப்பும் கொள்கை விளக்கம் என்ன வென்பதைஇங்கு சுருக்கமாக ஆராயலாம்.

பொருளாதார முன்னேற்றத்திற்கு ஒரே பாதை வர்த்தகச் சுதந்திரம்தான்! சந்தைச் சக்திகளை சுதந்திரமாகச் செயல்பட அனுமதித்தால், உற்பத்தியாளர் களுகிடையிலான வெளிப்படைப் போட்டியில் தலையிடாவிட்டால், மிக உயர்ந்த உற்பத்தித் திறன்மிக்க உற்பத்தியாளர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள். உயர்ந்த உற்பத்தியாற்றல் இல்லாதவர்கள் யாராயினும் வெளியேற்றப் படுவார்கள். ஒவ்வொரு தொழிலும் உற்பத்தித் திறனில் உயர்ந்தவர்கள் மட்டு:ம ஊக்குவிக்குவிக்கப் படும்போது, பொருளாதாரக் கட்டமைப்பின் ஒட்டுமொத்த உற்பத்தித் திறனும் உயர்ந்து விடும். பொருளாதாரக் கட்டுமானம் மிக வேகமாக வளர்ச்சியடையும். இதைப் போலவே நாடுகளுக்கிடையிலான சுதந்திர வர்த்தகத்தைச் செழுமைப்படுத்தினால் உலகளாவிய உற்பத்தியும் வருவாயும் வளர்ச்சியடையும். ஒவ்வொரு நாடும் அவற்றின் ஆற்றலுக்கேற்ற பொருட்களை மட்டும் உற்பத்தி செய்வது என்ற அடிப்படையில் செயலாற்றலையும், உற்பத்தையும் உயர்த்தும். 'காட்'அமைப்பு பரப்பும் கருத்தின் சுருக்கம் இதுதான்.

பிரச்சார அமளிகளுக்கிடையில் கவனிக்கப்டமலிருக்கும் கேள்விகள் பல இருக்கின்றன உலகளாவிய உயர்ந்த உற்பத்தி மற்றும் வருவாய் எப்படி வினியோகிக்கப்படும்? இதற்குள் தங்களுடைய ஆற்றலை வெளிப்படுத்தியுள்ள மேற்கத்திய நாடுகள் தொழில்துறை உற்பத்திப் பொருட்களின் தயாரிப்பாளர் களாகவும், நம்மைப் போன்ற நாடுகள் வேளாண் விளைபொருட்களை மட்டும் உற்பத்தி செய்பவர்களாகவும் காலா காலத்திற்கும் தொடர நேரிடுமல்லவா? போட்டியில் விதிமுறைகள் சமனற்றதாக இருந்து, போட்டியாளர்களுக்கு சமபலம் படைத்தவர்களாக இல்லாவிடில் என்ன நேரும்? யானைக்கும் எறும்புக்கும் இடையே கயிறிழுக்கும் போட்டி ஏற்பாடு செய்வதில் என்ன புத்திசாலித்தனம் இருக்கிறது? சர்வதேச வர்த்தக உறவுகளைக் குறிப்பிட மேற்கொண்ட உதாரணம் விந்தையாகப் படுவது நியாயமே! உலக நாடுகளின் வேளாண் விளைபொருள் ஏற்றுமதியை, 80லிருந்து 90 சதவிகிதம் தன்னுடய கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் பன்னாட்டு ஏகபோகங்களுக்கும், உதிரிகளாக இருக்கும் விவசாயிகளுக்கும் இடையேதான் உலகச் சந்தையில் போட்டி என்பதைக் கவனிக்க வேண்டும். ஏகபோகங்களும் போட்டியும் எப்போதுமே ஒத்துப்போகாது; போட்டியின் நேர் எதிரிடையல்லவா ஏகபோகம்! உலகளாவிய உற்பத்தி மற்றும் வர்த்தகத்தின் மீது ஏகபோகக் கட்டுப்பாடு செலுத்தும் கம்பெனிகளுடன்தான் ஏழை நாடுகளின் ஒருங்கிணையத உற்பத்தியாளர்கள் போட்டியிட நேரிடுகிறது என்ற உண்மை மறைக்கப்படுகிறது.

www.tamilarangam.net



வர்த்தகக் கட்டுப்பாடுகளைப் பயன்படுத்தும் விஷயத்தில் பன்னாட்டு ஏகபோகங்கள் சற்றும் சளைத்தவையல்லலவென்பதை 'காட்' நன்கறியும். ஒரு பன்னாட்டுக் கம்பெனியின் உற்பத்திப் பொருளுக்கு பல்வேறு சந்தைகளில் பல்வேறு விலைகளைப் பெறுவது. சில சந்தைகளில் விலை போகாதவற்றை சில சந்தைகளில் மட்டும் விற்பனை செய்வது; பல்வேறு நாடுகளில் மானியங்களால் நடைபெறும் உற்பத்தி; உள்நாட்டு வர்த்தகம், ஏற்றுமதி இறக்குமதி போன்றவற்றை ஒருங்கிணைப்புத் திட்டத்தின் மூலம் கட்டுப்படுத்துவது போன்று பன்னாட்டுக் கம்பெனிகள் மேற்கொள்ளும் வர்த்தகக் கட்டுத் திட்டங்கள் பலவற்றை வரிசைப்படுத்த முடியும். இந்தக் கட்டுத்திட்டங்களையும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும என்ற மூன்றாவது உலக நாடுகளின் கோரிக்கையை ஏற்க 'காட்' தயாராயில்லை. காட் போட்டியடிப்படையிலான சுதந்திர வர்த்தக முறைக்கு ஆதரவாக இருக்க வில்லை. மாறாக ஏகபோகங்களின் வர்த்தகச் சுதந்திரத்திற்காகத் தான் செயல்படுகிறது என்றால் அது மிகையாகாது!

கட்டுத்திட்டங்களற்ற சுதந்திரமான வர்த்தகம் என்றால் அ எண்ணற்ற குறைபாடுகளைக் கொண்டது. சுதந்திர வர்த்தகத்தின் வரையறையை ஒவ்வொன்றாக ஆராயாமல் சுதந்திரப்போட்டியுடன் எப்போதுமே ஒத்துப்போகாத, ஏகபோகங்களின் கேடு பயக்கும் செல்வாக்கு வளர்ச்சியை மட்டும் இங்கு குறிப்பிட்டது தெரிந்தே செய்தது தான். 'காட்' என்பது சர்வதேச சரக்கு வர்த்தகம் தொடர்பான ஒரு ஒப்பந்தம். பொருட்களின் வர்த்தகத்துடன் நேரிடையாகத் தொடர்பில்லாத வெளிநாட்டு மூலதனம் சேவை வணிகம், அறிவுச் சொத்துரிமைகள், போன்ற விஷயங்கள் 'காட்'டின் ஒப்பந்த வரையறைக்குள் வரவில்லை. ஆயினும் மேற்குறிப்பிட்ட விஷயங்களை ஒப்பந்த வரையறைக்குள் திருகித் திணிக்கும் முயற்சி நடைபெறுகிறது. அமெரிக்காவின் தலைமையில் நடைபெறும் இந்த முயற்சி வெற்றிபெற்றால், வெளிநாட்டுத் தயாரிப்புப் பொருட்களைப் போன்று, சேவைகளையும் அன்னிய ஏகபோகங்களையும் வரவேற்ற 'காட்' ஒப்பந்தப்படியே மூன்றாம் உலக நாடுகள் நிர்ப்பந்தத்திற்குள்ளாக நேரிடும். தேசிய நலன்களை முன்னிட்டு, அன்னிய மூலதனத்திற்கும் ஏகபோகங்களுக்கும் எதிராகக் கட்டுதிட்டங்களை ஏற்படுத்தும், வரையறைக்குள்ளான எஞ்சியுள்ள உரிமைகள்கூட, சுயாதிகார நாடுகளிடமிருந்து களவாடப்பட்டு விடும் என்பது ஏறத்தாழ உறுதியாகி விட்டது. எனவே சுதந்திர வர்த்தகக் கொள்கைகளின் நடுநிலைமற்றும் போலி த்தனங்களைத் தோலுரித்துக் காட்டப் பன்னாட்டு ஏகபோகங்களைப் பற்றிய விமர்சனம் மிகவும் பயனுடையதாக இருக்கும்.

**சித்தாந்தங்களிலிருந்து செயல்பாட்டிற்கு**

கொள்கை விளக்கப் பிரச்சாரத்தில் மட்டும் 'காட்' தன்னுடைய ஆற்றலை வெளிப்படுத்தவில்லை. பெரிதாகப் பேசப்படும் சுதந்திர வர்த்தகக் கோட்பாடுகளை நடைமுறைக்குள்ளாகும் குறைகூற முடியாத ஒரு செயல்முறையை 'காட்' உருவாக்கியிருக்கிறது. வர்த்தகத் தடைகளை அகற்றுவதற்கு காலாகாலத்தில் சர்வதேச வர்த்தகக் கலந்துரையாடல்களை (காட் சுற்றுப் பேச்சு) ஏற்பாடு செய்வதுதான் 'காட்'டின் செயல் திட்டங்களில் தலையாய செயல்களில் ஒன்று!

www.tamilarangam.net



ஒவ்வொரு 'காட் சுற்றுப் பேச்சும்' முடிவடைய மூன்று, நான்கு ஆண்டுகளாகும். 1986இல் தொடங்கிய எட்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் (உருகுவே சுற்று) இன்றும் முடிவடையவில்லை என்பதையும் கவனிக்க வேண்டும். அதிகாரிகள் மட்டத்திலும் அமைச்சர்கள் மட்டத்திலும் வெவ்வேறு பொருள்-குழுக்களின் தலைமையில் நடைபெறும் விவாதங்களில், சர்வதேச வர்த்தகத்தின் மீதான கட்டுப்பாடுகள்தான் முக்கியப் பொருளாக இருக்கின்றன. வர்த்தகத்தின் மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்தும் பொது ஒப்பந்தத்தில் உறுப்பு நாடுகள் கையெழுத்திடு வதோடுதான் 'காட்' சுற்றுகள் முடிவடையும்.

இந்த சுற்றுப்பேச்சில், வெளிநாட்டு வர்த்தகக் கட்டுப்பாடுகளை தளர்த்த மேற்கொள்ளப்படும் முடிவுகளைப் போலவே, 'காட்'டின் செயல்முறைகளுக்கு வழி காட்டும் சில அடிப்படைக் கோட்பாடுகளையும் உறுப்புநாடுகள் அனைத்தும் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. சுதந்திர வர்த்தக விதிகளில் மிகவும் முக்கியமானது வர்த்தகப் பாகுபாட்டிற்கு எதிரான விதிதான். வர்த்தகப் பாகுபாடு சுதந்திர வர்த்தகத்திற்கு எதிரானது. அது பொருளாதாரத் துறையில் கெடுதியை வளர்க்கும்; பொருளாதார முன்னேற்றத்தை மெதுவாக்கி விடும் என்றுதான் சொல்லப்படுகிறது. எனவே 'காட்'டில் உறுப்பினர்களான நாடுகள் பிற 'காட்' உறுப்பு நாடுகளுக்கும் வர்த்தகத்தில் சம வாய்ப்பளிக்கப் பொறுப்புடையவைகளே.... கட்டுப்பாடுகள் கட்டாயமாக இருக்க வேண்டியதுதான் என்றால் அது 'காட்' உறுப்பு நாடுகள் அனைத்திற்கும் பொதுவாக இருக்க வேண்டும். இறக்குமதி செய்யும்போது எந்த நாட்டுக்கும் தனிச் சலுகை காட்டக் கூடாது என்று பொருள். 'காட்'டின் சங்கேத மொழிப்படி கூறுவதாக இருந்தால் உறுப்பு நாடுகள் அனைத்தையும் தங்களுக்கு மிகவும் வேண்டிய நாடாக (Most Favoured Nation) கருத வேண்டும்.

அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்குமிடையே பிரிட்டிஷ் உற்பத்திப் பொருட்களுக்கு சுங்கத்தீர்வையைக் குறைக்க பேச்சுவார்த்தைக்குப் பிறகு முடிவாயிற்று என்று வைத்துக் கொள்வோம்; அமெரிக்கா பிரிட்டனுக்கு அளிக்க முன் வந்த இந்தச் சலுகை, வர்த்தகப் பாகுபாட்டிற்கெதிரான 'காட்' விதிகளின்படி, அமெரிக்காவுடன் தொடர்புள்ள ஏனைய 'காட்' உறுப்பு நாடுகளனைத்திற்கும் கொடுத்தே ஆகவேண்டும். பன்னாட்டுப் பேச்சுவார்த்தை மற்றும் நாடுகளுக்கிடையிலான தனித்த பேச்சுவார்த்தைகளின் பலன்களைப் பொதுவாக்கும் 'காட்' விதிமுறைகளின் மந்திர சக்தி பரவலான பாராட்டுக்களைப் பெற்றது.

'காட்' ஒப்பந்தத்தில் இன்னொரு முக்கியமான விதி 'தேசிய பரிசீலனை' (National Treatment) தொடர்பானது. இந்த விதிப்படி சுங்கத் தீர்வைகள் முடிக்கப்பட்ட பிறகு உள்நாட்டுச் சந்தைக்கு வரும் வெளிநாட்டுப் பொருள்களையும், தேசியப் பொருட்களையும் சமமாகப் பாவிக்க 'காட்' உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றுக்கும் பொறுப்பிருக்கிறது. பன்னாட்டுப் பேச்சுவார்த்தைகளின்போது சுங்கத்தீர்வை போன்ற இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தவிர்க்க ஒப்புக் கொண்ட பிறகு, வெளிநாட்டு உற்பத்திப் பொருட்களுக்கெதிராக எக்சைஸ் வரி, விற்பனை வரி போன்ற உள்நாட்டுக் கட்டுத்திட்டங்களைப் பாகுபாடாகப் பயன்படுத்தக் கூடாது என்பதே இதன் சாரம்.

www.tamilarangam.net



'காட்' சுற்றுக்களின் முடிவுக்கும் சுதந்திர வர்த்தக விதிகளுக்கும் எதிராகச் செயல்படும் உறுப்பு நாடுகளுக்கெதிராக தண்டனை மேற்கொள்ளவும் 'காட்' ஒப்பந்தம் வகை செய்கிறது. விதிமுறைகளை மீறும் நாடுகளை 'காட்' நேரடியாகத் தண்டிக்காது; அவ்வளவுதான்! அத்தகைய நாடுகளின்மீது புகார் செய்யும் நாடுகளுக்கு சில நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதியளிக்கப்படும். குற்றமிழைத்த நாட்டுக்கெதிராக தடுப்பு நடவடிக்கை' மேற்கொள்ளும் உரிமை இவ்வாறு அளிக்கப்படுவதுண்டு.

**மிகவும் வேண்டியவர்களும், வேண்டாதவர்களும்**

1986இல் துவங்கி இன்னும் முடிவுறாமலிருக்கும் 'உருகுவே சுற்றுப் பேச்சு' தான் 'காட்' ஒருங்கிணைத்த எட்டாவது சர்வதேச வர்த்தக கலந்துரையாடல்களாகும். ஜெனிவா சுற்று (1947) ஆனெசி சுற்று (1949) டோர்குவே சுற்று (1951) ஜெனிவா சுற்று (1956) டில்லன் சுற்று (1960-61) கென்னடி சுற்று (1964-67) டோக்கியோ சுற்று (1973-79) போன்றவைதான் இதற்கு முந்தைய 'காட்' சுற்றுப்பேச்சுகளாகும்.

முன்னைய சுற்றுப்பேச்சுகளின் விளைவாக சர்வதேச சரக்குச் சந்தையில் சுதந்திர வர்த்தகத்தின் மீதான முட்டுக் கட்டைகள் அகற்ற குறிப்பாக டாரிஃப் கட்டணங்களைக் குறைக்க 'காட்'டுக்கு முடிந்திருக்கிறது. உதாரணத்திற்கு தொழில் உற்பத்திப் பொருட்களுக்கு வளர்ந்த நாடுகளில் நடைமுறையிலிருந்த சுங்கவரி 1947இல் 47 சதிவிகிதமாக இருந்தது. 1986இல் உருகுவே சுற்று தொடங்குவதற்கு முன் அது 5 சதவிகிதமாகக் குறைந்து விட்டது. ஐம்பதுகளிலும் அறுபதுகளிலும் உலகளாவிய வர்த்தகம் மற்றும் உற்பத்தியின் அபரிமிதனான வளர்ச்சிக்கு 'காட்' சுற்றுகளின் வெற்றிதான் முக்கியக் காரணம் என்று சாதிப்பவர்களும் இருக்கிறார்கள்.

வர்த்தகப் பாகுபாட்டுக்கெதிரான பிடிவாதத்தை முக்கிய கோஷமாக ஏற்றுக் கொண்டிருக்கும் 'காட்' எதிர் கொள்ள நேரிட்ட முதல் எதிர்த்தாக்குதல்தான் கஸ்டம்ஸ் யூனியன், மற்றும் காமன் மார்க்கெட்டின் வருவாக்கம். 'காட்'டை உருவாக்கிய ஏகாதிபத்திய சக்திகள்தான் 1952இல் முதலாவது கஸ்டம்ஸ் யூனியனான ஐரோப்பிய பொருளாதாரக் குழுவை உருவாக்க முன்னின்றன. உறுப்பு நாடுகளுக்கிடையே சர்வ சுதந்திர வர்த்தகம், வெளி உலகுடனான வர்த்தகத்தில் கடுமையான கட்டுப்பாடு என்பதுதானே கஸ்டம்ஸ் யூனியன், காமன் மார்க்கெட் மற்றும் சுதந்திர வர்த்தக மண்டலங்களின் (Free Trade Areas) பொதுக் கொள்கை இத்தகைய பிராந்தியப் பொருளாதாரக் கூட்டுகளின் உருவாக்கம், 'காட்' தம்மட்டமடிக்கும் வர்த்தகப் பாகுபாடுக்கெதிரான (Most Favoured Nation Treatment) கோட்டிபாட்டின் அத்துமீறல் என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஆனால் விதியை மீறியதே 'காட்'டின் விதிகளை உருவாக்கியவர்கள்தான் என்பதால் அவர்களைத் தண்டிக்க முடியவில்லை. எனவே சொந்த விதிகளையே திருத்தியெழுதி கஸ்டம்ஸ் யூனியன்களை 'காட்' அங்கீகரிக்க நேர்ந்தது. சொந்த வியாபாரத்தை வளர்த்தெடுக்க தன்னுடைய ஒப்பந்தத்தில் திருத்தம் செய்த 'காட்' ஆரோக்கியமற்ற ஒரு சம்பிரதாயத்தை உருவாக்கி விட்டது. தொடர்ந்து திருத்தங்களின் ஒரு ஊர்வலமே நடைபெற்றது. பிராந்திய வியாபார யூனியன்கள் பல பகுதிகளிலும் உருவாயின.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிராந்திய வரையறைகளை மீறி உலகளாவிய முறையில் பாகுபாடற்ற சுதந்திர வர்த்தகத்தை வளர்ப்பதுதானே 'காட்'டின் பிரகடனம் செய்யப்பட்ட குறிக்கோள்; ஆனால் காட் தலைமை ஏற்கும் இன்றைய வியாபார உலகில் ஒன்றல்ல பல உலகங்கள் இருக்கின்றன. அமெரிக்காவும் கனடாவும் சேர்ந்த ஒரு சுதந்திர வர்த்தக மண்டலம், ஐரோப்பிய பொருளாதார மண்டலம்; ஜப்பான் தலைமையில் உருவாகிக் கொண்டிருக்கும் கீழக்காசிய உலகம் போன்றவை! உறுப்பு நாடுகளையும் வெளியுலகையும் இரண்டு தட்டுகளில் நிறுத்தி பச்சையான வர்த்தக பாகுபாடை நடைமுறைப்படுத்தும் இந்தக் குறுகிய உலகங்களுக்கிடையில் மூன்றாம் உலகநாடுகள் தனிமைப்பட்டு நிற்கின்றன! ஏழை நாடுகளின் உற்பத்திப் பொருட்கள் ஐரோப்பியக் குழு போன்ற பணக்காரர்களின் 'கிளப்'பைச் சென்றடைய வேண்டுமென்றால் வரி-வரி தவிர்த்த முட்டுக் கட்டைகளைத் தாண்டியாக வேண்டும். கிளப் உறுப்பினர்களுக்கிடையிலான வியாபாரத்திற்கு எந்தத் தடங்கலுமில்லை. 'காட்' கருத்துப்படி வியாபார விஷயங்களில் உலக நாடுகளனைத்தும் சமமானவையே! ஆனால், சிலர் மேலும் சமமாக இருக்கிறார்கள் என்பதுதான் கொடிய உண்மை!

'காட்'டின் நல்ல நாட்கள் எழுபதுகளின் துவக்கத்திலேயே முடிந்துவிட்டது என்பதுதான் உண்மை. டாரிஃப் அல்லது தடுப்புகள் (Non-Tarif/Barriers) என்று பொதுவாக அறியப்படும் 'காட்' ஒப்பந்தத்திற்குப் பொருந்தாத வியாபார முறைப்படுத்தல் நடவடிக்கைகள் 1970-க்குப் பிறகு பரவலாகத் துவங்கின. ஐரோப்பிய 'காமன் மார்க்கெட்' போன்ற பிராந்தியப் பொருளாதாரக் கூட்டணிகளின் வளர்ச்சியும் 'காட்'டுக்கும் பெரும் சவாலாக எழுந்தது. ஏழுபதுகளில் எண்ணை விலை வேகமாக உயர்ந்ததும் உலகெங்கும் வர்த்தகத் தற்காப்புகள் மற்றும் எதிர்ப்புகளை முறைப்படுத்தும் நடவடிக்கைகள் அலையலையாக மேற்கொள்ளப்பட்டன. எண்பதுகள் ஆனதும் உலகளாவிய வர்த்தக முறை, போருக்கு முன் இருந்த நிலை திரும்பி விட்டது எனக் கூறலாம். ஐம்பதுகளிலும் அறுபதுகளிலும் நிலவிய சுதந்திர வணிகம் மற்றும் வளர்ச்சியின் காலம் பின்னிட்ட உலகளாவிய வர்த்தக முறை இன்றைக்கு மீண்டும் பாதுகாப்பு வாதத்தின் நிச்சயமற்ற தன்மையை நோக்கித் தலைகீழாகத் தாவ ஆரம்பித்து விட்டது.

பாதுபாப்புவாதம் தலையெடுக்க ஆரம்பித்த போதெல்லாம் முதலாளித்துவ உலகம் கடுமையான நெருக்கடியை எதிர்நோக்கியிருக்கிறது. வர்த்தக துறையில் நிச்சயமற்ற தன்மையும் முதலாளித்துவக் குழப்பமும், எது எதற்குக் காரணமாகிறது என்று பிரித்துப் பார்க்க இயலாதவாறு தொடர்பு கொண்டிருக்கிறது. ஆனால் பொருளாதார மந்தநிலைவியாபாரத் தடைகளின் வளர்ச்சிக்கும், வர்த்தகத் தடைகளின் வரம்பு மீறிய பயன், பொருளாதார மந்த நிலைக்கும் காரணமாகிறது என்று நிச்சயமாக கூறலாம்.

### மூன்றாவது உலக நாடுகள்-காட் சுற்றுப் பேச்சு

சமகால மெர்க்கண்டலிசம் (Neo-Mercantalism) புதிய பாதுகாப்புவாதம் (New protectionism) போன்ற பெயர்களில்தான் எழுபதுகளின் தொடக்கத்தில் தளிர்விடத் தொடங்கிய பாதுகாப்பு வாதத்தின் 'புதுப்பிறவி' அறியப்படுகிறது. முதலாளித்துவ

www.tamilarangam.net



உலகத்தை ஒரு நெருக்கடியின் விளிம்புக்கு கொண்டு வந்திருக்கும் சமகாலப் பாதுகாப்பு வாதத்தின் வளர்ச்சிக்குக் காரணமானானவர்கள், சுதந்திர வர்த்தகத்தின் பேரில் ஆணையிடும் வளர்ந்த முதலாளித்துவ நாடுகள் என்பதுதான் ஆச்சரியம்! சமகாலப் பாதுகாப்பு வாதத்தின் குறிக்கோள் பெரும்பாலும் மூன்றாவது உலக நாடுகளின் புதிய ஏற்றுமதி ரகங்கள்தான்!

தொடக்கக் கால காட் சுற்றுப் பேச்சுக்களிலேயே மூன்றாம் உலக நாடுகள் புறக்கணிக்கப்பட்டு வந்தன. தொழில் உற்பத்திப் பொருட்களுக்கெதிரான கட்டுப்பாடுகள் பெருமளவு நீக்கப்படினும், மூன்றாம்உலக நாடுகள் பெரிதும் விரும்பும் விவசாயப் பொருட்களுக்கு எதிரான கட்டுப்பாடுகளை காட் பேச்சுவார்த்தை மதிக்கவேயில்லை என்று கூறலாம். அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் ஐரோப்பியப் பொருளாதாரக் குழுவுக்கும் , வேளாண் பொருள் இறக்குமதிக்கெதிராகக் கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்கும் சிறிதும் ரகசியமற்ற ஒரு பாரம்பரியம் இருக்கிறது. ஐரோப்பியப் பொருளாதாரக் குழு கடைபிடிக்கும் பொது விவசாயக் கொள்கைதான் இவற்றில் மிகவும் பிரசித்தமானது விவசாயிகளை வெளி உலகத்திலிருந்தான போட்டியிலிருந்து பாதுகாப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட மிகவும் பொறுப்புணர்வு மிக்க ஒரு உத்திதான் ஐரோப்பாவின் பொது விவசாயக் கொள்கை. இறக்குமதித் தீர்வைகள். இறக்குமதிக் கோட்டாக்கள், வெவ்வேறு வகையான விவசாய மானியங்கள் போன்றவற்றின் ஒரு கலவையான ஐரோப்பியப் பொது விவசாயக் கொள்கையைத் தீண்டி நோகச் செய்யும் துணிவு 'காட்'டுக்கு இன்னும் வரவில்லை. விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு அளிக்கப்படும் பாதுகாப்பை கணிசமாகக் குறைக்க வேண்டும் என்ற அமெரிக்காவின் வேண்டுகோளை ஐரோப்பிய நாடுகள் புறக்கணித்து விட்டன. சர்ச்சை முற்றி உருகுவே சுற்றில் கூட நிறுத்த நேர்ந்தது. ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையிலான வியாபாரச் சர்ச்சை 'கட்'டின் நிலைத்திருப்புக்கே அச்சுறுத்தலாகி விட்டது என்றுதான் கூறவேண்டும்.

அடுத்து, தொழில் உற்பத்திப் பொருட்களின் விஷயத்தை எடுத்துக் கொண்டாலும் மூன்றாவது உலக நாடுகளின்பால் 'காட்'டின் அணுகுமுறையில் உள்ள சீர்கேடுகள் தெளிவாகத் தெரியும். விவசாய உற்பத்திப் பொருட்கள் இறக்குமதியில் சுங்கத் தீர்வை குறைக்கப்பட்டே வந்திருப்பினும் மூன்றாம் உலக நாடுகளின் முக்கிய ஏற்றுமதிப் பொருட்களுக்கு தீர்வையைக் குறைக்க வளர்ந்த நாடுகள் தயாராயில்லை. ஏழாவது சுற்றான டோக்கியோ சுற்றுப் பேச்சுக்குப் பிறகு வளர்ந்த நாடுகளில்இருந்து வரும் டாரிஃப் ரேட்டுகளைப் பரிசீலித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் அனைத்தும் வளரும் நாடுகளுக்கெதிரான இந்தப் பாகுபாட்டை வெட்ட வெளிச்சமாக்குகிறது. சராசரிக்கும் மேற்பட்ட டாரிஃப் ரேட்டுகள் குறிப்பாக வளரும் நாடுகளின் ஏற்றுமதிப் பொருட்களின் மீதுதான் நிலைக் கொண்டன. பதப்படுத்தப்பட்ட தோல், தோல் பொருட்கள், துணி, ரெடிமேட் ஆடைகள் போன்றவை குறிப்பிடத்தக்கவை. கச்சாத்தோல், பதப்படுத்தப்பட்ட தோல், மட்டமான தோல் பொருட்கள், உயர்ரக தோல்பொருட்கள் என சங்கிலித் தொடர் பதப்படுத்தல் கட்டங்களை எடுத்துக் கொண்டால், மேல் நோக்கிய ஒவ்வொரு கட்டத்திலும்

www.tamilarangam.net



வளர்ந்த முதலாளித்துவ நாடுகள் ஏற்படுத்திய இறக்குமதித் தீர்வைகள் படிப்படியாக உயர்ந்திருப்பதைக் காணலாம். கச்சாத் தோலுக்கு சுங்கத்தீர்வை கிடையாது; ஆனால் தோல் பொருட்களின் மீது உயர்ந்த சுங்கவரி, டாரிஃப் உயர்வு போன்றவைதான் வளரும் நாடுகளை அலட்டும் இன்னொரு பிரச்சினை! இந்த 'உத்தி'க்கு எதிராக 'காட்'டால் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள இயலவில்லை.

## வியாபாரப் போருக்கு சமகால ஆயுதங்கள்

சமகாலப் பாதுகாப்பு வாதத்தின் ஆயுதம் டாரிஃப் ரேட்டுகள் இல்லை; டாரிஃப் அல்லாத முட்டுக்கட்டைகள் தான். இரண்டாவது உலகப் போருக்கு முன்னரும் இறக்குமதிக் கோட்டாக்கள் போன்ற டாரிஃப் இல்லாத தடங்கல்கள் இருந்தன, ஆனால் இந்தஇரண்டு பத்தாண்டுகளுக்குப் பிறகு முற்றிலும் நவநாகரீகமான டாரிஃப் அல்லாத தடங்கல்கள் பலவற்றை வளர்த்தெடுக்க வளர்ந்த நாடுகளால் முடிந்திருக்கின்றன. அடிப்படையான இத்தகைய சிருஷ்டிகளின் முன்னேற்றம்தான் 'புதிய பாதுகாப்பு வாரம்' என்ற சொற்றொடர் நிலைக்கக் காரணமாகி விட்டது "ஏற்றுமதியின் சுய கட்டுப்பாடு" (Voluntary Export Restraint) என்றறியப்படும் டாரிஃப் அல்லாத வியாபாரத் தடங்கல், சமகால வியாபாரக் கட்டுப்பாடு நடவடிக்கைகளுக்கு ஒரு சிறந்த உதாரணமாகும். 1956இல் ஜப்பானிலிருந்து பருத்தித் துணி ரகங்களின் இறக்குமதிக்கு எதிராக அமெரிக்காதான் இத்தகைய ஒரு நடவடிக்கையை முதன் முதலாக மேற்கொண்டது. 1956இல் ஜப்பானிலிருந்து பருத்தித் துணி ரகங்களின் இறக்குமதிக்கு எதிராக அமெரிக்காதான் இத்தகைய ஒரு நடவடிக்கையை முதன் முதலாக மேற்கொண்டது. ஆனால் ஜப்பானிலிருந்து மேற்கொள்ளும் இறக்குமதிக்கு தீர்வையை உயர்த்தவோ, இறக்குமதிக்கு கோட்டாக்களை ஏற்படுத்தவோ செய்யவில்லை அமெரிக்கா. பிறகு என்னதான் செய்தது? அமெரிக்காவின் அரசியல் மற்றும் பொருளாதார வல்லமையைப் பயன்படுத்தி பருத்தித் துணி ரகங்களின் ஏற்றுமதியைச் சுயமாகக் கட்டுப்படுத்திக் கொள்வதாக ஜப்பானை ஒப்புக்கொள்ளச் செய்தது. சுதந்திர வர்த்தகத்தின் மீது கட்டுப்பாடு ஏற்படுத்தியது யார்? ஜப்பான்தான், அமெரிக்கா அல்ல! 'காட்' மட்டுமின்றி யாரும் அமெரிக்காவைக் குற்றம் சாட்டவோ, தண்டிக்கவோ முடியாது. 'கண்டுபிடிக்கவும், அளந்தெடுக்கவும்' இயலாத இந்தச் சிறப்பு குணாம்சம் தான் சமகாலப் பாதுகாப்புவாதம் பயன்படுத்தும் ஆயுதங்களின் தனித்தன்மை!

டாரிஃப் அல்லாத தடங்கல்களைக் குறித்த இந்த ஆய்வு அவ்வளவு சுலபமானதாக இல்லாவிட்டாலும், கிடைத்த ஆய்வுச் சான்றிலிருந்து, மிகவும் கூடுதலாக மூன்றாம் உலக நாடுகளுக்கு எதிராகத்தான் அவை பயன்படுத்தப் பட்டிருக்கிறது என்றுதான் தெரிகிறது. சமகால வியாபார நடவடிக்கைகளின் முக்கிய நோக்கமே மூன்றாம் உலக நாடுகளின் தொழில் முக்கியமததுவம் வாய்ந்த ஏற்றுமதிப் பொருட்கள்தான்! இன்றைக்கு சமகால டாரிஃப் அல்லாத தடங்கல்கள் மிக அதிகமாகப் பயன்படுத்தப்படுவது தோல்பொருட்கள், துணிரகங்கள், ரெடிமேட் ஆடைகள் போன்ற வர்த்தகத்தின் மீதுதான் என்பதை ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தோம். மூன்றாம் உலக நாடுகளுக்கு வர்த்தகத்துறையில் போட்டியிடும் பெரும்பலமே இந்த ரகங்கள்தான். இந்தியாவின் ஏற்றுமதி வருவாய் ஏறத்தாழ 25

www.tamilarangam.net



சதவிகிதம் துணி ஆடை போன்ற ஏற்றுமதியிலிருந்துதான் கிடைக்கிறது. கூலி விகிதம் மிகவும் குறைவாக இருப்பதோடு உற்பத்திப் பொருட்கள் தொழில் அடிப்படை முக்கியத்துவம் பெற்றது என்பதும்தான், வளரும் நாடுகள் இந்தத் துறையில் உயர்ந்த போட்டித் திறன் பெறக் காரணம்.

தொழில் முக்கியத்துவ உற்பத்திப் பொருட்களின் விஷயத்தில் மூன்றாவது உலக நாடுகளிலிருந்து போட்டி அச்சுறுத்தல் எழுந்தபோது கடுமையான இறக்குமதிக் கட்டுப்பாடுகளை ஏற்படுத்த வளர்ந்த முதலாளித்துவ நாடுகள் தயங்கவில்லை. தங்களுடைய உடம்பு நொந்தால்–தொழில் பாதிக்கப்பட்டால்–சுதந்திர வர்த்தகத்தைப் பற்றித் தாங்கள் பேசியதையே விழுங்கவும் தயார் என்பதை அவர்கள் காட்டி விட்டனர். துணி ஆடை வர்த்தகத்தை 'காட்'டின் சுதந்திர வர்த்தகக் கொள்கைகள் கட்டுப்படுத்தாது என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. துணி ஆடை வர்த்தகத்தை 'காட்' கொள்கைக்குப் பொருந்தாத 'மல்டி ஃபைபர் அக்ரிமெண்ட்' என்றழைக்கப்படும் சர்வதேச உடன்படிக்கைதான் கட்டுப்படுத்துகிறது. வெவ்வேறு வர்த்தகக் கட்டுப்பாடு நடவடிக்கைகளின் ஒருங்கிணைந்த உருவம்தான் இந்த உடன்படிக்கை. உடன்படிக்கைப்படி துணிகள்–ஆடைகளின் ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்கும் குறிப்பிட்ட கோட்டாக்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. சுயமாகவே தங்களுடைய ஏற்றுமதியைக் கட்டுப்படுத்த மூன்றாம் உலக நாடுகளைத் தூண்டுவதுதான் உடன்படிக்கையின் நோக்கம்.

தங்களுக்குப் பிடித்தமான மண்டலங்களில் சுதந்திர வர்த்தகம் இல்லாவிட்டால் அது 'தகிடுதத்த வர்த்தகம்' என்பது வளர்ந்த முதலாளித்துவ நாடுகளின் அறிவிக்கப்படாத கொள்கையாக இருக்கிறது. பேலன்ஸ் ஆப் பேமெண்ட் பிரச்சினை, மற்றும் வெளிநாட்டு கடன்பொறி போன்ற நிரந்தர சிரமங்களால் அவதிப்படும் ஏழை நாடுகளைப் பொறுத்தவரை, ஏற்றுமதி வருவாய்தான் முக்கியம் என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான். ஆனால் பணக்கார நாடுகள் சிறிதும் விட்டுக் கொடுக்கத் தயாராயில்லை. துணி–ஆடை வர்த்தகத் துறையில் பணியாற்றும் 'மல்டிஃபைபர் அக்ரிமெண்ட்' என்ற பாதுகாப்பு ஏற்பாட்டைத் தவிர்த்தாலே வளரும் நாடுகள் இன்றைக்கு எதிர்நோக்கும் கடன் பிரச்சினையை ஓரளவு சமாளிக்கலாம் என்று உலக வங்கியின் அறிக்கைகளே ஒப்புக் கொண்டிருக்கின்றன. 1990ஆம் ஆண்டு 'வேர்ல்டு டெவலப்மெண்ட் ரிப்போர்ட்'டில் வெளியாகியிருக்கும் கணக்குகளின்படியே மல்டிஃபைபர் அக்ரிமெண்டை எடுத்து விட்டால் வளரும் நாடுகளுக்கு 11.3 பில்லியன் டாலர் அதிக ஏற்றுமதி வருவாய் கிடைக்கும். ஆனால் கடனில் மூழ்கி மூச்சுத் திணறிக் கொண்டிருக்கும் மிகவும் வறுமையிலாழ்ந்த நாடுகளில் ஒன்றான பங்களாதேஷுக்குக்கூட நீதி மறுக்கப்படுகிறது. அமெரிக்காவின் மொத்த துணி–ஆடை இறக்குமதியில் பங்களாதேஷின் பங்கு 0.5 சதவிகிதத்திற்கும் கீழ்தான். ஆனால், பங்களாதேஷிலிருந்து இறக்குமதி செய்வது அமெரிக்காவில் துணித் தொழிலைக் கடுமையாகப் பாதிக்கும் என்ற நினைப்பில் பங்களாதேஷ் உற்பத்திப் பொருட்களுக்கெதிராக அமெரிக்கா கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்கிறது. அமெரிக்காவின் சுவட்டைப் பின்பற்றி ஜப்பானும் ஐரோப்பியக் குழுவும்

www.tamilarangam.net



பங்களாதேஷுக்கு எதிராக கடுமையான கட்டுப்பாடுகளை ஏற்படுத்தியிருக்கிறது. வெளிநாட்டுக் கடன்களுக்கான வட்டியைச் செலுத்தவே தத்தளிக்கும் பங்களாதேஷின் மிக முக்கியமான, வெளிநாட்டுச் செலாவணி வருவாய்த் துறையான துணியுற்பத்தித் தொழில் இன்றைக்கு கடும் நெருக்கடியிலிருக்கிறது.

வர்த்தகக் கட்டுப்பாடுகளும், சமமற்ற வர்த்தகக் கோட்பாடுகளும் மட்டும்தான். வளரும் நாடுகளை அலட்டுகிறது என்பதில்லை. வளரும் நாடுகளின் ஏற்றுமதி ரகங்களின் விலையும் கட்டுக்கடங்காமல்ஊசலாடுவதனால் ஏற்படும் பிரச்சினையும் கொஞ்ச நஞ்சமல்ல! விலைகள் மற்றும் ஏற்றுமதி வருவாயில் ஏற்படும் ஊசலாட்டங்கள் வளரும் நாடுகள் பலவற்றின் பொருளாதார நடவடிக்கைகளை எதிர்மறையாக பாதிக்கிறது. கொக்கக்கோலாவுக்கு உலகச் சந்தையில் விலை ஏறினால் தீபாவளிக் கொண்டாட்டம் தான். இல்லையென்றால் முழுப்பட்டினி....! இதுதான் கானா மக்களின் நிலைமை. ஒன்றிரண்டு ஏற்றுமதிப் பொருட்களை மட்டும் நம்பி வாழநேரிடும் 'கானா'வைப் போன்ற பொருளாதாரச் சார்பு நாடுகளைத்தான் இந்த நிலையற்ற சூழல் பெரிதும் பாதிக்கின்றது. உலகச் சந்தையைச் சார்ந்தும் அதற்கு இசைவாகவும் இருக்கும் நாடுகளுக்கு, விலைகளின் ஏற்ற இறக்கம் சகிக்க முடியாத ஒன்றாகி விடுகிறது.

வளரும் நாடுகளின் ஏற்றுமதி ரகங்கள் விற்பனை விலை நிரந்தரமாகக் குறைந்து கொண்டிருப்பதுமற்றொரு முக்கியப் பிரச்சினை. தேயிலை, காபி, சர்க்கரை போன்றவற்றிற்குக் கிடைக்கும் விற்பனை விலைகள் ஆண்டுதோறும் குறைகிறது. வளர்ந்த நாடுகளின் பொருட்களை பழைய அளவில் வாங்க வேண்டுமென்றால் மேலும் மேலும் தேயிலை, சர்க்கரை, காபி, கச்சா இரும்பு போன்றவற்றை ஏற்றுமதி செய்ய வேண்டும். வர்த்தகத்துறையில் வளரும் நாடுகள் சந்திக்கும் இத்தகைய பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டுமென்பது ஒருபுறம் இருக்க, அதற்கான எந்த முயற்சியிலும், பேச்சுவார்த்தையிலும் 'காட்' ஈடுபடவில்லை. யுனைடெட் நேஷன்ஸ் கான்ஃபரென்ஸ் ஆன் டிரேட் அண்டு டெவலப்மெண்ட்ஸ் (UNCTAD) இந்தத் துறையில் மேற்கொண்ட நடவடிக்கைகள் சர்வதேச வர்த்தக அமைப்பு என்ற நிலையில் 'காட்'டின் வரையறையைத்தான் குறிப்பிடுகிறது. மூன்றாவது உலக நாடுகள் வர்த்தகத் துறையில் சந்திக்கும் சாவா வாழ்வா பிரச்சினைகளைக் கிளப்பவும் விவாதிக்கவும் ஒரு அமைப்பு என்ற நிலையில் 'அன்க்டாட்' செய்ததைக் கூட 'காட்' செய்யவில்லை என்பதே உண்மை. எனவேதான் 'அன்க்டாடுக்குக் குழி தோண்ட அமெரிக்கா இன்றைக்கும் முயற்சித்துக் கொண்டிருக்கிறது.

**'காட்'டின் எதிர்காலம்;**
**உருகுவே சுற்றுப் பேச்சு அளிக்கும் சமிக்ஞை**

சர்வதேச வியாபாரத்தை பாதுபாப்புவாதப்பிடியிலிருந்து விடுவிக்கவும், அதன் வாயிலாக உலகம் முழுக்க பரவியிருக்கும் உற்பத்தி மந்த நிலைக்குத் தீர்வுகாணவும்தான், உருகுவே சுற்றுப் பேச்சு தொடங்கப்பட்டது. உலக நாடுகள் சந்திக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண இந்த சுற்றுப் பேச்சு உதவக் கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்தது. ஆனால் புதிய 'காட்' சுற்றுப் பேச்சைத் துவங்க

www.tamilarangam.net



முன்னின்ற அமெரிக்கத் தலைமையிலான ஏகாதிபத்திய சக்திகளின் நோக்கம் முற்றிலும் வேறாக இருந்தது.

புதிய சுற்றுப் பேச்சின் நிகழ்ச்சி நிரல் தொடர்பான ஆலோசனைகள் தொடங்கப்பட்டதும் அமெரிக்கா மற்றும் கூட்டணிக் கட்சிகளின் உள் விருப்பம் வெளிப்பட்டுவிட்டது. அவர்களுடைய நோக்கம் 'காட்', மற்றும் உலக வர்த்தக முறையை தங்களுடைய விருப்பம்போல் மாற்றி அமைப்பதுதான்!

'காட்' உலக நாடுகளுக்கிடையிலான சரக்கு வியாபாரத்தை மட்டும் கவனிக்கின்ற ஒரு அமைப்புதான் என்று முன்னர் குறிப்பிட்டிருந்தோமல்லவா? சரக்கு வர்த்தகத்திற்கு வெளியே சர்வதேச விஷயங்கள் தொடர்பான முடிவுகளை மேற்கொள்ள 'காட்' ஒப்பந்தத்தில் சரத்தில்லை. 'காட்' உடன்படிக்கையின் வரையறைக்குள் இருந்துகொண்டுதான் இதற்கு முந்தைய ஏழு சுற்றுப் பேச்சுவார்த்தைகளும் நடைபெற்றன. ஆனால் புதிய சுற்றின் நிகழ்ச்சி நிரலில் சரக்கு வர்த்தகத்தைத் தவிர வெளிநாட்டு மூலதன முதலீடு, நாடுகளுக்கிடையிலான சேவைகளின் பரிமாற்றம், பேட்டன்ட்காபிரைட், டிரேட்மார்க் போன்ற அறிவுச் சொத்துரிமைகளும் சேர்க்கப்பட வேண்டும் என்று அமெரிக்கத் தலைமையிலான வளர்ந்த முதலாளித்துவ நாடுகள் வேண்டுகோள் விடுத்தன. 'காட்'டின் ஒப்பந்தப்பட்டியலில் வராத புதிய விஷயங்களை நிகழ்ச்சி நிரலில் சேர்ப்பதை இந்தியா உள்ளிட்ட வளரும் நாடுகள் எதிர்த்தன. ஆனால் இந்த எதிர்ப்பும் நீண்ட காலம் தாக்குப்பிடிக்கவில்லை. மூன்றாம் உலக நாடுகளின் ஒற்றுமையின்மையைப் பயன்படுத்தி அமெரிக்காவின் முடிவை அந்நாடுகளின் மீது சுலபமாகத் திணித்துவிட்டார்கள். சரக்கு வர்த்தகத்துடன் சம்பந்தமில்லாத சில புதிய விஷயங்கள் கூட விவாதிக்கப்படுகிறது என்பதுதான் உருகுவே சுற்றின் தனித்தன்மை.

'காட்' அமைப்பில் புதிய விஷயங்கள் தொடர்பாக நடைபெறும் விவாதங்கள் உலகளாவிய பொருளாதார முறையில் இனி வரப்போகும் மாற்றங்களின் துவக்கமே! புதிய விஷயங்கள் தொடர்பான உருகுவே சுற்றுப்பேச்சு முடிவுகள் வெளியானதும் 'காட்'டும் அது தலைமையேற்கும் உலகளாவிய வர்த்தக முறையும் முழுமையான சீரமைப்புக்குட்பட்டு விடும். சர்வதேச வர்த்தக முறையில் வியத்தகு மாறுதல்கள், ஒரு புதிய உலகப் பொருளாதார முறையின் துவக்கத்தைக் குறிக்கும் என்று கூறினால் தவறில்லை.

உண்மையான புதிய பொருளாதார முறை தொடர்பான விவாரங்கள் துவங்க மூன்றாம் உலக நாடுகளே காரணம். 'பிரட்டன் வுட்ஸ்' அமைப்புக்களின் தலைமையில் உருவாகிய போருக்குக் பிந்திய பொருளாதார முறை பழைய காலனியாதிக்க உறவுகளின் தொடர் மட்டுமே. இதை அடையாளம் கண்டு கொண்டதுதான் ஒரு 'புதிய உலகப் பொருளாதார முறை'க்காக (New International Economic Order) குரல் எழுப்ப வளரும் நாடுகளைத் தூண்டியது. புதியஉலகப் பொருளாதார முறைக்கான விவாதங்களுக்கிடையில் வளரும் நாடுகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் பல சுட்டிக் காட்டப்பட்டன. காட்டின் தலைமையில் செயலாற்றும் சமனற்ற உலக வர்த்தக முறையை மாற்றியமைக்கும்

www.tamilarangam.net



குறிப்புகளும் இதில் உள்ளடங்கும். 'புதிய உலகப் பொருளாதார முறை' என்ற தத்துவம் அன்க்டாடிலும் (UNCTAD) ஏனைய சர்வதேச அரங்கிலும் விளக்கமாக விவாதிக்கப்படினும் உலகளாவிய ஏகாதிபத்தியக் கிடுக்கிப் பிடியில் இருந்து ஓரளவாவது மீட்பதற்கான மூன்றாம் உலக நாடுகளின் முயற்சி முழுக்கத் தோல்வியடைந்து விட்டது.

'உருகுவே சுற்றின்' வாயிலாக உருப்பெறும் புதிய பொருளாதார முறைக்கும், மூன்றாம் உலக நாடுகளின் 'புதிய உலகப் பொருளாதார முறை' தொடர்பான கனவுகளுக்கும் இடையே உண்மையில் எதிர்மாறான உறவுதான் இருக்கிறது. இன்றைய ஏகாதிபத்திய அமைப்பை மேலும் பலப்படுத்தி, சுரண்டலையும், ஏற்றத் தாழ்வையும் வளர்த்தெடுக்கும் ஒரு புதிய கட்டத்திற்கு கரங்கொடுத்து தூக்கி விடும் 'உருகுவே சுற்றில்' அரங்கேறிக் கொண்டிருக்கிறது.

**அமெரிக்கா குளிறவைக்கும் புதிய இலக்குகள்**

இன்றைய பொருளாதார முறை வளர்ந்த முதலாளித்துவ நாடுகளின் சிருஷ்டிதான் என்பதில் ஐயமில்லை. உலகளாவிய பொருளாதார முறையின் நெடும் தூண்களான சர்வதேச நிதி நிறுவனம், உலக வங்கி, சர்வதேச வர்த்தக உடன்படிக்கை போன்றவற்றின் உருவாக்கத்திற்கு முந்தைய பேச்சுக்களில் மூன்றாவது உலக நாடுகளுக்கு எத்தகைய பங்கேற்பும் கிடையாது. ஆனால் ஏகாதிபத்தியத்தின் இன்றைய வளர்ச்சிக்கும் இன்றைய பொருளாதார முறைக்கும் இடையில் பல்வேறு முரண்பாடுகள் தென்படத் தொடங்கியிருக்கின்றன. இரண்டாவது உலகப்போருக்குப் பிறகு சர்வதேச ஏகபோகங்களுக்கு ஏற்பட்ட வளர்ச்சி சிரத்தைக்குரியது. சர்வதேச ஏகபோகங்கள் மற்றும் வெளிநாட்டு மூலதன முதலீடுகளின் வளர்ச்சிக்கேற்ப தன்னை மாற்றிக் கொள்ள உலகளாவிய இன்றைய அமைப்புமுறையால் இயலவில்லை. உதாரணமாக, வெளிநாட்டு மூலதனம் மற்றும் ஏகபோகக் கம்பெனிகள் சுதந்திரமான நடவடிக்கைகளுக்கு, உலக நாடுகளின் ஒப்புதலும், பாதுகாப்பும் உறுதி செய்யத் தேவைப்படும் சர்வதேசச் சட்டங்களும் அமைப்புகளும் இன்றும் உருப்பெறவில்லை. சர்வதேச ஏகபோகங்களைக் கட்டுப்படுத்துவதற்கான அதிகாரம் பெயரளவுக்காவது மூன்றாவது உலக நாடுகள் கையாண்டு வருகின்றன என்பதே உண்மை! மூன்றாவது உலக நாடுகளை சர்வதேச ஏகபோகங்களின் தாராளமான அணுகுமுறைய்யை ஏற்குமாறு செய்யும் சர்வதேசச் சட்டம் இல்லாமையால், ஏகபோகங்களும் அவற்றிற்குப் பாதுகாப்பளிக்கும் ஏகாதிபத்திய அரசுகளும் பல்வேறு குறுக்கு வழிகளைக் கையாளும் நிர்ப்பந்தத்திற்குள்ளாகின்றன.

சர்வதேச ஏகபோகங்களை மையமாகக் கொண்ட ஏகாதிபத்தியச் சுரண்டலைப் பரவலாக்கும் அறிவுரை, தற்காப்பு, கவிழ்ப்பு, நேரிடையான ராணுவத் தலையீடு போன்ற வழிகளைப் பயன்படுத்தியதற்கான எண்ணற்ற உதாரணங்கள் இருக்கின்றன. அரசியல் வரவழைக்கும் பணச் செலவு மிக்க இத்தகைய தலையீடுகளின் இடத்தில் சர்வதேச சட்டங்களையும் அமைப்புகளையும் நிலைநாட்டத்தான் அமெரிக்காவின் தலைமையில் முதலாளித்துவ நாடுகள் முயற்சிக்கின்றன. புதிய உலகளாவிய முறையை உருவாக்க அமெரிக்காவின்

www.tamilarangam.net



தலைமையில் நடைபெறும் முயற்சிகள் வெற்றி பெற்றால். சர்வதேச ஏகபோகங்களின் சுதந்திர நடமாட்டத்திற்கு சர்வதேச சட்டங்கள் மற்றும் அமைப்புகளின் பாதுகாப்பு உத்திரவாதமாகிவிடும். தேசிய நலன்களை முன்னிட்டு ஏகபோகக் கம்பெனிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த மூன்றாம் உலக நாடுகள் மேற்கொள்ளும் முயற்சிகள் சர்வதேசச் சட்டங்களுக்கு எதிரானது என்று அறிவிக்கப்படும். சுருங்கக் கூறின் உருவாகி வரும் உலகப் பொருளாதார முறை பன்னாட்டு முறை என்பதைவிட பன்னாட்டு ஏகபோகங்களின் அமைப்பு முறையாகத்தான் இருக்கும் என்று பொருள்.

புதிய பொருளாதார முறைக்காக நடைபெறும் ஒன்றுபட்ட முயற்சி 'காட்' பேச்சுவார்த்தைகளுக்கு மட்டும் உள்ளிட்டு நிற்கவில்லை. உலகளாவிய அரசியலிலும், பொருளாதாரத் துறையிலும் குறிப்பாக உலக வங்கி நாணய நிதி நிறுவனம் போன்ற அமைப்புகளிலும் இத்தகைய முயற்சி நடைபெற்றுக் கொண்டு தானிருக்கிறது. வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் கம்பெனிகளுடன் மேலும் தாராளமான அணுகுமுறையை மேற்கொள்ளத் தூண்டுவதுதான் இந்த முயற்சியின் பொதுநோக்கம். இந்தியாவுக்கு எதிராகப் பெரும் தீங்காக எழுந்த 'சூப்பர் 301' 'ஸ்பெஷல் 301' போன்ற அச்சுறுத்தல்களும் பன்னாட்டு ஏகபோக அமைப்பைத் திணிக்கும் முயற்சியின் ஒரு பகுதியே! சூப்பர் 301-ஸ்பெஷல் 301யைப் பயன்படுத்தி அமெரிக்க ஏகபோகங்களுடன், குறிப்பாக சேவைத்துறைகளில் பணியாற்றும் ஏகபோகங்களின் அணுகுமுறையை மேலும் தாராளமாக்கத்தான் இந்தியாவிடம் கோரப்பட்டது என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். சூப்பர் 301-ன்படியான நடவடிக்கைக்கு இன்னொரு காரணம் புதிய விஷயங்கள் காட் பேச்சு வார்த்தைக்குள்ளாவதற்கு எதிரான இந்தியாவின் அணுகுமுறையே....!

'காட்' முன்னின்று மேற்கொள்ளும் 'உருகுவே சுற்று' எனும் சுற்றுப்பேச்சுதான், பன்னாட்டு ஏகபோகங்களால் கட்டுப்படுத்தப்படும் ஒரு புதிய பொருளாதார அமைப்பு முறையில் உருவாக்கத்திற்கான பன்னாட்டு நடவடிக்கைகளின் மையம். பன்னாட்டு ஏகபோகங்களின் நடவடிக்கைகளுக்கு சர்வதேச அங்கீகாரம் அளிப்பதற்கான சட்டங்களும், விதிகளும் 'உருகுவே சுற்றில்' விவாதித்து 'காட்' உடன்படிக்கையின் ஒரு பகுதியாக்கி விட்டால் ஏகாதிபத்திய நாடுகள் குறி வைக்கும் 'பன்னாட்டு ஏகபோக அமைப்பு முறை'யின் அடித்தளம் பலப்பட்டுவிடும்.

'காட்'டின் அதிகார எல்லை புதிய பகுதிகளுக்கு நீடிப்பதின் எதிர் விளைவு என்னவாகும் என்பதைத் தெளிவாக ஆராயலாம். 'காட்'டின் முயற்சியால் ஒருங்கிணைக்கப்படும் பன்னாட்டுப் பேச்சுவார்த்தைகளின் வாயிலாக, வெளிநாட்டு மூலதனம் மற்றும் சேவைகளின் இறக்குமதிக்கு எதிரான கட்டுப்பாடுகளைக் குறைக்க மூன்றாம் உலக நாடுகளைத் தூண்டுவதுதான் முதற்படி. மூன்றாம் உலக நாடுகளை வழிக்குக் கொண்டு வர மிகவும் பயன்படுவது 'காட்'டின் பேச்சரங்குதான் என்பதை அமெரிக்காவும் நட்பு நாடுகளும் நன்கறியும். உங்களுடைய ஏற்றுமதிப் பொருட்களை நாங்கள் ஏற்கவேண்டுமென்றால், எங்களுடைய மூலதனத்தையும் கம்பெனிகளையும் வரவேற்க நீங்கள் தயாராக இருப்பதைத் தவிர வேறு வழியில்லை, என்ற முடிவெடுத்து மூன்றாம் உலகநாடுகளைக் கட்டுக்குள்

www.tamilarangam.net



கொண்டுவர அவர்களால் இயலும்! வெளிநாட்டுக் கடனைச் சுமக்கும் வளரும் நாடுகளுக்கு அவர்களுடைய ஏற்றுமதி வருவாய் குறைவதைப் பற்றி சிந்திக்கவே முடியாது. இயல்பாகாவே ஏற்றுமதி வருவாய் விபத்துக்குள்ளாவதைத் தவிர்க்க வெளிநாட்டு மூலதன முதலீடுகளுக்கு எதிரான கட்டுப்பாடுகளைத் தளர்த்த வளரும் நாடுகள் தயாராகி விடும். மூன்றாவது உலக நாடுகளின் ஏற்றுமதியையும் வெளிநாட்டு மூலதனத் திட்டம் கொண்ட அவர்களுடைய அணுகுமுறையையும் சேர்த்துக் பிசையும் மிகவும் பயனளிக்கக் கூடிய இந்த தந்திரத்தை, துவக்க கால காட் சுற்றுகளின்போது ஏன் பயன்படுத்தவில்லை என்ற ஐயப்பாடு முற்றிலும் நியாயமானதே! சர்வதேச சரக்கு வர்த்தகத்தின் பிரச்சினைகளையும், சேவை, வணிகம், வெளிநாட்டு முதலீடு போன்ற விஷயங்களையும் ஒன்றோடொன்று தொடர்புறச் செய்ய 'காட்'டின் சட்டம் இதுவரைஅனுமதிக்கவில்லை என்பதுதான் விடை. அன்றைக்கு சோசலிச நாடுகளின் பலம் வாய்ந்த அணி சர்வதேச அளவில் இருந்ததால் ஏகாதிபத்திய நாடுகளுக்கு சுய விருப்பம்போல் செயலாற்றத் தடையாக இருந்தது. ஆனால் இந்த 'உருகுவே சுற்று'க்குப் பிறகு பழைய 'காட்' நிபந்தனைகள் முக்கியத்துவம் இழந்து விடும். உண்மையில் புதிய விஷயங்கள் 'காட்'டின் அதிகாரவரம்புக்குள் உட்படுத்தும் முயற்சிக்கப் பின்னால் பதுங்கிக் கொண்டிருக்கும் இந்த விபத்தை இந்தியா உட்பட பல மூன்றாம் உலக நாடுகள் முன்கூட்டியே கண்டறிந்திருக்கின்றன. உருகுவே சுற்றின் விவாதத்தில் புதிய விஷயங்களை உட்கொள்ளச் செய்யும் முயற்சிக்கு எதிராகத் தோற்றுப்போன ஒரு எதிர்ப்பை உருவாக்கிய ரகசியம் வேறெதுவுமில்லை. ஆனால் பொருளாதார அரசியல் பலத்தைப் பயன்படுத்தி போராட்டங்களையும், எதிர்ப்புகளையும் வளர்ந்த முதலாளித்துவ நாடுகளால் வெற்றிகொள்ள முடிந்திருக்கிறது வெளிநாட்டு மூலதனம்சேவை வணிகம், அறிவுச் சொத்துரிமைகள் போன்றவை 'காட்'டின் அதிகாரப்பூர்வ விஷயங்களாகி விட்டன. வெளிநாட்டு மூலதனம் போன்ற விஷயங்கள் அதேபடி 'காட்'டில் உட்படுத்தப்படவில்லை. மாறாக வர்த்தகத் தொடர்பான வெளிநாட்டு முதலீடுநடவடிக்கைகள் வர்த்தகத் தொடர்பான அறிவுச் சொத்துரிமைகள் போன்று வளைந்த பெயர்களுடன்தான் புதிய விஷயங்கள் 'காட்' பேச்சுவார்த்தைகளுக்குள் நுழைந்திருக்கின்றன.

வெளிநாட்டு முதலீடுகளுக்கும், கம்பெனிகளுக்கும் எதிரான கட்டுப்பாடுகளை 'காட்' சுற்றுப் பேச்சுகளின் வாயிலாகக் குறைத்துக் கொண்டு வருவதோடு, 'காட்' ஒப்பந்தத்தில் பிரபலமான சுதந்திர வர்த்தகச் சட்டங்களை புதிய விஷயங்களுக்கும் சேர்த்துப் பொருத்தி விட்டால், வெளிநாட்டு மூலதனத்திற்கெதிராக இந்தியா உள்ளிட்ட நாடுகளில் இன்று நிலவும் பெரும்பாலான கட்டுப்பாடுகளும் செல்லாததாகி விடும். உதாரணத்திற்கு வர்த்தகப் பாகுபாட்டுக்கு எதிரான 'காட்' சட்டத்தையே எடுத்துக் கொள்ளலாம். வர்த்தக நடவடிக்கைகளின் விஷயத்தில் 'காட்' உறுப்பு நாடுகள் அனைத்தையும் சமமாகப் பரிசீலிக்க வேண்டும் என்றுதானே இதன் சட்டம் சொல்கிறது. இந்த சட்டம் வெளிநாட்டு மூலதனத்திற்கும் கம்பெனிகளுக்கும் பொருந்தச் செய்வதனால் ஏற்படும் எதிர் விளைவுகளைப் பற்றி யூகிக்க முடியும். வெளிநாட்டு மூலதனம், தொழில் நுட்பத் திறன் போன்றவற்றை ஏற்றுக்கொள்ளும் போது, அல்லது வாங்கும்போது அது எந்த நாடாக இருக்க

www.tamilarangam.net



வேண்டும். எந்தக் கம்பெனியாக இருக்க வேண்டும், என்னென்ன நிபந்தனைக்குட் பட்டிருக்க வேண்டும் போன்ற விஷயங்களைத் தீர்மானிக்கும் மூன்றாம் உலக நாடுகளின் இன்றைய பாகுபாட்டதிகாரம் பறிபோய் விடும். வெளிநாட்டு முதலீடு மற்றும் தொழில் நுட்பத் திறன்களின் இறக்குமதியானது., தேசிய நலனை முன்னிறுத்தித் தயாரிக்கப்பட்ட முன்னுரிமை வரிசைப்படிதான் இருக்க வேண்டுமென்று அடம் பிடிப்பவர்கள் சர்வதேச சட்டத்தின் முன் குற்றவாளிகளாக மாறுவார்கள்.

உள்நாட்டுக் கட்டுப்பாடுகளின் விஷயத்தில் உள்நாட்டு வெளிநாட்டுப் பாகுபாடு கூடாது என்று கண்டிப்பு செய்வது தான் இரண்டாவது சுதந்திர வர்த்தகச் சட்டம். இந்தச் சட்டம் வெளிநாட்டு மூலதனத்திற்கும் கம்பெனிகளுக்கும் பொருத்துவதோடு வெளிநாட்டுக் கம்பெனிகளின் மீது இந்தியா உட்பட பல நாடுகளுக்கும் இன்றுள்ள பலதரப்பட்ட கட்டுதிட்டங்களைக் கைவிட நேரும். உதாரணத்திற்கு இந்தியாவில் பணியாற்றுகின்ற ஒரு வெளிநாட்டு கம்பெனி, உற்பத்தியின் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை ஏற்றுமதி செய்ய வேண்டும் என்ற நிபந்தனையை கைவிட நேரிடும். வெளிநாட்டுக் கம்பெனிகள் உற்பத்தித் தேவைக்காக திரட்டும் சாதனங்கள் மற்றும் பொருட்களில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை இந்தியாவிலிருந்தே வாங்க வேண்டும் **(Local Content Requirement)** என்ற நிபந்தனையையும் கைவிட நேரும். இந்தியாவுக்கு எதிராக 'சூப்பர் 301' அச்சுறுத்தல் எழுந்தபோது இந்தியாவில் இருந்த இந்த இரண்டு கட்டுப்பாடுகளும் குறிப்பாக விமர்சனத்திற்குள்ளாயின என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். சுருங்க கூறின் வெளிநாட்டு ஏகபோகங்களின் நடவடிக்கை தேசிய நலன்களுக்கும் திட்டப்பணிகளுக்கும் தடையாக இருக்காமலிருக்க மேற்கொள்ளப் படும் விசேஷக் கட்டுப்பாடுகள் சர்வதேச சட்ட விதிகளுக்கு எதிரானது என்று விளக்கம் தரும் காலம்தான் இனி வரப்போகிறது. . . !

**விஞ்ஞானம் : தனியார் சொத்தும் சுரண்டல் கருவியும்**

வளர்ச்சி மற்றும் கெடு வளர்ச்சியின் நிகழ்காலத் துன்பங்களைப் பங்கிட்டுக் கொண்டிருக்கும் மூன்றாம் உலக நாடுகளின் மக்களுடைய எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கை இன்னும் பட்டுப் போகவில்லை! விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்தின் பரந்து விரிந்த ஆக்கபூர்வமான வாய்ப்புகளைப் பற்றிய நம்பிக்கையும், கணக்கீடுகளும்தான் அவர்களை வருங்காலக் கனவுகளில் மிதக்கச் செய்கிறது. ஆனால் மூன்றாம் உலக நாடுகளின் விஞ்ஞான தொழில் நுட்ப ஆற்றலை முளையிலேயே கிள்ளி எறியவும், விஞ்ஞான தொழில் நுட்ப அறிவை ஒரு முக்கியமான சுரண்டல் சாதனமாக மாற்றவும் 'உருகுவே சுற்றில்' முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அறிவுச் சொத்துரிமைகளை 'காட்'டின் அதிகார வரம்புக்குள் கொண்டு வருவதற்கான, அமெரிக்கா மற்றும் அதன் நேச நாடுகளின் ஒருங்கிணைந்த முயற்சியைத் தான் இங்கு குறிப்பிடுகின்றோம். விஞ்ஞான தொழில் நுட்ப அறிவுகளின் மீது வளர்ந்த முதலாளித்துவ நாடுகளின் பணக்காரர்கள் மற்றும் ஏகபோகங்களின் பெயரில் தனியார் சொத்துரிமையை நிலைநாட்டவும்,

www.tamilarangam.net



அவர்களுடைய அறிவுச் சொத்துரிமை மூன்றாம் உலக நாடுகளால் அங்கீகரிக்கச் செய்வதும்தான் ஏகாதிபத்தியத்தின் குறிக்கோள்.

வளர்ந்த – வளரும் நாடுளுக்கிடையிலான இடைவெளி மிகவும் அதிகமாக வெளிப்படுவது விஞ்ஞான தொழில் நுட்ப நடவடிக்கைகளின் துறையில்தான்! அறிவுச் சொத்துரிமைகளின் வினியோகத்தை ஆராய்ந்தால் இது தெளிவாகத் தெரியும். உதாரணத்திற்கு மிகவும் முக்கியமான ஒரு அறிவுச் சொத்தான பேட்டண்ட்'டை எடுத்துக் கொள்வோம். ஒரு புதிய கண்டுபிடிப்பின் வர்த்தக அடிப்படையிலான பயனீட்டுக்கு சர்க்காரிடமிருந்து பெறும் உரிமைதான் 'பேட்டண்ட்' எனலாம். காலக்கெடு முடியும் வரை பேட்டண்ட் செய்யப்பட்ட கண்டுபிடிப்பைப் பயன்படுத்த வேறு யாருக்கும் உரிமை கிடையாது. 1970இல் உலகெங்கும் 35 லட்சம் பேட்டண்டுகள் இருந்தன. அதில் வளரும் நாடுகளின் பிரஜைகளுக்குச் சொந்தமாக ஒரு சதவிகிதம் பேட்டண்ட் மட்டுமே இருந்தன. மூன்றாவது உலக நாடுகளில் பதிவு செய்யப்பட்ட பேட்டண்டுகளில் கூட 80 சதவிகிதம் வெளிநாட்டினருக்குச் சொந்தமாகத்தான் இருந்தன. இந்தியாவின் நிலைமையும் இதற்கு விதிவிலக்கல்ல!

விஞ்ஞானத் தேடல்களையும், புதிய கண்டுபிடிப்புக்களையும் ஊக்குவிப்பதுதான் 'பேட்டண்ட் முறையின் குறிக்கோள் பேட்டண்ட் அளிக்கும் ஏகபோக உண்மையைப் பயன்படுத்தி புதிய கண்டுபிடிப்புக்கு ஏற்பட்ட செலவையும் லாபத்தையும் ஈடு செய்து கொள்ள பேட்டண்ட் உரிமையாளரால் இயலும். புதிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ள பணத்தை முதலீடு செய்ய இந்த உரிமை முயற்சியாளர்களுக்கு தூண்டுவதாக அமையும். ஆனால் பேட்டண்ட் முறைக்கு சில கெடுதலான அம்சங்களும் இருக்கின்றன. பேட்டண்ட் அளிக்கும் ஏகபோக உரிமையைப் பயன்படுத்தி உற்பத்திப் பொருள் கிடைப்பதைக் கட்டுப்படுத்திக் கொள்ளை லாபம் சம்பாதிப்பது சகஜம் தான். அதைப் போல் பேட்டண்டுகளின் காலக்கெடு நீடித்துக் கொண்டேயிருந்தால் புதிய தொழில் நுட்பத் திறன்களின் பரவலான பயனீடும் தாமதமாகும். இனி, பேட்டண்ட் உரிமையாளர் உற்பத்திக்கு ஏற்பாடு செய்ய தயாரில்லை என்றால் என்ன செய்வது? பேட்டண்ட் செய்யப்பட்ட தொழில் நுட்பத் திறனின் பயன் சமுதாயத்திற்கு மறுக்கப்படும் நிலை உருவாகும். பேட்டண்ட் உரிமையாளரின் தனி நபர் நலனுக்கும், சமுதாய நலனுக்கும் இடையிலான முரண்படுகள் தான் மேற்குறப்பிட்ட குறைபாடுகளை வெளிக் கொணர்கின்றன. வெளி நாட்டினரான பேட்டண்ட் உரிமையாளர்கள் முன்னுரிமை பெற்ற இந்தியா போன்ற நாடுகளில் இந்த முரண்டபாடுகளுக்கு கூடுதல் ஆபத்தான இன்னொரு அம்சமும் இருக்கிறது. வெளி நாட்டினரான பேட்டண்ட் உரிமையாளர்களின் லாபப் பேராசைக்கும் தேசிய நலனுக்கும் இடையிலான மாறுபாடுகள்தான் அவை.

பேட்டண்ட் முறையை துஷ்பிரயோகம் செய்வதற்கெதிராக பேட்டண்ட் சட்டத்திலேயே சில நிபந்தனைகளை ஏற்படுத்துவதுண்டு பேட்டண்ட் உரிமையாளருக்கு அளிக்கப்படும் அதிகாரத்தின் மீது சமுதாயம் ஏற்படுத்தும் சில கட்டுதிட்டங்கள்தான் அந்த நிபந்தனைகள். அமெரிக்க உட்பட வளர்ந்த நாடுகளிலும்

www.tamilarangam.net



இத்தகைய நிபந்தனைகள் இருந்தன. ஆனால் பேட்டண்ட் உட்பட அறிவுச் சொத்துரிமைகளின் உரிமையாளர்களின் உரிமைகளை வரையறைப்படுத்தும் இத்தகைய கட்டுப்பாடுகளை முடிந்த அளவுக்கு குறைக்க வேண்டுமென்றுதான் வளர்ந்த முதலாளித்துவ நாடுகள் கோருகின்றன. அறிவுச் சொத்துரிமைகளுக்கு முழுப் பாதுகாப்பளிக்க 1971ன் இந்தியப் பேட்டண்ட் சட்டம் உட்பட பெரும்பாலான நாடுகளின் பேட்டண்ட் சட்டங்களையும் திருத்தியெழுத வேண்டுமாம். பேட்டண்ட் முறை தேசிய நலன்களுக்குத் தடையாக இல்லாமலிருக்க 1971இன் இந்திய பேட்டண்ட் சட்டத்தில் உட்படுத்தியிருக்கும் நிபந்தனைகளை ஆராய்ந்தால் அமெரிக்காவின் முயற்சிக்குப் பின்னால் பதுங்கியிருக்கும் விபத்தைக் கண்டு கொள்ளலாம்.

**அபாயக்கட்டத்தில் இந்தியப் பேட்டண்ட் சட்டம்**

இந்தியப் பேட்டண்ட் சட்டம் திருத்தி எழுதப்பட வேண்டுமென்றும், இந்தியச் சட்டத்தின் தனிச் சிறப்புகளை முழுக்கப் பாதுகாக்க வேண்டுமென்றும் கூறுபவர்களுக்கிடையே நடைபெறும் சர்ச்சை இன்னும் தொடர்ந்து கொண்டுதானிருக்கிறது. இந்தியப் பேட்டண்ட் சட்டம் தொடர்பான சர்ச்சையின் விரிவான அம்சங்களுக்குள் நுழையாமல், இந்தியச் சட்டத்தின் மிக அதிகமாக சர்ச்சைக்குள்ளாக்கப்பட்டிருக்கும் சில சிறப்புத்தன்மைகளைப் பற்றிச் சுட்டிக்காட்டத்தான் இங்கு விரும்புகிறோம்.

**பேட்டண்ட் காலக்கெடு** : உணவுப் பொருட்கள், மருந்துகள் பூச்சிகொல்லிகள் போன்று பதிவு செய்யப்படும் பேட்டண்டுகளின் காலக்கெடு 5 முதல் 7 ஆண்டுகள் வரை என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஏனைய கண்டுபிடிப்புகளுக்கு இந்தியாவில் அனுமதிக்கப்பட்ட காலக்கெடு 14 ஆண்டுகளாகும். பேட்டண்ட் காலக்கெடு 14-லிருந்து 20 ஆண்டுகள் வரைக்கும் நிர்ணயிக்க வேண்டுமென்றுதான் வளர்ந்த முதலாளித்துவ நாடுகள் 'உருகுவே சுற்று' சர்வதேச சுற்றுப் பேச்சுக் கூட்டங்களில் கோரிக்கை விடுக்கின்றன. பேட்டண்ட் காலக்கெடு நீடிக்க நீடிக்க அது உட்கொண்டிருக்கும் தொழில் நுணுக்கத் திறனின் வியாபகமும் பரவலான பயனீடும் தாமதப்படும் என்று ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோமல்லவா? இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட பேட்டண்ட்களில் பெரும்பான்மையானவற்றையும் சொந்தமாக்கிக்கொண்ட வெளிநாட்டுக் கம்பெனிகளுக்கு, தொழில் நுணுக்கத் திறன் மற்றும் உற்பத்திப் பொருட்களின் மீதான ஏகபோக உரிமையை நீடித்துக் கொடுப்பதற்கு சமமானதுதான் பேட்டண்ட் காலக்கெடுவை நீடிக்கச் செய்யும் முயற்சிகள்!

**உற்பத்திப் பேட்டண்ட்** : உணவுப் பொருட்கள், மருந்துகள் பூச்சிக்கொல்லிகள் போன்ற சிலவற்றுக்கு இந்தியா (Product Patent) பேட்டண்ட் அளிப்பதில்லை. உற்பத்திப் பொருட்களுக்குப் பேட்டண்ட் அளித்தால் அதே உற்பத்திப் பொருளைத் தயாரிப்பதற்கான உற்பத்தி முறைகள் வளர்ச்சியடையும் வாய்ப்புகள் இல்லாததாகிவிடும். உயிர் காக்கும் மருந்துகள் போன்றவற்றின் விஷயத்தில் புதிய உற்பத்தி முறைகளும், உற்பத்தியும் வளர்ச்சியுற்று விலைகள்

www.tamilarangam.net



குறைய வேண்டுமென்பதால் இந்தியாவின் உற்பத்தி முறைகளுக்குத்தான் (Process Patents) பேட்டண்ட் அளிக்கப்படுகிறது. அதாவது பேட்டண்ட் செய்யப்பட்ட உற்பத்தி முறைக்கு மாற்று உற்பத்தி முறைகளைக் கண்டுபிடிக்க வாய்ப்பிருக்கிறது என்று பொருள்! 1970 வரை பன்னாட்டுக் கம்பெனிகள் ஏகபோகமாக வைத்துக்கொண்டிருந்த எண்ணற்ற மருந்துகளுக்கு மாற்று உற்பத்தி முறைகளை வளர்த்தெடுக்க முடிந்திருக்கிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இதனால் பல மருந்துகளின் விலையைக் கணிசமாகக் குறைக்க முடிந்திருக்கிறது. இந்தியாவில் பன்னாட்டு ஏகபோகங்களுக்கு மிகவும் செல்வாக்குள்ள துறையில் மருந்துத் தயாரிப்புத் தொழிலும் ஒன்றல்லவா? 1970இன் பேட்டண்ட் சட்டத்தின் உதவியுடன் இந்தியக் கம்பெனிகள் இந்தத் துறையில் வெற்றி கொண்ட தொழில் நுணுக்க அடிப்படையும், போட்டித் திறனும் இந்த மருந்து அரக்கர்களை மிகவும் அல்லலுக்குள்ளாக்கியது... இந்திய பேட்டண்ட் சட்டத்தைத் திருத்த வேண்டும், இந்தியா-பாரிஸ் பேட்டண்ட் மாநாட்டில் உறுப்பினராக வேண்டும்; உருகுவே சுற்றுப் பேச்சில் அறிவுச் சொத்துரிமை விவாதங்களில் அமெரிக்கத் தரப்பில் சேர வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை மிகவும் பலமாக எழுப்புவதே இந்த மருந்து ஏகபோகங்களும் அவற்றின் பணியாட்களும்தான் என்பது முற்றிலும் இயல்பானதே! உலகளாவிய தலத்திலும் அறிவுச் சொத்துரிமைகள் தொடர்பான புதிய சுற்றுப் பேச்சுகளின் பின்னணியில் இந்த மருந்து ஏகபோகங்கள்தான் இருக்கின்றன.

**மாற்று லைசென்ஸ்** : பேட்டண்ட் செயல்படுத்தப்படுவது தொடர்பான நிபந்தனைதான் இந்தியச் சட்டத்தின் இன்னொரு தனித்தனமை. பேட்டண்ட் உரிமையாளர் அவருடைய கண்டுபிடிப்பை பயன்படுத்தி வர்த்தக அடிப்படையில் உற்பத்திக்கு ஏற்பாடு செய்யக் கடமைப்பட்டவர். உற்பத்தியை மேற்கொள்ளா விட்டால் இன்னொருவருக்கு லைசென்ஸ் அளித்தாலும் போதுமானது. ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் உற்பத்தியைத் தொடங்காவிட்டால் பேட்டண்ட் ரத்து செய்யவும், இன்னொருவருக்கு லைசென்ஸ் அளிக்கவும் சர்க்காருக்கு அதிகாரமிருக்கிறது. தேசிய நிலையில் உற்பத்தியை மேற்கொள்ளாவிட்டால் பேட்டண்டை ரத்து செய்து புதிய லைசென்ஸ் அளிக்க அரசுக்கிருக்கும் இந்த அதிகாரத்துக்கெதிராகவும் 'உருகுவே சுற்று'லிருந்து அச்சுறுத்தல் எழுந்திருக்கிறது. மாற்று லைசென்ஸ் அளிக்கும் பேட்டண்ட் உரிமையாளரின் அறிவுச் சொத்துரிமைக்கெதிரான ஆக்கிரமிப்பாகும் என்பது அமெரிக்காவின் வாதம். பேட்டண்ட் உரிமையை ரத்து செய்யும் வரை பேட்டண்ட் உரிமையாளரின் அனுமதியின்றி பேட்டண்ட் செய்யப்பட்ட உற்பத்திப் பொருளை இறக்குமதி செய்வதும், உள்நாட்டிலேயே தயாரிப்பதும் சாத்தியமில்லை. பேட்டண்ட் உரிமையாளர் நேரிடையாக இறக்குமதி செய்வதுதான் விளைவாக இருக்கும். பேட்டண்டுகள் இறக்குமதி லைசென்சாக மாறும். இதுதான் பன்னாட்டு ஏகபோகங்களுக்கும் தேவை. மூன்றாம் உலக நாடுகளில் அவர்கள் பேட்டண்களைப் பதிவு செய்வது பெரும்பாலும் உற்பத்தி செய்வதற்காக அல்ல; மாறாக இது தொடர்பான ஆராய்ச்சி முயற்சிகளைத் தடை செய்யவும், வேறு வாய்ப்பிடங்களிலிருந்து இறக்குமதி செய்யாமலிருக்கவும்தான்! வளரும் நாடுகளில் பதிவு செய்யப்பட்ட 80 சதவிகிதம் பேட்டண்டுகளும் வெளிநாட்டினரின் உரிமத்தில் இருப்பவை தான்

www.tamilarangam.net



என்று ஏற்கெனவே கூறினோமல்லவா? வெளிநாட்டினருக்குச் சொந்தமான இந்தப் பேட்டண்டுகளில் 90 சதவிகிதமும் தேசிய அளவில் உற்பத்தியை ஒருங்கிணைக்கப் பயன்படுத்தப்படவில்லை என்றுதான் கணக்குகளிலிருந்து தெரிய வருகிறது.

சுருக்கமாகச் சொன்னால், வளர்ந்த முதலாளித்துவ நாடுகளுக்கு – குறிப்பாக பன்னாட்டு ஏகபோகங்களுக்கு விஞ்ஞான தொழில் நுட்பத் துறையில் இன்றுள்ள மேலாதிக்கத்தை நிரந்தரமாக நிலைநாட்டவும், விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சிகளை தனியார் சொத்தாக்கி சுரண்டலுக்குப் புதிய ஆயுதமாகப் பயன்படுத்தவும்தான் ஏகாதிபத்திய சக்திகள் முயற்சிக்கின்றன. இதற்கெல்லாம் பயன்படும் அமைப்பாக 'காட்' மாறியிருக்கிறது.

**புதிய சட்ட மறுப்பு இயக்கங்கள்**

மனிதகுலத்தின் பொதுச் சொத்தாகக் கருத வேண்டிய விஞ்ஞான தொழில் நுட்ப அறிவை தனியார் உடமையாக்கி லாபத்தைஅறுவடை செய்யும் ஏகாதிபத்திய முயற்சியின் வெற்றி அவ்வளவு எளிதல்ல என்பதையும் குறிப்பிட வேண்டியிருக்கிறது. முதற்படியாக வளரும் நாடுகளில் இன்றைக்கிருக்கும் பேட்டண்ட், காபிரைட், டிரேட்மார்க் சட்டங்கள் திருத்தப்பட வேண்டும். இதற்கு எதிரான மூன்றாம் உலக நாடுகளின் எதிர்ப்பு ஓரளவு அடங்கி விட்டது என்பதை ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தோம். ஆனால் சட்டங்களைத் திருத்தினால் மட்டும் போதாது; கடுமையாக அமல் செய்ய வேண்டும். அதற்காக ஆட்சியாளர்கள் அடக்குமுறைக் கருவிகளைப் பயன்படுத்த வேண்டும்.

அறிவுச் சொத்துரிமைகளின் சட்டப்பாதுகாப்பு அவ்வளவு எளிதானதல்ல. உறபத்தியை மேலும் பொதுமயமாக்கப்படும்போது தனியார் மயத்துக்கான வாய்ப்பும் குறைந்து கொண்டேயிருக்கிறது. விலை கொடுத்து வாங்குபவர்களின்பால் உற்பத்திப்பொருட்களின் நுகர்வை வரையறைப்படுத்தாமல் முதலாளித்துவத்தால் நிலைத்திருக்க முடியாது. பல்வேறு புதிய பொருட்கள், சேவைகள், தொழில் நுட்பங்களின் நுகர்வை கொடுத்துபெறுவோர்களிடம் வரையறைப்படுத்தும் முயற்சி கெடுதலானது. உதாரணத்திற்கு, ஒரு டிஷ் ஆன்டெனா இருந்தால் அமெரிக்க டிவி. கம்பெனியின் நிகழ்ச்சிகளை வேறு செலவு எதுவுமின்றி கேரளத்தில் இருந்தே ரசிக்க முடியும். அதைப் போலவே மிகவும் செலவு செய்து தயாரிக்கபபடும் கம்ப்யூட்டர் சாஃப்ட்வேர்களை பெருமளவில் பதிவு செய்து பயன்படுத்துவதையும் தடை செய்ய இயலாது என்ற நிலைமைதான் இருக்கிறது திரைப்படங்கள் புத்தகங்களின் பதிப்பு உரிமையின் நிலைமையும் இதற்கு மாறானதல்ல. டிரேட் மார்க் சட்டங்களும் பெருமளவுக்கு மீறப்படுகிறது. புதிய 'உயிரினவகை' (தாவரங்கள் உட்பட)களுக்கு அளிக்கப்படும் பேட்டண்ட்தான் எளிதாக மீறக்கூடிய அறிவுச் சொத்துரிமை. ஒரு கலப்பு ரக விதையின் விஷயத்தையே எடுத்துக் கொள்வோம் பேட்டண்ட் செய்யப்பட்ட விதையைப் பயன்படுத்தி உற்பத்தியை மேற்கொள்ளும் விவசாயி, விளைச்சலின் ஒரு பகுதியைச் சேமித்து விதைக்காகப் பயன்படுத்தும் வழக்கத்தைத் தடுப்பதுதான் பன்னாட்டு கம்பெனிகளின் நோக்கம். பேட்டண்ட் சட்டத்தின் உதவி கிடைத்தாலும் விதையை உற்பத்தி செய்யும் விவசாயின்

www.tamilarangam.net



உரிமையைக் களவாட முடியாது (பன்னாட்டு ஏகபோகங்கள் சந்தையில் இருக்கும் சில விதைகளைப் பயிரிட்டால், தொழில் நுணுக்க வித்தையின் தனித்தன்மையினால் அடுத்த வேளாண்மைக்கான விதையை உற்பத்தி செய்ய விவசாயிக்கு இயலாது என்ற உண்மையை இங்கு மறுக்கவில்லை) அடுத்து பேட்டண்ட் செய்யப்பட்ட ஒரு ஜோடி முயல்களை வாங்கி, நீங்கள் வளர்ப்பதாக வைத்துக் கொள்வோம். அவை இனப் பெருக்கம் செய்தால் பேட்டண்ட் செய்யப்பட்ட ஒரு பொருளின் மறு உற்பத்தியை சட்டத்திற்குப் புறம்பாக மேற்கொண்டதற்கு இணையாக வாதிடலாம். ஆயினும் சட்ட மீறலைத் தடுப்பது கடினமானது.

இடர்ப்பாடுகளும், தார்மீக நோக்கங்களும் ஏகாதிபத்தியத்தை அதன் பேராசையிலிருந்து பின்னடையச் செய்யவில்லை என்பதுதான் உண்மை. பலதரப்பட்ட தன்மையால் வாழ்த்தியருளப்பட்ட மூன்றாம் உலக நாடுகளிலிருந்து திட்டமிட்டுச் சேமிக்கும் உயிரினவகைகள் (தாவரங்கள் உட்பட) உயிரியல் தொழில் நுணுக்கத் திறனைப் பயன்படுத்தி சில மாறுதல்களைச் செய்து, அதன் மீது சொத்துரிமை கொண்டாடி நிலைநாட்டவும், பிறகு நமக்கே அதை விற்பனை செய்து லாபத்தை அறுவடை செய்யவும் பலத்த முயற்சிகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. வளரும் நாடுகளிலிருந்து எந்தச் செலவும் இன்றியே திரட்டும் இயற்கையான "உயிரின வகைகள்" யாருடைய சொத்து என்ற கேள்வி, அவர்களுக்கு ஒரு பிரச்சினையே அல்ல! சர்வதேச சட்டங்களை மீறுபவர்களுக்கு எதிராக எச்சரிக்கையாக இருக்கவும், தண்டனை நடவடிக்கைகளை எடுக்கவும், மூன்றாம் உலக நாடுகளின் அரசுகளை பயன்படுத்த அவர்களால் இயலும். ஆனால் அறிவுச் சொத்துரிமைகள் மூலமான புதிய காலனியாதிக்கச் சுரண்டலுக்கெதிராக மக்களின் உணர்வு கிளர்ந்தெழுந்தால் இப்போது பரவலாக நடைபெறும் தனிப்பட்ட சட்ட மீறல்கள் மேலும் ஒன்றுபட்ட சட்ட மீறல் இயக்கமாக உருவாகும் வாய்ப்பிருக்கிறது. சர்வதேச சட்டங்களுக்கெதிரான சட்டமீறல் இயக்கங்கள், புதிய காலனியாதிக்கச சுரண்டலுக்கெதிராகக் கிளர்ந்தெழும் ஒரு முக்கியமான உருவெடுத்தால் போராக ஆச்சரியப்படுவதற்கில்லை.

www.tamilarangam.net

# 7
# சுயசார்பிலிருந்து சரணாகதியை நோக்கி

சர்வதேச நிதி நிறுவனம், உலக வங்கி, காட் போன்ற அமைப்புகளின் கோட்பாட்டு நடவடிக்கைகளை முந்தைய அத்தியாயங்களில் ஓரளவு விளக்கமாகவே ஆராய்ந்தோம். அந்த ஆராய்ச்சியின் பின்னணியில் இந்தியாவில் இன்றைக்கு அரங்கேறிக் கொண்டிருக்கும் பொருளாதார சீர்திருத்தங்களின் சாரத்தைப் புரிந்து கொள்வதில் சிரமமிருக்காது. நமது நாட்டின் பொருளாதார அரசியல் சுயாதிகாரத்தின் 'அடிபணிவுக் கொட்டு முழக்கம்' எதிரொலித்துக் கொண்டிக்கிறது. இந்தியாவைக் கீழ்ப்படிய வைக்கும் ஏகாதிபத்திய மேலாதிக்கங்களின் முயற்சிகள் வெற்றித்தடத்தில் முன்னேறிக் கொண்டிருக்கின்றன.

இந்த உண்மையைக் காண மறுப்பதுான், புதிய பொருளாதாரச் சீர்திருத்தங்களை ஆதரிக்கும், லிபரல் அறிவுஜீவிகள்எனப்படும் பிரபலமானவர்கள் பலருக்கும் நேருகின்ற வீழ்ச்சியாகும். முதல் அத்தியாத்தில் குறிப்பிட்டதைப்போல சமகால சர்வதேசக் கொந்தளிப்புகள் அவர்களுடைய பார்வைக் கோணங்களையே தலைகீழாக மாற்றி விட்டன. 'மனித முகம் படைத்த முதலாளித்துவம்' என்றெல்லாம் அவர்களில் சிலர் விடுக்கும் அறிக்கையைப் பார்த்தால் ஏகாதிபத்தியம் என்ற உண்மையை அவர்கள் மறந்து விட்டார்கள் போலிருக்கிறது! இந்தச் சமகால நிகழ்வுதான் 'சரணாகதிப் பொருளாதாரம்' குறித்து நாங்கள் இதுவரை மேற்கொண்ட பரிசீலனைகளைப் பொருளுடையதாக்குகிறது....!

ஆனால், வேறு சிலர் இருக்கிறார்கள். அவர்களை பொறுத்தவரை, இந்தியாவில் புதிதாக எதுவும் நடை பெறுவதில்லை. முன்னும் இந்த நிலைமைதான் இருந்தது. சுதந்திரம் கிடைத்த உடனேயே இந்தியாவின் ஆட்சியாளர்கள் அடிபணிந்து விட்டனர்! இல்லை, சுதந்திரம் பெற்றோம் என்பதே சரிதானா? வெள்ளைத் 'துரைமார்களுக்கு' பதிலாக சில கறுப்பு 'துரைமார்கள்' அரியாசனம் ஏறினர். அவ்வளவுதான்....! இந்த வாதங்களை ஏற்றுக் கொண்டால் புதிய நிகழ்ச்சிப்

www.tamilarangam.net



போக்குகளைப் புரிந்து கொள்வதற்கான இந்தச் சிறிய நூல் போன்ற முயற்சிகள் பயனற்றுப் போய்விடும். புதிதாக என்னவெல்லாமோ நடைபெறுகிறது என்று ஒப்புக் கொண்டால்தான் அது சம்பந்தமான விளக்கம் பெறுவது பொருளுடையதாக இருக்கும்.

இன்றைய நெருக்கடிகளைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் வரலாற்றுணர்வு தவிர்க்க முடியாதது. நாம் இன்றைக்கு எப்படி இந்த வீழ்ச்சிக்குள்ளானோம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டுமானால், சுதந்திரத்திற்குப் பிந்தைய காலத்தில் நாம் மேற்கொண்ட வளர்ச்சித் திட்டங்களை விமர்சனக் கண்ணோட்டத்துடன் ஆராய வேண்டும். வெளிநாட்டினர் வைத்த பொறிக்குள், நமது கள்ளங்கபடமற்ற ஆட்சியாளர்கள் தானாகப் போய் சிக்கிக் கொள்ளவில்லை; அவர்களும் இந்தப் பொறியை நோக்கிச் செல்லும் பாதையைத்தான் தேர்ந்தெடுத்தனர் என்பதை இந்த ஆய்வு வெளிப்படுத்தும்.

நேற்றுவரை இந்தியா கடைபிடித்த கொள்கைகளுக்கு ஒரு சொற்றொடர் பிரபலமாகியிருக்கிறது; அதுதான் 'நேருவின் கொள்கைகள்'. நேரு கொள்கைகளின் புறக்கணிப்புதான் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. அதைப் போலவே, நேருவின் கொள்கைகளில் இருக்கும் பலவீனங்கள்தான் இன்றைய பிரச்சினைகளுக்கு அடிப்படை என்பதும் ஐயத்திற்கிடமில்லை! எனவே நேருவின் கொள்கைகள் நாளைக்கு மீண்டும் அமல்படுத்தினாலும் பிரச்சினைக்குப் பரிகாரமாகாது. புதிய வழிகளைத் தேடவேண்டும். நேருவின் கொள்கைகள் தான் என்ன? அவற்றின் பலவீனங்கள் என்னென்ன?

**நேருவின் வளர்ச்சிக் கொள்கை**

ஒரு வகையில் நேருவின் கொள்கைகள் இந்தியாவின் தேசிய இயக்க அடிப்படையின் தொடர்ச்சியாகும். இந்தியாவின் விடுதலைப் போராட்டம் மண்மறைந்த பொற்கால நினைவுகளால் மட்டும் ஒளிரவில்லை; எதிர்காலம் தொடர்பான நாட்டுப்பற்றுமிக்க கனவுகளும் நிரம்பவே இருந்தன! பிரிட்டிஷ்காரர்களின் சுரண்டல் ஒழிய வேண்டும். தேசிய அளவில் விவசாயமும், தொழிலும் பெருக வேண்டும். இந்தியாவின் பின்னடைவு நிலை அகற்றப்பட வேண்டும். இதற்கெல்லாம் திட்டமிடப்பட்ட ஒரு பொருளாதார அமைப்பு உருவாக வேண்டும்.

இந்த விஷயங்களில் இடது-வலது கருத்து மாறுபாடுகள் கிடையாது. திட்டமிடல் தொடர்பான இந்தியாவின் பெரிய இடத்துக் கருத்துப் பிரகடனங்கள் சில வெளியாகின. அதில் முதலாவது ஜி. டி. பிர்லாவிடமிருந்துதான் வந்தது என்பது குறிப்பிடத் தக்கது. இந்தியத் தொழில் அதிபர்களின் அமைப்பான ஃபிக்கியின் 1934ஆம் ஆண்டு, வருடாந்திர மாநாட்டில் அவர் ஆற்றிய தலைமை உரை "இந்திய வளர்ச்சி; திட்டமிடுதலுதற்கான வேண்டுகோள்" என்ற தலைப்பில் அமைந்திருந்தது. அதே ஆண்டு தென்னிந்தியாவின் ஒரு மூலையிலிருந்து விஸ்வேஸ்வரய்யாவின் "இந்தியாவின் திட்டமிட்ட பொருளாதார அமைப்பு" என்ற நூல் வெளியானது. முதல்

www.tamilarangam.net



பதிப்பு சில மாதங்களுக்குள்ளேயே விற்பனையாகிவிட்டதால் 1936இல் மீண்டும் ஒரு மறுபதிப்பு இந்த நூலுக்குத் தேவைப்பட்டது. இதிலிருந்து திட்டமிடல் எனும் கொள்கை இந்தியாவின் அறிவுஜீவிகளை எந்த அளவுக்கு ஈர்த்திருந்தது என்பது புலனாகும்.

இந்த அறிவுறுத்தல்கள் அனைத்தையும் பிரிட்டிஷ் சர்க்கார் புறக்கணித்து விட்டது. பொருளாதார ஆலோசனைக் குழு ஒன்றை அமைக்கக்கூட அவர்கள் மறுத்துவிட்டனர். இதற்கான காரணத்தைப்பற்றி விஸ்வேஸ்வரய்யாவுக்கு எந்தச் சந்தேகமும் ஏற்படவில்லை. "இந்த விஷயத்தில் துணிச்சலாக முன்வந்து எதையாவது மேற்கொள்ளவோ, பொருளாதாரத் திட்டமிடுதலைத் தொடங்கவோ அன்றிருந்த அரசுக்கு அதன் கட்டமைப்புத் தொடர்பான குணாம்சத்தின்படியே இயலாது என்பதுதான் உண்மை...." அலையாக ஆர்பரித்தெழுந்த பொருளாதார தேசியத்தின் முக்கியக் கோஷமாக "திட்டமிடுதல்" மாறிவிட்டது. 1938இல் இந்திய தேசிய காங்கிரஸ் நேருவைத் தலைவராகக் கொண்டு பரந்த அளவிலான ஒருதேசியத் திட்டக் குழுவை உருவாக்கியது போர் மற்றும் அரசியல் நிலைகுலைவுகளால் குழுவின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை. ஆயினும் விடுதலை பெறும் இந்தியாவின் பொருளாதார முயற்சிகளைப் பற்றிய விவாதங்களை பொறுப்புணர்வு மிக்க ஒரு கட்டத்திற்கு உயர்த்த இது உதவிக்கரமாக இருந்தது.

மூன்று முக்கிய அடிப்படை உணர்வுகள் இந்த விவாதங்களின் மூலம் உருவாயின. முதலாவது-டாட்டா, பிர்லா போன்ற தொழிலதிபர்களும், அவர்களுடைய பொருளாதார ஆலோசகர்களும் சேர்ந்த உருவாக்கிய 'இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு திட்டம்' என்ற ஆவணத்தின் அணுகுமுறையாகும். இந்த முக்கியமான ஆவணம் பிற்காலத்தில் 'பம்பாய் பிளான்' என்ற பெயரில் பிரபலமாயிற்று. கலப்புப் பொருளாதார அமைப்பு, பொதுத் துறை, திட்டமிடுதல் போன்ற முக்கியமான கருத்து வடிவங்களை இந்தியத் தொழிலதிபர்கள் ஏற்றுக் கொண்டனர். வெளி நாட்டு மூலதனத்தைக் கட்டுப்படுத்துவதற்கும், வளர்ச்சிக்குத் தேவையான செல்வத்தைத் திரட்டுவதற்கும், பின்னணி வசதிகளை ஏற்படுத்தவும் லாபம் குறைந்த பெரும் மூலதன முதலீடு தேவைப்படும். அடிப்படைத் தொழில்களை வளர்க்கவும் பொதுத்துறை தேவைதான் என்று அவர்கள் கருதினர். ஆனால் இந்த பொதுத்துறை நிறுவனங்களை, அவை வளர்ந்த பின் ஒரு கட்டத்தில் தனியார் துறையிடம் கொடுத்து விட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர். ஏகபோக நலன்களுக்குக் கீழ்ப்படிந்த பொதுத்துறை மற்றும் திட்டங்கள்; கடுமையான கட்டுப்பாடுகளைக் கொண்ட வெளிநாட்டு மூலதனம்; விவசாயத் துறையில் ஒரு நவீன விவசாய மேலாதிக்க வர்க்கம்; இவைதான் 'பாம்பே பிளான்' என்றழைக்கப்படும் திட்டத்தில் காணப்படுபவை.

மாறுபட்ட பார்வைக் கோணத்திலாயினும், பம்பாய் பிளானை இரண்டு கருத்தோட்டங்கள் விமர்சன பூர்வமாக அணுகின. அவைதான், காந்தியமும், இடதுசாரித்தத்துவமும் காந்தியின் ஆசியுடன் திரு. நாராயன் அகர்வால் தயாரித்த 'காந்தியன் பிளான்' விவசாயத்திற்கும், சிறு தொழில்களுக்கும் முக்கியத்துவமளித்தது. இடது சாரியான எம். என். ராய் தயாரித்த "பீப்பிள்ஸ் பிளான்" திட்டத்தில்

www.tamilarangam.net



முன்னிரண்டு திட்டங்களிலிருந்தும் மாறுபட்டு பல்வேறு அடிப்படைச் சமூக மாற்றங்களும் குறிப்பிடப்பட்டிருந்தன.

விடுதலை பெற்ற பிறகு நேருவின் தலைமையில் உருப்பெற்ற வளர்ச்சித் திட்டம் மொத்தத்தில் பாம்பே பிளானின் அணுகுமுறையைத்தான் ஏற்றுக் கொண்டது எனலாம். ஆனால் அதோடு காந்தியன் பிளானில் இருந்த விவசாய-சிறுதொழில் நலப்பிரிவையும் இடதுசாரிகளின் சோசலிச கருத்துக்கள் சிலவற்றையும் நேரு ஏற்றுக் கொண்டார். இந்த வளர்ச்சித் திட்டத்தின் சத்தான பகுதிகள் எவை?

விவசாயத் துறையில் ஒருசீர்திருத்தம் தவிர்க்க முடியாததாக இருந்தது. நிலத்தை குத்தகைக்கு விட்டு ஊதாரித்தனமாக வாழ்ந்து கொண்டிருந்த நிலப்பிரபுக்கள் தான், விவசாயத்துறையில் மேலாதிக்கம் பெற்றிருந்தனர். இவர்களின் இடத்தை தொழிற்துறை முதலாளிகளைப் போல், நிலத்தில் மூலதனத்தை முதலீடு செய்து உற்பத்தியைப் பெருக்கி லாபமீட்ட முயல்பவர்களுக்கு அளிக்காவிட்டால் விவசாய வளர்ச்சி அசாத்தியம் என்பது தெளிவாயிற்று. இதற்கு விடுதலைப் போராட்டக் காலத்தில் உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்று நிலச் சீர்திருத்தக் கொள்கை முன் வைக்கப்பட்டது. நிலச் சொந்தக்காரர்களாக மாறும் விவசாயிகளிலிருந்து ஒரு ஆற்றல்மிகு வேளாண்மை வர்க்கம் உருப்பெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இதற்கு புதிய ஆட்சியாளர்கள் தயாராயில்லை' நிலப்பிரபுகளுக்குப் புதிய ஆட்சியில் செல்வாக்கிருந்தது. நவீன வேளாண் வர்க்கத்தை உருவாக்க மேற்கொண்ட தந்திரம் இதுதான். நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டுவரப் போகிறோம் என்று பயமுறுத்தி, நிலப்பிரபுக்கள் நிலத்தை குத்தகைக்கு விடும் வழக்கத்தைக் கைவிடச் செய்து, நேரிடையாகவே விவசாயம் செய்ய வைப்பது. இவ்வாறு மனமாற்றம் ஏற்பட்ட நிலப்பிரபுக்களுக்கு, மிகவும் செல்வாக்கும், அதைவிட அனுகூலமான பௌதீகச் சூழ்நிலையும் உடைய பிரதேசங்களை தேர்ந்தெடுத்து கலப்பு விதைகள், நீர், உரம் என ஒரு'பேக்கேஜ்' ஆக அளித்து உதவுவது....! இவ்வாறு, அரிய சாகுபடிச் செல்வங்களை நாடு முழுக்கப் பரப்பாமல் ஒரு சில பிராந்தியங்களில் மட்டும் மையம் கொள்ளச் செய்து மிக விரைவில் பயன் தரும் இடங்களில் ஒருங்கிணைக்க முடியும். இதற்குத் தான் பசுமைப் புரட்சி என்று பெயர்.

இதைப் போலவே தொழில் வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்ட திட்டத்தை "இறக்குமதி மாற்று உற்பத்திக் கொள்கை" என்று அழைத்தனர். இந்தக் கொள்கையின் சாரம் இதுதான். இறக்குமதியாகும் பொருட்களை இந்தியாவிலேயே தயாரிப்பதற்குத் தேவையான தொழில்களை ஊக்குவிப்பது. சுயசார்புதான், திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாக இருந்தது.

இந்தப் புதிய தொழில்களை யார் நிறுவுவது? விடுதலை பெறுவதற்கு முன்னரே இந்தியப் பொருளாதாரத்தில், ஒரு பலம் வாய்ந்த இடத்தைப் பெற்று வளர்ச்சியடைந்த இந்திய ஏகபோகக் குடும்பங்களிடம் இந்தப் பணியெனும் பதவிகள் ஒப்படைக்கப்பட்டன. வெளிநாட்டு மூலதனங்களின் மீது கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. வெளிநாட்டுக் கம்பெனிகளை இந்தியாவுக்குள்

www.tamilarangam.net



வரவழைப்பதற்கு மாறாக வெளிநாட்டுத் தொழில் நுட்ப ஒத்துழைப்பையும், கடன்களையும்தான் புதிய கொள்கை சார்ந்திருந்தது.

பொதுத் துறைக்கு 'பாம்பே பிளான்' மூலகர்த்தாக்கள் அளித்ததைவிட மகத்தான் இடம் நேருவின் கோட்பாட்டில் இருந்தது. முக்கியத் தொழில்கள் பல, பொதுத்துறைக்கு ஒதுக்கப்பட்டன. அதேபொழுது ஏகபோகங்களுக்கு முன்னர் இல்லாதிருந்த சில கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டன. சிறு தொழில்களுக்கும் பரவலான பாதுபாப்புகள் அறிவிக்கப்பட்டன. பெருகி வரும் மக்கள்தொகைக்கு தொழில் அளிக்கும் மகத்தான பொறுப்பை சிறுதொழில் துறை ஏற்க வேண்டியிருந்தது. இதையெல்லாம் உறுதி செய்ய லைசென்சுகள், கண்டிரோல்கள் போதிய கட்டுதிட்டங்களும் கொண்டு வரப்பட்டன.

**முன்னேற்றமும்-வளர்ச்சியும்**

மேற்குறிப்பிட்டவைகளனைத்தும் காலனியாதிக்கக் காலகட்டத்தின் கொள்கைகளிலிருந்து அடிப்படையிலேயே மாறுபட்டிருந்தன. இதனால் நற்பயனும் விளைந்தது. புதிய தொழில்கள் பல உருவாகி வளர்ச்சியுற்றன. இறக்குமதியாகிக் கொண்டிருந்த பொருட்கள் பலவற்றை இந்தியாவே தயாரிக்க ஆரம்பித்தது. இறக்குமதி அறுபதுகள் முடிவதற்குள், ஐம்பதுகளின் முடிவில் இருந்த நிலைமையை ஒப்பிடும்பொழுது தேசிய வருவாயில் அது பாதியாக குறைந்து விட்டதை பார்க்க முடியும். விடுதலைக்கு முன் இந்தியாவில் பயன்படுத்தப்பட்டு வந்த இயந்திர சாதனங்களின் 70 சதவிகிதமும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருப்பினும், அறுபதுகளின் இறுதியாவதற்குள் அது 25 சதவிகிதமாகக் குறைந்து விட்டது. இதைப் போலவே வேறு அனைத்துப் பொருட்கள் விஷயத்திலும் முன்னேற்றம் ஏற்பட்டன. சுயசாப்புக் கொள்கை வலியுறுத்தப்பட்டதால் எண்ணற்ற உயர் கல்விக் கூடங்களும், ஆராய்ச்சிக் கூடங்களும் உருவாயின. பரம்பரைத் தொழில்களும் புத்துயிர் பெற்றன. விடுதலைக்கு முன்னர் 0.3 சதவிகிதமாக மட்டுமே ஆண்டு வளர்ச்சி பெற்றிருந்த விவசாய உற்பத்தி ஏறத்தாழ 8 மடங்கு வேகத்தில் வளர்ச்சி பெற்றது.

1900-01/1945-46 வரையிலான காலகட்டத்தில் இந்தியாவின் தேசிய வருவாய் ஆண்டுக்கு 1.2 சதவிகிதம் அளவுக்குத்தான் வளர்ச்சியுற்றிருந்தது. மக்கள் தொகை வளர்ச்சியைவிட மெதுவாக....! அதாவது இந்தியர்களின் சராசரி வருவாய் காலனியாதிக்கக் காலகட்டத்தில் வீழ்ச்சியடைந்து கொண்டிருந்தது. ஆனால் முதலாவது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தேசிய வருவாய் முறையே 3.7, 4.1 சதவிகித அளவில் ஒவ்வொரு ஆண்டும் உயர்ந்தன. அதேபோல் தனிநபர் வருவாயும் முறையே 1.8, 2.1 சதவிகிதம் உயர்ந்தது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியாண்டைத் தவிர்த்தால் வளர்ச்சி வேகம் மேலும் உயர்ந்ததைக் காணலாம். தேசிய வருவாய் 4.6 சதவிகித வேகத்திலும், தனிநபர் வருவாய் 2.3 சதவிகித வேகத்திலும் வளர்ந்தன. காலனியாதிக்கக் காலகட்டத்தின் அசைவற்ற தன்மையைத் தாண்டிச் செல்ல நேருவின் ஐந்தாண்டுத் திட்டங்களால் முடிந்திருக்கிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பொதுத் துறைக்கும் திட்டங்களுக்கும் நேரு அளித்த முக்கியத்துவம் சர்ச்சையைக் கிளப்பியது. பொதுத் துறையை சோசலிசத்திற்கான பாதை என இடதுசாரிகள் வாழ்த்தினர். அதேபோல் வலதுசாரிகள் 'நேருவின் சோசலிஸ்டு லைசென்ஸ்-பெர்மிட் ராஜ்' என்று விமர்சித்தனர். இது இடதுசாரி, வலதுசாரி எனப் பிளவை ஏற்படுத்தியது. சுதந்திரக் கட்சி, ஜனசங்கம் போன்ற கட்சிகள், பொதுத்துறை, திட்டமிடுதல் போன்றவற்றை முடிவு கட்டி முற்றிலும் சுதந்திரமான ஒரு பொருளாதார அமைப்பை உருவாக்க வேண்டும் என்று கூறின. இந்த வலதுசாரிகளுக்கும் இடதுசாரிகளுக்கும் இடையில் நடுநிலைக் கோட்பாடாக நேருவின் கொள்கைகள் சிறப்பிக்கப்பட்டன.

நேருகொள்கைகளின் பொற்காலம் 1965-66 ஆண்டு கொடிய வறட்சியுடன் முடிவுற்றது. அந்த ஆண்டு தேசிய வருவாய் 5.6 சதவிகிதம் குறைந்து விட்டது. அடுத்த மூன்றாண்டுகளில் திட்டத்தையே கைவிட நேர்ந்தது. மிகவும் எதிர்பார்ப்புடன் தொடங்கிய நான்காவது திட்டக் காலத்தில் 3.3 சதவிகிதம்தான் வளர்ச்சி பெற முடிந்தது. ஐந்தாவது திட்டத்தில் வளர்ச்சி விகிதம் உயர்ந்திருப்பினும் 1979-80இல் செங்குத்தாக மீண்டும் விழுந்துவிட்டன. பொருளாதார வளர்ச்சியின் ஊசலாட்டம் அதிகரித்து விட்டதோடன்றி, 1965-66, - 1979-80 வரையிலான காலகட்டத்தை மொத்தமாக எடுத்துக் கொண்டால் ஒவ்வொரு ஆண்டும் பொருளாதார வளர்ச்சி 3.02 சதவிகிதம் மட்டுமே இருந்தது. இந்திய பொருளாதார வளர்ச்சி மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துக் கொண்டிருப்பதாகப் பரவலாக ஒப்புக் கொள்ளப்பட்டது.

நேருவின் சரியான கொள்கைகளில் இருந்து நழுவியதால் இது ஏற்படவில்லை. மாறாக நேருவின் கொள்கையில் இருந்த பலவீனமே இதற்குக் காரணம். பொருளாதார முன்னேற்றத்திற்குப் பாதை போட்ட அதே கோட்பாட்டிற்குள் பதுங்கிக் கொண்டிருந்த முரண்பாடுகள், திரையைக் கிழித்து வெளிவரத் தொடங்கின. நெருக்கடியும் உச்சக்கட்டத்தைஅடைந்தது.

**வளர்ச்சித் திட்டத்தின் முரண்பாடுகள்**

விடுதலைப் பெற்ற பிறகு ஏற்படுத்தப்பட்ட கடுமையான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் இந்திய உள்நாட்டுச் சந்தையை இந்தியத் தொழிலதிபர்களுக்கே சொந்தமாக்கின. இது தொழில் வளர்ச்சிக்கு வழிகோலியது என்பதைப் பார்த்தோம். தொடர்ந்தும் தொழில் வளர்ச்சி முன்னேற்றம் பெற வேண்டுமானால், இந்தியாவின் உள்நாட்டுச் சந்தை விரிவடைய வேண்டும். இறக்குமதிக் கொள்கைகள் ஒரேயடியாகச் சந்தையை விரிவுபடுத்துமேயல்லாது, தொடர்ந்து விரிவுபடுத்தும் என்பதற்கு உத்திரவாதமில்லை! இது நடைபெற வேண்டுமென்றால் மக்களின் வாங்கும் சக்தி உயர வேண்டும். இது நடைபெறவில்லை. விளைவு? சந்தைநெருக்கடியே..! இவ்வாறு இறக்குமதி மாற்று உற்பத்திக் கொள்கையின் பாதை அடைபட்டுவிட்டது.

பெரும்பான்மை மக்கள் உழைத்து வாழும் விவசாயத் துறையை எடுத்துக் கொள்வோம். காலனியாதிக்கக் கால கட்டத்துடன் ஒப்பிடும்போது குறிப்பிடத்தக்க

www.tamilarangam.net



விவசாய வளர்ச்சி பெற்றிருப்பது உண்மைதான். ஆனால் ஏறத்தாழ 2.6 சதவிகிதம் மட்டுமே. மக்கள் பெருக்கத்தை விட சற்று உயர்ந்த வேகத்தில், விளைவு? சுதந்திரத்திற்குப் பின்னர் மக்களுடைய சராசரி வருவாயில் குறிப்பிடத்தகுந்த எத்தகைய முன்னேற்றமும் ஏற்படவில்லை. 1950-51இல் சராசரி இந்தியனின் தேசிய வருவாய் 462 ரூபாயும் விவசாயத்துறையில் ஒருவருடைய வருவாய் 402 ரூபாயாகவும் இருந்தன. விவசாயத்துறை வருவாய் சராசரி இந்தியனின் வருவாயை விட 13 சதவிகிதம் தாழ்ந்திருந்தது. இதை மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் என்று கூறமுடியாது. ஆனால் 1984-85 நிலைமை என்ன தெரியுமா? சராசரி இந்தியனின் வருவாய் 430 ரூபாய் மட்டும்தான் உயர்ந்தது. (அனைத்துக் கணக்குகளும் 1970-71 ஆம் ஆண்டு விலைகளின் அடிப்படையில்) விவசாயத்துறையில் தனிநபர் வருவாய் தேசியத் தனி நபர் வருவாயின் 56 சதவிகிதம்தான். 35 ஆண்டுகாலத்திற்கிடையில் விவசாயத் துறையில் தனிநபர் வருவாய் 7 சதவிகிதம் மட்டுமே உயர்ந்தன.

இதுவே பெரும் நிலப்பிரபுக்கள் மற்றும் விவசாயத் தொழிலாளிகள் சராசரிதான் என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

இரண்டு விஷயங்களை நினைவுபடுத்துகிறோம். (1) இந்திய சர்க்கார் வெளியிடும் தேசிய வருவாய்க் கணக்கின்படி, விவாயத்துறையிலிருந்து கிடைக்கும் வருவாயில் லாபம், வட்டி, குத்தகை போன்றவற்றின் வாயிலாக பெரும் நிலப் பிரபுக்களுக்குக் கிடைக்கும் வருவாய் 1970-71இல் மொத்த விவசாய வருவாய் 7.7 சதவிகிதமாக இருந்தது. 1984-85இல் 12.4 சதவிகிதமாக உயர்ந்தது. (2) விவசாய உற்பத்தி, சில பிராந்தியங்களை மட்டும் மையமாகக் கொண்டுதான் வளர்ச்சி பெற்றது. பஞ்சாப், ஹரியான, மேற்கு உத்திரபிரதேசம் போன்ற பிராந்தியங்களைத் தவிர்த்தால் இந்தியாவின் பெரும்பான்மை ஜில்லாக்களிலும் தனிநபர் உற்பத்தி குறையத்தான் செய்தது.

சுருங்கக்கூறினால் சராசரி உற்பத்தி மெதுவாகமட்டுமே வளர்சசி பெறுவது; அதைமேலும் சமனின்றி வினியோகிப்பது போன்றவற்றின் விளையு என்னவாகும்? வறுமை பெருகும். . . மக்கள் தொகையில் 40-50 சதவிகிதத்தினர் உணவிற்குகூட வழியின்றி பரமஏழையாக வாழநேரிடுகிறது. இது தான் விவசாயத்துறையின் நிலைமை. இதற்கு என்ன காரணம்? இங்குதான் நேருவின் கொள்கையில் உள்ள மிக முக்கியமான பலவீனம் வெளிப்படுகிறது. நிலச் சீர்திருத்தத்தை அமல் செய்வதில் தோல்வி ஏற்பட்டது. நிலச் சீர்திருத்தத்தின் வாயிலாக நிலத்தை விவசாயிக்கு அளிப்பதற்கு மாறாக பசுமைப் புரட்சியின் நோக்கமே பழைய நிலப்பிரபுக்களை நவீன விவசாயிகளாக மாற்றுவதுதானே! இந்த முயற்சி வெற்றிபெறவில்லை. நிலப்பிரபுக்கள் இன்றைக்கும் பாதி பழைய உலகிலேயே இருக்கின்றனர்.

ஏன் இவர்கள் நவீன விவசாயிகளாக மாறுவதற்கு விரும்பவில்லை? ஒரு உதாரணம் வாயிலாக விளக்குகிறோம். நிலத்தைக் குத்தகைக்கு அளித்து விவசாயம்செய்யும் ஒரு நிலவுடைமையை எடுத்துக்கொள்வோம். ஒரு ஹெக்டர்

www.tamilarangam.net



நிலத்திற்கு 1500 ரூபாய் குத்தகை என்று வைத்துக்கொள்வோம். அதே பொழுது இந்த நிலத்தை நவீன முறைப்படிப் பயிர் செய்ய ஒரு ஹெக்டருக்கு 10,000 ரூபாய் செலவாகும் என்றும் வைத்துக்கொள்வோம். இந்தத் தொகையை வங்கியில் போட்டால் 1000 ரூபாய் வட்டி கிடைக்கும். 10,000 ரூபாய் தொகையை நிலத்தில் முதலீடு கிடைக்கும். 10,000 ரூபாய் விவசாயத்திலிருந்து லாபம் கிடைத்தால் போதாது. நிலத்தை குத்தகைக்கு விட்டால் கிடைக்கும் 1,500 ரூபாய் உட்பட குறைந்தபட்சம் 2,500 ரூபாயாவது கிடைக்க வேண்டும், நிலத்தை குத்தகைக்கு விட்டால் கிடைக்கும் பயன், நிலத்தில் நவீன விவசாயம் செய்ய இவ்வாறு தடையாக இருக்கிறது. அதைப் போலவே அடிமைவேலை மற்றும் சாதி அடக்குமுறை போன்ற, புராதன முதலாளித்துவச் சுரண்டல் முறை வாயிலாக, வருவாய் ஈட்டும் வாய்ப்புகள் இன்றைக்கும் இந்தியக் கிராமங்களில் இருந்து கொண்டிருப்பதால், நவீன விவசாய முனைவர்களாக மாற நிலச் சொந்தக்காரர்கள் மறுக்கின்றனர். அவர்கள் இன்றைக்கும் அரை நிலப்பிரபுத்துமாகவே தொடர்கின்றனர். பசுமைப் புரட்சியின் வாயிலாக ஈட்டிய லாபத்தை மீண்டும் நிலத்தில் முதலீடு செய்து லாபத்தைப் பெருக்குவதற்கு மாறாக, சாதிச் சுரண்டல், கொத்தடிமை, யூகவியாபாகம் போன்றவற்றின் மூலமாகத் தான் பயனடைய விரும்புகின்றனர். விளைவு? விவசாய உற்பத்தித் திறனும், உற்பத்தியும் எதிர்பார்த்த அளவுக்கு உயரவில்லை. அது மட்டுமின்றி நாம் கண்டறிந்ததைப் போலவே வரையறையான வளர்ச்சியின் பயன் கூட ஒரு சிலரிடமே தங்கிவிடுகிறது. பெரும்பான்மை மக்களும் வறுமையிலேயே உழல்கின்றனர். . .

மக்களின் வாங்கும் திறன் உயரவில்லை. எனவே இது உள்நாட்டுச் சந்தையை எதிரிடையாகப் பாதித்தது. அறுபதுகளின் மத்தியிலிருந்து பொதுத்துறை முதலீட்டில் ஏற்பட்ட மந்தநிலை இந்தச் சந்தை நெருக்கடியை மேலும் அதிகமாக்கியது. பொதுத்துறையின் வளர்ச்சி மந்தநிலைக்கு அரசின் வளம் சேர்க்கும் கொள்கையால் விளைந்த நெருக்கடிதான் முக்கியக் காரணம். பொதுத் துறையை அடிப்படையாகக் கொண்ட வளர்ச்சியால் ஏற்பட்ட செல்வம் முழுக்க ஏகபோகங்கள் மற்றும் நிலப் பிரபுக்களிடம் சென்றடைந்து விட்டது. ஆனால் இவர்களிடமிருந்து நேரடி வரிமூலம் பணம் திரட்ட சர்க்கார் முயற்சிக்கவில்லை. மாறாக மறைமுகவரி, மற்றும் பற்றாக்குறைப் பணம் வாயிலாகத்தான் வளம் திரட்ட முயன்றது. இவை இரண்டுமே விலையேற்றத்திற்கு வழி வகுக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. விலையேற்றம் என்பதைச் சொல்லத் தேவையில்லை. விலையேற்றம் பொருட்களை வாங்கும் மக்களுக்கு இழப்பேற்படுத்துகிறது. விற்பனையாளர்களுக்கு லாபத்தையும் அளிக்கிறது. இந்த லாபத்தில் ஒரு பங்கு சர்க்காருக்கும் கிடைக்கிறது ஆனால் பொருட்களை வாங்க மட்டும் விதிக்கப்பட்ட சாதாரண மக்கள் விலையேற்றம் ஒரு எல்லையைத் தாண்டியவுடன் எதிர்ப்புக் குரல் எழுப்ப ஆரம்பித்தனர். விலையேற்ற எதிர்ப்புப் போர் பலமடைந்ததும் விலையேற்றத்தால் விளைந்த தடங்களில் சென்று வளம் திரட்டுவது சிரமமாகிவிட்டது. வள நெருக்கடி பொதுத்துறையில் முதலீட்டின் வளர்ச்சியைச் சுருக்க அரசை நிர்ப்பந்தத்திற்குள்ளாக்கியது.

www.tamilarangam.net



எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப பொதுத்துறை லாபகரமாக இயங்காததும் ஒரு தலைவலியாகி விட்டது. பொதுத்துறையின் திறனில்லாமைக்கு அடிப்படைக் காரணம். பொதுத் துறை சுதந்திரமாகச் செயல்படாமல் ஆட்சியிலிருக்கும் அதிகார வர்க்கம் மற்றும் ஏகபோக நலன்களுக்கு அடிபணிவதுதான்! லாபத்தைவிட மொத்தப் பொருளாதாரக் கட்டமைப்பின் தேவைகளை உள்ளிட்டுத்தான் விலை போன்றவை நிர்ணயிக்கப்படுகின்றன. தனியார் துறையின் பொறுப்பின்மை போன்றவற்றால் கைவிடப்படும் நோயுற்ற தொழில்களை ஏற்க நேரிட்ட பிறகு பொதுத்துறையிலும் இழப்பு அதிகமாகிறது. கட்டுக் குலைந்த நிர்வாகத்தால் பிரச்சினை மேலும் நெருக்கடிக்குள்ளானது. பொதுத்துறை அரசியல் பிச்சைக்காரர்களின் உலவிடமாகவும், அவர்களுடைய கறவை மாடாகவும் மாறியது. ஊழல் மற்றும் 'கமிஷன்'களில் மிதந்தது...!

ஆட்சி இயந்திரத்தின் நெறி தவறியதால் அவை கட்டுப்பாடு ஏஜென்சிகளையும். அவற்றின் நடவடிக்கைகளையும் எதிர்மாறாகப் பாதித்தன. லைசென்சிங் கொள்கை மற்றும் கட்டுப்பாடுகளையெல்லாம் தாண்டிக் குதிக்கவும், அவற்றைத் தங்களுடைய நலன்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ளவும் ஆற்றல் பெற்றது இந்திய ஏகபோகங்கள் இதை அரசு நிமித்த கமிட்டிகளே அம்பலப்படுத்தியிருக்கின்றன. இதற்கு நேர் விபரீதமானது கொரியாவின் அனுபவம் என்பதை எடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. இன்றைக்குச் சிலர் வியாக்கியானம் செய்வதைப் போல் கட்டுப்பாடுகள் இல்லாமைதான் கொரியாவின் வெற்றிக்கான ரகசியம் என்பது தவறு. கட்டுத் திட்டங்களைச் சரியாக அமல்படுத்தியதால்தான் கொரியாவால் முன்னேற முடிந்தது இதன் பின்னணியைக் கற்றுக்கொண்ட பண்டிதர்கள் சிலர் கூறியவை சுவையானது. ஆரம்பத்தில் கொரிய ஏகபோகங்கள் இந்திய ஏகபோகங்களைவிட மிகவும் பலவீனமாக இருந்திருக்கின்றன. அவற்றில் பல ஏகபோகங்களும் ராணுவ ஆட்சியைச் சார்ந்திருந்தன. மேலும் பல ஏகபோகங்கள் ராணுவ ஆட்சியாலேயே படைக்கப்பட்டவை. எனவே மிகவும் கட்டுப்பாடான திட்டமிடும் பணி சாத்தியமாயிற்று. ஆனால் விடுதலைக்கு முன்னரே இந்தியாவில் ஏகபோக மேலாதிக்கம் பெரும் பலம் கொண்டதாகத்தான் இருந்தது. அதனால் மேற்பார்வை, கட்டுப்பாடு போன்றவற்றில் அரசின் பணி மிகவும் சிரமத்துக்குள்ளானது. கட்டுத்திட்டங்கள் நாளாவட்டத்தில் சிகப்பு நாடாக்களும், ஊழல் முடிச்சுகளுமாக மாறின. . .! ராஜாஜி தொடர்ந்து எச்சரித்து வந்த 'லைசென்ஸ்-பெர்மிட் ராஜ்' ஒரு அப்பட்டமான உண்மையாகி விட்டது!

### புதிய கொள்கைகளும், புதிய முன்னேற்றமும்

வளர்ச்சிக் கொள்கைகளில் ஒரு சீர்திருத்தம் கொண்டு வருவதற்கான தேடல்கள் 4ஆவது திட்டத்தின் சோக முடிவுடன் தொடங்கியது எனக் கூறலாம். 6ஆவது திட்டத்தின் அணுகுமுறைகளில் புதிய கோட்பாட்டு அணுகுமுறையின் நிழலாட்டத்தைக் காணலாம். 7ஆவது திட்டம் புதிய வளர்ச்சிக் கொள்கையின் உறுதிமிக்கப் பிரகடனமாகவே இருந்தது.

www.tamilarangam.net



இந்த மறு சிந்தனையின்படி இந்தியாவின் தொழில் மந்த நிலைக்கு சந்தை நெருக்கடி அல்லது 'தேவை' (டிமாண்ட்) இல்லாமை காரணம் அல்ல என்பது தெளிவாயிற்று. சாமான்ய மக்களின் அன்றாடத் தேவைப் பொருட்களின் 'டிமாண்ட்' குறைகிறது என்பது உண்மைதான். ஆனால் பணக்காரர்களின் ஆடம்பரப் பொருட்களின் விற்பனை அதிகரித்துக் கொண்டிருக்கிறது. விடுதலைக்குப் பிறகு காலம் நெடுக, அன்றாடத் தேவைப் பொருட்களின் பத்து மடங்கு வேகத்தில்தான் ஆடம்பரப் பொருட்களின் விற்பனை வளர்ச்சியடைந்து கொண்டிருந்தது! இன்றும்கூட தேவைக்கேற்ப இத்தகைய ஆடம்பரப் பொருட்கள் கிடைக்கவில்லை என்பதைத்தான், அவற்றின் மீதான அபரிமித மோகம், கள்ளக் கடத்தல், கறுப்புச் சந்தை போன்றவை நிரூபிக்கின்றன. சாமான்ய மக்களின் அன்றாட உபயோகப் பொருட்களுக்கு மாறாக பணக்காரர் அழுத்தம் கொடுத்தால் உள்நாட்டு சந்தைப் பிரச்சினையை ஓரளவு சமாளிக்கலாம். இந்தியாவில் பணக்காரர்களின் சதவிகிதம் குறைவாக இருப்பினும் எண்ணிக்கையில் அவர்கள் சிறுத்திருக்கவில்லை. இந்தியாவில் உயர் வருவாய் பெறும் 10 சதவிகிதம் பேர்களின் எண்ணிக்கை 8.5 கோடி, இரு ஜெர்மனியின் மொத்த மக்கள் தொகையே 8 கோடிதான்.

உள்நாட்டுச் சந்தையின் மந்த நிலையைத் தாண்டிக் குதிக்க ஏற்றுமதியைப் பெருக்குவதுதான் இன்னொரு வழி. இதற்கு பிரேசில் ஒரு முன்னுதாரணம். உலகில் இந்தியாவுக்கு அடுத்தபடியாக மிகவும் கூடுதலாக ஏழைகள் வசிக்கும்இந்த நாடு 1965க்கும் 1973க்கும் மத்தியில் ஆண்டொன்றுக்கு 33 சதவிகிதம் ஏற்றுமதியைப் பெருக்கி, பொருளாதார வளர்சசியில் 'ஒரு பெரும் பாய்ச்சல்' நடத்தி எல்லோரையும் வியக்க வைத்து விட்டது. பிரேசீல் மட்டுமின்றி அர்ஜன்டீனா, மெச்சிகோ, தாய்வான், கொரியா, சிங்கப்பூர், ஹாங்காங்போன்ற பல நாடுகள் இந்தப் பாதையில் முன்னேறிய நாடுகளாகும். இறக்குமதி மாற்று உற்பத்திக் கொள்கையிலிருந்து ஏற்றுமதி வளர்ச்சிக் கொள்கைக்குத் திட்டக் கோட்பாடு திரும்பியது. . .

ஆனால் ஏற்றுமதி வளர்ச்சிக் கொள்கை வெற்றி அடைய வேண்டுமானால், சர்வதேச அளவில் போட்டியிடும் பலத்தை இந்தியத் தொழில்துறை பெற்றிருக்க வேண்டும். இதற்காக நவீன தொழில் நுணுக்கத் திறனின் அடிப்படையில் தொழில்துறையை புனரமைக்க வேண்டும். திறனைப் பெருக்கவும், உற்பத்தியை லாபகரமாக்கவும் வெளிநாட்டு ஒத்துழைப்பு தேவைப்படும் இடங்களிலெல்லாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். வெளிநாட்டு மூலதனம் புதிய தொழில் நுட்பத் திறனை மட்டுமின்றி புதிய சந்தைகளையும் வெளிநாட்டில் கண்டடைவதற்கு உதவுமென்று நம்பினார்கள்.

இறக்குமதி படிப்படியாக தாராளமயப்படுத்தப்பட்டது. இந்தியத் தொழில்களின் திறனைப் பெருக்கவும் தன்னைத் தானே நவீனப்படுத்திக் கொள்ள அவற்றை நிர்ப்பந்திக்கவும், சர்வதேசச் சந்தைப் போட்டி உதவும், என்பன போன்ற விளக்கங்கள் வரத் தொடங்கின.

சுருங்கக்கூறின், பிரச்சினை டிமாண்டின் (தேவை) பக்கம் இல்லை; மாறாக சப்ளையின் (வினியோகம்) பக்கம் தொடர்புற்றிருந்தது. உற்பத்தி வளர்ச்சிக்கு

www.tamilarangam.net



தடையாக இருப்பதே வினியோகத்தின் பக்கத்திலிருந்து வரும் முட்டுக் கட்டைகள்தான். எல்லை மீறிய கட்டுப்பாடுகள் மற்றும் சட்டங்கள் விவசாயிகளின் மனதை சோர்வடையச் செய்தன. தேவையற்ற அரசுத் தலையீடுகள் அவர்கள் முன்னிற்பதற்குத் தடையாக இருக்கிறது. திறமைக் குறைவால்ஆண்டுதோறும் பொதுத்துறைக்கு ஏற்படும் இழப்பு வளம் குவிப்புக்கு மிகப்பெரிய தடையாக இருந்து கொண்டிருக்கிறது.

இத்தகைய விளக்கங்களுக்குப் பின்னால் இவற்றை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. வருமான வரிச் சலுகைகள், ஏகபோகக் கட்டுப்பாடுகளை தளர்த்துதல், வெளிநாட்டு மூலதனங்களை ஊக்குவித்தல், இறக்குமதியில் தாராளமயம்.... இவ்வாறு பலப்பல. இவையனைத்தும் ஒன்றுசேரும்போது ஒரு புதிய வளர்ச்சிக் கொள்கை உருவாகிறது.

புதிய வளர்சசிக் கொள்கையின் விமர்சகர்களை வாயடைக்கச் செய்யும் முன்னேற்றம் 80களில் ஏற்பட்டது. இதை ஒப்புக்கொள்ளமலிருக்க முடியாது. எலெக்ட்ரானிக் பொருட்கள், வீடுகளுக்குப் பயன்படும் கருவிகள், போன்று ஏராளமான தொழில்கள் உருவாயின. பெரும்பான்மை மக்களின் வாங்கும் திறனுக்கு வெளியே சுதந்திரமானது இந்தத் தொழில்கள் என்பதனால் விவசாய வளர்ச்சியின் ஊசலாட்டங்கள் எதுவும் இவற்றைப் பாதிக்கவில்லை. பசுமைப் புரட்சிக் கொள்கை விவசாய வளர்ச்சியை சரிந்து போகாமல்பாதுகாத்தது. மொத்தத்தில் ஒரு பொருளாதாரப் புத்துணர்வு ஏற்பட்டது!

1980-81க்கும் 1990-91க்கும் இடையே இந்தியப் பொருளாதாரக் கட்டுமானம் 5.5 சதவிகிதம் உயர்ந்தது. அதுவரையிலான சராசரி வளர்ச்சி ஆண்டுக்கு 3.5 சதவிகிதம் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும் விலையேற்றம் 70களை ஒப்பிட்டால் மிகவும் சணிசமாக உயரவில்லை என்பதையும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். லத்தீன் அமெரிக்க நாடுகளில் இந்தக் காலகட்டத்தில் ஏற்பட்ட விலையேற்றத்துடன் ஒப்பிட்டால் இந்தியாவில் ஏற்பட்ட விலையேற்றம் ஒரு பொருட்டே அல்ல! இந்தியா ஒரு புதிய வளர்ச்சிப் பாதையில் நுழைந்துவிட்டதென்ற கணிப்புடன் எத்தனை 'அக்காடமிக் ஆய்வு'கள் படைக்கப்பட்டன தெரியுமா?

இவையெல்லாம் எவ்வளவு சீக்கிரம் பழைய நினைவுகளாக மாறிவிட்டன! 80களில் நாம் பெற்ற வளர்ச்சி, எதிர்காலத்தைப் பணயம் வைத்து ஆடிய சூதாட்டமே! ஆட்டத்தில் நாம் தோற்று விட்டோம். பணயத்தை ஈட்டெடுக்க சூதாடிகள் வந்திருக்கிறார்கள். இதுதான் இன்றைய நிலைமை.

### எதிர்காலத்தை பணயம் வைத்துச் சூதாட்டம்

இந்திய ஆட்சியாளர்கள் 80களில் கடன்களாலேயே ஒரு அரண்மனையை எழுப்பினார்கள். புதிய பொருளாதார முன்னேற்றத்தில், இறக்குமதி மற்றும் சர்க்கார் செலவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு இரு முக்கிய அம்சங்களாக இருந்தன. இறக்குமதி முக்கியத்துவமான தொழில்கள்தான் 80களில் பிரபலமாக வளர்ச்சியடைந்த தென்பதைக் குறிப்பிட்டிருந்தோமல்லவா? இந்த தொழில் உற்பத்திப் பொருட்களைக்

www.tamilarangam.net



கொள்முதல் செய்பவர்களின் வாங்கும் திறனைப் பெருக்குவதில், சர்க்கார் பட்ஜெட் தாராளமான கொள்கையைக் கடைபிடித்தது. இவை இரண்டையும் உள்நாட்டி லிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் கணக்கற்றுக் கடன் பெற்றுத்தான் செய்து முடித்தார்கள். கடன் என்றால் இந்தப் பிரச்சினையை 'நாளை'யின் தோளுக்கு மாற்றுவது என்றுதான் பொருள். இந்திய ஆட்சியாளர்கள் கடன்களின் வாயிலாகப் பெற்ற பணத்தைப் பயன்படுத்திய முறைகூட, பிரச்சினையின் முடிச்சை எதிர் காலத்தில் அவிழ்க்கும் இடைவெளிகள் அடைபட்டுப் போகும் நிலையில்தான் அமைந்தது!

கடன் வருவாய் உற்பத்திக்கான நடவடிக்கைகளுக்குத்தான் பயன்படுத்தப் படுகிறது என்றால், உற்பத்திப் பெருக்கத்திலிருந்து அரசுக்குக் கிடைக்கும் வருவாய் நாளைக்கு கடன்சுமையைக் குறைகக்கும். ஆனால் ஆட்சிச் செலவுகள் போன்றவற்றிக்கு பயன்படுத்தப்பட்டால்; கடன் நாளைக்கு தாங்க முடியாத ஒரு பெரும் சுமையாக அழுத்திவிடும்... இரண்டாவதாகச் சொன்னதுதான் இன்றைக்கு இந்தியாவில் நடைபெற்றது! 80களின் சர்க்காரின் வளர்ச்சிக்கு அல்லாத செலவுகள் ஆண்டொன்றுக்கு 20 சதவிகிதம் உயர்ந்தது. அதேபொழுது பொதுத்துறை முதலீடு 13 சதவிகிதம் மட்டும்தான் உயர்ந்தது! விலையேற்றம் தவிர்த்தால் பொதுத்துறை முதலீடு வளர்ச்சி 6 சதவிகிதம் மட்டுமே. 1950-51க்கும் 1964-65க்கும் இடையில் பொதுத்துறை முதலீடு இன்றுள்ளதைவிட இரு மடங்கு வேகத்தில்தான் வளர்ச்சியடைந்தது! திட்டத்தின் தொடக்கக் கட்டத்தில் பொதுத்துறை வளர்ச்சியி லிருந்து தான் பொருளாதார எழுச்சி ஏற்பட்டதென்றால், புதிய காலகட்டத்தில் ஆட்சிச் செலவு போன்றவற்றில் ஏற்பட்ட அதிகரிப்புதான் பொருளாதார எழுச்சியானது. அதாவது எதிர்காலத்தின்மீது பெரும் சுமையை ஏற்றி வைக்கும் வளர்ச்சிக் கொள்கைதான் 80களில் கையாளப்பட்டது!

1990-91 ஆண்டு மத்திய பட்ஜெட்டில் வருமானத்தின் 33 சதவிகிதம் கடன் மூலம்தான் திரட்டப்பட்டது. 'எக்கானமிக் சர்வே ரிப்போர்ட்'படி மத்திய சர்க்காரின் மொத்தக் கடன் பொறுப்பு ரூபாய் 4,50,000 கோடியாகும். 1980-81இல் இது 65,000 கோடி ரூபாய் மட்டுமே இருந்தது! மத்திய அரசின் கடன் பொறுப்புகள் 1980-81இல் தேசிய வருவாயின் 45 சதவிகிதமாக இருந்தது 1990-91இல் 88 சதவிகிதமாக உயர்ந்தது. அதேபொழுது மத்திய அரசின் சொத்துக்கள் எவ்வளவு? மத்திய அரசின் அனைத்து அசையும் மற்றும் அசைவற்ற சொத்துக்கள், பிறருக்கு அளிக்கப்பட்ட கடன் எல்லாவற்றையும் சேர்த்து 1990-91இல் 2,36,619 கோடி ரூபாய்தான் இருக்கும். இது தேசிய வருவாயின் 46 சதவிகிதம், 1980-81இல் மொத்தம் சொத்து 59,670 கோடி ரூபாய். இது தேசிய வருவாயின் 44 சதவிகிதம். சொத்துக்கள் தேசிய வருவாயின் வளர்ச்சி அளவில்தான் உயர்ந்திருக்கிறது! ஆனால் கடன் பொறுப்புகள் தேசிய வருவாய் வளர்ச்சியின் இருமடங்கு வேகத்தில் உயர்ந்தன. 1980-81இல் சொத்துக்களும் கடன்பொறுப்புகளும் ஏறத்தாழ சமமாக இருந்தது. இன்று கடன் பொறுப்புகள் சொத்துக்களின் ஏறத்தாழ இரண்டு மடங்காகும். மத்திய அரசுக்கு மாறாக ஒரு வர்த்தக நிறுவனத்திற்கு இந்த நிலை ஏற்பட்டிருந்தால் அந்த நிறுவனம் 'லிக்விடேட்' (கலைக்கப்பட்டிருக்கும்) செய்யப்பட்டிருக்கும்.

www.tamilarangam.net



கடன் பொறுப்புகள் இவ்வாறு அதிகரித்து சர்க்கார் பட்ஜெட்டில் நெருக்கடியேற்படுத்தியதை விளக்குவதற்குமுன், இன்னொரு முக்கிய விஷயத்தையும் சொல்ல விரும்புகிறோம்! கடன் வருவாய் சார்பு நிலை வளர்ந்ததனால் மறைமுக வரி, மற்றும் பற்றாக்குறைப் பணத்தின் முக்கியத்துவத்தைக் குறைக்க நேரவில்லை. மத்திய அரசின் வரி வருவாயில் நேர்முக வரிகளின் விகிதம் 1980-81இல் 21 சதவிகிதமாக இருந்து மன்மோகன்சிங்கின் பட்ஜெட் வந்ததும் 17 சதவிகிதமாகக் குறைந்து விட்டது! பற்றாக்குறைப்பணம் 1980-81இல் 2477 கோடி ரூபாயாக இருந்தது 1990-91இல் 13,000 கோடி ரூபாயாக உயர்ந்துவிட்டது! மத்திய அரசு பட்ஜெட்டின் 9 சதவிகிதம் பற்றாக்குறைப் பணத்தின் வாயிலாகத்தான் 80களில் திரட்டப்பட்டது!

ஆனால் மறைமுக வரிகளையும், பற்றாக்குறைப் பணத்தையும் இவ்வாறு வளம் திரட்டும் பணிக்குப் பயன்படுத்திய பிறகும், விலையேற்றம் ஏன் மேலும் அதிகரிக்கவில்லை. 70களில் விலைகள் 7.8 சதவிகிதம் உயர்ந்தது! 80களில் ஏறத்தாழ 10 சதவிகிதம்தான் விலையேற்றம் அதிகரித்தது. அதுகூடக் குறிப்பாக 80களின் இறுதியாண்டுகளில் ஏற்பட்ட விலையேற்றம்தான் இதற்கு மூன்று காரணங்களைச் சுட்டிக்காட்ட முடியும்.

விவசாயப் பகுதிகளில் அதிகரித்த திவால் நிலை மற்றும் வறுமையை முதலாவதாகக் குறிப்பிடலாம்! ஏழைகளின் எண்ணிக்கை குறைந்து விட்டது என்பது போன்ற அரசுவாதங்கள் 'பொக்கை'யானது! இது தொடர்பான அடிப்படைக் கணக்குகளைத் திரட்டும் பொறுப்பு வகிக்கும் உயர் அதிகாரியான பேராசிரியர் பி.எஸ். மின்ஹாஸ் அண்மையில் வெளியிட்ட முக்கியமான ஆய்வுக் கட்டுரையில் இதை அம்பலப்படுத்தியிருக்கிறார்! அவருடைய மதிப்பீட்டின்படி வறுமைக் கோட்டுக்கு கீழ் இருப்பவர்களின் கணக்கு அரசு கூறுவதைப்போல் 1986-87இல் 30 சதவிகிதத்திற்கு கீழ் இல்லை மாறாக 43 சதவிகிதம். இடப் பற்றாக்குறையால் இது தொடர்பான விளக்கங்களுக்குள் நுழைய விரும்பவில்லை. 80களில் வறுமை குறையவில்லை என்பதற்கு எளிமையான ஒரு பகுத்தறிவு வாதத்தை முன்வைக்கிறோம்.

திவால் நிலைக்கு முக்கிய ஆதாரம் முரண்பாடென்றே கூறவேண்டும். பசுமைப் புரட்சியின் வெற்றிக்கு எடுத்துக்காட்டாக எங்கும் பெருமையாகப் பேசப்பட்ட உபரி தானியச் சேமிப்புதான்! தானியங்களை இறக்குமதி செய்வதற்கு மாறாக ஏற்றுமதி செய்யும் நாடாக நாம் வளர்ந்து விட்டோம் என்று மேன்மை பேசுபவர்கள் ஒரு உண்மையைப் புரிந்து கொள்ளவில்லை; உற்பத்தி பெருகி விட்டதால் இல்லை உபரிக்கு காரணம்; பெரும்பான்மை மக்களிடம் பணமில்லை என்பதால்தான் தானியம் உபரியாகிவிட்டது! 1981-85 காலகட்டத்தில் சராசரி தானியக் கிடைப்பு (இறக்குமதி செய்யப்பட்ட தானியம் உட்பட) 166 கிலோ கிராமாக இருந்தது. உணவு தானியம் உபரியாகக் குவிந்த 1981-85 கால அளவில் சராசரி தானியக் கிடைப்பு 164 கிரோ கிராம் மட்டுமே. இரண்டு கிலோ கிராம் குறைவு? இருந்தும் அறுபதுகளின் பற்றாக்குறை நீக்கி தானியம் உபரியாகிறது எனில் அதற்கு என்ன காரணம்? முக்கியக் காரணம் கிராமத்து மக்களின் வாங்கும் திறன் 80களில் சரிந்து

www.tamilarangam.net



விட்டதுதான். இதுவேதான் விலையேற்றத்திற்குக் கடிவாளமிடும் முக்கியக் காரணியாகவும் இருக்கிறது!

விலை விகித அமைப்பில் சர்க்கார் உணர்வுபூர்வமாக ஏற்படுத்திய முக்கிய மாறுதல்களை இரண்டாவதாக எடுத்துக் கொள்ளலாம். எழுபதுகளின் மத்தியில் இருந்து வேளான் விலைகளை இறக்கி வைப்பது, வேளான் விளைபொருள் விலைகளை உயர அனுமதிப்பது போன்ற விலைக் கொள்கைகளைத்தான் சர்க்கார் கடைபிடித்தது. அதுமட்டுமின்றி ஒன்றுபட்ட பகுதிகளில் பணியாற்றுபவர்களுக்கு விலையேற்றத்திற்கெதிரான பாதுகாப்பை உறுதி செய்தது! உண்மையில் 1980-81க்கும் 1987-88க்கும் மத்தியில் பொதுத்துறை, மற்றும் அரசு ஊழியர்கள், தொழிலாளர்களின் சராசரி வருவாயில் 23 சதவிகிதம் உயர்வேற்பட்டது. விலையேற்றத்தின் சுமையை ஒன்றுபட்ட பகுதியின் தலையில் கூட ஏற்றி வைக்க முயல்வது 70களின் மத்தியில் வெடித்துக் கிளம்பிய எதிர்ப்புக் கிளர்ச்சியை மீண்டும் வரவழைப்பது போலாகும் என்ற உணர்வின் அடிப்படையில்தான் இந்த மாற்றம் விளைந்தது. விலையேற்றத்தின் சுமையை முழுக்க விவசாயிகள் மற்றும் ஒன்றுபடாத உதிரித் தொழிலாளிகள் மீதும் திணிப்பதுதான் புதிய வருவாய்க் கொள்கையாகும்.

மூன்றாவதுதான் இறக்குமதி அதிகரிப்பு. சமையல் எண்ணை போன்றவற்றின் இறக்குமதி பெருக்கம் விற்பனை பொருட்களின் உள்நாட்டுக் 'கிடைப்பை' உயர்த்தியது.

ஆனால் 80களின் இறுதியாவதற்குள் புதிய வளம் திரட்டும் கொள்கையின் பாதையும் அடைபட்டு விட்டது. முதலாவதாகப் பொருளாதார நெருக்கடி விவசாயத் துறையை ஒரு கொந்தளிப்புக்கு அழைத்துச் சென்றது. சரத் ஜோஷிகளும், டிக்காயத்துகளும் தொடுவானில் தோன்றினார்கள். 80களின் இறுதியுடன் விவசாய உற்பத்திப் பொருட்களின் விலையை இழுத்துப் பிடிக்கும் முயற்சிகளையும் சர்க்கார் கைவிட்டது. அடிப்படை விலைகள் கணிசமாக உயர்ந்தன. அது மட்டுமின்றி முன்னாண்டுகளின் நெருக்கடிக்கு நஷ்ட ஈடாக விவசாயக் கடன்களில் கணிசமான ஒரு பகுதியைத் தள்ளுபடி செய்யவும் நேரிட்டது. இந்தத் திருப்பித் தாக்குதல், விலை ஏற்றத்திற்கும், சர்க்காரின் நிதி நெருக்கடிக்கும் மேலும் ஆக்கமூட்டியது.

அடுத்து சர்க்காரின் கடன்சுமை பெருகியதும் ஒவ்வொரு ஆண்டும் கஜானாவிலிருந்து கொடுக்க நேரிடும் வட்டியின் சுமையும் அதிகரித்தது. 1980-81இல் ரெவன்யூ வருவாயின் (அதாவது வரி வருவாய், பொதுத்துறை லாபம். ஃபீஸ், ஃபைன் போன்ற கடன்களைத் தவிர்த்த வருவாய்) 15 சதவிகிதமாக இருந்த வட்டி 1991-92 பட்ஜெட்டில் 32 சதவிகிதமாக உயர்ந்தது. பேராசிரியர் தண்டேக்கரின் மதிப்பீட்டின்படி இன்றைய நிலைமையில் செயற்பாடுகள் நடைபெற்றதால் இரண்டாயிரம் ஆண்டுகளாவதற்குள் ரெவன்யூ வருவாயின் 44 சதவிகிதம் வட்டியாக அளிக்க நேரிடும்.

வட்டி, சம்பளம் போன்ற தொடர் குணாம்சம் மிக்க சர்க்கார் செலவுகளனைத்தும் ரெவன்யூ வருவாயிலிருந்து தான் மேற்கொள்ள வேண்டும் என்பதுதான் பட்ஜெட் தத்துவம். இந்தச் செலவுகள் அனைத்தும் போக ரெவன்யூ

www.tamilarangam.net



வருவாயிலிருந்து மிச்சம் பிடிக்கத்தான் சர்க்கார் குறிவைக்க வேண்டும். ஆனால் ஆட்சிச் செலவும், வட்டிச் செலவும் நெடுக உயர்ந்து கொண்டிருப்பதால் ரெவன்யூ வருவாயிலிருந்து மிச்சம் பிடிக்க முடியவில்லை. அதிருக்கட்டும், தொடர்ச் செலவுகளுக்காக ஒவ்வொரு ஆண்டும் கடன் வாங்க வேண்டியிருக்கிறது. இதைத்தான் ரெவன்யூ பற்றாக்குறை என்கிறோம். மத்திய அரசின் ரெவன்யூ பற்றாக்குறை 1981-82இல் 384 கோடி ரூபாயாக இருந்தது பெருகி 1990-91இல் 17585 கோடி ரூபாயாக உயர்ந்தது.

இதன் விளைவாக மத்திய பட்ஜெட்டில்கடன் மற்றும் பற்றாக்குறைப் பணத்தின் முக்கியத்துவம் அதிகரித்தது. மொத்த பட்ஜெட்டில் இவை இரண்டும் 40 சதவிகிதம் வருகிறது. வழக்கமாகப் பற்றாக்குறைப் பணத்தைத்தான் பட்ஜெட் பற்றாக்குறையாகப் பரிசீலிக்கப்படும். ஆனால் இன்றைக்கு பற்றாக்குறையைப் பற்றி ஒரு புதுக் கருத் தோட்டம் கூட ஏற்பட்டிருக்கிறது. நிதிப் பற்றாக்குறை என்ற பெயரில் இது அறியப்படுகிறது. நிதிப் பற்றாக்குறை=சர்க்காரின் மொத்தச் செலவு-ரெவின்யூ வருவாய். அதாவது கடன் + பற்றாக்குறைப் பணம்=நிதிப் பற்றாக்குறை. 1980-81இல் நிதிப் பற்றாக்குறை 8,887 கோடி ரூபாயாக இருந்தது. 1990-91இல் 43,891 கோடி ரூபாயாக உயர்ந்தது.

நிதிப் பற்றாக்குறை பெருகப்பெருக கடன் பொறுப்பும் வட்டிச் சுமையும் பெருகிக் கொண்டிருக்கும். வட்டிச் செலவு பெருகப் பெருக ரெவன்யூப் பற்றாக்குறை ஏற்பட்டு அதை நிரப்ப மேலும் கடன் வாங்க நேரிடும். இது, நிதிப் பற்றாக்குறையை மேலும் அதிகரிக்கச் செய்யும் நிலைக்கு அழைத்துச் சென்று விடும். இத்தகைய நெருக்கடி வளையத்திற்குள்தான் இந்திய பட்ஜெட் இன்றைக்கு சிக்கித்தவிக்கிறது.

### கடன் பொறியை நோக்கி: அடைபடும் மாற்று வழிகள்

வருவாய்க்கப்பால் தொடர் கடன் பெற்றுச் செலவழிக்கும்இந்திய சர்க்கார், ஒரு நெருக்கடி வளையத்திற்குள் சிக்கியது எப்படியென்பதைப் பார்த்தோம். ஏறத்தாழ இதே போன்ற ஒரு நிலைமைதான் பிற நாடுகளுடன் இந்தியா மேற்கொண்டிருக்கும் செலவாணி உறவிலும் இருக்கிறது.

இந்தியாவில் உற்பத்தியாகும் வருவாயைவிட அதிகம் தான் இந்தியாவில் செலவழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. நாட்டின் வருவாய் இரண்டு வகையில் செலவாகிறது. 1) வாழ்க்கைத் தேவைகளைத் திருப்தி செய்யும் பொருட்களுக்கு. 2) புதிய தொழில்கள் மற்றும் விவசாயம் போன்றவையைத் தொடங்கத் தேவைப்படும் முதலீட்டுக்கு. நாட்டின் குடிமக்களும் கம்பெனிகளும் அவர்களுக்குக் கிடைக்கும் வருவாயை முழுக்க பொருட்களை வாங்கிச் செலவழித்து விட்டால் சேமிப்பில் எதுவும் மிஞ்சாது. வருவாயில் ஒரு பகுதியை அவர்கள் அங்காடியில் செலவழிக்காமல் சேமிக்கிறார்கள். இந்த சேமிப்புதான் முதலீடாக மாறுகிறது. முதலீடு எப்போதும் சம்பாத்தியத்திற்குச் சமமாக இருக்க வேண்டும். ஆனால் இந்தியாவில் நடைபெறுவது இதுவல்ல. இந்த நாட்டின் சம்பாத்தியச் சேமிப்புகள் முதலீட்டுத் தேவைகளுக்கு போதவில்லை. இந்தக் குறையைப் போக்க வெளிநாட்டினர் அளிக்கும் கடன்களைச் சார்ந்திருக்கிறோம்.

www.tamilarangam.net



ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் மூலதனத்திற்காக உள்நாட்டுச் சம்பாத்தியங்களை மட்டுமின்றி. வெளிநாட்டுக் கடன்களையும் இந்திய சர்க்கார் சார்ந்திருந்தது. ஆனால் முன்பெல்லாம் ஒரு மிதமான அளவில்தான் வெளிநாட்டு உதவியை நாடினோம்! சுயசார்பை கொள்கை அளவிலாவது நாம் கடைபிடித்தோம்! ஆனால் 7ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது நிலைமை மாறியது. ஆறாவது திட்டக் காலத்தில் அசல் வெளிநாட்டுக் கடன்களும் உதவியும் (பழைய கடன்கள் திருப்பிச் செலுத்தப்பட்ட பிறகு மிச்சம் அசலாகக் கிடைக்கும் வெளிநாட்டுப் பணம்) தேசிய வருவாயின் 1.4 சதவிகிதம் மட்டும்தான். ஆனால் 7ஆவது திட்டக் காலத்தில் இந்த அளவு 2.5 சதவிகிதமாக உயர்ந்தது. 7ஆவது திட்டத்தின் கண்ணைப் பறிக்கும் வளர்ச்சி எதிர்காலத்தை அடகு வைத்த சூதாட்டமாக இருந்தது.

இவ்வாறு மேலும் மேலும் வெளிநாட்டுக் கடன்களை நாடியதன் விளைவு என்ன? இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் சுமை நெடுக உயர்ந்து விட்டது. 1980இல் இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் 2056 கோடி டாலராக இருந்தது. உலக வங்கியின் மிக சமீபத்தில் வந்த மதிப்பீட்டின்படி 1991 ஜுன் மாதம் இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் 7200கோடி டாலர். அதாவது இரண்டு லட்சம் கோடி ரூபாய். பிரேசில் மைக்சிகோவுக்கு அடுத்தபடியாக உலகின் மிகப்பெரிய மூன்றாம் உலக நாட்டுக் கடன்காரன் இந்தியாதான் இந்தக் கடனுக்கான 'சர்வீஸ்' செலவுக்குத் தேவைப்படும் வட்டியும், திருப்பிச் செலுத்தும் தவணைகளும் தாங்க முடியாத சுமையாகி அழுந்திக்கொண்டிருக்கிறது. ஏற்றுமதியின் 30 சதவிகிதத்தை இதற்காகச் செலவிட வேண்டியிருக்கிறது! கடன் சர்வீஸ் செலவுகள் இவ்வாறு உயர்ந்ததற்கு இரண்டு முக்கிய காரணங்கள் இருககின்றன. 1) வட்டி விகிதங்கள் உயர்ந்து விட்டன. 1970இல் வாங்கிய கடனுக்கு இந்தியா அளித்த சராசரி வட்டி 2.5 சதவிகிதம். 1989இல்அளித்த வட்டி 6.4 சதவிகிதம்! 2) நெடுங்காலக் கடன்கள் கிடைப்பது சிரமமாகி விட்டது! 1970இல் வாங்கிய கடன்களுக்கு சராசரி கெடு 34 ஆண்டுகள். 1989இல் வாங்கிய கடன்களுக்கு சராசரி கெடு 19 ஆண்டுகள் மட்டுமே! இந்தியாவின் பெருத்துவிட்ட கடன் சுமையின் கணிசமான பகுதி முன் கடனை அடைப்பதற்கும், வட்டி கொடுக்கவும் செலவழிந்ததுதான் கண்ட பலன்! நான்காவது அத்தியாயத்தில் கடன்பொறியின் எளிமையான விளக்கத்தைக் கொடுத்திருக்கிறோம் அதை இன்னொரு முறை படித்தால் இந்தியா நுழைந்திருக்கும் பாதையிலுள்ள வஞ்சகக் குழிகளைக் காண முடியும்.

கடன் பொறிக்கான பாதையில் ஒரு திருப்பமாக 1981இல் நிதி நிறுவனத்துடன் 500 கோடி டாலர் கடன் ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்தியாவில் உருவாகிக் கொண்ருந்த புதிய வளர்ச்சிக் கொள்கைகளுக்கு சர்வதேச நிதி நிறுவனத்தின் பூர்வாங்க அங்கீகாரம் கிடைத்தது. கடன் அளிக்கத் தகுதியான நாடு இந்தியா என்று பாராட்டப்பட்டது. தொழில் நுணுக்க மொழியில் கூறுவதானால் இந்தியாவின் 'கிரெடிட் ரேட்டிங்' உயர்ந்தது. கடன் பெறும் நிறுவனங்கள் வட்டியும் அசலும் காலக்கெடு தவறாமல் செலுத்தும் தகுதியுடையனவா என்பதைக் கண்டறிவதைத் தொழிலாகக் கொண்ட உலகப் புகழ் 'கன்சல்டிங் கம்பெனிகள்' இருக்கின்றன. இவற்றில், அமெரிக்காவில் 'மூடி' (Moody) 'ஸ்டாண்டர்டு அண்டு பூவர்'

www.tamilarangam.net



(Standard and Poor) போன்ற கம்பெனிகளும், டோக்கியோவில் 'ஜப்பானீஸ் பாண்ட் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட்' (Japanese Bond Research Institute) கம்பெனியும் தான் மிகவும் பிரபலமானவை. இன்றைக்கு இந்தக் கம்பெனிகளின் முக்கியப் பணி வர்த்தக- தொழில் நிறுவனங்களின் 'கிரேடிட் ரேட்டிங்'கை கணிப்பதல்ல; மாறாக நாடுகளின் 'கிரெடிட் ரேட்டிங்'கை கணிப்பதுதான்! இவர்களும் இந்தியாவை வெளிநாட்டுக் கடன் பெறத் தகுதியான முதல்தர நாடாக ஏற்றுக்கொண்டதும் வெளிநாட்டுக் கடன் சந்தையின் கதவுகள் இந்தியாவுக்காகத் திறக்கப்பட்டன. இந்தியாவுக்கு எவ்வளவு வேண்டுமானாலும் கடன் தர எல்லோரும் முன் வந்தனர். இந்திய அரசும் மறு சிந்தனையோ, தயக்கமோ காட்டவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உலக வங்கியும் நிதி நிறுவனமும் சேர்ந்து இரண்டு பணிகளைச் செய்து முடித்தன. முதலாவதாக இந்தியாவின் சொற்ப வட்டி வெளிநாட்டுக் கடனுதவித் திட்டத்தை வெட்டிக் குறைந்துவிட்டன. விருப்பம்போல் சந்தையிலிருந்து கடன் பெற இந்தியாவுக்கு இயலும் அல்லவா? பிறகு எதற்கு சலுகைக் கடன்கள்? (கன்செஷனல் லோன்ஸ்) அவற்றை ஏனைய ஏழை நாடுகளுக்குக் கொடுக்கலாமல்லவா? இப்படித்தான் 1980-81இல் இந்தியா பெற்ற கடனின் 16 சதவிகிதம் மட்டுமேயான உயர் வட்டி செலுத்த வேண்டிய வர்த்தகக் கடன்கள், 1988-89 ஆனதும் 41 சதவிகிதமாக உயர்ந்து விட்டது. 'கடன் பொறி' என்ற புகழ்பெற்ற நூலின் ஆசிரியையும் 1981இல் நிதி நிறுவனமும் இந்தியாவும் செய்து கொண்ட ஒப்பந்தத்தை விமர்சித்தவருமான ஷெரில் பேயர் 1987இல் எழுதிய விளக்கத்தைப் படியுங்கள் : 'இந்திய அரசு வம்பளப்பதைப் போல் 1981இல் எளிதாகக் கடன்பெற முடிந்திருக்கலாம். ஆனால், இன்றைக்கு நிலைமை மாறிக்கொண்டிருக்கிறது; திருகாணி இருகிக் கொண்டிருக்கிறது. உலக வங்கி, இந்தியாவை வர்த்தக வங்கிகளில் இருந்து கடன் வாங்கச் சொல்லித் தூண்டுகிறது! 7ஆவது திட்டக் காலத்தில் ஆண்டு தோறும் 200 கோடி டாலர் வீதம் வாங்கத்தான் இந்திய அரசு திட்டம் போட்டிருந்தது. ஆனால் உலக வங்கி 450 கோடி டாலர் வீதம் வாங்க வேண்டுமென்று கூறுகிறது.

இரண்டாவதாக, இந்தியாவின் இறக்குமதிக் கொள்கையை மேலும் தாராளமயப்படுத்த அவர்கள் வற்புறுத்த ஆரம்பித்தனர். ராஜீவ் காந்தியின் பதவி ஏற்புக்குப் பிறகு அதிலும் வெற்றி கண்டனர். ஆடம்பரப் பொருட்கள் போன்ற தேவையற்ற இறக்குமதிகளும்இயந்திரக் கருவிகள் போன்ற தவிர்க்கக் கூடிய இறக்குமதிகளும் பெருகின! இறக்குமதியில் பெருக்கத்தின் 40 சதவிகிதம் இயந்திரக் கருவிகள் மற்றும் தொழில் கச்சாப் பொருட்களும்தான். இந்தியாவின் இயந்திரத் தொழில் மந்தமடைந்தது. போஃபர்ஸ் துப்பாக்கிகளும், வெஸ்ட்லாண்ட் ஹெலிகாப்டர்களும், ஜெர்மன் சப்மரீன்களும், விமானந்தாங்கிக் கப்பல்களும் இந்தியா வாங்கிக் குவித்தன. இந்தியாவின் தற்காப்புக் கருவித் தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறனில் பாதி செயல்படாமலேயே இருந்த கால கட்டத்தில்தான் தேசபாதுகாப்பின் பேரில் இது நடை பெற்றது என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். இதைத் தவிர வீண் விரய நாடகங்கள் வேறு. ஏஷியாட் (ஆசிய ஒலிம்பிக்)டிலிருந்து பிரதமரின் வெளிநாட்டுப் பயணங்கள் வரை என்னென்னவோ அரங்கேற்றப்பட்டன.

www.tamilarangam.net



இதன் விளைவாக 70களின் மத்தியில் ஏறத்தாழ சமநிலையில் இருந்த ஏற்றுமதியும் மிக வேகமாக அகல ஆரம்பித்தன. இந்தியாவின் வெளிநாட்டு வர்த்தகப் பற்றாக்குறை எழுபதுகளின் இறுதிவரை ஏறத்தாழ 500 கோடி ரூபாயாக இருந்தது, நெடுக உயர்ந்து, 1988-89இல் 13,555 கோடி ரூபாயாகிவிட்டது. (அத்தியாயம் 2இல் கொடுக்கப்பட்டிருக்கும் இந்தியாவின் பேலன்ஸ் ஆம் பேமெண்ட் கணக்கைப் பார்க்கவும்) கல்ஃப் (வளைகுடா நாடுகள்) மலையாளிகள் போன்றோர் அனுப்பிய வெளிநாட்டுப் பணமும் இந்தக் காலகட்டத்தில் பெருகியதால் வர்த்தகப் பற்றாக்குறையை முழுக்கவும் கடன் வாங்கி நிரப்ப நேரமில்லை. 1988-89இல் மாற்றுக் கடன் வாயிலாக 4,598 கோடி ரூபாய் வெளிநாட்டு வருவாய் கிடைத்தது. ஆனால் இதன் முக்கால் பங்கும் கடன்களின் வட்டி கட்டவே செலவாயிற்று. எல்லாவற்றையும் கருத்திற்கொள்ளும்போது 1988-89இல் கரண்ட் அக்கவுண்ட் பற்றாக்குறை 10,409 கோடி ரூபாயாக இருந்தது. கடன் வாங்கி இதை நிரப்பினார்கள்.

கடனைச் சார்ந்திருக்க வேண்டிய இந்த நிலை வளர்ந்து கொண்டேயிருக்க உலக வங்கி மற்றும் நிதி நிறுவனத்தின் குரலும் மாற ஆரம்பித்தது. இறக்குமதியின் தாராளமயமாக்கத்தால் அவர்கள் திருப்தி அடையவில்லை. ரூபாயின் மாற்று மதிப்பைக் குறைக்குமாறு வற்புறுத்த ஆரம்பித்தனர். யாரிடமும் சொல்லாமல் ஒவ்வொரு மாதமும் ரூபாயின் மாற்று மதிப்பை இந்திய அரசு சொஞ்சம் கொஞ்சமாகக் குறைக்க ஆரம்பித்தது. 1980-81இல் ஒரு டாலர் 8 ரூபாயாக இருந்தது, 1988-89 ஆவதற்குள் 14.48 ரூபாயாகிவிட்டது. 1988-89 ஆனதும் ரூபாயின் மாற்று மதிப்பு பாதி அளவுக்கு தாழ்ந்துவிட்டது. ஒரு டாலரின் விலை 1988-89இல் 14.48 ரூபாயானது. 1991 மே மாதம் ஆவதற்குள் மாற்று விலை ஒரு டாலர்=20.53 என்ற நிலைக்கு வந்து விட்டது. இந்தச் சீர்திருத்தம் இந்தியாவின் ஏற்றுமதியைப் பெருக்க உதவிற்று என்றுதான் உலக வங்கி கூறுகிறது. ஆனால் இறக்குமதிச் செலவு உயர்ந்ததை மறைத்து விட்டனர். 1981இல் 8 ரூபாய்க்கு ஒரு டாலர் பெறுமான உற்பத்திப் பொருளை இறக்குமதி செய்யலாமென்றால், 1991இல் அதற்கு 21 ரூபாய் தேவைப்பட்டது. இறக்குமதி தாராளப்படுத்தப்பட்ட பிறகும் இறக்குமதி பெருகியதன்றி குறையவில்லை.

இந்த இக்கட்டான நிலையிலிருந்து மீளவேண்டுமென்றால் இந்தியா தன்னுடைய உள்நாட்டுக் கொள்கையை மாற்றியமைக்க வேண்டுமென்று வங்கி கூறியது. ஆனால் 1989 தேர்தல் ஆண்டாக இருந்ததால் பொருளாதாரக் கொள்கையில் மாறுதல் ஏற்படுத்த இந்திய அரசு தயாராயில்லை! உலக வங்கியும், நிதி நிறுவனமும் திருகானியை முறுக்க ஆரம்பித்தன! இந்திய சர்க்கார் இதற்கு மாற்றாக வட்டிக்கு மாதக் கெடுவில் கடன் வாங்கிச் சமாளித்தது. குறைந்தகாலக் கடன் என்ற செல்லப் பெயர் பெற்ற இந்தக் கடன்களின் காலக் கெடு ஒரு ஆண்டுக்கு கீழ்தான்! 1989இல் தேர்தலுக்க முந்தைய ஆறு மாதங்களுக்குள் இந்திய சர்க்கார் இவ்வாறு 400 கோடி டாலர் கடன் பெற்றதாக டாக்டர் அசோக் மித்ரா மதிப்பீடு செய்கிறார். 'மூடி' போன்ற கம்பெனிகள் கிரெடிட்-ரேட்டிங்கில் இந்தியாவுக்கு முதலிடம் அளித்ததால் கடன் பெறுவதில் குறுகிய காலக் கடன்கள் இன்றைக்கு ஏறத்தாழ 1000 கோடி டாலர் இருக்குமென்று நிபுணர்கள் சிலர்

www.tamilarangam.net



கணக்கிட்டிருக்கிறார்கள். ஏறத்தாழ ஒவ்வொரு மாதமும் காலந்தள்ள வேண்டுமென்றால் காலக்கெடு முடிவதற்கேற்ப புதிய கடன்களைத் தேடியாக வேண்டும் என்ற நிலை இருந்து கொண்டிருக்கிறது.

ஷெரில் பேயர் 1987இல் தொலை நோக்குடன் கூறினார்; "இந்தியாவுக்கு என்ன நேரப் போகிறது. இன்றைக்குக்கூட இந்தியா நெருக்கடிச் சூழலில் சிக்கியிருக்கவில்லை. ஆனால் 1981யைக் காட்டிலும் அது நெருங்கிக் கொண்டிருக்கிறது. உலக வங்கியும் நிதி நிறுவனமும், நெருக்கடி முற்றும்போது இந்தியா புதிய கொள்கையிலிருந்து பின்னோக்கிச் சென்றுவிடுமா என்று அச்சப்படுகின்றன. ஆனால் இது அவ்வளவு சுலபமில்லை இன்னும் சிறிது நாள் சென்றால் முடியவே முடியாது கடன் வாங்கப்பட்ட கோடிகள். பல கோடிகள் செலவிடப்பட்டு விட்டன. இந்தியச் செல்வந்தர்கள் வெளிநாட்டு ஆடம்பரப் பொருட்களின் மீதான மோகத்தைக் கைவிடப் போவதில்லை. தொழில்களுக்கும் இறக்குமதிக் கருவிகள் மற்றும் தொழில் நுட்பத் திறன் மீதான சார்பு நிலைலைக் கைவிடுவது எளிதல்ல. எனவே நெருக்கடி ஏற்படும்போது அது தவிர்க்க முடியாததும்கூட நழுவிச் செல்ல அரங்கில் மாற்றிடம் கிடையாது என்பது நிச்சயம்."

ஷெரில் பேயர் எண்ணியபடி 1990 ஆகஸ்டு மாதம் நெருக்கடி வெடித்துக் கிளம்பியது. ஒருபேரிடியைப் போல் அது வெளிப்பட்டது. 'மூடி'யும் 'ஸ்டாண்டர்டு பூவரும்' ஒரு அறிக்கை விட்டன. இந்தியாவுக்கு கடனளிப்பதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இந்தியாவின் 'கிரேடிட் ரேட்டிங்கை' நாங்கள் குறைக்க முடிவெடுத்திருக்கிறோம்.

இந்த அறிக்கை எல்லோரையும் வியக்கச் செய்து விட்டது என்பதைக் கூறாமலிருக்க முடியாது. இந்தியாவின் ஆட்சி மாற்றம் சுமூகமாக நடந்து விட்டது. அயோத்தியாக் குழப்பம் ஆரம்பமாகவில்லை. ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியப் படை வாபசாகி விட்டது. பஞ்சாபில் அமைதிப் பேச்சுகள் புதிய நம்பிக்கை ஊட்டின. 1989 ஜூலை மாதம் இந்தியாவுக்கு கிடைத்த முதல்தரம் என்ற 'கிரெடிட் ரேட்டிங்' திடீரென கீழிறக்கப்பட்டதற்கு, எத்தகைய அரசியல் நிலையற்ற சூழ்நிலையும் இந்தியாவில் ஏற்பட்டுவிடவில்லை! பொருளாதார நிலையில்கூட இந்தியாவின் உள்நாட்டு வளர்ச்சி ரெக்கார்டு, உலக வங்கியின் விசேஷப் பாராட்டுக்கு உரியதாகத்தான் இருந்தது. கடன் சுமை நெடுக உயர்ந்து விட்டது என்பது உண்மைதான்! ஆனால் 1989 ஜூனைத் தவிர்த்து 1990 ஜூனில் இந்தியாவின் கடன் சர்வீஸ் செலவு, வெளிநாட்டு வர்த்தகப் பற்றாக்குறை, பேலன்ஸ் ஆப் பேமெண்ட் போன்று எதிலுமே கோமாளித்தனமான எந்தச் சருக்கலும் நிகழவில்லை. இடப்பற்றாக்குறைக்கு அஞ்சி அதன் கணக்குகளை இங்கு பட்டியல் போட்டு காட்ட விரும்பவில்லை. (விருப்பமுடையோர் 1991 ஆகஸ்டு 12இன் எக்கனாமிக் டைம்ஸ் இதழில் சஞ்சய் பாருவும், ஜி. பாலச்சந்திரனும் இது தொடர்பாக எழுதிய கட்டுரைகளைப் படிக்கவும்) 'மூடி' கம்பெனியும் மற்றவர்களும் இதுவரை அவர்களுடைய அறிக்கையின் பின்னணி விளக்கத்தைத் தரவில்லை. ஒரு சதித் திட்டத்தின் வாடை இந்த நிகழ்ச்சிப் போக்கிலிருந்து எழுகிறது என்பதை மட்டும் சொல்ல விரும்புகிறோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'கிரெடிட் ரேட்டிங்'கில் ஏற்பட்ட சரிவு இந்தியாவின் கடன் வாய்ப்புக்களை தடம் புரளச் செய்து விட்டது. காலக்கெடு முடிவதற்குள் கடனைத் திருப்பி வாங்க முயற்சிக்கிறார்களே தவிர புதிதாகக் கடன் தர யாரும் முன்வரவில்லை என்ற நிலை உருவாகியது. இந்தியாவின் வெளிநாட்டுச் செலாவணி இருப்பு இந்தியர்கள் இந்திய வங்கியில் இருந்த அவர்களுடைய வெளிநாட்டு நாணய டெப்பாசிட்டுகளைத் திரும்பப் பெறத் தொடங்கினர். ஏறத்தாழ 20,000 கோடி ரூபாய்க்கு மேற்பட்டவை இந்த டெப்பாசிட்டுகள்! நிலைகொள்ளாத இந்தியா தன்னுடைய தங்கச்சேமிப்பை விற்று வெளிநாட்டுச் செலாவணியைப் பெற முயன்றது. முழு பட்ஜெட்டைக் கூட மார்ச் மாதத்தில் சந்திரசேகர் அரசால் தாக்கல் செய்ய முடியவில்லை. எனவே அரசுக்குப் பீதி அதிகமாயிற்று. இந்தியாவின் வெளிநாட்டுச் செலாவணி இருப்பு 1990 ஜூலை மாதம் 5050 கோடி ரூபாய் இருந்தது. 1991 ஜூலை ஆனதும் 2600 கோடியாகக் கரைந்து விட்டது.

இந்திய ஆட்சியாளர்களுக்கு நிதி நிறுவனத்திடம் சரணடைவதைத் தவிர வேறு வழி தெரியவில்லை. ஆனால் நிதி நிறுவனம் பொறியில் அகப்பட்ட இந்தியாவுக்கு எதையும் விட்டுக் கொடுக்கத் தயாராயில்லை. இது 1981 இல்லை 1991 என்பது தெளிவாயிற்று! இந்தியாவின் உள்நாட்டு வளர்ச்சிக் கொள்கையை முழுக்க திருத்தியெழுத வேண்டும் என்ற நிபந்தனை ஒவ்வொன்றாக வெளிக்கிளம்பியது. அவற்றை அமல் செய்கிறோம் என்று உறுதியளித்த பிறகும் நிதி நிறுவனம் திருப்தியடையவில்லை. அமல் செய்யப்பட்ட பிறகுதான் அன்னியச் செலாவணி நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான கடனுதவியைச் செய்ய முடியும் என்று நிதி நிறுவன அதிகாரிகள் கூறி விட்டனர். தங்கத்தை விற்று எத்தனை நாள் வாழ முடியும்? தேர்தல் முடிந்து ஆட்சி பீடமேறியவர்கள், தாங்கள் என்ன செய்கிறோம் என்பதைக்கூட முழுதும் உணராமல், பெரும்பாலும் அதிகாரிகள் தயாரித்தளிக்கும் ஆவணங்களில் கையெழுத்திட்டுப் புதிய கொள்கைகளை அறிவிக்கத் தொடங்கினர். நான்கு பத்தாண்டுகளின் கொள்கைத் திட்டங்களை நாற்பதே நாட்களில் திருத்தியெழுதி விட்டனர்! நிதி நிறுவனம் இந்தியாவில் ஒரு அரண்மனைப் புரட்சியை மேற்கொண்டு விட்டது என்றுதான் கூற வேண்டும். புதிய சூழ்நிலையை விளக்க புதிய நிதியமைச்சர் மன்மோகன்சிங் தேர்ந்தெடுத்த வார்த்தைகள் ஷெரில் பேயரின் மேற்கோளிலிருந்து கடன் பெற்றதைப் போலிருந்தது. பட்ஜெட் உரையில் அவர் கூறினார்: "நழுவிச் செல்ல இனி களத்தில் இடமில்லை. பணமும் காலமும் என இனி முன்னோக்கிச் செல்ல முடியாது."

**சரணாகதிச் சீர்திருத்தங்கள்**

இவ்வாறு நிதி நிறுவனம். மற்றும் உலக வங்கியின் நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிந்து இந்தியா இன்று நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கும் பொருளாதார சீர்திருத்தங்களை சுருக்கமாக ஆய்வு செய்ய இங்கு முயற்சிக்கிறோம். இந்த சீர்திருத்தங்களை ஐந்து வகையாகப் பிரிக்கலாம். 1) ரூபாயின் மதிப்பைக் குறைத்தது. 2) பணக்கொள்கையில் ஏற்படுத்திய மாறுதல். 3) வர்த்தகக் கொள்கையில் திருத்தம். 4) தொழில் கொள்கையில் மாற்றம். 5) பட்ஜெட் கொள்கையில் மாறுதல். இன்னும்

www.tamilarangam.net



அறிவிக்கப்படாத, ஆனால் தவிர்க்க முடியாமல் ஏற்படும் இன்னொன்றும் இருக்கிறது-பேங்கிங் சீர்திருத்தம்.

1) ரூபாயின் மதிப்பு குறைக்கப்படும் என்பது ஓரளவு நிச்சயமானதுதான். ஏனென்றால் ரூபாயின் மாற்று மதிப்பை 20 சதவிகிதம் குறைக்க வேண்டுமென்று நிதி நிறுவனத்தின் நிபந்தனை இருந்தது. ஆனால் இந்த சீர்திருத்தின் தனித்தன்மையே இதை அமலாக்கிய முறைதான். முதலில் ரூபாயின் மாற்று மதிப்பு ஏறத்தாழ 8 சதவிகிதம் மட்டுமே குறைக்கப்பட்டிருந்தது. ரூபாயின் மாற்று மதிப்பு டாலர் ஒன்றுக்கு 20.5 ரூபாயாக இருந்தது. ஏறத்தாழ 23 ரூபாயாகக் குறைந்து விட்டது. குறிப்பாக மேலும் எந்த விளக்கங்களும் இல்லாமலேயே ரூபாயின் மாற்று மதிப்பு அடுத்த நாளே மேலும் ஒரு 10 சதவிகிதம் குறைக்கப்பட்டது. ஒரு டாலரின் மதிப்பு ஏறத்தாழ 26 ரூபாயாகி விட்டது. மொத்தம் இவ்வாறு ரூபாய் - டாலர் மாற்று மதிப்பு 18.7 சதவிகிதம் சரிந்து விட்டது. ஏறத்தாழ நிதி நிறுவனத்தின் நிபந்தனைக்குச் சமமாகி விட்டது.

ரூபாயின் மாற்று மதிப்பு மேலும் குறைக்கப்படும் என்றும் சமிக்ஞை இருக்கிறது. ரூபாயை ஒரு சுதந்திர மாற்று நாணயமாக்குவதுதான் நோக்கமாம். அதாவது யார் வேண்டுமானாலும் எவ்வளவு வேண்டுமாலும் ரூபாயை டாலராக மாற்றும் நிலைமை. இந்த அளவுக்குப் போகாவிட்டாலும், வெளிநாட்டு நாணயக் கட்டுப்பாடு தளர்த்தப்படலாம் என்றுதான் கருத வேண்டியிருக்கிறது. அது நடைபெற வேண்டுமென்றால், டாலருக்கு 26 ரூபாய் விலை நிர்ணயம் செய்தால் போதாது! முப்பது, நாற்பது என்று உயர்த்த நேரிடும். இல்லாவிட்டால் வெளிநாட்டு நாணயச் செலாவணியில் நெருக்கடியேற்படுவது நிச்சயம். அதாவது ரூபாயின் மாற்று மதிப்பு இன்னும் குறையும், அல்லது குறைக்கப்படும் என்பது சமிக்ஞை.

2) மாற்று விகிதம் குறைக்கப்பட்டதோடு கூடவே பணக் கொள்கையில் முக்கிய மாற்றம் கொண்டு வரப்பட்டது. முதலாவதாக வட்டி விகிதம் டெப்பாசிட்டுகளுக்கும், கடன்களுக்கும் ஒரு சதவிகிதம் உயர்த்தப்பட்டது. இரண்டாவதாக இறக்குமதியாளர்கள் முன்னதாகக் கட்ட வேண்டிய கேஷ் மார்ஜின்கள் கணிசமாக உயர்த்தப்பட்டன. மூன்றாவதாக கடன் அளிப்பு மேலும் கடுமையாக்கப்பட்டது. மாற்று மதிப்பு குறைக்கப்படுவதால் இறக்குமதிச் செலவுகள் முறை பெருகாமலிருக்க பொருளாதார அமைப்பை (Deflate) மந்தப்படுத்துவது என்பதுதான் இந்த நடவடிக்கைகளின் குறிக்கோள்,

3) இதை அடுத்து பின்னாலேயே புதிய வர்த்தகக் கொள்கை அறிவிக்கப்பட்டது! இருந்து கொண்டிருக்கும் இறக்குமதிக் கொள்கை மூன்றாண்டுக்கு ஒரு முறை புதுப்பித்து அறிவிக்கப்படும் ஆவணமாகும். அணமையில் சில மாறுதல்கள் ஏற்படினும் இந்த ஆவணங்களின் தன்மை இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதுதான். முதல் வகை மிகவும் உயர்ந்த இறக்குமதி வரிகளாகும். இரண்டாவது பல்வேறு இறக்குமதிக் கட்டுப்பாடு லைசென்சுகள்! லைசென்சுக்காக உற்பத்திப் பொருட்களை ஐந்தாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. 1) தடை லிஸ்டு 2) கடுமையான கட்டுப்பாடு லிஸ்டு 3) கட்டுப்பாடு அனுமதி லிஸ்டு

www.tamilarangam.net



4) திறந்த பொது லைசென்ஸ் லிஸ்டு. 5) பொதுத்துறை வாயிலாக மட்டும் இறக்குமதி செய்யப்பட வேண்டிய உற்பத்திப் பொருட்களின் லிஸ்டு.

பெட்ரோல், சமையல் எண்ணை, தானியம், உலோகங்கள் போன்ற இறக்குமதியின் 60-65 சதவிகிதம் பொருட்கள் ஐந்தாவது பகுதியில் சொல்லப்பட்ட பொதுத்துறையின் வாயிலாக செய்யப்படுவதாகும். திறந்த பொது லைசென்ஸ் லிஸ்டில் இருக்கும் உற்பத்திப் பொருட்களை தனிநபர்கள் இறக்குமதி செய்யலாம். அதற்கு தனி லைசென்ஸ் தேவையில்லை! ஆனால் இடைநிலை ஆள் இறக்குமதி செய்ய முடியாது. உண்மையான கொள்முதலாளர்தான் செய்ய முடியும்! மூன்றாவது நான்காவது இனங்கள், இறக்குமதிக்கு முன்னதாக லைசென்ஸ் பெற வேண்டும். அது அவ்வளவு எளிதானதல்ல. இறக்குமதியைச் சுமூகமாக்கும் இரண்டு மாற்றுவழிகள் பின்னர் இணைக்கப்பட்டது. முதல் 'ரிப்லெனிஷ்மெண்ட் லைசென்ஸ்' என்ற பெயரில் ஏற்றுமதியாளர்களுக்கு 5-4 லிஸ்டில் இருக்கும் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதிதான் இது. இதைத் தவிர கட்டம் கட்டமாக இறக்குமதியைக் குறைத்து உள்நாட்டுப் பொருட்களைப் பயன்படுத்திக் கொள்கிறோம் என்ற நிபந்தனையில் **(Phased Manufacturing Programme)** தொழிற்சாலைகளுக்கு இறக்குமதிக்கு அனுமதியளிப்பதுண்டு.

இந்த இறக்குமதிக் கட்டுப்பாடுகள் மாற்றியமைப்புக்கு உள்ளாகிக் கொண்டிருக்கிறது. ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காக ஏற்றுமதியாளர்களுக்கு அவர்களின் வருவாயின் 30 சதவிகிதத் தொகைக்கு எக்சிம் ஸ்க்ரிப்புகள் **(Exim Scrips)** அதாவது வெளி நாணய டோக்கன்கள் அனுமதிக்கப்படும் என்பதுதான் முக்கியமான ஒரு சீர்திருத்தம். இந்த ஸ்க்ரிப்புகள் தேவைப்படுபவர்களுக்கு உயர் விலைக்குத் திருப்பி விற்று ஏற்றுமதியாளர்கள் லாபமடையலாம். இப்போது எக்சிம் ஸ்க்ரிப்புகள் தொடக்க விலையைவிட 40 சதவிகித அதிக விலைக்குத்தான் மறுவிற்பனையாகிறது என்று தகவல். ஆனால் இத்துடன் முன்னர் ஏற்றுமதியாளர்களுக்கு அளிக்கப்பட்ட பல சலுகைகள் நிறுத்தப்பட்டன. இதில் 'கேஷ் காம்பன்சேட்டரி சர்போர்ட் ஸ்கீம்' **(Cash Compensatory Support Scheme)** தான் முக்கியமானது. வரி போன்றவற்றால் இந்தியாவில் மூலப் பொருட்களுக்கும், இயந்திரக் கருவிகளுக்கும் அதிக விலை அளிக்க நேரிடுவதால் ஏற்படும் உற்பத்திப் பொருட்களுக்கு அளிக்கப்படும் மானியம்தான் இது. ஆனால் இனிமேல் இது கிடையாது. எல்லா உற்பத்திப் பொருட்களுக்கும், ஏற்றுமதியாளர்களுக்கும் ஒரே விகிதத்தில் மட்டுமே எக்சிம் ஸ்க்ரிப்புகள் கிடைக்கும்.

இறக்குமதிச் சட்டங்கள் உருவாக்கப்பட்டன. இனிமேல் எக்சிம் ஸ்க்ரிப்புகள் இருந்தால் 'திறந்த பொது லைசென்ஸ்' லிஸ்டில் இருக்கும் பொருட்களும், முன்னர் ரிப்லெனிஷ்மெண்ட் லைசென்ஸ்படி இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்ட பொருட்களும் யார் வேண்டுமானாலும் இறக்குமதி செய்யலாம். சொந்த உபயோகத்திற்கு என்ற சர்டிபிகேட் தேவையில்லை. கட்டம் கட்டமாக உள்நாட்டுப் பொருட்களைப் பயன்படுத்திக் கொள்கிறோம் என்ற உறுதியும் தேவையில்லை இப்போதைக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது இவ்வளவுதான்!

www.tamilarangam.net



ஆனால் வரப்போகும் அண்மைக் காலத்திலேயே, ஏற்றுமதியாளர் களுக்குத் தேவைப்படும் கருவிகள், தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் இயந்திரங்கள், கச்சாப் பொருட்கள் போன்றவற்றின் இறக்குமதியின் மீதுள்ள கட்டுப்பாடுகள் தளர்த்தப்படவோ, நீக்கப்படவோ செய்யலாமென வர்த்தக அமைச்சரே கூறியிருக்கிறார். பொதுத்துறை வாயிலாக நெறிப்படுத்தப்பட்ட இறக்குமதிகள் தனியார் துறைக்கு கூடுதலாக விட்டுக் கொடுக்கப்படும் என்றும் அறிவிப்பு வெளியாகியிருந்தது. இறக்குமதிச் சுங்கம் படிப்படியாகக் குறைக்கப்பட்டு 20 சதவிகிதமாகக் குறைக்கப்பட வேண்டுமென்பதும் மறறொரு முக்கியக் கருத்தாகும்.

4) மிகவும் அடிப்படையான மாறுதல்கள் தொழில் துறையில்தான் நிழ்ந்திருக்கிறது. இன்றைக்கிருக்கும் தொழிற்கொள்கையின் பொதுக் கட்டுமானம் 1956இன் தொழிற்கொள்கை அறிவிப்பை அடிப்படையாகக் கொண்டதுதான்! பல்வேறு திருத்தங்கள் இந்த தொழிற்கொள்கை அறிவிப்புக்கு ஏற்படினும் அடிப்படைக் கட்டுமானத்திற்கு எத்தகைய மாற்றமும் ஏற்படவில்லை. இது தான் புதிய தொழிற்கொள்கை அறிவிப்பின் வாயிலாக அடிமுதல் முடிவரை திருத்தியெழுதப்பட்டிருக்கிறது. பொதுவாகக் கூறுவதர்க இருந்தால் புதிய தொழிற்கொள்கைக்கு ஆறுமுனைகள் இருக்கின்றன!

முதலாவதாக தொழில் லைசென்ஸ் வழக்கம் கைவிடப்படுகிறது. இந்தியாவின் திட்டக் கொள்கையில் தொழில் லைசென்ஸ் ஒரு முக்கியக் கருவியாக இருந்திருக்கிறது. லைசென்ஸ் இல்லாமல் தொழில் தொடங்க முடியாமலிருந்தது. வரையறைக்குள்ளான நிதி வளத்தை சமூக முன்னுரிமை பெறக்கூடிய பகுதிகள் அல்லது பின்னடைவுப் பிராந்தியங்களுக்குத் திருப்பி விடுவது போன்றவற்றிற்குத் தான் லைசென்ஸ் முறை கொண்டுவரப்பட்டது. புதிய தொழில்களின் வெளிநாட்டுச் செலாவணியைக் கட்டுப்படுத்தவும் உள்நாட்டுத் தொழில் நுட்பத் திறனை ஊக்குவிக்கவும் லைசென்சுகளைப் பயன்படுத்தலாம். சிறுதொழில்களைப் பாதுகாக்கவும் லைசென்சுகளைப் பயன்படுத்தலாம். ஆனால் இந்தியாவில் லைசென்ஸ்முறை ஒரு சிகப்பு நாடாவாகச் சீரழிந்து விட்டது! இந்த வீழ்ச்சியை நிமிர்த்துவதற்கு மாறாக லைசென்ஸ் முறையே வேண்டாம் என்கிறார்கள். இனிமேல் நிலக்கரி, பெட்ரோல், சர்க்கரை, போதைப் பொருட்கள், சிகரெட், பாதுகாப்பு, கார்கள், சிலரக வீட்டு உபயோகக் கருவிகள் உட்பட 18 துறைகளுக்கு மட்டும்தான் லைசென்ஸ் பெறவேண்டும்.

இரண்டாவதாக ஏகபோகக் கட்டுப்பாட்டுச் சட்டமும் ரத்தாக்கி விட்டது. எனவே கட்டுப்படுத்த முயலவேண்டாம் என்பதுதானே கருத்து. ஏற்கெனவே இருந்த சட்டத்தின் நோக்கம் ஏகபோகங்களைக் கட்டுப்படுத்துவது மட்டுமில்லை. சமூதாய நலன்களுக்கு கேடு விளைவிக்கும் வர்த்தக 'ஒத்து விளையாட்டை'க் கட்டுப்படுத்துவது என்ற நோக்கமும் இருந்தது. இதற்குத் தேவையான பிரிவுகளை விட்டு வைத்திருக்கிறோம் என நடிக்கிறார்கள். ஆனால் ஏகபோகக் கட்டுப்பாட்டுக் கமிட்டி இல்லையென்றாகி விட்ட பிறகு, இந்தப் பிரிவுகளும் நடைமுறையில் இல்லையேன்றெ கூறலாம்.

www.tamilarangam.net



மூன்றாவதாக, வெளிநாட்டு மூலதனத்தின் மீதான நிபந்தனைகள் இலகுவாக்கப்பட்டன. 41 சதவிகிதத்திற்கு மேல் வெளிநாட்டுப் பங்குடைய கம்பெனிகளனைத்தும் சட்டப்படி வெளிநாட்டுக் கம்பெனிகளே....தனிக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டுத்தான் அவை பணியாற்ற முடியும். இந்த வரம்பு 51 சதவிகிதமாக உயர்த்தப்பட்டது! நிதி மந்திரி என்னவென்றால், இந்த வரம்பை 100 சதவிகிதம் உயர்த்தலாமென்கிறார்! இது நடைமுறைக்கு வந்தால் வெளிநாட்டுக் கம்பெனிக்கும் உள்நாட்டுக் கம்பெனிக்கும் வித்தியாசம் தெரியாமல் போய்விடும்.

நான்காவதாக, பொதுத் துறையின் ஏகபோகம் முடிவுற்று விட்டது! 1956இல் தொழிற்கொள்கையின்படி சில தொழிற்துறைகள் பொதுத்துறைக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த மண்டலங்களில் அனைத்தும் இனி தனியார் தொழிற்கூடங்களை நிறுவலாம். பாதுகாப்பு, ரெயில்வே, நிலக்கரி போன்ற சில மண்டலங்களில்தான் பொதுத்துறைக்கு ஊன்றிடம் இருக்கிறது. அதைப்போலவே பொதுத்துறையின் உடைமை மற்றும் நிர்வாகத்திலும் தனியாரின் பங்களிப்பிற்கு புதிய சட்டம் வகைசெய்கிறது. இருந்து கொண்டிருக்கும் பொதுத்துறை நிறுவனங்கள் பலவற்றின் பங்குகள் இனிமேல் பொதுச் சந்தையில் விற்பனைக்கு கிடைக்கும்.

ஐந்தாவதாக, சிறு தொழில்களுக்காக ஒதுக்கப்பட்ட உற்பத்திப் பொருட்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது. அதைவிட முக்கியத்துவம் பெறும் சீர்திருத்தம் என்னவென்றால், சிறுதொழில் நிறுவனங்களின் பங்குகளில் நான்கின் ஒரு பகுதி வரை ஏகபோகங்கள் வாங்கலாமென்பதுதான். ஏகபோகங்களிடமிருந்து சிறுதொழில் மண்டலங்களைப் பாதுகாக்கத்தான் முன்னர் சட்டமியற்றப்பட்டதெனினும், இன்றைக்கு சிறு தொழில் நிறுவனங்களை சொந்தமாகத் தொடங்கி அந்தத்துறைக்கான சலுகைகளையும் தாங்களே அனுபவிக்கும் வாய்ப்பினை புதிய சீர்திருத்தம் ஏகபோகங்களுக்குத் தாரைவார்க்கிறது.

ஆறாவதாக, தொழிற்சாலைகளை மூடுவதற்கான சட்ட முறைகளை இலகுவாக்குவோம் என்றும் புதிய கொள்கை ஊறுதியளிக்கிறது. ''எக்சிட் பாலிசி' என்று இதற்கு பெயர்! இந்தக் கொள்கையின் விரிவான விளக்கம் இதுவரை கிடைக்கவில்லை. ஆயினும், இதற்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்தைப் பார்த்தால், அண்மையிலேயே எதிர்காலத்தில் இந்தியத் தொழில்கள் பலவற்றுக்கும் என்ன நேரும் என்பதை யூகிக்க முடியும்.

5) வங்கித் துறையில் இன்று, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளை படிப்படியாக தனியார் உடைமைக்கு மாற்றுவதற்கான பேச்சு அடிபடுகிறது. அதோடு கூடவே வெளிநாட்டு வங்கிகளுக்கு இந்தியாவில் சுதந்திரமாக இயங்கும் உரிமையை கணிசமாக உயர்த்தவும் திட்டமிருக்கிறது. வெளிநாட்டு மூலதனம் சுமுகமாக இந்தியாவுக்குள் நுழையும் வாய்ப்பாகத்தான் இந்த நடவடிக்கையைச் சிறப்பிக்கிறார்கள். இந்திய வங்கித்துறைச் சீர்திருத்தம் தொடர்பாக உலக வங்கியானது, மிக முக்கியமாக வங்கிகளின் கடன்கொள்கையைத்தான் கோடிட்டு காட்டுகிறது. இன்றைக்கு வங்கி, டெபாசிட்டுகளில் 53 சதவிகிதம் சர்க்காருக்குச் சொந்தமானது. இன்னொரு 20 சதவிகிதம் குறைந்த வட்டிக்கு விவசாயிகளுக்கும்,

www.tamilarangam.net



சிறு தொழில் முனைவர்களுக்கும், நலிந்த மக்களுக்கும் கடனாக அளிக்க வேண்டும் (இதைத்தான் பிரயாரிட்டிக் கடன்கள் என்கிறோம்) எஞ்சிய 27 சதவிகிதம்தான் உண்மையில் வர்த்தகக் கடன்களாக வினியோகிக்கப்படுகிறது. உலக வங்கி கீழ்வருமாறு அறிவுறுத்துகிறது சர்க்கார் செக்யூரிட்டியில் சேமிக்க வேண்டியதையும் ரிசர்வாகப் பாதுகாக்க வேண்டியதையும் இன்றுள்ள 53 சதவிகிதத்தை 30 சதவிகிதமாகக் குறைக்க வேண்டும். பிரயாரிட்டிக் கடன்களை 10 சதவிதிமாகக் குறைக்க வேண்டும் எஞ்சியதை சந்தைவட்டிக்கு வர்த்தக அடிப்படையில் கடனாக அளிக்க வங்கிகளை அனுமதிக்க வேண்டும். வட்டி விகிதத்தை சர்க்கார் நிர்ணயிக்காமல் சுதந்திரமாக விடவேண்டும். உள்நாட்டு வட்டி விகிதத்தை கடன் சந்தை வாயிலாக சர்வதேச வட்டிவிகிதத்துடன் இணைக்க வேண்டும். வரையறையான நிதி வளங்கள் முன்னுரிமை முறையில் செலவிடப்படுமென்றும், சில தனிப்பட்டவர்களின் கைகளைச் சென்றடையாது என்றும் உறுதி செய்வதற்கான ஒரு கருவிதான் கடன்கொள்கை. லைசென்சுகள் போன்றவற்றைக் கைவிட்டு கடன் கொள்கையின் வாயிலாகத்தான் தொழிற்துறையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றுதான், இந்தியாவின் கட்டுப்பாடுகள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொண்ட பலக் கமிஷன்களின் கருத்தாகும். உலக வங்கியின் அறிக்கையின்படி இதுகூடத் தேவையற்றதுதான்.

6) புதிய பட்ஜெட் கொள்கையும் உலக வங்கி மற்றும் நிதி நிறுவனத்தின் கருத்துக்கிசைவானதுதான். நிதி நிறுவனம் கூறியதற்கேற்ப இந்திய அரசின் நிதிப்பற்றாக்குறை தேசிய வருவாயின் 6.5 சதவிகிதமாகக் குறைப்பதில் மன்மோகன்சிங் வெற்றி பெற்றார்! இதற்காக செலவுகளைக் குறைத்தார்! மானியம்தான் முக்கிய இரையானது! உர மானியம் நிறுத்தப்பட்டது. திட்டச்செலவை வெட்டிக் குறைக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் திட்டத்துக்காகப் பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட தொகையின் அளவு சென்ற ஆண்டுகளைவிடக் குறைந்துவிட்டது. பொதுத்துறை உற்பத்திகளின் விலைகளை உயர்த்த வேண்டும் என்று பொருள். இவற்றுடன் வருவாயை உயர்த்தவும் சில சிரத்தைக்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் மிகவும் புதுமையானது லாபகரமாக இயங்கும் சில பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை தனியார் துறைக்கு விற்க வேண்டும் என்ற முடிவுதான். புதிய வரிவருவாய் எக்சையிஸ் (கலால்) துறைமீது ஊன்றப்பட்டது. இறக்குமதிச் சுங்கம் குறைக்கப்படுவதால் ஏற்படும் நஷ்டத்தை கலால் வரியை உயர்த்தி நிரப்ப வேண்டும் என்பது நிதி நிறுவனத்தின் அறிவுறுத்தல். இந்த ஆண்டு இவ்வாறு எப்படியோ காலந்தள்ளியாகி விட்டது! அடுத்த ஆண்டு என்ன செய்யப் போகிறோம் என்பதைக் கண்டுதான் அறிய வேண்டும். ஏனென்றால் நிதி நிறுவனத்தின் கூற்றுப்படி நிதிப்பற்றாக்குறையை தேசிய வருவாயின் 4.5 சதவிகிதமாக மேலும் கீழிறக்க வேண்டும் என்பதுதான்! இனி, என்னென்ன மானியங்களுக்கு வெட்டு விழப்போகிறதோ? எந்தெந்த பொதுத்துறை நிறுவனங்கள் விற்கப்படுமோ? திட்டம் முழுக்க வெட்டிக் குறைக்க நேரிடுமோ!

இந்தச் சீர்திருத்தங்களில் ஒவ்வொன்றையும் இனவாரியாகப் பிரித்து அவை ஒவ்வொன்றையும் அக்குவேறு ஆணிவேராக ஆய்வு செய்வதுதான் இந்தியாவின்

www.tamilarangam.net



பிரபல அறிவுஜீவிகளெனப்படுவோர் பலரின் அன்றாட மூளைப் பயிற்சியாக இருக்கிறது. நிதி நிறுவனம் வற்புறுத்தாவிட்டால்கூட இதில் பலவற்றை நாமே தன்னிச்சையாக முன்வந்து செய்ய வேண்டிய விஷயங்கள் என்று அவர்கள் சுட்டிகாட்டுகின்றனர். அவர்கள் மரங்களை மட்டும்தான் பார்க்கிறார்கள். காட்டைப்பார்த்தால் கண்ணை மூடிக்கொள்கிறார்கள். முக்கியமான பிரச்சினை எந்தச் சீர்திருத்தத்தை எடுத்துக்கொண்டாலும் அது நல்லதா கெட்டதா என்பதல்ல; மாறாக, அந்தத் திருத்தத்தின் ஆக மொத்தம் என்ன? இந்த அத்தியாயத்தின் தொடக்கத்தில் குறிப்பிட்ட இந்திய வளர்ச்சித் திட்டக் கோட்பாட்டின் அடிப்படையில் கூறுவதானால், புதிய சீர்திருத்தக் கொள்கை நேருவின் மையப் பாதையிலிருந்து விலகி சுதந்திராக் கட்சி போன்றவற்றின் வலதுசாரிப் பாதைக்குள் நுழைவதுதான் என்பதை எளிதாகக் கண்டறியலாம். இந்தப் பின்னோக்கியப் பயணத்தால் இந்தியா இன்றைக்கு எதிர்கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளமுடியுமா? இது என்னென்ன புதுப் பிரச்சினைகளை ஏற்படுத்தப் போகிறதோ? இதைத் தவிர வேறு என்ன வழி? இந்த வினாக்களுக்கான விடையை அடுத்த அத்தியாயத்தில் தேடலாம்.

www.tamilarangam.net

# 8

# சரணாகதிச் சீர்திருத்தங்களுக்கு தேசப்பற்றுமிகுந்த மாற்று

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கெதிரான அரை நூற்றாண்டுகால விடுதலைப் போராட்டித்திலிருந்து முகிழ்த்தெழுந்த, தேசப் பற்று மிகுந்த எதிர்கால நம்பிக்கைகளை, புதிய சீர்திருத்தங்கள் குழிதோண்டி புதைத்துக் கொண்டிருக்கின்றன.

1) விடுதலை கிடைத்துவிட்டால் நமது பொருளாதாரப் பின்னடைவு நிலை மறைந்து விடும் என்று தேச பக்தர்கள் எதிர்பார்த்தனர். இந்தியப் பொருளாதார அமைப்பில் 10 சதவிகிதம் வளர்ச்சி பெறவேண்டுமென்று பாம்பே பிளானும், விஸ்வேஸ்வரய்யா திட்டமும் குறிவைத்திருந்தன. நாம் பெற்ற வளர்ச்சியின் ஏறத்தாழ இரண்டரை மடங்கு வேகத்தில் விவசாய வளர்ச்சியும் தொழில்மயமாக்கமும் நடைபெற வேண்டுமென்பதும், விடுதலைப் போராட்டம் ஈன்றெடுத்த கருத்துதான்! விஸ்வேஸ்வரய்யாவின் கருத்துப்படி அரசியல் மற்றும் பொருளாதார சுயநிறைவுபெற விரும்பும் எந்த நாடும் தொழில்மயமாக்கத்தைப் புறக்கணிக்க முடியாது. விஸ்வேஸ்வரய்யாவின் நூலில், "முன்னேறும் உலகில்" என்பது முதல் அத்தியாயத்தின் தலைப்பு, பின்னுக்குச் செல்லும் நம்முடைய கெட்ட காலத்தை எப்படி மாற்றி அமைப்பது என்பதுதான் நாட்டுப் பற்றுமிக்க ஒவ்வொருவரையும் அலட்டும் பிரச்சினையாகும்.

2) இந்தப் பொருளாதார வளர்ச்சியின் பலன் ஒரு சிலரிடம் மட்டும் குவிந்துவிடாமல், நீதி வழுவாது எல்லோருக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென்பது பொதுக்கருத்தாகும். நீதிவழுவாது பகிர்ந்தளிக்க வேண்டும் என்ற கருத்தை அழுத்தமாக முன்வைத்தது இடதுசாரிகள்தான் எனினும், எந்த தேசபக்தனாலும் இந்தியாவின் வறுமையை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது. 19வது நூற்றாண்டில் தாதாபாய் நௌரோஜி இந்தியாவின் பொருளாதாரப் பதாகையை உயர்த்தியதே இந்தியாவின் வறுமை நிலையை சுட்டிக்காட்டத்தான்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



('இந்தியாவின் வறுமையும் பிரிட்டனுக்குப் பொருந்தாத ஆட்சியும்' என்பதுதான் அவருடைய புகழ்பெற்ற நூலின் பெயராகும்) ஏகபோக முதலாளிகள் உருவாக்கிய பம்பாய் பிளான்கூட எல்லோருக்கும் குறைந்தபட்ச வாழ்க்கை உத்திரவாதம் கிடைக்க வேண்டுமென்பதைத்தான் நோக்கமாகக் கொண்டிருந்தது. வாழ்க்கைத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் இவை மூன்றுமன்றி உடல் ஆரோக்கியம், கல்வி, போன்றவையும் உட்பட்டதுதான் இந்தக் குறைந்தபட்சம். இதையெல்லாம் உறுதி செய்ய எல்லோருக்கும் வேலையும் வேலைக்கேற்ற நியாயமான வருவாயும் கிடைக்க வேண்டும்.

3) மேற்குறிப்பிட்டவையைப் பெற்றெடுக்க மேற்கொள்ளும் நடவடிக்கைகள், சொந்தக்காலில் நிற்க முயற்சிக்கும் தேசத்தின் ஆற்றலை உயர்த்த வேண்டும் என்று தேசபக்தர்கள் எதிர்பார்த்தனர். அதுதான் இந்தியாவின் சுதந்திரத்தையும் சுயாதிகாரத்தையும் பாதுகாக்கும் உறுதிப் பாடாகும். தேசிய இயக்கத்தின் தொடரான முதல் ஐந்தாண்டுத் திட்டம் எழுப்பிய சுயசார்புக் கொள்கையும் அதுவேதான். இந்தியா தூக்கிப் பிடிக்கும் பொருளாதார வளர்ச்சி அரசியல் மற்றும் சமூகச் சூழ்நிலைகளில் தொடர்ந்து நிலைபெறுவதாக இருக்க வேண்டும்.

கடந்த நான்கு பத்தாண்டுகளின் திட்டப் பணிகளின் மூலம் இந்த நோக்கங்கள் நிறைவேறாவிடினும் திட்ட முலவர்கள் அதைத் தூக்கிப் பிடிக்கவே செய்தனர். ஆனால் இன்றைக்கு அதைக் கைவிட்டு விட்டனர். இதுதான் நேற்றைக்கும் இன்றைக்கும் உள்ள மாறுபாடு!

விமர்சனம் எல்லை மீறியது என்று சிலர் சந்தேகப்பட்டலாம். சுயசார்புக் கொள்கை கைவிடப்பட்டது என்பது உண்மை. ஆனால் வறுமை ஒழிப்பு, பொருளாதார முன்னேற்றம் போன்ற கொள்கையை கைவிட்டோமா? இவற்றை வென்றெடுக்கத்தானே புதிய சீர்திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதுதான் ஆட்சியாளர்களின் வாதம்.

சீர்திருத்தங்களின் பயன்களைக் குறித்து ஆட்சியாளர்களும் ஏகபோக மீடியாக்களும் (பத்திரிகை மற்றும் தகவல் தொடர்பு சாதனங்கள்) பரப்பிக்கொண்டிருக்கும் விருப்பங்கள் கானல் நீராகிவிடும் என்பதோடு, வேகமான வளர்ச்சி மற்றும் பொருளாதார நம்பிக்கைகளை இன்னும் ஒரு பத்தாண்டுக் காலத்துக்கு ஒத்திவைக்கிறோம் என்று நமது ஆட்சியாளர்கள் நிதியிடமும் வங்கியிடமும் ஒப்பந்தக் கையெழுத்திட்டிருக்கிறார்கள் என்பதையும் சொல்லி வைக்கிறோம்.

**பாய்ச்சலில் இருந்து பெருமூச்சுக்கு...**

முதலில் பொருளாதார வளர்ச்சியின் பிரச்சினைக்கு வருவோம். மன்மோகன்சிங்கின் பட்ஜெட்டில் பொருளாதார வளர்ச்சி எவ்வளவு? அவர் அதைச் சொல்லாவிட்டாலும் நம்மால் கணக்கிட முடியும். நிதிப் பற்றாக்குறை 1991-92இன் எதிர்பார்ப்பு தேசிய வருவாயின் 6.5 சதவிகிதமாகக் குறைந்து விட்டது என்பதுதான் இந்த பட்ஜெட்டின் பலன். 37,727 கோடி ரூபாய் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது.

www.tamilarangam.net



இது தேசிய வருவாயின் 6.5 சதவிகிதம் எனில் தேசிய வருவாய் இந்த ஆண்டு 5,80,415 கோடி ரூபாயாக இருக்குமென்பதை எளிமையாகக் கணக்கிட்டு விடலாம். பொருளாதார சர்வே ரிட்போர்ட்டின் அடிப்படையில் 1991-92இல் தேசிய வருவாய் 5,18,500 கோடி ரூபாயாகும். 1991-92இல் தேசிய வருவாய் முன் ஆண்டைவிட 61,915 கோடி ரூபாய் அதாவது 12 சதவிகிதம் அதிகமாக இருக்கும். பட்ஜெட் கணக்கைத் தயார் செய்ய, விலையேற்றம் 9 சதவிகிதமாக இருக்குமென்று மன்மோகன்சிங் அனுமானித்திருக்கிறார். விலை ஏற்றத்தைத் தவிர்த்து நடப்பு ஆண்டில் தேசிய வருவாய் 3 சதவிகிதம் மட்டும் தான் நிதி அமைச்சர் எதிர்பார்த்திருக்கிறார். 80களின் கொட்டி முழக்கப்படும் 5.5 சதவிகிதம் வளர்ச்சி எங்கே? மன்மோகன் சிங்கின் பட்ஜெட் வாக்களிக்கும் 3 சதவிகித வளர்ச்சி எங்கே?

இது கூடச் சாத்தியமா என்பதை இந்த ஆண்டு இறுதியில் தெரிந்துவிடும். எதுவானாலும் நினைத்தது நடக்க வேண்டுமென்றால்-அதாவது, வெளிநாட்டுச் செலாவணி நெருக்கடி தீரவேண்டுமென்றால் பொருளாதார வளர்ச்சியை ஒரு ஏழாண்டுக் காலத்துக்கு இந்தியா மறந்துவிட வேண்டும் என்பது உலக வங்கியின் கருத்தாகும். 44 ஆண்டு காலம் சுதந்திரத்தின் கெட்ட நீரை இந்தியப் பொருளாதாரத்தின் உடலில் இருந்து அகற்ற வேண்டுமென்றால் அவ்வளவு காலம் பிடிக்கும் என்று அவர்கள் கணித்துச் சொல்லியிருக்கிறார்கள். அலங்காரத்துக்காகச் சொல்லவில்லை; உலக வங்கியின் பரம ரகசியமான ஆவணங்களிலிருந்தே மேற்கோள் காட்டுகிறோம்.

இந்தியாவில் அமல்படுத்த வேண்டிய சீர்திருத்தங்களைப் பற்றி வங்கி மற்றும் நிதிநிறுவனத்தின் ரிப்போர்ட்டுகள் பல இருக்கின்றன, பரம ரகசியமாக இவை பாதுகாக்கப்படுகின்றன. கடந்த ஜனதாதள அரசின் காலத்தில் இந்த ரிப்போட்டுகளில் சிலவற்றை வெளிக்கொணர்வதற்கான முயற்சிகள் எப்படித் தோற்றுப் போயின என்பதை சோசலிஷ்டு கட்சிப் பொருளாதார விற்பன்னராகப் பிரபலமாயிருக்கும் பரஞ்சிபே ஒரு செமினாரில் விளக்கியிருக்கிறார். வெளிநாட்டினருக்கும் உயர்ந்த இந்திய அதிகாரிகளுக்கும்தான் இவை கிடைக்கும். (அமைச்சர்களில் பெரும்பாலனவர்களுக்கு இந்த தடித்த ரிப்போர்ட்டுகளைப் படித்துத் தெரிந்து கொள்ளும் ஆற்றலும் நேரமும் இருக்காது) எப்படியாயினும், இந்த ரகசியங்கள் எப்படியோ வெளியாகிவிடும். "(India-Stategy For Trade Reform)" என்பது இவ்வாறு வெளிவந்த முக்கிய அறிக்கைகளில் ஒன்றாகும். உலக வங்கியின் வர்த்தகச் சீர்திருத்தக் கோட்பாட்டின் ஆவணம் இது! புதிய வர்த்தகச் சீர்திருத்தங்கள் தொடர்பான அறிவிப்புகள் அனைத்தும் இந்த ஆவணத்தில் குடுப்பிட்டதற்கேற்பத் தான் நடைபெறுகிறது என்பது இதனுடைய அதிகாரத்தனத்தை வெளிப்படுத்துகிறது.

மாற்றுமதிப்பைக் குறைப்பது சுங்கத் தீர்வையை 20 சதவிகிதமாகக் குறைப்பது, இறக்குமதிக் கட்டுப்பாடுகள் அனைத்தையும் நீக்குவது போன்ற வர்த்தகச் சீர்தருத்தங்களும், அவைகளுக்கேற்ற உள்நாட்டு பொருளாதார அமைப்பில் நிதி நிறுவனத்தின் திடப்படுத்தும் பேக்கேஜ் முறையை முழுதாக நடைமுறைப்படுத்தினால் என்ன நேருமென்பதை அவர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். கணக்கு சரியானதா என்பதைப் பற்றிக் கவலை வேண்டாம். 1987-88இன் புள்ளி

www.tamilarangam.net



விபரக் கணக்கின் அடிப்படையில் இன்று கிடைக்கக் கூடியதில் மிகவும் சிக்கலானதும், இந்தியப் பொருளாதார அமைப்பை 72 மண்டலங்களாகப் பிரித்து நுட்பமாக ஒன்று சேர்ந்து பரிசீலனைக்குள்ளாக்கும் ஒரு முன்மாதிரியின் அடிப்படையில்தான் மதிப்பீட்டுக் கணக்குகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. புதிய சீர்திருத்தங்கள் அடுத்த ஏழாண்டு காலத்தில் இந்தியாவின் உற்பத்தி மற்றும் உற்பத்தி அமைப்பில் என்னென்ன எதிர் விளைவுகளை ஏற்படுத்தும் என்ற ரத்தினச் சுருக்கத்தை பட்டியல் 8-1ல் கொடுத்திருக்கிறோம்.

உற்பத்தித்துறை ஒவ்வொன்றிலும் 7 ஆண்டுக்குப் பிறகு எத்தகைய பொருளாதார வளர்ச்சி ஏற்படும் என்பதைத்தான் பட்டியல்படுத்தியிருக்கிறோம். இரண்டு அனுமானங்களின் அடிப்படையில் மதிப்பீட்டுக் கணக்கைக் கொடுத்திருக்கிறோம். இதில் முதலாவது கணக்கு இந்திய அரசின் பற்றாக்குறையைக் குறைக்க செலவினங்களைக் குறைக்கும் வழியைத்தான் சர்க்கார் கடைபிடிக்கும் என்ற அனுமானத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது (காலம் 2 பட்டியல் 8-1) உண்மையில் எக்சையிஸ் வரியை உயர்த்தித்தான் பற்றாக்குறை குறைக்கப்படும் என்ற அனுமானத்தில்தான் இரண்டாவது கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. (காலம் 3 பட்டியல் 8-1) உண்மை இதற்கிரண்டிற்கும் மத்தியில்தான் இருக்கிறது என்பதைச் சொல்லத் தேவையில்லை அல்லவா? வரியை உய்ர்த்தவும் செலவினங்களைச் சுருக்கவும் நேரிடும்.

விவசாயத் துறையில் பெயரளவுக்குத்தான் உற்பத்திப் பெருக்கம் ஏற்படும். விவசாய உற்பத்திப் பொருள் விலைச்சரிவும், உரம் போன்றவற்றின் விலையேற்றமும் விவசாய வளர்ச்சியை மந்தப்படுத்தும், தொழில் துறையில் துணி, தோல் போன்ற துறைகளைத் தவிர்த்தால் மீதி எல்லா துறைகளிலும் உற்பத்திச் சரிவேற்படும். இறக்குமதி தாராளப்படுத்தப்பட்டதே காரணம். இறக்குமதியில் ஏற்படும் போட்டி இயந்திர, உலோகத் தொழில்களின் முதுகெலும்பை ஒடித்துவிடும். இறக்குமதி தாராளப்படுத்தப்படினும் இறக்குமதிக்கான எக்சிம் ஸ்க்ரிப்புகள் ஏற்றுமதியாளர்களுக்கு மட்டும்தான் கிடைக்கும். இறக்குமதி செய்ய விரும்பும் மற்றவர்கள் உயர்விலை கொடுத்து இவற்றை வாங்க வேண்டும். இதன் வாயிலாக ஏற்றுமதியல்லாத உரத் தயாரிப்பு போன்ற இறக்குமதி மாற்று உற்பத்தி தொழிற்சாலைகள் நெருக்கடிக்குள்ளாகும். நோயுற்ற தொழில்களைச் சாக அனுமதிக்கும் கொள்கையும் பல தொழிற்சாலைகளின் மூடுவிழாவை விரைவுபடுத்தும். இந்தியா தொழில்களின் கல்லறைத் திடலாக மாறிவிடும்...

www.tamilarangam.net



பட்டியல் 8.1

**சீர்திருத்தங்கள் பல்வேறு துறைகளில் நிகழ்த்தவிருக்கும் எதிர்விளைவுகள் (சதவிகிதக் கணக்கில்)**

| மண்டலம் | சர்க்கார் செலவினம் குறைப்பு அட்ஜெஸ்ட் மெண்ட் மாடல் | எக்சைஸ்வரி அட்ஜெஸ்ட் மெண்ட் மாடல் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| விவசாயம் | 0.8 | 0.0 |
| எரிசக்தி | 0.7 | -2.8 |
| மினரல்ஸ் | 4.3 | 2.1 |
| தொழில் மொத்தம் | -2.6 | -4.8 |
| உணவு, பானங்கள், புகையிலை | -0.8 | -2.6 |
| தோல், துணி | 7.1 | 2.1 |
| பெட்ரோலியம், நிலக்கரி | 1.6 | -0.4 |
| கெமிக்கல்ஸ் | -6.7 | -8.9 |
| உலோகம் தவிர்த்த மினரல் உற்பத்திகள் | 6.9 | 6.6 |
| உலோகங்கள் | -15.3 | -15.7 |
| உலோக உற்பத்திப் பொருட்கள் | 0.3 | -1.3 |
| இயந்திரங்கள் | -16.6 | -16.4 |
| மின்சார கருவிகள் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் | 4.4 | -7.4 |
| போக்குவரத்துப் பொருட்கள் | -1.8 | -2.9 |
| மற்ற தொழில்கள் | -5.4 | -6.5 |
| கட்டிட நிர்மாணம் | -1.1 | 0.9 |
| சேவைகள் | 2.0 | 0.7 |
| மொத்தம் | -1.0 | -2.2 |

(Source : World Bank, India-Strategy For Trade Reform, Sector Report, (Mimeo) 1990)

உலோகச் சுரங்கம், சேவைகள் இரண்டுமே வளர்ச்சியை உறுதிசெய்யும் இரண்டு துறைகளாகும். மொத்தத்தில் ஏழாண்டுகளுக்கு இந்தியப் பொருளாதார வளர்ச்சி ஸ்தம்பித்துப் போய்விடும். உற்பத்தி இன்றுள்ளதை விட சற்று தாழ்ந்து விடும் வாய்ப்பிருப்பதாகத்தான் கணக்குகள் தெரிவிக்கின்றன. உண்மையில் நிலைமை இந்த அளவுக்கு மோசமாக இருக்காது என்று வங்கி அறிக்கை நமக்கு தைரியம் கூறுகிறது. இறக்குமதி தாராளப்படுத்தப்பட்டதால் ஏற்படும் மறைமுகப் பயன்கள் இந்தக் கணக்கில் சேர்க்கப்படவில்லையாம். நிறுவனங்களின் செயல்திறன்

www.tamilarangam.net



உயருமாம். முன்னைவிட குறைந்த 'ஸ்டாக்' வைத்துக் கொண்டால் போதுமாம். கச்சாப் பொருட்கள் போன்றவற்றின் பற்றாக்குறையால் உற்பத்திச் சங்கடம் நேராது. தேவைக்கு மிஞ்சிய தொழிலாளிகளை வீட்டுக்கனுப்புவதால் செவினங்கள் குறையும்...இவ்வாறு பலப்பல. இதையெல்லாம்கூட வேண்டுமனால் ஏற்றுக் கொள்ளலாம். ஆயினும்கூட உலக வங்கியின் கணக்குகளில் மிக மங்களகரமானவை கூட 90களில் நத்தை வேகத்தில் தான் உற்பத்தி வளர்ச்சி இருக்குமென்றுதான் சுட்டிக் காட்டுகிறது. பொருளாதார வீழ்ச்சியின் சகாப்தம்தான் நம்மை வெறித்து நோக்கிப் பயமுறுத்திக் கொண்டிருக்கிறது.

**வறுசட்டியிலிருந்து எரிநெருப்புக்குள்**

உற்பத்தி வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க வெற்றிகண்ட 80கள் பெரும் பான்மையான ஏழைகளின் வாழ்க்கையை மேம்படுத்தாத நிலையில் மந்தமான 90கள் அவர்களுக்கு இழைக்கவிருக்கும் தாக்குதல் எத்தகையதாக இருக்கும் என்பதை யூகிக்க வேண்டியதுதான்! ஒரு பக்கம் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகும்; மறுபக்கம் தொழிலாளிகளின் வருவாய் விலையேற்றத்தால் கரைந்துவிடும். பயன் வறுமை கொடிகட்டிப் பறக்கும்!

பட்டியல் 8.2

**தனியார், பொதுத்துறைகளில்**

**தொழில் வாய்ப்புப் பெருக்கம் (லட்சங்களில்)**

| ஆண்டு | பொதுத் துறை | தனியார் துறை | (தனியார் துறையில் (தொழில்) | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1971 | 111 | 67 | (39) | 178 |
| 1981 | 158 | 75 | (46) | 233 |
| 1985 | 176 | 74 | (45) | 250 |
| 1986 | 179 | 74 | (44) | 253 |
| 1987 | 182 | 74 | (44) | 256 |
| 1988 | 180 | 75 | (43) | 253 |

(Source : Report on Currency and Finance)

80களில் உற்பத்தி வளர்ந்திருப்பினும் ஒன்று திரட்டப்பட்ட பகுதியில் விகிதாச்சாரப்படி தொழில்வாய்ப்புகள் திறந்து விடப்படவில்லை. 1971க்கும் 1981க்கும் மத்தியில் 55 லட்சம் பேருக்கு மட்டும்தான் புதிதாக வேலை கிடைத்தது. 1985க்கும் பிறகு சொற்பம் ஐந்து லட்சம் பேருக்குதான் வேலை கிடைத்தது. அதில் ஒரு லட்சம் பேர்தான் தனியார் துறையைச் சேர்ந்தவர்கள். இதில், 8.5 சதவிகித தொழில் வளர்ச்சி மட்டுமே ஏற்பட்ட 80களில் தனியார்த்துறை தொழில்களில் பணியாற்றுபவர்களின் எண்ணிக்கை மூன்று லட்சம் வரை குறைந்துவிட்டது என்பதையும் கவனிக்க வேண்டும்! இயந்திரமயமாக்கம் போன்றவற்றின் பின்விளைவுதான் இது!

www.tamilarangam.net



இயந்திரமயம், நவீனமாக்கம் போன்ற செயல்பாடுகளை மேலும் பன்மடங்கு பலத்துடன் தொடர்வதும், அதேபொழுது 80களிலிருந்து மாறுபட்டு நோஞ்சான் நிறுவனங்களை மூடிவிட ஊக்குவிப்பதும், இறக்குமதிப் பெருக்கத்தின் பேரால் புதிய தொழிற்சாலைகளைத் திறக்காமலிருப்பதும் எத்தகைய விளைவை ஏற்படுத்தும்? தொழில் நலிந்து வேலையில்லாத் திண்டாட்டம் பெருகும் என்பது நிச்சயம். துணி, தோல் போன்ற சில தொழில்துறை வளர்ச்சி உலக வங்கி கூறுவதைப்போல் வேறு துறைகளில் ஏற்படும் தொழில் நெருக்கடிக்கு பரிகாரமாகப் போவதில்லை.

விலையேற்றத்தால் வாழ்க்கை மேலும் துன்பமாகி விடும். இதற்குள் ஒரு விஷயம் உறுதியாகி விட்டது. விலை ஏற்றம் கடந்த ஆண்டைவிடக் கடுமையாக இருக்கும். விலை ஏற்ற விகிதம் செப்டம்பரில் 15 சதவிகிதத்தைத் தாண்டி விட்டது. இந்த ஆண்டு அது 20 சதவிகிதத்தை எட்டி விடுமா என்பதைத்தான் பார்க்க வேண்டும். அதற்கு காரணங்கள் பலப்பல...

செலாவணி மாற்று மதிப்பு 20 சதவிகிதம் சரிந்து விட்டதுதான் முக்கியக் காரணம். இது இறக்குமதிப் பொருட்களின் விலைகளையும், அவற்றைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் பொருட்களின் விலைகளையும் இறுதியில் பொது விலை நிலவரத்தையும் உயர்த்திவிடும். இந்தச் சீர்திருத்தத்தால் மட்டும் கடந்த ஆண்டைவிட மூன்று சதவிகிதம் அதிகமாக விலைகள் உயரும்.

டாக்டர் மன்மோகன் சிங் விதித்த ஸ்பெஷல் எக்சைஸ் டூட்டி ரெயில்வே சரக்குப் போக்குவரத்துக் கட்டண உயர்வு, பொதுத்துறை தயாரிப்புப் பொருட்களில் ஏற்படவிருக்கும் விலை உயர்வு, உரமானியம் குறைப்பு போன்றவற்றினால் விலை ஏற்றத்திற்கு மேலும் ஆக்கம் கிடைக்குமென்பது உறுதி! உரவிலை உயர்த்தப்பட்டதற்கு தீர்வாக தானிய விலைகளை உயர்த்த அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது. ஆனால் இதற்கு விகிதாச்சாரமாக உணவு மானியம் உயர்த்தப்படவில்லை. ரேஷன் விலைகளை மேலும் உயர்த்த நேரிடும் என்று பொருள்.

பற்றாக்குறைப் பணம் இந்த ஆண்டும் குறைவில்லை. பட்ஜெட்டில் 7719 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1990-91ஆம் ஆண்டு பட்ஜெட்டில் உட்படுத்திய தொகையான 7208 கோடி ரூபாயை விட ஏறத்தாழ 500 கோடி ரூபாய் அதிகம். இந்த ஆண்டின் உண்மையான பற்றாக்குறைப் பணம் கடந்த ஆண்டைப் போல் பட்ஜெட்டில்ஒதுக்கப்பட்டதையும் தாண்டிவிடாதா என்பதற்கு நிதி நிறுவனத்தின் நிபந்தனைகள் உறுதி அளிக்கவில்லை!

நிதிநிறுவனத்துடன் இருக்கும் ஒப்பந்தம் நிதிப் பற்றாக்குறையை தேசிய வருவாயின் 6.5 சதவிகிதமாக வறையுறைப்படுத்தப்படும் என்று மட்டும்தான் அத்தியாயம் 7இல் குறிப்பிட்டதைப் போல் நிதிப் பற்றாக்குறை என்பது பற்றாக்குறை பணமும் கடன்வருவாயும் சேர்ந்ததுதான். கடன் இல்லை, பற்றாக்குறைப் பணம்தான் விலையேற்றத்திற்குக் காரணம் என்பதை நினைவிற்கொள்ளுங்கள். நிதிப் பற்றாக்குறையில் கடன் விகிதம் குறைந்து, பற்றாக்குறைப் பணத்தின் விகிதம்

www.tamilarangam.net



அதிகரித்தால் அதில் நிதி நிறுவனம் வெறுப்படையாது சர்வதேச நிறுவனத்தின் பார்வைக்கேற்ப கோட்பாடுகளை உருவாக்கும் நாடுகளில் அனைத்தும் பரவலான ஒரு நிகழ்வுதான் விலையேற்றம் என்பதை நான்காவது அத்தியாயத்தில் பார்த்தோமல்லவா!

ஆனால் விலையேற்றத்திற்கு ஏற்ப கூலி உயர்வை அனுமதிக்கவும் மாட்டார்கள். அனுமதித்தால் நிதி நிறுவனத்தின் திடபடுத்தும் கொள்கை தகர்ந்துவிடும். பொருளாதாரக் கட்டுமானத்தை, குறிப்பாக சாமான்ய மக்களின் வாங்கும் திறனை வரையரைப்படுத்துவதுதான் திடப்படுத்தும் கொள்கையின் சாரம். உண்மையான கூலி சரியத்தான் வேண்டும். இதற்காகக் கூலியை உறையச் செய்ய வேண்டுமா? வேறு என்ன நடவடிக்கை எடுப்பார்களோ தெரியவில்லை. ஆனால் ஒரு விஷயம் சந்தேகமில்லை. 80களைப் போன்று ஒன்று திரட்டப்பட்ட பகுதிக்கு விலையேற்றத்தின் கெடுதிகளிலிருந்து 90 களில் பாதுகாப்புக் கிடைக்கப் போவதில்லை! ஒன்றுபடாத பகுதிகளின் நிலைமையைப் பற்றிப் பிறகு சொல்லவா வேண்டும்?

**விடுதலையில் இருந்து வறுமைக்கு...**

இந்த தேசத்தைக் கடன் பொறிக்குள் அழைத்துச் சென்ற அதே கொள்கைகளை மேலும் வேகமாகப் பின் தொடர்வதற்குத்தான் நமது மக்கள் இந்தத் துயரங்களைச் சுமக்க வேண்டியிருக்கிறது என்பது 'விதிவசம்' போலும்! இந்தியாவின் மூன்று அல்லது நான்கு சதவிகித மேட்டுக் குடிகள் மேற்கொண்ட விரயத்திற்காக 95 சதவிகிதச் சாமான்ய மக்கள் விலை அளிக்க வேண்டியிருக்கிறது. வேட்டியில்லாதவர்களிடம் வேட்டியை இழுத்துக் கட்டச் சொல்லும் ஆளும்வர்க்கத் தந்திரம் நம்மை எங்குதான் இட்டுச் செல்லுமோ?

பட்டியல் 8.1இல் கணக்குகளை மீண்டும் ஒரு முறை கண்ணோட்டம் விடுங்கள். இயந்திர-உலோக-ரசாயனத் தொழில்களில்தான் மிகவும் கடுமையான வீழ்ச்சியேற்படப்போகிறது. இயந்திரத் தொழில் உற்பத்தி 16 சதவிகிதம் குறையப்போகிறது. இந்த இயந்திரத் தொழில் பற்றி உலக வங்கியின் ரிப்போர்ட்டில் இருந்தே மேற்கோளைத்தர விரும்புகிறோம்: "பொருளாதாரச் சுயசார்புக்கான முயற்சியில் இந்தத் துறையை கோட்பாட்டு முக்கியத்துவம் பெற்றதாக இந்தியாவின் திட்ட மூலவர்கள் கருதினார்கள். புதிய பொதுத்துறை முயற்சிகளைத் தொடங்கினார்கள். அழிவில் மூழ்கிய தனியார் துறை நிறுவனங்களை ஏற்று நடத்தினர். இந்தத் துறைக்குப் போஷாக்களித்தனர். இயந்திரத் துறையில் 40 சதவிகிதம் பொதுத்துறையைச் சேர்ந்தது! படைந்தது...." குறைபாடுகள் ஏராளமாக இருக்கின்றன. அவற்றைக் களைய வேண்டும். அதற்குப் பதிலாகத்தான் தொழில் அடிப்படையை முழுக்கத் தூள் தூளாக்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடுகிறார்கள்.

இந்தியாவின் அடிப்படைத் தொழில்கள் சந்திக்க இருக்கும் அழிவின் அரசியல் முக்கியத்துவ்ம் என்ன? ஐந்து பத்தாண்டுகளுக்கு முன் பாம்பே பிளானில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தது; "பிற தொழில்களின் வளர்ச்சி மட்டுமின்றி, தேசத்தின்

www.tamilarangam.net



முழுப் பொருளாதார வளர்ச்சியும் இந்தத் தொழில்களை நம்பித்தான் இருக்கிறது. இந்தத் தொழில்கள் வளர்ச்சியடையும் வரை இயல்பாகவே "நாம் வெளிநாடுகளின் 'தயவு தாட்சண்யத்துக்கு' ஆட்பட வேண்டியிருக்கும்" விடுதலைப் போராட்டக் கால தேச பக்தப் பார்வையின் புறக்கணிப்பு மட்டுமின்றி, இதே திசையில் விடுதலைக்குப் பிந்தியகால வெற்றிகளின் அடிபணிவு கூடத்தான் இந்தப் புதிய சீர்திருத்தங்கள்!

விவசாய உற்பத்தி அமைப்பில் மட்டுமின்றி அதன் மீதான கட்டுப்பாட்டின் தன்மையிலும் புதிய சீர்திருத்தங்கள் மாறுதல்களை ஏற்படுத்தும். வெளிநாட்டு முதலீட்டின் செல்வாக்கு பலமடங்கு உயரும் என்பது நிச்சயம். கடன் மூலதனத்தை மட்டுமின்றி பன்னாட்டு ஏகபோகங்களின் நேரடி மூலதன முதலீட்டையும் ஊக்கப்படுத்துவதுதான் புதிய கொள்கையாகும்.

பன்னாட்டு ஏகபோகங்களின் மீதான கட்டுப்பாடுகள் நீக்கப்படுவதை நியாயப்படுத்த, அதனால் ஏற்படும் மூன்று பலன்களைச் சுட்டிக் காட்டுகிறார்கள்.

1 பன்னாட்டு ஏகபோகங்கள் மூலதனத்தைக் குவிக்கும். இதனால் நாட்டின் முதலீடு உயரும்.

2 மேற்கத்திய உலகின் தொழில் நுட்ப ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றத்தின் உரிமையாளர்கள் பன்னாட்டு ஏகபோகங்கள் தான். இவர்களுடன் ஒத்துழைத்து இந்தியாவின் தொழில் நுட்பத் திறனில் ஒரு பெரும் பாய்ச்சலை மேற்கொள்ள முடியும்.

3 உலக வர்த்தகத்தை இன்று பன்னாட்டு ஏகபோகங்கள்தான் கட்டுப்படுத்துகின்றன. உலக வர்த்தகத்தின் 33 சதவிகிதம் பன்னாட்டு ஏகபோகங்களின் பல்வேறு நாடுகளிலிருக்கும் தேசியக் கிளை அமைப்புகளுக் கிடையில் நடக்கும் உள்நாட்டு வர்த்தகமாகும். எனவே பன்னாட்டு ஏகபோகங்களைத் திருப்திப்படுத்த முடிந்தால் நமது ஏற்றுமதியைப் பெருக்க இயலும். இந்த உத்திகள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக ஆராயலாம்.

உலகளாவிய மூலதனத் தலைவர்களாகத் திகழ்பவர்கள் இன்றைக்கு பன்னாட்டு ஏகபோகங்கள்தான் என்பதில் ஐயமில்லை. ஐக்கிய நாடுகள் சபை கணக்குத் திரட்டும் 382 பூதாகார ஏகபோகங்களின் மொத்த விற்பனை வருவாய் முதலாளித்துவ உலகின் மொத்த உற்பத்தியின் 28 சதவிகிதமாகும். ஆனால் நம்முடைய பொருளாதார அமைப்பின் நெடுங்கதவுகளை அவர்களுக்காகத் திறந்துவிட்டால் மூலதனம் பெருக்கெடுத்துப் பாய்ந்து வரும் என்று எதிர்பார்ப்பது பகற்கனவாகும். மூலதனத்தைக் கொண்டு வராமலேயே தொழில் கட்டுப்பாட்டைக் கைப்பற்றும் வாய்ப்புக் கிடைக்குமானால் அதுதானே அமலாகும்? வெளிநாட்டுக் கம்பெனிகள் பங்கு மூலதனத்துடன் செயல் மூலதனத்தையும் கொண்டு வரவேண்டும் என்று எந்த நிபந்தனையும் இந்திய சர்க்கார் விதிக்கவில்லை. எனவே சொற்பப் பங்கு மூலதனத்துடன் வந்து இந்தியக் கடன் சந்தையில் இருந்து பூதாகரமான கடனைப் பெற்று தொழில் தொடங்கத்தான் பன்னாட்டு ஏகபோகங்கள்

www.tamilarangam.net



முயற்சிக்கும். உள்நாட்டுத் தொழில்களுக்கான கடன் மூலதனத்தின் செலவில் வெளிநாட்டு ஏகபோகம் வளர்ச்சியடையும். இதுதான் பல்வேறு வளரும் நாடுகளிலும் நடை பெற்றிருக்கிறது. பல சந்தர்ப்பங்களிலும் பன்னாட்டு ஏகபோகங்கள் பிற நாடுகளில் கிளை நிறுவனங்களை அமைக்கின்றன. ஆனால் அது புதுக் கம்பெனிகள் அல்ல என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும். கணக்குகள் சுட்டிக் காட்டுவது என்னவென்றால் 40 சதவிகிதப் பிரச்சினைகளிலும், இருக்கின்றன தேசியக் கம்பெனிகளை அவர்கள் விலை கொடுத்து வாங்குகிறார்கள் என்பதைத்தான். பன்னாட்டு ஏகபோகங்கள் தேசிய நிறுவனங்களை விழுங்கி ஏப்பம் விடுகின்றன....

இதையெல்லாம் விட, வெளிநாட்டு மூலதன முதலீடு தற்காலிகமாக மூலதனப் பஞ்சத்தைப் போக்கினாலும், எதிர்காலத்தில் தேசத்தின் மூலதனத்திறனை எதிரிடையாகப் பாதிக்கும் என்பதுதான் அனுபவம்! ஏனென்றால் இந்த முதலீட்டின் லாபமும் வட்டியுமாக ஒரு பூதாகாரத் தொகையை எதிர்காலத்தில் கொடுக்க வேண்டிய பொறுப்பும் 'விருந்தோம்பல்' நாட்டுக்கு இருக்கிறது. இன்றைக்கு வளரும் நாடுகளில் ஆண்டுதோறும் புதிதாக முதலீடு செய்யப்படும் வெளிநாட்டு மூலதனத்தைவிட எத்தனையோ மடங்கு பெரும் தொகைதான் வட்டியாகவும் லாபமாகவும் வளரும் நாடுகளில் இருந்து கடத்திச் செல்கிறார்கள் என்பதைக் கணக்குகளை வரிசைப்படுத்தி நான்காவது அத்தியாயத்தில் தெளிவுபடுத்தி யிருக்கிறோம். இந்த வெளிநாட்டுப் பணக் கசிவுதான் பல்வேறு நாடுகளின் பேலன்ஸ் ஆப் பேமெண்டின் சமசீரற்ற நிலைக்கு முக்கியக் காரணியாக இருப்பவைகளில் ஒன்றாகும்.

பன்னாட்டு ஏகபோகங்களின் தொழில் நுட்பத் திறனைச் சார்ந்திருப்பது சுயசார்பைத் தொலைத்துக் கட்டுகிறது. பெரும்பாலும் பன்னாட்டு ஏகபோகங்கள், நம் நாட்டுச் சூழ்நிலைக்குப் பொருந்தாததும், வளர்ந்த நாடுகளில் பயனற்றதுமான தொழில் நுணுக்கத்தைத்தான் திணிக்க விரும்புகின்றன. தொழில் நுணுக்கத் திறனின் கட்டுப்படுத்த முடியாத இறக்குமதி தேசியத் தொழில் நுணுக்கத் திறன் வளர்ச்சியை நசுக்கிச் சாவடிக்கிறது. பன்னாட்டு ஏகபோகங்களின் கட்டுப்பாடிலிருக்கும் தொழில் நுட்பத்திறன், வளரும் நாடுகளின் எதிர்காலப் பொருளாதார வளர்ச்சியைப் கட்டுப்படுத்துவதற்கான ஒரு காரணியாகி விடுகிறது. தொழில் நுட்பத் திறனை அடிப்படையாகக் கொண்டிருக்கும் புதிய காலனியாதிக்கச் சுரண்டல் மற்றும் இது தொடர்பான உருகுவே சுற்று ஏகாதிபத்திய முயற்சிகளை 6ஆவது அத்தியாயத்தில் ஆராயப்பட்டது இங்கு பொருளுடையதாகிறது.

புதிய கொள்கையின் மூலகர்த்தாக்கள் மிகவும் விரும்பி உதாரணம் காட்டுவது கொரியாவைத்தான். தென்கொரியாவில் கட்டுமீறிய வெற்றி இறக்குமதி செய்யப்பட்ட தொழில் நுணுக்கத் திறனால் ஏற்பட்டதல்ல! பேராசியரியர் அருண்கோஷ் சொல்கிறார்: "வெளிநாட்டுத் தொழில் நுணுக்கத் திறனை உள்நாட்டுத் தொழில் நுணுக்க ஆராய்ச்சியுடன் இணைத்து, கடுமையான கட்டுப்பாடுகளுடன் இறக்குமதி செய்து, வெளிநாட்டு தொழில் நுணுக்கத்தை தன்னகப்படுத்தி உருமாற்றி வளர்ச்சி கண்டவர்கள்தான் தென்கொரியர்கள்..." வெளிநாட்டு தொழில் நுணுக்கத்

www.tamilarangam.net



திறனை தேச நலனுக்காகப் பயன்படுத்த வேண்டுமென்றால் தேசியத் தொழில் நுணுக்கத்தின் அடித்தளமும் பலமாக அமைய வேண்டும்! ஆனால் இந்தியாவில் அது பலவீனமடையும் கொள்கைதான் கடைபிடிக்கப்பட்டு வருகிறது!

இறுதியாக பன்னாட்டு ஏகபோகங்களைச் சார்ந்திருந்து மேற்கொள்ளப்படும் ஏற்றுமதி வளர்ச்சிக் கொள்கையின் வெற்றி வாய்ப்பை ஆராய்வோம். ஏற்றுமதி வளர்ச்சிக் கொள்கையின் வாயிலாக தொழில் வளர்ச்சி பெற்ற சிங்கப்பூர், தாய்வான், தென்கொரியா போன்றவற்றின் சாதனைகளை ஒப்புக் கொள்வோம். ஆனால் இவர்களைப் போல் வளரும் நாடுகள் அனைத்துமே தொழில் வளர்ச்சி பெறும் என்று நம்புவோமானால் அதைவிடப் பைத்தியக்காரத்தனம் வேறில்லை. இந்த நாடுகளிலிருந்து தொழில் பொருட்களை வளரும் நாடுகள் இறக்குமதி செய்ய ஆரம்பித்தால் அந்த நாடுகளின் தொழில் நிலைமை என்னவாகும்? உலகளாவிய அமெரிக்கக் கோட்பாட்டைச் சார்ந்திருப்பதாலும், சில விசேஷச் சூழ்நிலைகளாலும் தங்களுடைய ஏற்றுமதி வளர்ச்சிக் கொள்கையின் மூலம் சில நாடுகள் தப்பித்து விட்டன என்பது சரிதான். ஆனால் இது ஒட்டுமொத்தத்தில் வளரும் நாடுகளுக்கு. குறிப்பாக இந்தியாவைப் போன்ற பெரிய துணைக்கண்டத்திற்கு ஏற்ற வழி அல்ல!

தென்கிழக்கு ஆசிய நாடுகளும், லத்தீன் அமெரிக்க நாடுகளும், உலக வர்த்தகம் அடிக்கடி உயர்ந்து கொண்டிருந்த அறுபதுகளில்தான் ஏற்றுமதி வளர்ச்சிக் கொள்கையை உருவாக்கின. ஆனால் எழுபதுகளின் இறுதியோடு தொடங்கிய வர்த்தக மந்தநிலை தொடர்ந்து கொண்டிருக்கிறது! ஆறாவது அத்தியாயத்தில் குறிப்பிட்டதைப் போல் சுதந்திர வர்த்தக எதிர்ப்பலை உலக முதலாளித்துவத்தைச் சூழந்து கொண்டது, இன்னும் ஒயவில்லை. இந்த அலைச் சுழலில் சிக்கி உருகுவே சுற்றுப்பேச்சுகள் வட்டமடிக்கின்றன! இந்தச் சூழலில்தான் ஏற்றுமதி வளர்ச்சி மோகம் கொண்ட இந்தியா பன்னாட்டு ஏகபோகங்களை வசப்படுத்த முயற்சிக்கிறது! பன்னாட்டு ஏகபோகங்களின் குறி வெளிநாட்டுச் சந்தையல்ல; இந்தியாவின் உள்நாட்டுச் சந்தையே! வெளிநாட்டுக் கம்பெனிகள் இறக்குமதி செய்யும் பொருட்களுககும், வெளியேறும் வட்டிக்கும், லாபத்திற்குப் தேவைப்படும் வெளிச் செலாவணியை விட அதிக வருவாய் ஏற்றுமதியின் வாயிலாகப் பெறவேண்டும் என்ற லகுவான நிபந்தனையைக் கூடக் கட்டாயமாக்குவதற்கு புதிய கொள்கையின் கர்த்தாக்கள் தயாரில்லை. இந்தக் கொள்கை தற்கொலைக்குச் சமமானது!

புதிய கொள்கைகள் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் நிலைக்கு இந்தியாவை உயர்த்துவதற்கு மாறாக, ஏற்றுமதி வளர்ச்சிக் கொள்கைக்கு பலியாகி 'இரத்த சாட்சிகளாகிவிட்ட' லத்தீன் அமெரிக்க நாடுகளின் கீழ்நிலைக்குத் தள்ளிவிட்டன! வெளிநாட்டுச் செலாவணி நெருக்கடிக்கு தீர்வாக நிதிநிறுவனமும் உலக வங்கியும் கூட்டுச் சேர்ந்து திணித்துக் கொண்டிருக்கும் நெடுங்காலப் பொருளாதார மந்த நிலையிலிருந்து இந்தியாவைக் கரையேற்ற உதவும் இந்தியாவுக்குள் பன்னாட்டு மூலதன முதலீடும். இந்தியாவிலிருந்து ஏற்றுமதியும் உயரப் போவதில்லை. எதிர் காலத்தைப்பற்றி எதிர்பார்ப்பைத் தவிர உறுதிமொழி எதையும் நிதிநிறுவனம் அளிக்கவில்லையல்லவா? ஆயினும், நல்ல எதிர்காலம் வரும் வரை கடன் அளித்துக் கொண்டிருக்கிறோம் என்று கூறியிருக்கிறார்கள். இந்தக் கடன்களைப்

www.tamilarangam.net



பெற்றுக் கொள்வதும், பழைய கடன்களை 'ரீஷெட்யூள்' (தவணை நீடிப்பு) செய்வதும், அல்லது வெளிநாட்டாரின் தயவை நாடி அவற்றில் சிலவற்றை இடையிடையே தள்ளுபடி செய்விப்பதும்தான் இந்திய ஆட்சியாளர்களின் அன்றாட வேலையாக இருக்கும். இதற்காக அவர்களின் தாளத்திற்கேற்ப ஆடவேண்டிய கட்டாயச் சூழ்நிலை ஏற்படும். லத்தீன் அமெரிக்க நாடுகளின் இன்றைய நிலை இதுதான்!

இவ்வாறு கடன் வாங்கி ஊதாரித்தனம் செய்தவர்கள்தான் லத்தீன் அமெரிக்க நாடுகளின் முன்னாளைய ராணுவ ஆட்சியாளர்கள். நெருக்கடி முற்றியதும் ஆட்சியை மக்கள் பிரதிநிதிகளிடம் ஒப்படைத்து அவர்கள் பாசறைகளுக்குத் திரும்பி விட்டனர். ஜனநாயக மீட்சி, லத்தீன் அமெரிக்காவில் ஒரு புதிய காலகட்டத்தின் தொடக்கத்திற்கு அடிகோலும் என்று நம்பியவர்கள் எல்லாம் இன்று ஏமாந்துவிட்டனர். தேர்தல் முடிந்ததும் மக்கள் தலைவர்கள் வாக்குறுதிகளை மறந்து விட்டனர். நிதி நிறுவனம் மற்றும் வங்கியின் மக்கள் விரோதக் கொள்கைகள் மேலும் தீவிரமாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இதைத் தவிர வேறு வழியில்லை என்றுதான் புதிய ஆட்சியாளர்கள் ஒப்பாரி வைக்கின்றனர். 'இதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைமையில் தேசத்தின் பொருளாதார சுயாதிகாரமும் மறைந்து விடுகிறது. பொருளாதார சுயாதிகாரத்தின் பாதையிலிருந்து அரசியல் சுயாதிகாரப் பாதைக்குள் நுழையும் திருப்பம் மிகவும் குறுகலானதாகும்....!

வெள்ளைக்காரனின் திமிர் பாருங்கள்! இந்த ஆண்டுக்கான 'இந்திய உதவி கிளப்'பின் பின்னணி ஆவணத்தைத் தயாரிக்க வந்த உலக வங்கியின் அதிகாரி, இந்தியப் பிரதிநிதிகளின் குழுவிடம் "இந்தியாவில் அரசியல் நிர்வாகக் குறைபாடுகள்" தொடர்பாக ஒரு நன்னெறிச் சொற்பொழிவே நிகழ்த்தி விட்டாராம்! புதிய கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் அரசியல் ஆளுமையை இந்தியா மேலும் தெளிவுபடுத்த வேண்டுமாம்! புதிய சீர்திருத்தங்களை வரவேற்கும் 'இந்து'ப் பத்திரிகைக்குக்கூட இது சகிக்கவில்லை. பழைய தேசியப் பாரம்பரியம் இன்னும் அந்தப் பத்திரிகையிடம் 'மிச்ச சொச்ச' மாக இருக்கிறது போலும்! வங்கியின் திமிரையும், அதை எதிர்த்து ஒரு வார்த்தைகூடப் பேசாமல் வங்கியைச் சமாதானம் செய்ய முயன்ற அமைச்சரையும் விமர்சித்து இந்து ஒரு தலையங்கம் எழுதியது: "நிபுணர்களின் விசேஷ அறிவுரைகள் எதுவுமில்லாமலேயே அரசியல் துறையில் இந்தியாவால் சுயமாக முடிவெடுக்க இயலும். இது தொடர்பாக இந்தியப் பாராளுமன்றத்தில் மேற்கொள்ளப்படும் அரசு அறிவிப்புகளை அப்படியே ஏற்றுக் கொள்ள வெளிநாட்டு ஏஜென்சிகள் தயாராக இருப்பதுதான் சிறந்தது! பாராளுமன்ற முடிவுகளை விட மேலான அரசியல் உறுதிமொழிகள் எதையும் அளிக்க ஜனநாயக அமைப்பில் விதியில்லை என்பதை அமைச்சரும் புரிந்து கொள்ள வேண்டும்." (இந்து 17-8-1991)

நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்?

**தேசப்பற்றுமிக்க மாற்று**

உலக வங்கியும் நிதி நிறுவனமும் பரப்புகின்றன சரணாகதிப் பொருளாதாரத்திற்கெதிராக, இந்த நூலில் முன் வைக்கப்பட்ட விமர்சனங்களை

www.tamilarangam.net



டாக்டர் மன்மோகன் சிங்கால் கூடப் புறக்கணிக்க முடியும் என்று தோன்றவில்லை. நிதி நிறுவனத்தின் நிபந்தனைகளைப் பற்றி "சௌத் கமிஷன்" செயலாளர் என்ற முறையில் 1988-மார்ச்சில் அவர் எழுதியதைக் கீழே தருகிறோம்: "நிபந்தனைகள் தொடர்பான முக்கியக் குறிப்புகளின் கொள்கை சரிதானா என்ற சந்தேகம் இருந்து கொண்டிருக்கிறது. பல சந்தர்ப்பங்களில் அவற்றின் பொருளாதாரம் மற்றும் சமுதாய எதிர்த்தாக்குதல் மிகவும் அழிவேற்படுத்துவதாக இருந்தது. நிதிக் கொள்கைகள் பெரும்பாலும் உற்பத்தித் திறன் வினியோகம் குறைவதற்கும் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகுவதற்கும்தான் இட்டுச் சென்றிருக்கிறது. விலையேற்றக் காலத்தில் தாராளமாகத்தான் வழிவகுத்தது பொருளாரக் கொள்கைகளில் 'பாகுபாடை' முடிவுக்குக் கொண்டு வரவேண்டுமென்ற அடம் சமனற்ற நிலையை வளர்த்தது. நெருக்கடிக் காலத்தில் இறக்குமதியை தாராளப்படுத்த வேண்டுமென்ற நிர்ப்பந்தம் பேலன்ஸ் ஆப் பேமெண்ட் குளறுபடியைத் தீவிரமாக்குவதையும் தவிர்ப்பதையும் விட மாற்று மதிப்பை வெட்டிக் குறைப்பதில் கொண்டுபோய் விட்டது. முதன்மைப் பொருட்களின் ஏற்றுமதிக்கு அனைத்து நாடுகளும் அளித்து வரும் அழுத்தம் இவற்றின் சர்வதேச விலைகளில் சரிவேற்படவும் மொத்தத்தில் வளரும் நாடுகளின் ஏற்றுமதி வருவாய் குறையவும் காரணமாகியியிருக்கிறது. தேசியச் சூழ்நிலைகள் எதையும் கருத்திற் கொள்ளாமல் சுதந்திர வர்த்தகத்தைத் திணிப்பதற்கான முயற்சிகள் தேசிய வளர்ச்சிக் கொள்கைகளுடன் பொருந்தா நிலையை ஏற்படுத்துகிறது."

தன்னுடைய பழைய அறிக்கைகளையெல்லாம் டாக்டர்மன்மோகன் சிங் இதுவரை மறுத்துப் பேசவில்லை. ஆனால் இன்றைக்கு அவருடைய கட்டுப்பாடு இது ஒன்றுதான்: "வேறு வழியில்லை; ஆம்; வேறு போக்கிடம் இல்லை.

பழைய கொள்கைக்கே திரும்பிச் செல்வது ஒரு பதிலாகாது. அவற்றிற்க்கும் நம்முடைய இந்த வீழ்ச்சியில் பங்கிருக்கிறதல்லவா? புதிய கொள்கைகளை மட்டுமின்றி பழையனவற்றையும் அவை பாதுகாத்து வந்த இன்றைய சமுகப் பொருளாதார அமைப்பையும் அடியிலிருந்து முடிவரை மாற்றி அமைக்க வேண்டும். இதைப்பற்றி எங்களுக்கு எள்ளளவும் சந்தேகமில்ல. ஆனால் அதுவரை சர்வதேச நிதி நிறுவனத்திடம் சரணாகதி அடைவதைத் தவிர வேறு வழியில்லையா? எத்தனை வரையறைகள் இருப்பினும் வேறு மார்க்கத்தைக் கண்டே தீர வேண்டும். இத்தகைய ஒரு மாற்றுத் திட்டத்தை முன்வைக்காமல் தேசியச் சரணாகதிக்கு எதிராகப் பரந்த அளவில் தேசபக்தர்களின் ஒற்றுமை அணியை உருவாக்க முடியாது! இந்தப் பார்வையுடன்தான் நாங்கள் மாற்றுத் திட்டத்திற்கான கீழ்வரும் அணுகுமுறையைக் குறிப்பிடுகிறோம்.

முதலாவதாக ஒன்றைச் செய்ய வேண்டும். வேறு வழி இல்லை என்ற கூப்பாட்டை நிறுத்த வேண்டும். வேறு வழியில்லை என்று வினாடிக்கு வினாடி கூப்பாடிட்டு அழுதபடி நிதி நிறுவனத்திடம் பேரம் பேசச் சென்றால் எப்படியிருக்கும்? தாங்கள் செய்து குவிக்கும் தேசத் துரோகத்தைக் கேள்விக்குள்ளாக்கும் மனத்துணிவை மக்களிடமிருந்து பறிப்பதுதான் இந்தக் கூப்பாடுகளின் உள்நோக்கம் என்று கூடச் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது! இதோடு, ஆட்சியாளர்களால் செய்விக்கப்பட வேண்டிய இன்னொன்றும் இருக்கிறது. உண்மை

www.tamilarangam.net



நிலையை மக்களிடம் வெளிப்படையாகச் சொல்ல வேண்டும். சர்வதேச நிதி நிறுவனத்திற்கும் வெளிநாட்டு வங்கிகளுக்கும் அளிக்கும் நலன்களையாவது இந்திய மக்களுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும். 1923இல் பிரிட்டிஷ்காரர்கள் ஏற்படுத்திய 'அதிகாரப்பூர்வ ரகசியச்சட்டப்படி "தேசத்தின் ஒற்றுமைக்கும் சுயாதிகாரத்துக்கும் ஊறு விளைவிக்கும்" என்பதனால் இந்தியப் பொருளாதார நிலைமைகளைப் பற்றிய இறுதிப் புள்ளி விவரக் கணக்குகள் மற்றும் உலக வங்கி, நிதி நிறுவன ரிப்போர்ட்டுகளும் அவர்களுடன் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தங்கள் போன்றவையெல்லாம் வெளிப்படுவதேயில்லை. முன்னர் எப்போதையும் விட இப்போது, தெரிந்து கொள்வதற்கான உரிமைப் போராட்டம் மேலும் பொருளுடையதாகிவிட்டது.

**ஒன்று - நிதி நிறுவனத்திடமிருந்து கடன் :** செய்து விட்டதை திரும்பப் பெறமுடியாது செலாவணி மாற்று மதிப்பைக் குறைத்தாகிவிட்டது. இனி அதை உயர்த்துவதில் பொருளில்லை. நிதியிடம் கடன் பெற்றதை இனி வேண்டாம் என்று கூறமுடியாது. ஆனால் ஒன்று செய்யலாம் நடந்தது நடந்துவிட்டது. இனிமேல் இது தேவையில்லை. இந்தியாவின் வெளிநாட்டுச் செலாவணி மாற்று நெருக்கடி தொடர்பான புள்ளி விவரக் கணக்குகள் கிடைக்காதது சரியான தீர்வு கூறத் தடையாக இருக்கிறது. நிதி நிறுவனம் அனுமதித்த தொகை, அனுமதிக்க இருக்கும் தொகை போன்றவற்றிக்கெல்லாம், ரிசர்வ் வங்கி, நிதி அமைச்சகம் மட்டுமின்றி ஒவ்வொருவரும் ஒவ்வொரு கணக்கைக்கூறுகின்றனர். எதுவாயினும் நிதிநிறுவனத்திடம் பெறும் கடன்களை முடிந்த அளவு குறைக்க வேண்டும். பேராசிரியர் அருண்கோஷ் கூறுவதைப்போல், இந்த ஆண்டுக்கு ஒதுக்கப்பட்டதாகக் கூறப்படும் 200 கோடி டாலருக்குமேல்-ஏறத்தாழ 5000 கோடி ரூபாய்-எந்தக் காரணத்தைக் கொண்டும் இனிக் கடன் வாங்கக் கூடாது கூடுதல் கடன் பெற்றால் இந்த ஆண்டுப் பிரச்சினை எளிதாக முடிந்துவிடும் என்றாலும், மூன்றாண்டு களுக்குப் பிறகு திருப்பிச் செலுத்த நேரும்போது அடி சருக்கிவிடும். 1991-இறுதியாகும்போது இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் சுமை 2 லட்சம் கோடி ரூபாய்க்குமேல் இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் கடன்களின் தவணைகள் மற்றும் வட்டிகள் சேர்த்து 1991-92-இல் 16,000 கோடி ரூபாயாவது தேவைப்படும். ஏற்றுமதி, மீறினால் 40,000 கோடி ரூபாய்தான் வரும். இந்த ஆண்டு கடன் சர்வீஸ் செலவுகள் ஏற்றுமதியின் ஏறத்தாழ 40 சதவிகிதத்தை நெருங்கும். இதுகூட சற்று சிரமம்தான். இத்துடன் புதிய சுமையும் சேர்ந்துவிட்டால்? இது மட்டுமின்றி கடன் தொகை பெருகப்பெருக மேலும் கடுமையான நிபந்தனைகளுக்கு (இறக்குமதியை மேலும் தாராளப்படுத்துவது உட்பட) நாம் கீழ்ப்படிய நேரிடும். இதுவும் பேலன்ஸ் ஆப் பேமெண்ட் நெருக்கடியை கடுமையாக்கும்.

இதுவரை நாம் பெற்ற 200 கோடி டாலர் கடன்களின் முடிவில் அடுத்த ஆண்டு நாம் என்ன செய்யப் போகிறோம்? அடுத்த ஆண்டும் வெளிநாட்டுச் செலாவணி நெருக்கடி சற்றும் குறையப்போவதில்லை. இதைக்கூட எதிர்பார்த்து தேசத்தில் பிரச்சினைகள் இயல்பான நிலைமைக்குத் திரும்பும் வரையாவது கடன்களை உறுதி செய்ய வேண்டுமல்லவா? அடுத்த ஆண்டு விஷயம் அப்போது

www.tamilarangam.net



பார்த்துக் கொள்ளளலாம் என்பது பிரச்சினையை மேலும் சிக்கலாக்குவதற்குத்தான் பயன்படும்.

இப்படிப் பேசுபவர்களிடம் நாங்கள் இதைத்தான் சொல்ல விரும்புகிறோம் : பழைய கடன்களின் தவணைகளையும், வட்டியையும் திருப்பிச் செலுத்துவதற்கு புதிய கடன் வாங்க முயற்சிக்கக் கூடாது. மாறாக, பழைய கடன்களின் தவணைகள் நீடிப்பு, ரீஷெட்யூல் போன்றவற்றுக்காகப் பேரம் பேசவேண்டும்; கடன்களுக்கு மோரோட்டோரியம் போன்றவற்றை நாமும் கட்டளையிடவேண்டும் என்று நாங்கள் குறிப்பிடவில்லை. ஆனால், கடன்களைத் திருப்பிச் செலுத்த கால அவகாசம் கோரலாம். அதை மேற்கத்தியர்கள் ஏற்றுக் கொள்ளவில்லையானால் ஒரு தலைப்பட்சமாக நாமே வசதிப்படும் போதுதான் செலுத்த முடியும் என்று முடிவெடுக்க நேரிடும். அதன் எதிர் விளைவுகளைச் சந்திக்கவும் வேண்டும். என்ன நேரிடினும் வெளிநாட்டினரிடம் நம்முடைய நாடு மண்டியிடாது.

இந்த தேசப்பற்றுமிக்க நிலையை ஏற்றுக் கொள்ளத் தயாரானால் மாற்று வழி இருக்கிறது. மக்களுடைய நாட்டுப்பற்றில் தோய்ந்த மாற்று வழி; விடுதலை பெறுவதற்காக விலைமதிப்பற்ற தியாகங்களைச் செய்து வீரப் போர் நிகழ்த்திய மக்கள் விடுதலையைப் பேணிக்காக்க (அதை விபத்துக்குள்ளாக்கிய காரணகர்த்தாக்கள் வேறாக இருப்பினும்) மேலும் தியாகங்களுக்குத் தயாராக இருக்கிறார்கள். இதற்காக ஒரு தேசிய ஒற்றுமையை, ஒருமைப்பாட்டை உருவாக்கமுடியும்.

தேசத்தின் பேலன்ஸ் ஆப் பேமெண்ட் பற்றாக்குறை மற்றும் பட்ஜெட் பற்றாக்குறையை சரி செய்வதற்கு ஒருசெயல் திட்டத்தை நாமே முன்னின்று தயாரிக்கலாம். சுய சார்பில் ஊன்றிய தேசத்தின் பொருளாதார வளர்ச்சியின் வேகத்தை அதிகப்படுத்தவும் மக்களின் நலன் மற்றும் ஜனநாயகத்தை பலப்படுத்தவும் பயன்படும். புதிய வளர்ச்சிக் கொள்கையை உருவாக்குவோம். இது மிகவும் முக்கியம். முதலாவதாக, பழைய கொள்கைக்குத் திரும்ப முடியாது. அவை காலாவதியாகிவிட்டது. புதிய பார்வைக்குத்தான் மக்கள் ஆதரவளிப்பார்கள். இரண்டாவதாக, வெளிநாட்டினருக்கும் புதிய சமிக்ஞைகளைக் கொடுக்க வேண்டும். பழைய ஆட்டம் முடிந்து விட்டது. இனி புதிய விதிகளுக்கேற்பத்தான் விளையாட்டு. வேறுவழில்லை என்று கூப்பாடுபோட்டுக்கொண்டு பேரம் பேசப்போவதில்லை. வேறு வழி இருக்கிறது என்று பிரகடனம் செய்து கொண்டுதான் பேரம் பேசப்போவோம்!

இந்தத் திட்டத்தின் முக்கியமான கோட்பாடுகள் என்னென்ன?

**இரண்டு-பேலன்ஸ் ஆப் பேமெண்ட்**: திறனுக்கு மீறி இறக்குமதி செய்வதுதான் 'பேலன்ஸ் ஆப் பேமெண்ட், நெருக்கடிக்கு தவிர்க்க முடியாத காரணம். திறனுக்கேற்பத் தான் இறக்குமதி செய்வோம் என்ற கொள்கையை அங்கீகரிக்க வேண்டும். சொல்வதைப் போல் இதை அமல் நடத்துவது எளிதானதல்ல என்பதில் ஐயமில்லை. ஆனால் திட சித்தமிருந்தால் நடைமுறைப் படுத்த முடியும்.

www.tamilarangam.net



இறக்குமதியை எப்படிக் குறைக்கலாம்? வர்த்தகக் கொள்கையைத் திருத்தியே ஆக வேண்டும். சுங்கத் தீர்வைகளைக் குறைக்கவும் இறக்குமதிக் கட்டுப்பாடுகளை அகற்றும் முடிவை ரத்து செய்ய வேண்டும். மேலும் கடுமையான கட்டுப்பாடுகளை ஏற்படுத்த நேரிடும். அவசியத் தேவையற்ற ஆடம்பரப் பொருட்களின் இறக்குமதியைத் தடை செய்தே ஆகவேண்டும்.

ஆடம்பரப் பொருட்களுக்கு அடுத்தபடியாக போர்க் கருவிகளின் இறக்குமதியைக் குறைக்க இயலும். இது எந்த அளவுக்கு இறக்குமதியாகிறது என்று சர்க்கார் வெளிப்படுத்தவில்லை. சுங்கக் கணக்கில் கூட பலவற்றைப் பார்க்க இயலாது. இந்தியாவின் இறக்குமதிச் செலவுகள் தொடர்பாக கஸ்டம்ஸ்காரர்கள் அளிக்கும் கணக்கைவிட ரிசர்வ் வங்கி இறக்குமதிக்காக அளிக்கும் வெளிநாட்டுச் செலாவணித் தொகை 15 சதவிகிதம் உயர்ந்திருப்பதற்கு இது தான் காரணம் என்று சொல்லப்படுகிறது. ஆனால் பரம ரகசியங்கள் அனைத்தும் வெளிநாட்டில் பகிரங்கமாக பேசப்படுவதுதான் சுவையானது. ஸ்டாக் ஹோம் இண்டர்நேஷனல் பீஸ் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட் அதாவது 'ஸ்ப்ரி' என்ற சுருக்குப் பெயரில் அறியப்படும் உலகப் புகழ் சமாதான ஆய்வு மையம் இது தொடர்பான கணக்குகளை காலா காலங்களில் வெளியிடுவதுண்டு. இந்த நிறுவனத்தின் மதிப்பீட்டுக் கணக்குப்படி 1985க்கும் 1989க்கும் இடையில் 1730 கோடி டாலர் பெறுமான (இன்றைய செலாவணி மாற்று விகிதப்படி ஏறத்தாழ 45,000 கோடி ரூபாய்) போர்த் தளவாடங்களைத்தான் வெளிநாட்டியிலிருந்து இறக்குமதி செய்கிறது. ஆயுதச் சந்தையில் இராக்கையும் சௌதி அரேபியாவையும் பின்னுக்குத் தள்ளி இந்தியா முதலிடம் பெற்றது. பேஃபர்ஸ் துப்பாக்கிகள். ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்கள், பிரிட்டனின் விமானந்தாங்கி கப்பல்கள் போன்று அதிசயங்கள் பல நடைபெற்றன. இதன் பின்னணியில் நடந்த ஊழல் கதைகள் பிரசித்தமானவை. ஆயுத இறக்குமதியைக் குறைக்க வேண்டும்; பூதாகாரமான செலவினங்கள் பலவற்றை இரண்டு அல்லது மூன்றாண்டுகளுக்குத் தள்ளிப் போடலாம். இதனால் நமது துணைக் கண்டத்தின் சக்தியும் வல்லமையும் திடீரெனத் தலைகீழாக மாறிவிடாது.

இறக்குமதிக் கணக்குகளில் பதுங்கியிருக்கும் போர்த் தளவாடங்களைத் தவிர்த்தால் மிகவும் மேடிட்டுத் தெரிவது எண்ணை இறக்குமதிதான். 1988-89இல் 4800 கோடி ரூபாய் பெறுமான 240 லட்சம் டன் க்ரூடாயிலும் ஏனைய பெட்ரோலியப் பொருட்களும் இறக்குமதி செய்யப்பட்டன. பம்பாய் எண்ணைக் கிணர் உற்பத்தி எண்ணை இறக்குமதியைக் குறைப்பதற்கு உதவவில்லை! ஏனென்றால் இந்தியாவில் எண்ணையின் தேவை ஏறத்தாழ 8 சதவிகிதம் அளவுக்கு உயர்ந்து விட்டது. ஆனால் நடுத்தரம் அல்லது நெடுங்கால அளவில் எண்ணையின் இறக்குமதி உயர்வைக் குறைக்க முடிய வேண்டும். உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும் சரக்குப் போக்குவரத்துக்கு ஏற்பட்டு வரும் முக்கியத்துவத்தை ரெயில்வேக்கு மாற்றிட ரெயில்வே வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கவும். எண்ணைத் தேவையில் திறனை உயர்த்தவும் போதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ள நேரிடும். உலகளாவிய எண்ணை நெருக்கடியைத் தொடர்ந்து மேற்கத்திய நாடுகளில் எண்ணையின் தேவைத் திறனின் வியக்கத்தக்க வளர்ச்சி ஏற்பட்டது! இந்தியாவின் நிலைமைதான் மேலும் மோசமாகிவிட்டது!

www.tamilarangam.net



ஆனால் இனி என்ன செய்ய முடியும்? பெட்ரோலின் ஆடம்பர உபயோகத்தை கடுமையாகக் கட்டுப்படுத்த வேண்டும். உதாரணமாக காருக்கு பெட்ரோல் ரேஷனை ஏற்படுத்தலாம். இன்றைக்கு ஹாங்காங் போன்ற நகரங்களில் நடைமுறையிலிருக்கும் தனியார் வாகனக் கட்டுப்பாடுகளை (ஒன்று விட்டு ஒரு நாள் மட்டும்தான் கார்கள் ஓட அனுமதி) நமது தேசத்திலும் நெடுக அமலாக்கலாம். பேராசிரியர் அருண் கோஷ் போன்றவர்களின் கருத்துப்படி, பெட்ரோ கெமிக்கல் துறையில் தொடங்க இருக்கும் சில பூதாகாரத் திட்டங்களைத் தற்காலிகமாகத் தள்ளி வைப்பதால் பெரிய பாதிப்பு எதுவும் விளையப்போவதில்லை!

எண்ணைக்கு அடுத்தபடியாக இறக்குமதியில் இரண்டாவது இடத்தைப் பிடிப்பது இயந்திரக் கருவிகளே.. கடந்த அத்தியாயத்தில் பார்த்ததைப் போல் இறக்குமதி தாராளப்படுத்தப்பட்டதால் பெருமளவு இயற்திரக் கருவிகளும் உதிரிகளும் ஏராளமாக இறக்குமதியாயின. 1988-89இல் மொத்தம் 4500 கோடி ரூபாய்க்குமேல் இதற்கு செலவிடப்பட்டது. டி.வி, மாருதி கார் போன்ற ஆடம்பர பொருட்களின் தயாரிப்புக்குத் தேவையான உதிரி அமைப்புக்களை இறக்குமதி செய்யத்தான் இதில் சிறுபகுதி என்று சொல்ல முடியாத ஒரு தொகை செலாவயிற்று. வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உதிரி பாகங்களும், கச்சாப்பொருட்களும் கட்டம் கட்டமாக இந்தியாவிலிருந்தே வாங்க வேண்டும் என்ற நிபந்தனையை இந்தப் பொருட்களுக்கெல்லாம் வெல்லுபடியாக்க வேண்டும். இல்லை; இறக்குமதிதான் வேண்டுமென்றால் அதற்குண்டான வெளிநாட்டுச் செலாவணியை இந்தப் பொருட்களின் ஏற்றுமதியின் வாயிலாகவே பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதும் கட்டாயமாக இருக்க வேண்டும்! இறக்குமதிச் செலவைக் குறைப்பது மட்டுமின்றி இந்தியாவின் இயந்திரத் தொழிலுக்கு போஷாக்கூட்டுவதும் இந்தக் கொள்கையின் நோக்கமாகும் என்பதோடு அதிமுக்கியத்துவமானதும் கூட...!

இறக்குமதி ஊக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்ட 'எக்சிம் ஸ்க்ரிப்' முறையில் திருத்தம் செய்ய வேண்டியிருக்கிறது. தற்போது ஏற்றுமதிப் பொருள்களுக் கெல்லாம் ஒரே முறையில்தான் 'எக்சிம் ஸ்க்ரிப்'புகள் கிடைக்கின்றன. இதற்கு மாறாக உற்பத்திப் பொருட்களை கச்சாப் பொருட்களுடன் இணைத்துக் கிடைக்கும் அடிப்படையின் அளவுக்கேற்ப முதன்மைப் பொருட்கள், பதப்படுத்தப்பட்ட முதன்மைப் பொருட்கள், கூடுதல் மதிப்பு உயர்வு தொழில் பொருட்கள் என நான்கு அல்லது ஐந்து பிரிவுகளாகப் பிரித்து வெவ்வேறு விகிதத்தில் 'எக்சிம் ஸ்க்ரிப்புகள்' அளிக்க வேண்டும். அப்போதுதான் கேஷ் காம்பனசேட்டரி ஸ்கீம் திரும்பப் பெற்ற தாக்குதலில் இருந்து தொழில்மய ஏற்றுமதிப் பொருட்களைப் பாதுகாக்க முடியும்.

ஏற்றுமதியில் கணிசமான உயர்வை எதிர்பார்க்க வேண்டாம். இறக்குமதிக் கட்டுப்பாடு ஒரு எல்லைவரை ஏற்றுமதியை எதிரிடையாகப் பாதிக்கக்கூடும். வெளிநாட்டுச் செலாவணி வருவாயைப் பிறகு எப்படி உயர்த்துவது? இரண்டு வழிகள் இருக்கின்றன.

முதலாவது, வெளிநாட்டு இந்தியர்கள்தான் நமது ஊற்றிடம் இவர்களுடைய டெபாசிட்டுகளுக்காக இப்போதே ஊக்கத்திட்டங்கள் இருக்கின்றன. இந்தத்

www.tamilarangam.net



திட்டங்களின் டெப்பாசிட்டுகளை மேலும் கவர்ச்சிகரமாக்கலாம். இந்த டெப்பாசிட்டின் சொந்தக்காரர்கள் பெரும்பாலும் உயர் வருவாய் இந்தியர்கள்தான். ஆனால், நாங்கள் வெளிநாட்டு இந்தியர்களில் உழைக்கும் சாமான்ய மக்களைத் தான் அழுத்தம் கொடுத்து குறிப்பிடுகிறோம். அவர்கள் வெளிநாட்டு இந்தியர்களின் டெப்பாசிட்டுகளில் எதுவும் சேமிப்பதில்லை. மாறாக நேரிடையாக குடும்பத்துக்கு பணம் அனுப்புகின்றனர். உதாரணமாகச் சொல்லவேண்டுமென்றால் கேரளத்துக்கு 1000-1500 கோடி ரூபாய் வெளிநாட்டுப் பணம் வருகிறது. இவற்றில் ஒரு சதவிகிதப் பகுதிதான் வெளிநாட்டு இந்தியர்களின் டெப்பாசிட்டுக்குச் செல்கிறது. மீதமிருப்பது நேராக வீடுகளுக்குச் செல்கிறது. வெளிநாட்டு டெப்பாசிட்காரர்கள் விரும்பினால் வெளிநாட்டுப் பணத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் நேரிடையாக வீடுகளுக்கு அனுப்பப்படும் பணம் என்றென்றும் நாட்டுக்கே கிடைக்கிறது. ஆனால் இந்த ஏழை வெளிநாட்டு இந்தியனின் சேவைக்கு நாம் என்ன ஊக்கமளித் திருக்கிறோம்?

ஊக்குவிக்கவில்லை என்பது ஒரு புறமிருக்கட்டும் வெளிநாட்டில் ஒரு வேலைதேடுவதற்கான அவர்களுடைய முயச்சிக்கு எமிக்ரேஷன் அதிகாரிகளும், ஏர்லைன்ஸ்காரர்களும் ஏற்படுத்தும் தடங்கல்கள் கொஞ்ச நஞ்சம்மா? ஏற்றுமதி ஊக்கத்திற்கு அளிக்கப்படும் 'எரிசக்தியின்' ஒரு சிறு பகுதியை வளைகுடா நாடுகள் போன்ற இடங்களின் இந்தியர்களுக்கு, மேற்கொண்டு வேலைகளும் ஊதியங்களும் உறுதிப்படுத்தப் பயன்படுத்தப்பட்டிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்? ஏற்றுமதியாளர்களுக்கு அளிக்கப்படும் ஊக்கச் சலுகைகளில்ஒரு பகுதியாவது வெளிநாட்டுச் செலாவணியைச் சம்பாதித்தளிக்கும் எல்லோருக்கும் (வெளிநாட்டில் தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ பணியாற்றும் எல்லோருக்கும்) அளிக்கலா மல்லவா? ஏற்றுமதியாளர்கள் சம்பாதிக்கும் வெளிநாட்டுப் பணத்தில் ஒரு பகுதியை அவர்களுடைய இறக்குமதித் தேவைகளைத் திருப்திப்படுத்தவும் செலவிட வேண்டியிருக்கிறது என்பதையும் கருத்திற்கொள்ள வேண்டும்.

எக்சிம் ஸ்க்ரிப்புகள் ஒரு சிறு விகிதத்தில் வெளிநாட்டு இந்தியருக்கு அவர்கள் நேரிடையாக வீடுகளுக்கனுப்பும் (அதாவது வெளிநாட்டுப் பண அக்கவுண்டில் சேர்க்காமல் நேரிடையாக அனுப்பும்) வெளிநாட்டுப் பணத்திற்கு விகிதாச்சாரமாக அளிக்க வேண்டும். அதைப் போலவே ஏற்றுமதியாளர்களுக்கு அனுமதிக்கப்படும் வருமான வரித்தள்ளுபடிகள் போன்றவற்றை இவர்களுக்கும் அளிக்க வேண்டும். இதைச் செய்தால் 'கள்ளவழிப் பணம்' கணிசமாகக் குறையும். இன்றைக்கு கேரளத்துக்கு வரும் வெளிநாட்டுப் பணத்தில் 30-40 சதவிகிதம் இவ்வாறு மறைமுகமாகக் கள்ள வழியில்தான் வருகிறது. இதை ஒழித்து விட்டால் நாட்டிற்குக் கிடைக்கும் வெளிநாட்டு நாணயம் கணிசமாக உயரும்.

இரண்டாவது - வெளிநாட்டு நாணய மாற்றின் உற்றிடம் வெளிநாட்டில் இல்லை ; மாறாக உள்நாட்டில் தான் இருக்கிறது. இந்தியா மிகவும் ஏழை நாடுகளில் ஒன்றாக இருப்பினும் தங்கச் சேமிப்பில் மிகவும் வளமானதுதான். ஆனால் இந்தத் தங்கம் மக்களிடம் இருக்கிறது அவ்வளவுதான்! இதில் ஒரு சிறு பகுதியை

www.tamilarangam.net



தங்கபாண்டுகளாகத் திரட்ட முடிந்தால் அது இந்தியாவின் வெளிநாட்டுச் செலாவணி இருப்பைக் கணிசமாக உயர்த்திவிடும்.

இந்தியாவில் இன்றைக்கு எவ்வளவு டன் தங்கம் இருக்கிறது? தொன்மைக் காலத்திலிருந்து இந்தியாவுக்கு வந்த தங்கத்தின் கணக்கை யூகமாரகக்கூடச் சொல்ல முடியாது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து அசல் தங்க இறக்குமதிக்கு (அதாவது தங்கம் ஏற்றுமதி போக மீதம் இறக்குமதிக்கு) கணக்கிருக்கிறது. 1835-க்கும் 1941-க்கும் மத்தியில் 2300 டன் தங்கம் இந்தியாவில் இறக்குமதியாயிற்று. 1941-க்கும் 1963-க்கும் மத்தியில் மேலும் 3784 டன் தங்கம் இறக்குமதி செய்யப்பட்டது. இது தொடர்பான தகவல்கள் இந்தியாவின் வெளிநாட்டு வர்த்தகக் கணக்குகளில் இருந்து கிடைக்கும். 1963-இல் தங்கக் கட்டுப்பாடுச் சட்டத்தின் வாயிலாக தங்கத்தின் தனியார் இறக்குமதி தடைசெய்யப்பட்டது. ஆனால் கள்ளக் கடத்தல் தங்கு தடையின்றி தொடர்ந்தது. தங்கத்தின் உற்பத்தி மற்றம் சர்வதேச வர்த்தகம் போன்ற புள்ளிவிவரக் கணக்குகளைத் திரட்டும் 'கோல்டு ஃபீல்ட்ஸ் மினரல் சர்வீஸ் லிமிடெட், என்ற பிரீட்டிஷ் கம்பெனி கள்ளக்கடத்தலின் மதிப்பட்டுக் கணக்கைத் தயாரித்திருக்கிறது. அதன்படி 1964-க்கும் 1990-க்கும் மத்தியில் 2667 டன் தங்கம் இந்தியாவுக்கு வந்திருக்கிறது. இவ்வாறு 1835-1990 கால அளவில் இந்தியாவை வந்தடைந்த மொத்தத் தங்கம் 6441-டன் ஆகும். 1990-இல் தங்கத்தின் சராசரி சர்வதேச விலை அவுன்ஸ் ஒன்றுக்கு 380 டாலராக இருந்தது. இதே விலை விகிதப்படி 6441 டன் தங்கத்திற்கு 7869 கோடி டாலர் விலையாகிறது. இதனுடைய 10 சதவிகிதத்தைத் திரட்ட முடிந்தால் அரசுக்கு 786 கோடி டாலர் வெளிநாட்டுச் செலாவணி கிடைத்ததற்குச் சமம் சர்வதேச நிதி நிறுவனத்திடம் இந்தியா 700 கோடி டாலருக்குத்தான் கெஞ்சித்திரிகிறது என்பதையும் மறக்க வேண்டாம்.

நாம் குறிப்பிடும் திட்டம் இதுதான்; யார் வேண்டுமானாலும் தங்க பாண்டில் பணம் போடலாம். தங்கம் எங்கிருந்து கிடைத்தது என்று டெப்பாசிட் செய்பவர்கள் சொல்லத்தேவையில்லை. பாண்டு வாயிலாக திரட்டப்படும் தங்கத்தை 15 ஆண்டுகளுக்குப் பிறகு தங்கமாகவே அதன் சொந்தக்காரர் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். தங்கத்தின் சர்வதேச வருடாந்திரச் சராசரி விலையின் அடிப்படையில் டெப்பாசிட் செய்யப்பட்ட தங்கத்திற்கு 10 சதவிகித அளவில் வட்டியளிக்க வேண்டும். பாண்டின் காலக்கெடு முடியும் வரை சொத்து வரி அளிக்க வேண்டியதில்லை. தங்க பாண்டுகளை அடகுவைத்து கடன் பெறுவதற்கும், அல்லது தேவையானவர்களுக்கு திருப்பிவிற்கவும் உரிமையிருக்கும். அதாவது தங்க பேரர் பாண்டுகள்தான் புழக்கத்துக்கு வரும்.

1962இல் இந்திய சர்க்கார் வெளியிட்ட தங்க பாண்டுத் திட்டம் போதிய அளவு வெற்றிபெறவில்லை என்பதைத் தான் ஒரு குறையாகச் சுட்டிக்காட்ட முடியும். ஆனால் 1962லிருந்து நிலைமை முற்றிலும் இன்றைக்கு மாறியிருக்கிறது. முதலாவதாக, 1962இல் கறுப்புப் பணம் இந்தியாவில் பிரபலமாக இருக்கவில்லை. இன்றைக்கு நிலைமை அதுவல்ல! கறுப்புப் பணக்காரர்களைப் பொறுத்தவரை மிகவும் கவர்ச்சிகரமான, சட்டபூர்வமான சேமிப்புவசதிதான் தங்க பாண்டுத் திட்டம். இரண்டாவதாக 1962க்குப் பிறகு 2700 டன் தங்கம் வரை இந்தியாவுக்குள்

www.tamilarangam.net



சட்டத்திற்குப் புறம்பாகக் கள்ளத்தனமாக நுழைந்திருக்கிறது. மூன்றாவதாக ஐம்பதுகளில் இந்தியாவில் விலையேற்றம் பெயரளவுக்குத்தான் இருந்தது. விலையேற்றம் வாயிலாக மதிப்பு வீழ்ச்சி ஏற்படாமல் சம்பாத்தியத்தைச் சேமிக்க தங்கத்தை அன்றைக்கு ஒரு வழி முறையாகப் பார்க்கவில்லை. 90 களில் நிலைமை நேர் மாறாக இருந்தது. பாண்டில் சேமித்தால் உயர்மதிப்புடன் காலக்கெடு முடியும்போது தங்கம் திரும்பக் கிடைக்கும் என்பதோடு ஆண்டுதோறும் வட்டியும் கிடைக்கும். கறுப்புப் பணக்காரர்களுக்கு, அவர்களைப் பொறுத்தவரை பணம் கொடுத்து தங்கத்தை வாங்கி பாண்டில் சேமிப்பது மிகவும் கவர்ச்சிகரமானதே!

ஆனால், இது கறுப்புப் பணம் வைத்திருப்பவர்களின் பணத்தை தங்கமாக மாற்றும் ஒரு திட்டம் மட்டுமில்லை! சாமான்ய மக்களைப் பொறுத்த அளவிலும், வீடுகளில் பயனின்றிப் பாதுகாத்து வைத்திருக்கும் தங்கத்தை ரிஸ்கில்லாமல் வருமானத்திற்கு வகை செய்யும் வழியும் இதில் உள்ளடங்கியிருக்கிறது. தேசத்தின் சுயாட்சியைப் பாதுகாப்பதற்கான ஒரு சர்வகட்சிப் பிரச்சாரத் திட்டத்தின் வாயிலாக 1962இல் நடைபெற்றதைப் போல் சிறு அளவில் அல்லாத தங்கம் சாதாரணப் பிரஜைகளிடமிருந்து திரட்ட முடியும் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறு திரட்டப்படும் தங்கத்தை அடகு வைத்து, வெளிநாட்டிலிருந்து குறைந்த வட்டிக்கு, வெளிநாட்டு நாணயத்தை இந்திய சர்க்காரால் கடன் வாங்க முடியும். இன்றைக்கு 8-10 சதவிகிதம் வட்டிக்கு வாங்கும் கடன்களை தங்கம் அடகு வைத்து 3-5 சதவிகித வட்டிக்கு வாங்கலாம் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

**மூன்று - பட்ஜெட் பற்றாக்குறை** : வாத்தகப் பற்றாக்குறையைக் குறைப்பதோடு பட்ஜெட் பற்றாக்குறையைக் குறைப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால் அது விலையேற்றத்திற்கு வழிவகுக்கும். ஆனால் பற்றாக்குறையைத் தவிர்க்கும் பேரால் மூலதனச் செலவுகளை வெட்டிச் சுருக்கினால் அது உற்பத்தியில் மந்த நிலையை உருவாக்கும். எனவே பட்ஜெட் கொள்கை உடனடியாக ரெவன்யூப் பற்றாக்குறையை நிரப்பத்தான் அழுத்தம் கொடுக்க வேண்டும். சிறிது காலத்திற்குப் பிறகுதான் கடன் சார்பு நிலையைக் குறைக்க முடியும்.

ரெவன்யூ வருவாயை உயர்த்தும் வழிமுறை மறைமுகவரி விகிதங்கள் மற்றும் பொதுத்துறை உற்பத்திப் பொருட்களின் விலைகளை உயர்த்துவதல்ல; மாறாக நேரடி வரி வருவாயை உயர்த்துவதுதான். இதற்கு பல வாய்ப்புகள் இருக்கின்றன: 1) வருமான வரி தவிர்ப்பு எல்லையை உயர்த்தாமலிருப்பது; உயர் தளங்களில் விகிதத்தை உயர்த்துவது. 2) நிலப்பிரபுக்களின் விவசாய வருமான வரியைக் கடுமையாக்குவது. 3) சொத்து வரி (குறிப்பாக நகர்ப்புறச் சொத்துக்களின் மீது) விதிப்பது. 4) கறுப்புப் பணத்தை வரி வளையத்துக்குள் கொண்டு வருவது. இதற்காக தனி திட்டம் அறிவித்தால் மட்டும் போதாது. இந்தத் திட்டங்களுக்கு கறுப்புப் பணம் வந்து சேரவேண்டுமென்றால் தேச விரோதிகளைப் போல் கறுப்புப் பணக்காரர்களின் மீது போலீஸ் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆண்டு தோறும் 80,000 கோடி ரூபாய் கறுப்புப் பணம் உருவாகிறது என்பது குறைந்தபட்சக் கணக்கு. இதன் ஐந்து சதவிகிதமாவது வரியாகச் சேமிக்க முடியாதா?

www.tamilarangam.net



வளர்ச்சி தவிர்த்த செலவினங்களை முடிந்த அளவு குறைக்க வேண்டும். குறிப்பாக ஆட்சிச் செலவுகள். தற்காப்பு மற்றும் உள்நாட்டுச் சட்ட ஒழுங்குப் பாதுகாப்பு மண்டலச் செலவுகளில் சிக்கனம் மேற்கோள்ளலாம். இன்றைய சூழ்நிலையில் இந்தச் செலவுகளை 'உறைந்து'ப் போகச் செய்வதுதான் குறிக்கோளாக இருக்க வேண்டும். அதாவது இந்த துறைகளுக்கான உண்மையான செலவுகள் 10-15 சதவிகிதம் குறைந்து கொண்டிருக்க வேண்டும்.

சில தரப்பிலிருந்து இதைவிட எதிர்ப்பை வரவழைக்கும் இன்னொரு கொள்கை இல்லையென்று கூறலாம். பொருளாதார நெருக்கடியில் நாடு தத்தளித்துக் கொண்டிருந்த 1991 ஆகஸ்டில் இன்ஸ்டிட்யூட் ஆப் டிஃபென்ஸ் ஸ்டடீஸ் அண்டு அனாலிசீஸ் டைரக்டர் ஏர் கம்மோடோர் ஜஸ்தித் சிங்கின் விருப்பத்தைப் படியுங்கள். "இன்றைக்கு தற்காப்புச் செலவு தேசிய வருவாயின் 3.8 சதவிகிதமாகும். மிதமான கணக்குப்படி இது தேசிய வருவாயின் 5-7 சதவிகிதமாக 1990ஆம் ஆண்டு பாதி முடிவதற்குள் உயர்ந்துவிடும்... குறைந்தபட்ச தாக்கும் திறனை உறுதி செய்யும் அணு ஆயுத ஆற்றலைப் பெற வேண்டுமென்றால் தேசிய வருவாயின் மேலும் 0.5 சதவிகிதத்தைச் செலவினத்தால் சாத்தியப்படும்....

ராணுவ தளபதிகளின் ஆயுத மோகத்திற்கு எல்லைகளே இருக்காது. எனவே ஒரே வழி எல்லைகளை அரசு நிர்ணயிக்க வேண்டும்! அந்த எல்லைகளுக்குள் இருந்து கொண்டு செலவுகளைக் கட்டுப்படுத்தி தற்காப்பை மேற்கொள்ளும் திறனை ராணுவம் பெற வேண்டும்! இதற்குத் துணை நிற்கும் வெளிநாட்டுக் கொள்கைகளை ஊர்ஜிதப்படுத்த வேண்டும்! சீனாவுடன் எல்லைப் பிரச்சினையை சுமுகமாகப் பேசித் தீர்ப்பதுதான் மிக முக்கியம். சர்ச்சைக்குரிய இடத்தைப் பற்றி விட்டுக் கொடுக்கும் மனப்பாங்குடன் பேசி, எல்லைப் பிரச்சினையைத் தீர்த்து, பரஸ்பரம் தாக்கமாட்டோம் என்று உடன்படிக்கைக்கு நாம் தயாராக இருக்க வேண்டும் இந்திய-சீன எல்லைச் சச்சரவை நீடிப்பது தற்காப்பு செலவைப் பெருக்கத்தான் பயன்படுமே தவிர வேறு எதற்குமில்லை! ராணுவ ரீதியில் இந்த சர்ச்சைக்குத் தீர்வு காணலாம் என்று நினைப்பதை விட மூடத்தனம் வேறு இல்லை!

பாகிஸ்தானுடன் இருக்கும் தாவா சீனாவுடன் இருப்பதைப் போன்று எளிதில் தீர்வு காணக் கூடியது அல்ல. ஆனால் தெற்காசியத் துணைக் கண்டத்தை ஒரு அணு ஆயுதமற்ற மண்டலமாக நிலை நாட்ட பாகிஸ்தானுடன் ஒரு கருத்தொற்றுமைக்கு வர நாம் முன்னின்று செயல்பட வேண்டும். ஒரு அணு ஆயுதப் போட்டி, நம் இரு நாடுகளாலும் தாங்கிக் கொள்ள முடியாதது. தேசிய வருவாயின் 0.5 சதவிகிதம் என்று ஏர் கம்மோடோர் ஜஸ்ஜித் சிங் கூறும் தொகை 2500 கோடி ரூபாய்! இந்தப் பணத்தை இறைக்க ஒரு ஏழை நாடால் முடியாது! அமெரிக்காவின் அணு ஆயுத எதிர்ப்பு ஒப்பந்தத்தில் நாம் கையெழுத்துப் போட மறுத்தது சரியான கோட்பாடுதான். அணுகுண்டை ரகசியமாகத் தயாரிக்கலாம் என்ற உத்வேகத்தால் இதை நாம் செய்யவில்லை. மாறாக, இந்த ஒப்பந்தம் நாடுகளுக்கிடையிலாக சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை என்பதனால்தான்! அமெரிக்காவின் ஏகாதிபத்திய மேலாண்மைக்கு அடிபணிகிறது என்பதும் ஒரு காரணம்! ஆனால் இந்த யுக்தி அண்டை நாடுகளுக்குள்

www.tamilarangam.net



தங்களுக்குள் ஒரு அணு ஆயுத எதிர்ப்பு உடன்படிக்கையை மேற்கொள்ளத் தடையாக இருக்கக் கூடாது. காலம் தாழ்ந்து கொண்டிருக்கிறது! இந்தியத் துணைக் கண்டம் அணு ஆயுதப் போட்டியின் நுழை வாயிலில் இருந்து கொண்டிருக்கிறது. பாகிஸ்தானிலும், இந்தியாவிலும் இருக்கும், நியூக்ளியர் லாபிகள் இரு நாடுகளையும் அணு ஆயுதப் பந்தயத்தின் சதிக்குழிக்குள் தள்ளிவிடத் தருணம் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்! இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

இந்தியாவின் அணு ஆயுதத் திட்டத்திற்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டால், இந்தியாவின் அணுசக்தித் திட்டத்தை மொத்தமாக மறு ஆய்வு செய்ய நேரிடும்! இந்த நூற்றாண்டு முடிவதற்குள் 10,000 மெகாவாட் திறனைப் பெற அலைபாய்ந்து கொண்டிருப்பது பொருளாதாரமுறையில் பொருளற்றதாகும். இன்றைய அணுசக்தித் திட்டச் செயலாக்கம் இறக்குமதிச் சார்பு முக்கியத்துவம் உடையது என்பது மட்டுமின்றி, ஏனைய மின்னுற்பத்தித் திட்டங்களை விட அதிகச் செலவுடையது மாகும். தற்காப்பு பட்ஜெட்டிலிருந்து மானியம் மற்றும் ஒதுக்கப்படாத செலவுகளால்தான் அணு மின்சாரம் வர்த்தக அடிப்படையில் இந்தியாவில் லாபமாக இருக்கிறது. இன்றைய வளப் பற்றாக்குறைக்கிடையில் நாடு முழுக்க அணுமின் நிலையங்களை உருவாக்கும் 'நியூக்ளியர் லாபி'யின் முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும். அணுசக்தித் தொழில் நுணுக்கத்தில் இந்தியா திறன் பெறவேண்டியது முக்கியம். ஆனால் அதற்கு இன்றைய நியூக்ளியர் ரியாக்டர் இறக்குமதி வளர்ச்சிக் கொள்கையும், நாடு முழுக்க நியூக்ளியர் பிளாண்டுகளை நிறுவும் முயற்சியும் உதவப் போவதில்லை.

மானியங்களைக் குறைப்பதுதான் செலவினங்களில் சிக்கனம் கடைபிடிக்க இன்னொரு மாற்று வழியாகும். ஏற்றுமதி மானியம் நிறுத்தப்பட்டது சரியான நடவடிக்கைதான்; ஆனால் உரமானியம் குறைக்கக் கூடாது! உணவு தானிய மானியத்தை உயர்த்தவும் நேரிடும். இவை இரண்டுமின்றி, இன்னும் பல முறைமுகமான மானியங்கள் இருக்கின்றன. சுதிப்ரோ மண்டல் மற்றும் கோவிந்தராவின் ஒரு மதிப்பீட்டுக் கணக்கின்படி இந்தியாவின் நேரடி-மறைமுக மானியங்கள் தேசிய வருவாயின் சதவிகிதமாகும். நேரடி மானியங்களைவிட மறைமுக மானியங்கள்தான் அதிகம், ஒரு ஐ.ஐ.டி. மாணவனுக்கு ஆண்டுக்கு 2 லட்சம் ரூபாய் சர்க்கார் மானியம் கிடைக்கிறது! ஐ.எம்.எம். மாணவனுக்கு ஒரு லட்சம் ரூபாய்தான் கிடைக்கிறது! ஏழை மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் அளிக்க வேண்டியும், மற்றவர்கள், செலவுகளில் பெரும் பகுதியை தாங்களே பார்த்துக் கொள்ள வேண்டும் என்று விட்டுவிடுவதுதானே பொருத்தமானது! பணக்காரர்களின் மறைமுக மானியங்களைத் தேடிப்பிடித்து அதை வெட்டிக் குறைக்க திடசித்தத்துடன் முயற்சிக்க வேண்டும்!

உர மானியத்தை வெட்டிக் குறைக்கக் கூடாதெனினும், அதைத் தொடர்ந்து ஏற்றிக் கொண்டிருக்க வேண்டும் என்று கூற முடியாது, இதற்கு இரண்டு தீர்வுப்பாதைகள் இருக்கின்றன. முதலாவது, நிலப்பிரபுக்களையும் தோட்டச் சொந்தக்காரர்களையும் போன்றவைகளை மானியத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டும்! இரண்டாவது, உரத்தின் உற்பத்திச் செலவைக் குறைக்க வேண்டும்.

www.tamilarangam.net



இதற்காக உரத் தயாரிப்புத் தொழில் நுணுக்கத்தைச் சீர்திருத்த வேண்டும். அதிகச் செலவு படைத்த தொழில் நுட்பத்தைத்தான் நாம் இப்போது கடைபிடிக்கிறோம். ஹல்தார் ப்ரொஜெக்ட்டுக்கு இந்தியா அங்கீகரித்த ஸ்டாம் பெகட்டியின் இத்தாலிய தொழில் நுட்பம் அதற்கு மாற்றாகக் கிடைத்த மற்றவைகளைவிட அதிகச் செலவு வாய்ந்ததாகும். நாம் புறக்கணித்துவிட்ட வெளிநாட்டு இந்தியர்களின் தொழில் நுட்பம் இத்தாலியத் தொழில் நுட்பத்தைவிட மூன்றில் ஒரு பகுதி மூலதனமும், ஐந்தில் ஒரு பகுதி எரிசக்தியும், சொற்ப அன்னியச் செலாவணியும், 30 நாட்களுக்குள் பணி முடிக்கக் கூடியதாகவும் இருந்ததாக முன்னாள் திட்டக் கமிஷன் உறுப்பினர் பேராசிரியர் அருண்கோஷ் கூறியிருக்கிறார்.

இந்தியாவின் பொதுத்துறை முதலீட்டின் அதிகரிப்பை ஆராய்ந்தால், சர்க்கார் பட்ஜெட்டை சமன்படுத்துவதில் பொதுத்துறையின் திறமையான செயல்முறைக்கு இருக்கும் பங்கைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். பெரும்பாலும் பொதுத்துறை நிறுவனங்கள் பல, காரணம் என்னவாயினும், லாபகரமாக இயங்கவில்லைதான்! இதற்கு முக்கியக் காரணம், பொதுத் துறையின் உற்பத்திப் பொருட்கள் மற்றும் சேவைகள் சகாய விலைக்கு அளிக்கப்படுகிறது என்பதுதான். இத்தகைய திரை போட்ட மானியங்கள் திறமைக்குப் பயனளிக்காது. இந்தச் சுமையெல்லாம் பிறகு சர்க்காரின் தலையில்தான் வந்து விடியும். எனவே பொதுத்துறை நிறுவனங்கள் தங்கள் உற்பத்திப் பொருட்களையும் சேவைகளையும் மலிவு விலைக்கு அளிக்க வேண்டுமென்றால் அதனால் ஏற்படும் இழப்புத் தொகையை சர்க்கார் பட்ஜெட்டின் வாயிலாக பொதுத் துறைக்கு அளிக்க வேண்டும். இது நடைபெற்றால் மானியம் தொடர்பாக மேலும் கண்டிப்பான மதிப்பீடுக்கு வழி வகுக்கும். பொதுத் துறையின் திறன் பெருக்கவும் உதவிகரமாக இருக்கும்.

இது மட்டும்தான் பொதுத்துறையின் திறன்சோர்வுக்குக் காரணமில்லை என்பது தெளிவு. பழையனவாகிவிட்ட தொழில் நுட்பம். பொறுப்பற்ற நிர்வாகம். நோஞ்சான் தொழில் உறவுகள் என ஏராளமாக இருக்கின்றன. தொழிற்சங்கங்கள் நிர்வாகம், அரசுப் பிரதிநிதிகள், நிபுணர்கள் போன்றவர்களின் கூட்டுக் கூட்டங்களில், ஒவ்வொரு பொதுத்துறை நிறுவனங்களின் பிரச்சினைகளையும் அலசி ஆராய்ந்து அந்தத் தொழில் நிறுவனம் லாபகரமாக இயங்க காலக்கெடு வைத்து திட்டமிட வேண்டும். அதை நடை முறைப்படுத்துவதற்குத்தான் எதிர்காலப் பொதுத்துறை வளர்ச்சிப் பணியில் முன்னுரிமை அளிக்க வேண்டும்! இத்தகைய ஒரு திட்டத்திற்குப் பிறகும் மீள முடியவில்லை என்றால் அந்தக் குறிப்பிட்ட நிறுவனங்களை மூடுவதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால் அதற்குமுன் கமானி இன்ஜினியரிங் கம்பெனியின் பாணியில் தொழிற்சாலையை தங்கள் பொறுப்பில் ஏற்றுக்கொண்டு நடத்த தொழிலாளிகளுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்! பொதுத்துறையைக் காப்பாற்ற வேண்டுமென்றால் அதன் தோளிலிருந்து 'கடும் சுமையை' இறக்கியே ஆக வேண்டும்.

**நான்கு-வளர்ச்சிக் கொள்கைகள்:** பேலன்ஸ் ஆப் பேமெண்ட் மற்றும் பட்ஜெட் நெருக்கடிகளிலிருந்து மீள இங்கு முன்வைக்கப்பட்ட தீர்வுகளில் சிலவற்றைச் செய்து முடிக்க பல ஆண்டுகள் தேவைப்படும். ஆனால் பெரும்பாலானவற்றை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவசர நடவடிக்கைகள் மேற்கொண்டு உடனடியாகச் செய்து முடிக்கலாம். இவற்றை அமல்படுத்துவதோடு இந்தியாவின் விவசாய-தொழில் கொள்கைகள் மற்றும் நலத்திட்டங்களை புனரமைக்க நெடுங்காலக் கொள்கைகளையும் அறிவிக்க வேண்டும். இவற்றை ஒட்டிய சில பொதுச் சமிக்ஞைகளை மட்டும் கீழே தருகிறோம்.

1) விவசாயக் கொள்கை: நிலப்பிரபுக்கள் மற்றும் பெரும் நீர்த்தேக்கத் திட்டங்கள், இறக்குமதி முக்கியத்துவம் வாய்ந்த இரசாயன உர-பூச்சிகொல்லிகள் போன்றவற்றில் அழுந்தி நிற்கும் இன்றைய விவசாய வளர்ச்சிக் கொள்கைக்கு மாறாக நிலத்தில் உழைத்து வியர்வை சிந்தும் விவசாயிகள், பிராந்திய நிலநீர் நிர்வாகம், இயற்கை உரம் நவீன வேளாண்மை போன்றவற்றில் அழுந்தி நிற்கும் ஒரு வளர்ச்சிக் கொள்கைதான் நமக்கு வேண்டும். ஒவ்வொரு சிறு நீர்நிலை **(Water Shed)** ப் பிராந்தியத்தையும் அடிப்படையாகக் கொண்ட முழுமையான திட்டமிடல், மண்வளப் பாதுகாப்புத் திட்டம், நீர் வாய்ப்புகள் மற்றும் சங்கிலித் தொடர் வினியோகமுறைப் பாதுகாப்பு, இயற்கை உரக்காடுகள் வளர்ப்பு போன்றவற்றுக்கு பெருமளவு மனித உழைப்பாற்றல் வளத்தைப் பயன்படுத்த நேரிடும். இன்றைக்கு கிராமப் புறங்களில் பாழ்பட்டுக் கொண்டிருக்கும் மனித உழைப்பாற்றலின் உற்பத்தி முக்கியத்துவம் வாய்ந்த வினியோகம்தான், புதிய விவசாய வளர்ச்சியின் முக்கிய ஊற்றிடமாக அமைய இருக்கிறது. இதில் தேசப்பற்று மிக்க நலத்திட்டங்களுக்கு முக்கியப் பங்கிருக்கும். இது நனவாக வேண்டுமானால் நிலம் உழுபவனுக்கே கிடைக்க வேண்டும். நிலச் சீர்திருத்தத்துக்கான ஒரு மாபெரும் மக்கள் எழுச்சியின் தொடராகத்தான் புதிய விவசாய வளர்ச்சிக் கொள்கை வெற்றியடைய முடியும்! சிறிய விவசாயத் துண்டு நிலங்களை ஒன்று சேர்க்கவும். விவசாய உற்பத்திப் பொருட்களை சீர்படுத்தவும், விற்பனையில் ஒத்துழைப்புடன் கூடிய வேளாண் ஒற்றுமையைக் கொண்டு வரவும் நிலச் சீர்திருத்தம் தான் அடிப்படையானது.

2) தொழில் கொள்கை: இரண்டாவது திட்டம் வடிவமைத்த பொதுச் சட்டத்தை மேலோட்டமாக ஏற்றுக் கொள்ளும் தொழில் வளர்ச்சிக் கொள்கைதான் முன்வைக்கப்பட்டிருக்கிறது! ஆனால் காலத்திற்கேற்ப சில மாறுதல்களைச் செய்ய வேண்டும்.

பொதுத் துறையை திறன் மிக்கதாக மாற்றவும், அதன் தோளிலிருந்து ‘கடும் சுமை’யை இறக்கவும் போன்ற தேவையை ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தோமல்லவா? இத்துடன் பொதுத்துறையின் வேறு சில நடவடிக்கைகளை மேலும் கடுமையாக ஆராய வேண்டியிருக்கிறது! ஓட்டல்கள், உற்பத்திப் பொருட்களின் விற்பனை போன்றவற்றில் பொதுத்துறை நுழைவது தேவைதானா?

சிகப்பு நாடாக்களை மட்டும் சிருஷ்டிக்கும் எல்லை மீறிய லைசென்ஸ்சிங் போன்ற தொழில் கட்டுப்பாடுகளை லகுவாக்க வேண்டும்! பொருளாதார திட்டமிடுதலுக்கான அவசியக் காரணிகளை ஒழிக்காமல் இது எப்படிச் சாத்தியப்படும் என்பது விவாதத்துக்குரியது. இயந்திரமயமான கட்டுப்பாடுகளைவிட கடன் கட்டுப்பாடுகளுக்குத் தான் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற நரசிம்மன்

www.tamilarangam.net



கமிட்டியின் கருத்தும் பரிசீலனைக்குரியதே. ஆனால் இது சாத்தியப்பட வேண்டுமென்றால் வங்கத் துறையில் உலக வங்கி அறிவுறுத்தியிருக்கும் சீர்திருத்தங்களை முழுதும் புறக்கணிக்க வேண்டும்!

உள்நாட்டுப் பொருளாதார அமைப்பில் சந்தைப் போட்டியை தாராளமயமாக்கும் முயற்சி தற்கொலைக்கு ஒப்பானது. வளர்ந்தநாடுகள் அவர்களுடைய தொழில்களின் திறனை இவ்வாறு உயர்த்தியதாக வரலாறில்லை. சர்வதேசப் போட்டித்திறன் பெற்ற பிறகுதான் இறக்குமதியை தாராளப்படுத்த அவர்கள் தயாராயினர். இன்றைய கொள்கைத் திறனை உயர்த்துவதற்கு மாறாக தொழிலை அழிவுக்குத்தான் அழைத்துச் செல்லும். உள்நாட்டுக் சந்தையில் போட்டியை உறுதி செய்யும் வழி ஏகபோகங்களைக் கட்டுப்படுத்துவதுதான்.இதற்கு கடன்-நிதிக் கொள்கைகளை இன்றைக்கு இருப்பதைவிட அதிகமாகப் பயன்படுத்த வேண்டும். ஏகபோகங்களின் பங்கு-கடன் அளவை கணிசமாக உயர்த்த வேண்டும்! தொழிற்சாலைகளில் புதிதாக நிறுவப்படும் அல்லது நவீனப்படுத்தப்படும் தொழில் நுட்பத்திறனை சர்வதேச தொழில் நுட்பத் திறனுடன் ஒப்பிட்டுப் பார்த்த பிறகுதான் நிதிவளம் கிடைக்கச் செய்ய வேண்டும். வர்த்தக 'ஒத்து விளையாட்டு'களுக்கு எதிரான சட்டத்தை மேலும் கடுமையாக்கி ஏகபோக கட்டுப்பாட்டுச் சட்டத்தைப் புனரமைக்க வேண்டும்.

பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களை கடுமையான கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்திய பிறகுதான் அனுமதிக்க வேண்டும். பங்கு மூலதனத்தில் எத்தனை சதவிகிதம் பன்னாட்டு ஏகபோகங்களுக்கு என்பதைவிட, செயல் மூலதனத்தின் குறிப்பிடும்படியான பங்கையும் அவர்கள் வெளிநாட்டிலிருந்து கொண்டு வரவேண்டும் என்று நிபந்தனை விதிக்க வேண்டும். வெளிநாட்டுக் கம்பெனிகளுக்குத் தேவைப்படும் வெளிநாட்டு நாணயச் செலவைவிடக் கூடுதலாக வெளிநாட்டு நாணய வருவாய் அவர்களின் பொருட்கள் மற்றும் சேவைகளின் வாயிலாகப் பெற்றிருக்க வேண்டும் என்பதில் விட்டுக் கொடுக்கக் கூடாது. சீனாவில் இருப்பதைப்போல் வெளிநாட்டுக் கம்பெனிகளுக்குத் தனியாக பொருளாதார மண்டலங்களை ஏற்படுத்தலாம்! (இன்றைக்கு இந்தியாவில் இருக்கும் சுதந்திர வர்த்தக மண்டலங்களின் வேறுபட்ட உருவம் இது)

சிறு தொழில்களில் ஏகாதிபத்தியங்களுக்கும் பங்களிப்பதற்கான முயற்சிகளைக் கைவிட வேண்டும். சிறு தொழில்களுக்கும் பாரம்பரியமான தொழில்களுக்கும் இருக்கும் ஒதுக்கீட்டை (ரிசர்வேஷன்) நிலைக்க வைப்பதுடன், அவற்றை நவீனமயமாக்க ஒரு காலக்கெடுத் திட்டத்தையும் உருவாக்க வேண்டும்!

விவசாயிகள் மற்றும் சிறு உற்பத்தியாளர்களின் பொருட்களுக்கு நியாயமான விலையை உறுதி செய்யவேண்டும்! விவசாயத் தொழிலாளிகளுக்கும் ஒன்றுபடாத மண்டலங்களின் உதிரித் தொழிலாளிகளுக்கும் குறைந்தபட்ச கூலியை நிர்ணயித்து உறுதி செய்யவேண்டும்! இதையெல்லாம் உட்படுத்தி உசிதமாகவும் இன்றைய வரையறையைக் கருத்திற்கொண்டும் தேசிய ஊதிய-வருவாய்க் கொள்கையை தொழிற்சங்கங்களுடன் விவாதித்து வருவாக்க வேண்டும்!

www.tamilarangam.net



3) தொழில் நுட்பக் கொள்கை: சுய சார்பில் காலூன்றி நிற்கும் தொழில் நுட்ப வளர்ச்சிக் கொள்கையைத்தான் நாம் கடைபிடிக்க வேண்டும்! தொழில் நுட்பம் மிக வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் உலகில் இதன் இறக்குமதியைத் தவிர்க்க முடியாது! ஆனால் வெளிநாட்டுத் தொழில் நுட்பத்தைத் தன்னகப் படுத்துவோம், மேலும் உயர் நிலைக்கு வளர்த்தெடுப்போம் என்பதை உறுதி செய்ய வேண்டும்! ஆடம்பரப் பொருட்களுக்கும், அவசியமற்ற பண்டங்களுக்கும் வெளிநாட்டு உதவியை நாடுவது தவிர்க்கப்பட வேண்டும்! வெளிநாட்டுத் தொழில் நுட்ப இறக்குமதியின் மேற்பார்வையைக் கடுமையாக்க வேண்டும் என்றுதான் அனுபவங்கள் வற்புறுத்துகின்றன! தற்காப்புக் கொள்கையில் இப்போது குறிப்பிட்ட கொள்கை மாற்றங்கள் நிகழ்ந்தால் அணு-வானவெளி ஆராய்ச்சிக்கு இன்று ஆராய்ச்சி மதிப்பீட்டில் அளிக்கப்படும் முக்கியத்துவத்தைக் குறைக்க முடியும். இதர தொழில் துறைகள் மற்றும் புறக்கணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் கிராமியத் தொழில் நுணுக்க வளர்ச்சிக்காக அதிகத் தொகையை வினியோகிக்க முடியும்.

**ஐந்து-அதிகாரத்தை பரவலாக்குவது:** மாற்று வழியின் அடிப்படை அரசியல் அமைப்பு, அதிகாரத்தைப் பரவலாக்குவதுதான். இந்தக் கோட்பாட்டின்படி கீழ்த்தட்டில் செய்யக் கூடியதை எல்லாம் கீழ்த்தட்டுக்கே விட்டுவிட வேண்டும்; எஞ்சியதை மேல்தட்டுக்கு ஒதுக்கினால் போதும் என்பதுதான்! மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொடுத்து உண்மையான பெடரல் அரசமைப்பு ஏற்படுத்தப்பட்டதோடு முடிந்துவிடவில்லை. ஒவ்வொரு மாநிலத்திற்குள்ளும் மாவட்டங்களுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படவேண்டும். இதற்கு அரசியல் சட்டப் பாதுகாப்பும் அளிக்கப்பட வேண்டும்.

அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதன் மூலம் அல்லாது தேச ஒற்றுமையைப் பாதுகாக்க முடியாது. அதிகாரப் பங்கீட்டின் மூலம்தான், ஜனநாயகத்தை உண்மையான வாழ்க்கைமுறையாக மாற்றவும், அதன் பாதுகாப்புக்காக மக்களை அணி திரட்டவும் முடியும். இதன் வாயிலாகத்தான் சிகப்புநாடா முடிச்சுகளிலிருந்து மீள முடியும். அதிகாரப் பகிர்ந்தளிப்பின் வாயிலாகத்தான் ஆட்சியின் நிர்வாகச் செலவைக் குறைக்கவும், வளர்ச்சித் திட்டங்களை வெற்றிகரமாக அமல்படுத்தவும் முடியும்.

பிராந்தியத் திட்டங்களில் மையம் கொண்ட விவசாய வளர்ச்சிக் கொள்கைக்கு அதிகாரப்பகிர்ந்தளிப்பு ஒரு முன்னுதாரணம். பொதுக் கொள்கைகளையும் குறிக்கோள்களையும் உருவாக்குவது; சில முக்கியமான திட்டங்களை அமல்செய்வதைத் தவிர்த்து எஞ்சிய விவசாய திட்டமிடல், நிர்வகிப்பு போன்றவற்றை பிராந்திய தளத்தில்தான் செய்ய இயலும். பிராந்திய தலத்தில்தான் இதற்கான விவரங்கள் கிடைக்கும் என்பதால் மட்டுமின்றி, இதன் வாயிலாகத்தான் விவசாய வளர்ச்சியைப் பெறுவதற்கு அடிப்படையான கிராமிய மனித உழைப்பாற்றல் வளத்தைத் திரட்டி வளர்ச்சிப் பணிகளுக்கு அணிசேர்க்க முடியும்.

ஆறு-நலத்திட்டகோட்பாடு: புதிய வளர்ச்சிக் கொள்கைகளுடன் கூடவே, இந்தியாவின் கோடிக்கணக்கான ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும்

www.tamilarangam.net



முழுமையான ஒரு திட்டத்தை அறிவிக்க வேண்டும். இதில் முதல் பிரிவு எல்லோருக்கும் தொழிலை உறுதி செய்யும் தேசிய எம்ப்ளாய்மெண்ட் கேரண்டித் திட்டமாகும். இதற்காக 13,000 கோடி ரூபாய் நகல் திட்டமொன்றை கடந்த திட்டக் கமிஷன் தயாரித்திருந்தது. இந்தத் தொகையின் பெரும் பகுதி இன்றைக்கு நேரு ரோஸ்கார் யோஜன போன்ற பெயர்களில் செலவழிந்து கொண்டிருக்கும் மத்திய கிராமத் திட்டங்களின் செலவுகளாகப் புனர் வினியோகமாகிக் கொண்டிருக்கிறது. இருப்பினும் 50,000-60,000 கோடி ரூபாய் புதிதாகக் கண்டெடுக்க வேண்டும். முன் பக்கங்களில் குறிப்பிட்டதைப் போல் இன்றைய அரசுச் செலவினங்களை முன்னுரிமை முறையில் வரிசைப்படுத்தி இதைக் கண்டடையலாம். உற்பத்தி மயமான தொழிலை எல்லோருக்கும் உத்திரவாதம் செய்யாமல் வறுமை ஒழிப்பு சாத்தியமில்லை. இந்த தொழிலளிப்புத் திட்டத்தை புதிய விவசாய வளர்ச்சிக் கொள்கையுடன் இணைத்துத் திட்டம் தீட்டினால் அது கிராமிய இந்தியாவின் முகத்தோற்றத்தையே மாற்றி அமைக்கும் முதல் படியாகும். இந்தியாவின் 18 கோடி ஹெக்டர் விவசாய நிலத்தில் 10 கோடியும் உண்மையில் அழிவின் விளிம்பில்தான் உள்ளது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

எல்லோருக்கும் வேலை என்பது மட்டுமின்றி, பத்தாண்டுகளுக்குள் ஆரம்பக்கல்வி, ஆரம்ப மருத்துவ சிகிச்சை, குடிநீர், குடியிருப்புகள் போன்ற அடிப்படை தேவைகளுக்கு உத்திரவாதம் அளிக்கும் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும். கிராமங்களில் சாலைப் போக்குவரத்து மற்றும் பின்னணி வசதிகளைப் பெருக்குவதும் இதில் உட்படும். இந்தத்திட்டங்களை நடைமுறைப்படுத்த பணம் தடையாக இருக்கவில்லை. தேசிய அர்ப்பணிப்பு இல்லாமையே காரணம். கேரளத்திலிருந்து இந்தியாவின் ஐம்பதுக்கு மேற்பட்ட மாவட்டங்களுக்குப் பரவியிருக்கும் எழுத்தறிவு (அறிவொளி இயக்கம்) வேள்வி இதைத்தான் நிருபிக்கிறது. மக்களின் தியாக உணர்வும் தேசப்பற்றும்தான் இருபது லட்சத்திற்கு மேற்பட்ட பயிற்றுவிப்பாளர்களை இயக்குகிறது. ஏன் இதை ஏனைய அடிப்படைத் துறைகளுக்குப் பரப்பக் கூடாது?

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் மேற்குறிப்பிட்ட நலத்திட்டங்களின் ஒரு பகுதி மட்டுமே. இந்தியாவின் இது வரையிலான குடும்பக்கட்டுப்பாடு அனுபவங்களை ஆராய்ந்து கிடைக்கப் பெற்ற ஆய்வுகள், பல்வேறு மாநிலங்கள் குடும்பக்கட்டுப்பாட்டு இயக்கத்தில் பெற்ற வெற்றிக்கும் மாநில அரசுகளின் குடும்பக்கட்டுப்பாடு பட்ஜெட்டுக்கும் இடையே எவ்வித உறவுமில்லை என்பதைத்தான் சுட்டிக்காட்டுகின்றன. அதே போல் பெண்களின் எழுத்தறிவு நிலவம் குழந்தை இறப்பு விகிதம் போன்ற இரண்டை வைத்தே குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தின் மாநிலங்களுக்கிடையிலான வேறுபாடுகளை முழுக்க விளக்க முடியும். மக்களின் அடிப்படைத் தேவைகளின் பூர்த்திக்கும், குடும்பக்கட்டுப்பாடுத் திட்டத்தின் வாயிலாக மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் ஏற்பட்ட வெற்றிக்கு இருக்கும் உறவை கேரள அனுபவம் ஒப்புக்கொள்கிறது.

சொல்லப்போனால் கேரள வளர்ச்சிப் பணியை இந்தியாவின் இதர மாநிலங்களிலும் பரவச் செய்யும் திட்டத்தைப்பற்றித்தான் நாம் யோசித்துக்

www.tamilarangam.net



கொண்டிருக்கிறோம். பொருளாதாரப் பின்னடைவு மக்களுக்கு குறைந்தபட்ச வாழ்க்கைத் தரத்தை உறுதிப்படுத்துவதற்கு தடையாக இல்லை என்பதை பத்தாண்டுகளுக்கு முன்னரே கேரளம் தெளிவுபடுத்தியிருக்கிறது. கேரளத்தின் சமூகப் பின்னணியை பிற மாநிலங்களுக்கு பெயர்த்து நடமுடியாவிட்டாலும் நிலச் சீர்திருத்தம் ஏரோட்டும் இந்தியக் கிராமங்களில் புதிய உரிமையுணர்வை கிளர்ந்தெழச் செய்யும் வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன. முழு எழுத்தறிவு வேள்வி இத்தகைய உணர்வுகளின் வேள்வியாகவும் இருக்க வேண்டும்.

சுருங்கக் கூறினால், இங்கு விவரிக்கப்பட்ட மாற்று வழியின் சாராம்சம் இதுதான்.

1) முடிந்த அளவு குறைவாக, மீறினால் 200 கோடி டாலர் மட்டும் இன்றைக்கு கடனாக எடுக்க வேண்டும்.

2) சர்வதேச நாணய நிதி நிறுவனத்தின் நிபந்தனைகளுக்கு உட்படாமல், நமது தேசிய முன்னுரிமையின்படி இன்றைய நெருக்கடியிலிருந்து மீள ஒரு குறுகியகால-நெடுங்காலச் சீர்திருத்தக் கொள்கையை உருவாக்க வேண்டும்.

3) இந்த விஷயங்களின் அடிப்படையில் அடுத்த ஆண்டு கடன்களை ரீஷெட்யூல் செய்வதற்கு பேரம் பேச வேண்டும். தேவையானால் ஒரு தலைப்பட்சமாக கடன் தவணையை நாமே தள்ளிப்போட்டு அறிக்கை விட வேண்டும். குறுகியகாலக் கடன்களுக்கும், வெளிநாட்டு இந்தியர்களின் டெபாசிட்டுகளுக்கும் இது செல்லுபடியாகாது. இவர்களின் நம்பிக்கையைக் காப்பாற்றுவதற்காக பாண்டாகத் திரட்டும் தங்கத்தைப் பயன்படுத்த முடியும்.

ஆனால் இந்தக் கடைசி நேரக் கைங்கர்யம் தேவைப்படாது என்றுதான் அனுபவங்கள் தெரிவிக்கின்றன. கடுமையான நிலைகளை மேற்கொண்ட லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கெல்லாம் பேச்சுவார்த்தைகளின் வாயிலாகவே கடன் சலுகையும் தவணை நீடிப்பும் கிடைத்தன. கடன்களின் மூலம் இந்தியாவுக்குக் கிடைக்கும் அசல் தொகை ஆண்டுக்கு ஆண்டு குறைந்து கொண்டேயிருக்கிறது என்பதையும் கவனிக்க வேண்டும். 1987இல் 178 கோடி டாலர் கிடைத்ததெனில் 1988இல் 155 கோடி டாலரும் 1989இல் 130 கோடி டாலரும்தான் கிடைத்தது. இது தான் இந்தியாவுக்கு ஏற்படும் இழப்பெனில், வெளிநாட்டினர் இந்தியாவுக்களித்த 7200 கோடி டாலர் கடன்களின் பேரில் மறுசிந்தனை செய்யும் நிர்ப்பந்தமேற்படும். இதற்காகத்தான் பலமான அடிப்படையிலருந்து கண்டிப்பான நிலையை மேற்கொண்டால் உடன்பாடு சாத்தியம் என்கிறோம்.

கடன்பொறியில் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் மாற்றுவழி இதுதான். இதன் கோட்பாட்டு அணுகுமுறை விளக்கமான அம்சம் போன்ற விஷயங்களில் பேச்சுவார்த்தையின் மூலம் இந்தத் திட்டத்தைத் திருத்தவோ மேலும் செழுமைப்படுத்தவோ, எதுவேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் சரணாகதி என்றால் முடியவே முடியாது; மாற்று இருக்கவே இருக்கிறது!

www.tamilarangam.net



இந்த மாற்றுவழி மிகவும் சுலபமானது என்று யாரும் தவறாகப் புரிந்துகொள்ள வேண்டாம். சர்வதேச நிதி நிறுவனத்தின் வழிமுறையைப் போலவே சங்கடமானது தான் இந்த மாற்று வழியும். மாற்றுச் சீர்திருத்தங்கள் குறுகியகால அளவில் பொருளாதார மந்தத்தைக் கூட ஏற்படுத்தலாம். இறக்குமதி முக்கியத்துவம் பெற்ற தொழில்களை இறக்குமதிக் கட்டுப்பாடு எதிர்மறையாகப் பாதிக்கக்கூடும். சர்க்கார் பற்றாக்குறையைக் குறைப்பதற்காக பொருளாதார அமைப்பில் நெருக்கடியைச் சீருஷ்டிக்கும். இவ்வாறு பலப்பல. ஆனால் சர்வதேச நிதி நிறுவனமும் உலக வங்கியும் ஏற்படுத்தவிருக்கும் பொருளாதார மந்தத்தைவிட இது லகுவானதாக இருக்கும். புதிய வளர்ச்சிக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு விரைவில் பொருளாதார வளர்ச்சி கணிசமாக உயரும். புதிய நலத்திட்டங்கள் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும். எல்லாவற்றுக்கும் மேலாக கடன் பொறியில் இருந்து தேசத்தின் மீட்சியை உறுதிப்படுத்தும்.

மாற்று வழியின் குறிக்கோள் இந்தியாவில் சோசலிசத்தை வரவழைப்பதல்ல; தேசிய ஏகபோகங்களையும் பன்னாட்டு ஏகபோகங்களையும் ஒழிப்பது கூட அல்ல! நிலச் சீர்திருத்தமும் அதிகாரப் பகிர்ந்தளிப்பும்தான் நாங்கள் குறிப்பிடும் முக்கிய மாறுதல்கள், இந்த வரையறையான திருத்தங்களுக்குள்ளிருந்துகூட சரணகதிக்கு மாற்று இருக்கிறது என்பதுதான் எங்களுடைய வாதம்.

ஆனால் ஒன்று தேவை; தேசப்பற்று! ஏகாதிபத்திய எதிர்ப்பு! விடுதலைப் போராட்ட வேள்வியில் எண்ணற்ற உயிர்களை பலிகொடுத்து, தியாகங்கள் பல மேற்கொண்டு பெற்றெடுத்த தேசத்தின் சுயாட்சியைப் பாதுகாக்கும் மறு அர்ப்பணிப்பு! ஆம்; நாடு இதை நம்மிடம் நாடுகிறது!

★ ★ ★

www.tamilarangam.net



## பிறசேர்க்கை I

# மூன்றாம் உலக நாடுகளின் இறையாண்மையை அச்சுறுத்தும் உலக வர்த்தக நிறுவனம் (WTO)

எம்.எ. ஊமன்
தில்லியைச் சார்ந்த பொருளாதார நிபுணர்

மூன்றாம் உலக நாடுகளின் காலனீய எதிர்ப்பு போராட்டங்கள் அரசியல் ஆதிக்கத்தை எதிர்த்து மட்டுமல்ல; பெரு நகரிய மூலதனத்தையும்★ அநீதியான சர்வதேச உழைப்பு பிரிவினை நிலவியதையும் எதிர்த்தவை ஆகும். தேச சுயாதிபத்திய சக்திகளை இப்போராட்டங்கள் வலுப்படுத்தின; முன்னாள் காலனிகள் சுயமாக வளர்ச்சி பெற வேண்டிய தேவையையும் வலுப்படுத்தின. இந்தியா போன்ற நாடுகள் தங்களது எதிர்காலத்தை சுயமாக உருவாக்கிக் கொள்ளும் முயற்சியில் திட்டமிடத் துவங்கின. இரண்டாம் உலகப் போருக்கு பிந்தைய அதே காலகட்டத்தில் போக்குவரத்து மற்றும் தொடர்புத் துறையில் ஏற்பட்ட புரட்சிகரமான மாறுதல்களால் இதுவரை காணாத அளவிற்கு மூலதனம் மற்றும் உற்பத்தி போன்றவை கண்டங்களிடையே பரவும் போக்கு ஊக்குவிக்கப்பட்டது. ராணுவம், அரசியல், பொருளாதாரத்தை பொறுத்தவரை 1945க்கு பிறகு உலகில் சக்திமிக்க நாடாக அமெரிக்கா உருவாகியது. சோசலிஸ நாடுகள் அல்லாத மற்ற நாடுகளை அமெரிக்கா தனக்கு கீழ்படிய அல்லது ஒத்துழைக்கச் செய்தது. ஒரு வகையில் உலகத் தலைமைக்கு வந்தடைந்த அமெரிக்கா, உலகின் மற்ற நாடுகள் மீது அதன் வளர்ச்சிக் கண்ணோட்டத்தை திணித்தது. அமெரிக்காவின் இந்த தலைமை பாத்திரம் காரணமாகவும், (அதன் பொருளாதார பலத்தில் சரிவுப் போக்குகள் இருப்பினும்கூட) பன்னாட்டு மூலதனத்தின் செல்வாக்கு உலக முழுதும் பரவுவதன் விளைவாகவும் வளரும் நாடுகளின் சுயாதிபத்தியத்திற்கும், அவற்றின் சுயமான வளர்ச்சிக்கான முயற்சிகளுக்கும் கடும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. மற்ற சக்திகளின் தலையீடின்றி வளர்ச்சிப்பாதை எது, எதற்கு முன்னுரிமை கொடுப்பது, அதற்கான கொள்கைகள் ஆகியவற்றை தீர்மானிப்பதில் ஒரு சமூகத்திற்குள்ள உரிமைக்கும் தேசிய சுயாதிபத்தியத்திற்கும் நெருக்கமான உறவு உண்டு.

உலக வர்த்தக நிறுவனம், உலகின் மீது ஏற்படுத்தியுள்ள விளைவுகளை பரிசீலிப்பதே இக்கட்டுரையின் நோக்கம். WTO-வும், அங்கீகரிக்கப்படாத சில உண்மைகளும் காட் உடன்படிக்கை 1994ல் மராக்கேஷ் நகரில் கையெழுத்தானது. அத்துடன் WTO அமைக்கப்பட்டது. விவசாயம், முதலீடு, அறிவுசார் சொத்துரிமை, அரசுத்துறை அல்லாத இதர சேவைத் துறைகள், மருந்துகளின் பயன்பாடு, உள்ளூர் அல்லது நாட்டிற்குள் பொருட்கள் வருவதற்கான தடை, பொது விநியோக முறை, மானியங்கள், விலைகட்டுப்பாட்டு நடைமுறைகள் போன்ற பல புதிய பகுதிகளை காட் ஒப்பந்தம் உள்ளடக்கியுள்ளது.

---

★ பெருநகரிய மூலதனம் என்பது வளர்ந்த முதலாளித்துவ நாடுகளுக்கு சொந்தமான தனியார் நிறுவனங்கள்.

www.tamilarangam.net



கடந்த காலங்களில் 'காட்' உடன்படிக்கைகள் தனித் தனி உடன்படிக்கை களாகவே கையெழுத்திடப்பட்டன. ஆனால் WTO உடன்படிக்கைப்படி பல்வேறு தனிப்பட்ட உடன்படிக்கைகளைக் கொண்ட தொகுப்பாகவே உள்ளது. உறுப்பினர் நாடுகளுக்கு தனியானதொரு உடன்படிக்கையிலிருந்து விலகி இருக்க வாய்ப்பு இல்லை. சுயாதிபத்திய நாடுகளுக்கிடையேயான சர்வதேச உடன்படிக்கையானது கையெழுத்திடும் நாடுகளுக்கிடையே தேவையான கடமைகளை நியாயமாக ஈடுசெய்யும் வகையில் அமைந்தாக வேண்டும். WTO உடன்படிக்கை, அதன் மிகப்பெரிய சில உடன்படிக்கைகளில் இந்த விஷயத்தில் எவ்வாறு தவறியுள்ளன என்று நாம் பரிசீலிக்க உள்ளோம். அதற்கு முன்பாக, இப்படியான தொகுக்கப்பட்ட உடன்படிக்கைகள் கருத்தில் கொள்ள வேண்டிய சர்வதேச உழைப்புப் பிரிவினையிலும், பொருளாதார உறவிலும் தற்போது நிலவிடும் சில ஏற்றத்தாழ்வுகள் போன்றவற்றை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அவைகளிற் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. வளரும் நாடுகளின் சுயமான வளர்ச்சித் திட்டங்களில் தேவையற்ற குறுக்கீடுகள் அவற்றின் நீண்ட கால வளர்ச்சிக்கு அபாயகரமானதும், திசை திருப்பி விடுவதாகவும் அமையும்.

முதலாவதாக, ஒரு ஒட்டுமொத்தமான உடன்படிக்கையானது நாட்டு வளங்களிலிருந்து பெறும் வருமானங்கள் மற்றும் திறமைகள் போன்றவற்றில் உள்ள வேறுபாடுகள் வளர்ச்சியடைந்து வருவதை கணக்கில் கொள்ள வேண்டும். WTO உடன்படிக்கை இப்படி சில சலுகைகளையும் விதிவிலக்குகளையும் மிகவும் பின்தங்கிய நாடுகளுக்கு அளித்துள்ளது உண்மையே! தகவமைத்துக் கொள்வதற்காக வளரும் நாடுகளுக்கு ஒரு குறுகிய கால அளவு அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. உலக நாடுகளிடையே வருமானம் மற்றும் சொத்து ஆகியவற்றின் பங்கீட்டில் அதிகரித்து வரும் ஏற்றத்தாழ்வுகளை ஈடுகட்ட வழிகள் ஏதும் இல்லை. குறைந்த வருவாய் உள்ள பொருளாதாரத்திலும் உயர் வருவாயுள்ள பொருளாதாரத்திலும் தனிநபர் வருமான விகிதம் 1970ல் 1:28 என்பது 1990ல் 1:50 என அதிகரித்துள்ளது. ஒப்பிடுகையில் 1:45 என்பது 1:62 ஆக அதிகரித்துள்ளது. உலகவர்த்தக நிறுவனம் வளமான உலகிற்கு வட்டியும் கூடுகிறது. சர்வதேச வணிகம் மற்றும் வளங்களை கவர்தல் மூலமான பலன்களுக்கும் இந்த ஏற்றத்தாழ்வுகளுக்கும் எவ்வித உறவும் இல்லையா?

உலக மக்களில் 20 சத பணக்காரர்களைக் கொண்ட நாடுகள் 1960 முதல் 1989 வரையிலான காலத்தில், மொத்த தேசீய உற்பத்தியில் அவர்களின் பங்கை 70.2% லிருந்து 82.7% ஆக உயர்த்திக் கொள்ள முடிந்தது என பொதுவாக கூற முடியும். அதேசமயம் 20 சத ஏழை மக்களைக் கொண்ட நாடுகளின் பங்கு 2.3% லிருந்து 1.4% ஆக வீழ்ந்துள்ளது WTO உடன்படிக்கை பன்னாட்டு மூலதனத்தின் முதலீட்டு நடவடிக்கைகள் (TRIMS) வர்த்தகம் தொடர்பான அறிவுசார் சொத்துரிமை (TRIPS) சேவைத் துறை வர்த்தகம் தொடர்பான உடன்படிக்கை (GATS) போன்ற உடன்படிக்கைகளை மேற்கொண்டாலும், இப்படி பெருகிவரும் ஏற்றத்தாழ்வுகளை சீரமைக்க எந்த ஏற்பாட்டையும் மேற்கொள்ளவில்லை. உலக வர்த்தக நிறுவனத்தின் அமைப்புச் சட்டத்தின் முன்னுரையில் ஒரு குறிப்பு உள்ளது. அதாவது "வளரும்

www.tamilarangam.net



நாடுகள் குறிப்பாக அவற்றில் மிகவும் பின்தங்கிய நாடுகள், சர்வதேச வர்த்தக வளர்ச்சியில், அவர்களின் பொருளாதார வளர்ச்சியின் தேவைக்கேற்ப அவர்களுக்குரிய ஒரு பங்கினைப் பெற சாத்தியமான முயற்சிகள் எடுப்பதன் மூலம் உத்தரவாதப்படுத்தப்படும். இந்தக் குறிப்பு ஒன்றை தெளிவுபடுத்துகிறது. சர்வதேச வர்த்தக வளர்ச்சியில் ஒரு பங்கினை பெறலாம்; அது நியாயமான பங்காகவோ அல்லது அதிகரிக்கும் பங்காகவோ இருக்கத் தேவை இல்லை. மேலும் இந்த பங்கு கூட "பொருளாதார வளர்ச்சியின் தேவைக்கு ஏற்ப" இருக்கும். பணக்கார நாடுகளின் மிக உயர்ந்த வாழ்முறைகளுக்கும், அவற்றின் பொருளாதார வளர்ச்சியின் உயர் தன்மைக்கும் முக்கியத்துவமளிப்பது என்பதை இந்த முன்னுரை புலப்படுத்துகிறது.

அதிகரித்து வரும் இந்த ஏற்றத்தாழ்வுகளை இரண்டாவதாக பெரும்பாலான வளரும் நாடுகள் கடன் வலையில் சிக்கி / விழுந்து அவற்றின் வளங்களெல்லாம் கடன் கொடுத்த நாடுகளுக்கு போய்விட்டன என்ற உண்மைக்கு எதிராக பார்க்கப்படலாம். 1983 முதல் 89 வரை கடன் கொடுத்த பணக்கார நாடுகள் அதிர்ச்சியளிக்கும் வகையில் 242 பில்லியன் (1 பில்லியன் = 100 கோடி) டாலரை நீண்டகால கடனுக்கான வகையில் கடன் பெற்ற வளரும் நாடுகளிடமிருந்து பெற்றுள்ளன.

மூன்றாவதாக பல பன்னாட்டு நிறுவனங்கள் பிரமிக்கத்தக்க ஆதார வளங்களை பெற்றன (எனவே கணிசமான அரசியல்-ஆள் பலத்தையும் கொண்டிருந்தன) மேலும் வளரும் நாடுகளினுள் இவை தங்கு தடையின்றி நுழைந்ததால் அந்த நாடுகளின் பாரம்பரிய உள்ளூர் தொழில்களுக்கு குறிப்பாக சிறு தொழில் மற்றும் முறைசாரா தொழில்களுக்கு கடும் அச்சுறுத்தலை ஏற்படுத்தின. தேசீய முன்னுரிமைகள் மற்றும் வளர்ச்சி இலக்குகளை இவை சீர்செய்ய முடியாத அளவிற்கு சீர்குலைத்து விடும். பன்னாட்டு மூலதன நிறுவனங்களின் வள ஆதாரங்கள் அதிகரித்தமை வெளிப்படையானதுடன் ஆவணபூர்வமானதும் ஆகும். 1986ல் 866 பன்னாட்டு நிறுவனங்கள் உலக உற்பத்தி துறையில் 76% கொண்டிருந்தன; பன்னாட்டு நிறுவனங்களுக்குள்ளான சர்வதேச வர்த்தகத்தில் 30% கொண்டிருந்தன. 1989ல் உலகு தழுவிய வெளிநாட்டு இணைப்புள்ளவைகளின் விற்பனை 4.4 டிரில்லியன் டாலர் ஆகும். (1 டிரில்லியன் = 1 லட்சம் கோடி) இது உலக ஏற்றுமதியுடன் ஒப்பிடுகைளில் 2.5 டிரில்லியன் டாலர் ஆகும். விற்பனை ஏற்றுமதி விகிதம் 1.8 அமெரிக்காவை பொறுத்தவரை இது வெளிப்படையாக தெரியும். 1989ல் அமெரிக்க பன்னாட்டு நிறுவனங்களின் விற்பனை பதிப்பு 1.26 புரி ஆகும்; ஏற்றுமதி வணிக மதிப்பு 0.3 டிரில்லியன் இதன் விற்பனை ஏற்றுமதி விகிதம் பன்னாட்டு நிறுவனங்களுடன் தொடர்புடையவற்றின் உலகளாவிய விற்பனை மதிப்பு, உலகச் சந்தைக்கு பொருட்களையும் சேவைகளையும் ஏற்றுமதி செய்வதை விட குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் உடையது - 12 க்கும் மேலான மிகப்பெரிய நாட்டு நிறுவனங்களின் வருவாய், 1994, மரக்கேஷ் 'காட்' உடன்படிக்கையில் கையெழுத்திட்ட 117 நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) மதிப்பை விட அதிகமானதாகும். உண்மையில், சர்வதேச பொருளாதார உறவுகளை குறிப்பாக

www.tamilarangam.net



மிக பின்தங்கிய நாடுகளுடைய உறவுகளை கட்டமைப்பதிலும் வழிநடத்துவதிலும் பன்னாட்டு நிறுவனங்களின் ஆற்றல் குறித்து விவரிக்க தேவை இல்லை.

தற்போதைய நிலையில் உற்பத்தி சாராது இருக்கிற நிதி மூலதனத்தின் ஆதிக்கம் மேலோங்கி உள்ளது. உலக முழுவதும் மிக வேகமாக, அதிகபட்ச லாபத்திற்காக பாய்ந்தோடும் நிதிமூலதனத்தின் அளவு நம்ப முடியாத அளவிற்கு அதிகரித்துள்ளது. 1960ல் நாடு விட்டு நாடு கடக்கும் வங்கித் தொழில் உலக சந்தைப் பொருளாதாரத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெறும் 1 சதவீதமாக இருந்ததிலிருந்து 1980ல் 20 சதமாக உயர்ந்துள்ளது. ஒரு ஆய்வின்படி யூரோ டாலர் சந்தையில்* கொடுக்கல் வாங்கல் மூலம் (தினசரி) 300 பிலியன் டாலர் வருடத்திற்கு 75 டிரில்லியன் டாலர் என்ற அளவிற்குள்ளது. இது உலக வாணிபத்தைப் போல 25 மடங்கு ஆகும். இதைத்தவிர உலக மையங்களில் நடைபெறும் அந்நிய செலாவணிச் சந்தையில் தினசரி 150 பிலியன் டாலர் அல்லது வருடத்திற்கு 35 டிரில்லியன் டாலர் புரள்கிறது. இது உலகளாவிய பொருள் மற்றும் சேவை வணிகத்தைப் போல் 12 மடங்காகும். மேலே சொன்ன ஆய்வின்படி மற்றும் சமீக காலமாக அச்சந்தரும் வகையில் அதிகரித்திடும் உலக அந்நிய செலாவணிச் சந்தையையும், கருத்தில் கொண்டால், இவ்வகையில் புழங்கும் போலியான மூலதனம் தினசரி 2.5 டிரில்லியன் டாலர் அல்லது வருடத்திற்கு 625 டிரில்லியன் டாலர் ஆகும். ஆனால் உலக வருடாந்திர வாணிபம் 10 டிரில்லியன் டாலர் மட்டுமே ஆகும். மொத்தத்தில் WTO க்கு பழைய GATT யைவிட அதிகாரமுள்ளது. அது பல புதிய பகுதிகளில் / துறைகளில், விவசாயம், சேவைகள், அறிவுசார் சொத்துரிமைகள், முதலீடுகள் போன்றவற்றில் தலையிட்டு அவற்றை உலக விதிமுறைகளின் கீழ் கொண்டு வருகிறது; கண்காணிப்புக்குள்ளாக்குகிறது. சர்வதேச நிதியம் மற்றும் உலக வங்கியின் நிலை நிறுத்தலுக்கும் சீரமைப்புப் பணிகளுக்கும் இது உதவி செய்கிறது. இப்போது இந்த மூன்றும் (IMF, WB, WTO) மிக நாகரீகமாகவும், மேம்பட்ட முறையிலும் மூன்றாம் உலக நாடுகளை காலனீயத்தின் கீழ் கொண்டு வருவதே உறுதி செய்கின்றன. வரலாற்று ரீதியிலான காலனியம் விட்டுச் சென்ற தீமைகளையோ மற்றும் சார்ந்திருக்க வேண்டியதான சர்வதேச உழைப்பு பிரிவினையையோ, ஆதிக்கத்தையோ தவிர்த்திட ஏதும் செய்யப்படவில்லை. அதேசமயம் பன்னாட்டு மூலதனத்தின் உலக ஆதிபக்கம் என்பது நிலை நிறுத்தப்பட்டுள்ளது. இந்தியா போன்ற நாடுகளின் சுயமான வளர்ச்சி மற்றும் சுயாதிபத்தியம் போன்றவை அபாயத்திற்குள்ளாக்கப்பட்டது என்பதை சில குறிப்பிட்ட ஒப்பந்தங்களை பரிசீலித்ததை தொடர்ந்து தெரிய வந்துள்ளது. அவைகளை பரிசீலிக்குமுன் இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டம், தேசீய வழிமுறைகள், புதிய 'காட்' குறித்த சில பிரச்சினைகளை பரிசீலிக்க வேண்டியுள்ளது.

---

★ ஐரோப்பாவின் ஏகபோக வங்கிகள், மற்றும் இதர பன்னாட்டு வங்கிகள் தங்களின் பரிமாற்றங்களின் கணிசமான அளவை, டாலரை சார்ந்து வழிநடத்துகின்றன. இதுவே "யூரோ டாலர் சந்தை" எனப்படுகிறது.

www.tamilarangam.net



**நல்லிணக்கத்தை நோக்கி**

பங்கு பெறும் நாடுகள் அவற்றின் தேசீய சட்டங்களை GATT ஒப்பந்தங்களுக்கேற்ப 'நல்லிணக்க'மாக்கப்பட வேண்டும். இச்சட்டங்கள் முதலீடு, காப்பீடு, வங்கித் தொழில், சொத்துக்கள் மற்றும் சொத்துரிமை, வர்த்தகம், சேவைத்துறை, அறிவுசார் சொத்து, சுற்றுச்சூழல், மனித நலன், தொடர்பு சாதனங்கள் போன்ற பரந்த பல பகுதிகளை கொண்டதாகும். கடந்த பல வருடங்களாக நமது வளர்ச்சிக்கு பொருத்தமான திட்டமிட்ட நடவடிக்கைகள் நிறைவேறத்தக்க வகையில் இச்சட்டங்கள் மூலம் ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு அமைப்பை கட்டமைத்துள்ளோம். அவை பெரும்பாலும் செயல்படுத்தப்பட்டாலும், பெருமளவு ஊழல் மலிந்ததாவும் இருப்பது உண்மையே! ஆனால் அவை இப்போது வேறுகாரணங்களுக்காக நீக்கப்படவும் திருத்தியமைக்கப்படவும் உள்ளன. உள்ளூர் மற்றும் அன்னிய வர்த்தகம், சமபடுத்தப்பட்ட ஆடுகளத்தில் விளையாட வசதியாக அவை மாற்றப்பட உள்ளன. TRIMS உலக விதிகளின் அடிப்படையில் புதிய முதலீட்டு களம் அமைக்க வழிவகை செய்கிறது. தொழில் வளர்ச்சி முறைப்படுத்தல் சட்டம் 1951, ஏகபோக தடைச்சட்டம் MRTP Act 1969. அந்நிய செலாவணி மோசடி சட்டம் FERA 1973 மற்றும் இந்திய காப்புரிமைச் சட்டம் . Patent Act 1970, ஆகியவை இந்த 'நல்லிணக்க'த்திற்கான முக்கியமான தேர்வுகள். இந்த நல்லிணக்கம் என்பது யாருக்காக? எதற்காக? என்ற கேள்விகளுக்கு இதுவரை பதிலளிக்கப்படவில்லை. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகளுக்கு (பிரிவு 38, 39, 41, 46, 48 etc) எதிரான விஷயங்கள், மானியங்கள் தொடர்பான ஒப்பந்தத்தில் (பாகம் III) உள்ளன. அதிலுள்ள 'நடவடிக்கைக்குரிய மானியம்' என்ற தலைப்புள்ள பகுதியை நமது நாட்டு நலனுக்கு எதிராக பயன்படுத்த முடியும். "மற்ற உறுப்பினர் நாட்டின் உள்நாட்டு தொழிலுக்கு ஆபத்து ஏற்படுத்தும்" அல்லது "மற்ற உறுப்பினர் நாட்டின் மீது தீவிரமான தப்பெண்ணம் உண்டாக்கும்" போன்ற அதன் வாசகங்கள் நமது நாட்டின் முக்கிய நலன்களுக்கு எதிராக பயன்படுத்தக்கூடியவை. உடன்படிக்கையின்படி அனுபவிக்கும் விஷயங்களை ஊனப்படுத்தவோ அல்லது நிராகரிக்கும் வகையிலோ எந்த மானியமும் அனுமதிக்கப்படமாட்டாது.

போட்டிகளை சமாளிப்பதற்காக இடுபொருட்களை, நடைமுறைச் செலவுகள், முன்னுரிமையுடைய பயனீட்டாளர் கட்டணம் போன்றவற்றிற்கான மானியங்கள் 'நடவடிக்கைக்கான' என்ற பிரிவில் அடங்கும். பின்தங்கிய பகுதிகளை முன்னேற்ற மானியங்கள் அனுமதிக்கப்படுகின்றன; ஆனால் பின்தங்கிய மக்களுக்கு (வகுப்பைச் சார்ந்த மானியங்கள் அனுமதிக்கப்படுவதில்லை. வருவாயிலும் - சொத்துரிமையிலும் அவற்றின் பகிர்மானத்தில் பெரும் ஏற்றத்தாழ்வான நிலைமையுள்ள ஒரு பொருளாதார சமூகத்தில், பலவீனமான பகுதி மக்களுக்கு உதவிடும் வகையில் திறமையான - மலிவான பொது விநியோக முறையின் தேவையின் அடிப்படையிலே நமது அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அதன் பிரிவுகள் 39(C), 41, 43 மற்றும் 46 ஆகியவை முன்னிலையில் குறிப்பிட்ட / பொறிக்கப்பட்டபடி ஒரு 'சோஷலிஸ' குடியரசை நிறுவுவதாகும்; அதன்மூலம் உழைப்பாளி மக்களின் வாழ்க்கைத் தரத்திற்கும், பொருளாதார பாதுகாப்பிற்கும் முயற்சிக்கப்படும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்பதாகும். ஆனால் சமூகத்தின் உற்பத்தி மற்றும் விநியோகத்தை சந்தை விலை மட்டுமே நிர்ணயிக்க முடியும் என்பதை அங்கீகரிக்கும் புதிய 'காட்', பலவிதமான - பலதரப்பட்ட மானியங்களை 'நடவடிக்கை'க்குட்படுத்துகிறது. இது நமது அரசியலமைப்புச் சட்டத்தின் நோக்கத்திற்கு விரோதமானதாகும்.

பழைய GATT போலன்றி WTO வானது மிக உயர்ந்த சர்வதேச அமைப்பாகும்; அதற்கு நிர்வாகம், விசாரணை, தண்டனையளித்தல் ஆகிய அதிகாரங்கள் உண்டு. ஒவ்வொரு ஒப்பந்தமும் ஒரு குழுவால் கண்காணிக்கப்படும். (உம் விவசாயத்திற்கான குழு, சேவைத்துறை வணிகக்குழு) வலியுறுத்தி குறிப்பிட்டு கூறுவது என்னவென்றால் TRIMS குழு 'நடவடிக்கைகளையும் அமுலாக்கத்தையும்' கண்காணிக்கும், TRIPS குழு ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தலையும், குறிப்பாக உறுப்பு நாடுகள் அவற்றின் கடமைகளை நிறைவேற்றுதலை கண்காணிக்கும். தாவாக்கள் ஏற்படுமாயின் அவற்றைத் தீர்த்துக் கொள்ளவும் மிக விரிவான ஏற்பாடுகள் உண்டு. தாவாக்களை தீர்ப்பதற்கான விதி-வழிமுறைகள் உருவாக்கப்பட்டு அவற்றை கையாள ஒரு தாவா தீர்க்கும் அமைப்பை (Dispute Settlement Body) W.T.O. உருவாக்கியுள்ளது. நீண்டகாலமாக தீர்க்க இயலாத தாவாக்கள் எழ அதிக வாய்ப்புள்ளது. எதிர்ப்பின் மூலம் தண்டனையளிக்கும் ஆற்றல் இருப்பினும் இந்தியா போன்ற வளரும் நாடுகளுக்கு அது ஊறுவிளைவிப்பதாகவும், மதிப்பு இழக்கவும் நேரிடும்.

ஏன் அப்படி என்றால் WTO வை நிறுவும்போது ஏற்பட்ட ஒப்பந்தத்தின் பிரிவு 3ல் பகுதி 5ன்படி சர்வதேச நிதியம் மற்றும் உலக வங்கியுடன்" இணைந்து பணியாற்றி உலக பொருளாதார கொள்கைகளை உருவாக்க வேண்டு"மென கூறப்பட்டுள்ளது.

உட்டோ (WTO), உலக வங்கி சர்வதேச நிதி நிறுவனம் (ஐஎம்எப்) ஆகிய மூன்று நிறுவனங்களும் சேர்ந்து வளரும் நாடுகளின் சுயாதிபத்தியத்தை தாக்குகின்றன. உதாரணமாக ஒரு அமெரிக்க நிறுவனத்தின் காப்புரிமை, ஒரு இந்திய நிறுவனம் அல்லது ஒரு இந்தியப் பிரஜையாலோ மீறப்பட்டுவிட்டால், எத்தவறும் செய்யாத இந்தியாவின் பிழைப்புக்காக கைத்தறி தொழிலையே நம்பியிருக்கும் 8 லட்சம் தொழிலாளர்களின் வாழ்க்கையைப் பறிக்கும் வகையில் கைத்தறி பொருட்களை இறக்குமதி செய்வதை நிறுத்தப்படும். WTO விதிகளின்படி, ஒவ்வொரு வளரும் நாட்டின் இறக்குமதி திறந்துவிடப்பட்டது. இதனால் அந்த நாட்டில் நிலவும் பொருள்களின் விலைகள் உலக சந்தையை சார்ந்து உள்ளன. குறிப்பாக, வளரும் நாடுகள், பொருள்கள் மற்றும் சேவைகளின் வணிகத்தை தாராளமயமாக்கலின் ஒரு பகுதியாக, வரியற்ற தடைகளையும் சுங்க வரியையும் குறைக்க வேண்டி உள்ளன. உட்டோவிற்கு முன்பு, வளரும் நாடுகளில் நிலவிய பொருட்களின் விலைகள் ஓரளவுக்கு கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் மேற்கூறிய ஏற்பாடுகளுக்கு பிறகு ஒவ்வொரு வளரும் நாடுகளின் பணவீக்கம் அதிகரித்துள்ளது. உலக சந்தையில் நிலவும் விலைகள் பன்னாட்டு நிறுவனங்களால் நிச்சயிக்கப்படுகின்றன.

www.tamilarangam.net



**டிரிம்ஸ் ஒப்பந்தம்**

(TRIMS) Trade related investment measures. WTO வின் (வர்த்தரீதியான முதலீட்டு விதிமுறைகளைப் பற்றிய ஒப்பந்தம்) உறுப்பினர் நாடுகள் தங்கள் நாட்டுக்குள் வரும் தேவையற்ற பொருள்களின் மீது விதிக்கும் வர்த்தக தடைகளையும், நாட்டு வளர்ச்சிக்கும் தேவையான தொழில்களில்தான் பன்னாட்டு நிறுவனங்கள் முதலீடு செய்ய வேண்டும் என்று நிபந்தனை விதிப்பதையும் குறைக்க வேண்டும் என்று சொல்வதே டிரிம்ஸ் ஒப்பந்தத்தின் நோக்கம். இந்த ஒப்பந்தத்தின்படி, இறக்குமதியை பாதிக்கக்கூடிய முதலீட்டு கட்டுப்பாடுகள் மற்றும் இறக்குமதிப் பொருள்களின் எண்ணிக்கை சம்பந்தமான தடைகளை ஒரு நாடு போட முடியாது. WTOன் உடன்படிக்கைகளிலேயே டிரிம்ஸ் ஒப்பந்தம்தான் வளரும் நாடுகளின் சுயாதிபத்தியத்திற்கு மிகப்பெரும் தடைகளை உருவாக்குகிறது. பன்னாட்டு மூலதனம் தடையின்றி பரவ பாதை அமைக்கிறது.

பெரு நகரிய மூலதனங்கள் வெறுக்கப்பட்டாலும், பெரும்பாலான மூன்றாம் உலக நாடுகள் அவற்றை ஈர்க்க விரும்புகின்றன. தங்களது தேசிய நலன்கள் மற்றும் வளர்ச்சமககாக சில நபந்தனைகளையும் அவை விதிக்கின்றன என்பது உண்மையே. இந்தியா போன்ற வளரும் நாடுகளில், பன்னாட்டு மூலதனங்கள், உள்நாட்டு தொழிலாளர்கள், மற்றும் பொருள்களை பயன்படுத்த வேண்டும். உள்நாட்டு நிறுவனங்களை பங்காளிகளாக்கி கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது. லாபம் மற்றும் உரிமைத் தொகைகளை நாட்டுக்கு வெளியே எடுத்துச் செல்வதற்கும், பன்னாட்டு மூலதனங்களின் வர்த்தக நடைமுறைகளுக்கும், கட்டுப்பாடுகள் தேவை எனவும் வலியுறுத்தபபடுகிறது.

இதை WTO வர்த்தக திசை திருப்பல் என்கிறது. உலக சந்தையில் சமமான வாய்ப்புகள் இல்லாத நிலையில்தான் வளரும் நாடுகள் மேற்கண்ட கட்டுப்பாடுகளை விதிக்கின்றன. இது எப்படி வர்த்தக திசை திருப்பலாகும்?

பன்னாட்டு நிறுவனங்களின் நடத்தை ஆகியவை அவற்றின் தாய் நிறுவனங்களால் உலகளவில் நிர்ணயிக்கப்படுகின்றன. அவைகளுக்கு உள்நாட்டில் புதிய தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்துதல், வேலைவாய்ப்பை உருவாக்குதல், வளங்களை ஒதுக்கீடு செய்தல், மூலதனத்தை உருவாக்குதல் உள்ளிட்ட தேசீய நலன்களை வளர்த்தெடுக்க வேண்டிய அவசியமில்லை. பன்னாட்டு நிறுவனங்களில் புதிய தொழில் நுட்பங்களை அளித்திடும், வேலை வாய்ப்பை உருவாக்கிடும், கேந்திரமான தொழில்களில் முதலீடு செய்ய முன்வருவனவற்றை ஒரு தேசீய அரசு மற்றவற்றிடமிருந்து வேறுபடுத்தி பார்ககக்கூடாதா?

இந்தியாவின் நடைமுறைகள் பலவும் எதிரான விளைவுகளையே ஏற்படுத்தியிருப்பது உண்மையாயினும், இந்தியாவிலிருந்து பன்னாட்டு நிறுவனங்களை விரட்டியடிக்கவில்லை. WTOக்கு முன்பாக காலத்தில், இந்தியாவில் தொழில்களுக்கு அனுமதி அளித்திடும் நிர்வாக ஏற்பாடுகளை பரிசீலித்ததில், கீழ்வரும் விபரங்கள் தெரிகின்றன.

www.tamilarangam.net



1. இந்திய உற்பத்தி வெளிநாட்டு தொழில் நுட்பத்திற்கு அடிபணிந்து இருந்தது குறைக்கப்பட்டது.

2. இந்த கட்டுப்பாடுகளால் வெளிநாட்டு நிறுவனங்கள் இந்தியாவிற்குள் வருவது நிற்கவில்லை. மாறாக அதிகம் லாபம் தரும் துறைகளில் ஈடுபட்டே வந்தன. (உதாரணம் இந்துஸ்தான் லீவர்)

பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியாவிற்குள் வர வேண்டும் என விரும்புகிறவர்கள் கீழ்க்கண்டவாறு வாதிக்கின்றன.

1. அவை அதிக மூலதனம் கொண்டு வருகின்றன.

2. கடனாக இல்லாமல் மூலதனத்தை கொண்டு வருகின்றனர். இதனால் கட்டாய வட்டி கட்ட வேண்டியதில்லை. மாறாக, லாபம் காட்டும் நிறுவனங்களே டிவிடெண்ட் எடுத்துச் செல்கின்றன.

3. அந்நிய செலாவணி சேமிக்கப்படுகிறது.

4. உயர் தொழில் நுட்பம் வருகிறது.

**உண்மை என்ன?**

வெளிநாட்டு கம்பெனியில், இந்தியாவில் துவங்கும் நிறுவனங்களில் இருந்து ஏற்றுமதி செய்வதில்லை. மாறாக நடைமுறையில் உள்ள இந்திய சந்தையின் உள்ளேயே போட்டியை தீவிரப்படுத்துகிறார்கள். தனது சொந்த நாட்டில் இருந்துதான் தனது உற்பத்திக்கு தேவையானவைகளை பன்னாட்டு நிறுவனங்கள் கொண்டு வருகின்றன. இதனால் அந்நிய செலாவணி சேமிப்பிற்கு பதில் பற்றாக்குறையே நிலவுகிறது. டிரிம்ஸ் ஒப்பந்தத்தின் கீழ் நடைமுறையில் பன்னாட்டு நிறுவனங்களின் மேல் உள்ள எல்லா கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டு உள்ளன. ஆதலால் வளரும் நாடுகளின் மக்களின் வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்படுகிறது.

## The G.A.T.S

சேவைத்துறை வர்த்தகம் குறித்த இந்த ஒப்பந்தம், நிதிச்சேவை, தொலை தொடர்புகள் (தொலைபேசி, தந்தி மற்றும் மின் காந்த கருவிகள்) விமானச்சேவை போன்ற துறைகளில் சட்டபூர்வமாக பன்னாட்டு நிறுவனங்கள் நுழைய / ஊடுருவ உதவி செய்கிறது. நிதிச் சேவை என்பதில் வங்கிப்பணிகளில் மைய வங்கிப்பணி காப்பீடு தவிர மற்றெல்லா துறைகளும் இவ்வொப்பந்தத்தின் 11ஆம் பிரிவுப்படி பங்கேற்கும் நாடுகள் ஒவ்வொன்றும் "உடனடியாகவும் நிபந்தனையின்றியும்" சேவைகளுக்கும் சேவைகளை அளிக்கக்கூடிய இதர நாடுகளுக்கும் முன்னுரிமை நாடுகளுக்குரிய அந்தஸ்தை அளிக்க சம்மதிக்க வேண்டும்.

GATS ஒப்பந்தத்தின் முன்னுரையில் "வளரும் நாடுகளின் சேவை வர்த்தகம் அதிகரித்த நிலையுடன் கூடிய பங்கேற்பை ஊக்குவிப்பதே நோக்கம்" எனக் கூறப்பட்டுள்ளது. உருகுவே சுற்று பேச்சுவார்த்தையில் அமெரிக்காவின் முன் முயற்சியால் இந்த ஒப்பந்தம் கொண்டு வரப்பட்டது என்பதும், அது இத்துறையில் பெற்றுள்ள தொழில் நுட்ப மேலாண்மையும் கருத்தில் கொள்ளும் போது இந்த கவர்ச்சிகரமான முன்னுரை பொருளிழந்து போகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



GATS ஒப்பந்தத்தில் கோரப்படும் / வரையறுக்கப்பட்ட சில பொதுக் கடமைகளும், மற்றும் தேசிய உபசரிப்பு – சந்தைகளுக்குள் நுழைவது ஆகியவை குறித்த ஒப்புதல்களும் ஒரு நாட்டின் சுயாதிபத்தியத்தை சீரழிக்கும் பல ஷரத்துக்களை உள்ளடிக்கியுள்ளன. தேசீய உபசரிப்பு பற்றிய ஷரத்து XVII, ஒரு நாடு அதனுடைய உள்நாட்டு சேவையளிப்போருக்குண்டான அதே மரியாதை அன்னிய சேவையளிப்போருக்கும் தரப்பட்டாக வேண்டுமென கோருகிறது. சேவைத் துறையில் உள்நாட்டு – வெளிநாட்டு அல்லது பொதுத்துறை நிறுவனங்கள் சமமாக நடத்தப்பட வேண்டும்.

அரசின் சேவைகள் தவிர, ஒரு நாட்டின் எல்லைக்குள் ஏகபோக சேவை என்பது, அனைத்து நடைமுறைக் காரணங்களால், சாத்தியப்படுவது கடினம். உள்நாட்டின் எல்லைக்குள் செயல்படும் அந்நிய நிறுவனம் உலகளவில் ஏகபோகமாக உள்ளதா என்பது இச்சூழலில் கேள்விக்குட்படுவதில்லை. இந்த GATS ஒப்பந்தத்தின் கீழ் ஒரு தேசிய அரசிற்கு சேவையளிப்போரின் சந்தையில் அதிக அளவு ஆதிக்கத்தையோ மற்றும் நியாயமற்ற வணிகத்தையோ, கட்டுப்படுத்துவது மிகக் கடினமான பணியாகிறது; தேசீய முன்னுரிமைக்கேற்ப பணியாற்றுமாறு அவர்களை ஒழுங்குபடுத்த மட்டுமே முடிகிறது. முதலீட்டிற்கான ஒதுக்கீடுகள், தேசீய முன்னுரிமைத் திட்டங்களுக்கான கடன் போன்றவற்றில் அந்நிய நிதிச் சேவை நிறுவனங்களுக்கு (வங்கி, பரஸ்பர நிதிகள், காப்பீடு போன்றவை) இந்திய அரசால் கட்டளை இட முடியாது என்பது வெளிப்படையானது.

உலக சேவைத் துறைப் பொருளாதாரத்தில் அதிகாரபங்கீட்டில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்கெனவே அதிகரித்துள்ளது. "சேவை வணிகத்தில் வளரும் நாடுகளின் பங்கேற்பை அதிகரிக்கச் செய்வது" என்பதை முன்னெடுப்பது என்ற பெயரில் இந்த ஏற்றத்தாழ்வுகள் மேலும் அதிகரிக்கும். தேச சுயாதிபத்தியம், பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி போன்றவற்றின் மீது நேரடி தொடர்புடைய வங்கி, காப்பீடு, கப்பல் மற்றும் விமான போக்குவரத்து, தொலை தொடர்புகள் ஆகிய துறைகளுக்கு நாட்டின் பாதுகாப்பு முக்கியத்துவம் நிறைந்ததும், வளர்ச்சிப் பணிகளுக்கு இன்றியமையாததும் ஆகும்.

சுயாதிபத்தியத்துடன் சமரஸம் செய்து கொள்ளும் சர்வதேச ஏற்பாடுகள் அதேவிதமான பலனை திருப்பியளிக்க கடமைப்பட்டவை. வளரும் நாடுகள் அந்நியச் சேவைகளுக்கு சமதளம் அமைத்துக் கொடுத்தும், சந்தையைப் பிடிக்கவும் ஏற்பாடுகளை செய்கின்றன; அதேசமயம் அவைகளுக்கு மிக அனுபவச் செறிவுள்ள ஆலோசனையளித்தல், திறமை, குறைதிறமை, திறமையற்ற உழைப்பை அளித்தல் போன்ற ஏற்பாடுகளின் மூலமாக பலன் திருப்பியளிக்கப்பட்டதா? என்பது சந்தேகமே!

## அறிவுசார் சொத்துரிமைகள்

அறிவுசார் சொத்துரிமைகள் குறித்த வர்த்தகம் சார்ந்த ஒப்பந்தம், குறைந்தபட்ச பாதுகாப்பிற்கான வழிமுறைகள் உருவாக்கியுள்ளது. அவை பல துறைகளைச் சார்ந்த உரிமைகள் பற்றியது. பதிப்புரிமை, வர்த்தகக் குறியீடு, பூகோள

www.tamilarangam.net



குறியீடு, தொழில் வரைவுகள் போன்றவை குறிப்பிடத்தக்கவை. இவற்றில் பன்னாட்டு நிறுவனங்கள் மிக முக்கியமானதாக கருதுவது காப்புரிமை தொடர்பானதாகும். இவ்வொப்பந்தம் காப்புரிமை கருத்தாக்கத்தின் முழு அர்த்தத்தையே மாற்ற முயல்கிறது. அது கண்டுபிடிப்புகளுக்கு காப்புரிமை பெறுவது என்பது மட்டுமின்றி இயற்கையான உயிரினங்களையும் இதனுள் அடக்க முயல்கிறது.

தொழில் நுட்ப சுதந்திரம் என்பது சுயசார்பு வளர்ச்சிக்கு இன்றியமையாதது. இதையேதான் TRIPSம் TRIMSம் வளரும் நாடுகளுக்கு எதிர்மறையாக பயன்படுத்துகின்றன. இன்று தொழில் நுட்பம் அமெரிக்கா, ஐரோப்பா, ஜப்பான் ஆகிய நாடுகளிடமே குவிந்துள்ளது. உலகின் காப்புரிமை பெற்றவற்றில் 1 சதம் மட்டுமே வளரும் நாடுகள் பெற்றுள்ளன.

பன்னாட்டு நிறுவனங்கள் காலாவதியான தொழில்நுட்பங்களை மிக அதிக விலையில் பரிவத்தனை செய்கின்றன. தற்போது TRIPS ஆனது பன்னாட்டு நிறுவனங்களின் கண்டுபிடிப்புக்களை 20 வருடங்களுக்கு உரிமை கோருகிறது. தொழில் நுட்பங்களை பரிவர்த்தனை செய்யப்படும்போது அவை உள்ளூர் தொழில்நுட்ப திறனை வளர்ப்பதற்கு உதவ மறுக்கிறது. பலர் சுயசார்புடைய தொழில்நுட்ப வளர்ச்சிக்கான மாற்றுப்பாதையை தேடுவதைவிட பன்னாட்டு நிறுவனங்களின் வர்த்தக முகவர்களாக இருப்பதையே மிகவும் லாபகரமானதாகவும் வசதியானதாகவும் கருதுகின்றனர். விஞ்ஞானம் மற்றும் தொழில் ஆராய்ச்சி குழு (CSIR) வின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளின் பயனாக பன்னாட்டு நிறுவனங்களின் ஆதிக்கத்தில் இருந்த பூச்சிகொல்லி மருந்து தொழிலில் இந்தியா எதிர்நீச்சல் அடித்து முன்னேறியது. மேலும் இத்தகைய சுயசார்பு முயற்சிகளின் விளைவாக அணுசக்தி ஆராய்ச்சி, கனிமங்கள் மற்றும் உலோகங்கள், பெட்ரோலிய ரசாயனம் மற்றும் ரசாயனம் சார்ந்த பொருட்கள், பொறியியல் மற்றும் கருவிகள், மற்ற பிற துறைகளில் வளர்ச்சி கண்டுள்ளோம். பல வெளிநாட்டு அறிஞர்கள் இந்தியா இவ்விதம் பன்னாட்டு நிறுவனங்களை, மருந்து உற்பத்தி கணினி போன்ற தொழில்களில் விஞ்சி நிற்பதை பாராட்டி உள்ளனர். இந்தியாவில் விஞ்ஞான நிபுணர்கள் அதிகம்; இது TRIPSக்கு ஒரு சாதகமான அம்சம் என வாதிக்கப்படுகிறது அது உண்மையெனில் இந்த விஞ்ஞான நிபுணர்கள் TRIPS யை வரவேற்றிருப்பார்கள். ஒரு உலகளாவிய காப்புரிமை பெற 4 லட்சம் டாலர் செலவாகிறது. இப்பெரும் செலவினை எந்தவொரு இந்திய விஞ்ஞானியோ அல்லது நிறுவனமோ ஏற்க இயலாது. அத்தகைய பெரும் சக்தி பன்னாட்டு நிறுவனங்களுக்கு இருக்கிறது. சுயசார்பு முயற்சிகளை மேற்கொண்ட இந்தியா போன்ற நாடுகளை பின்னுக்கு தள்ளவே TRIPSயை பன்னாட்டு நிறுவனங்கள் கொண்டு வந்துள்ளன. பல்லுயிர் பெருக்கத்தில் உலகிலேயே அதிக வளங்களையுடையது இந்தியா, 70 சத விவசாயிகளின் விதைத் தேவைகள் சர்வ சாதாரணமாக இன்றும்கூட நிறைவேறுகின்றன. இத்துறையில் TRIPS நுழைந்தால் கடும் பாதிப்புக்கள் ஏற்படும். TRIPS ஒப்பந்தம் பிரிவு 27(III) ன் படி உறுப்பு நாடுகள் "தாவர வகைகள் அனைத்தையும் காப்புரிமை செய்வதன் மூலம் பாதுகாக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது. உயர் தொழில்நுட்பத்தில் (பன்னாட்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நிறுவனங்களுக்கு) ஏகபோகத்தால் இந்தியா விவசாயத்துறையின் வளர்ச்சி மற்றும் அதன் திசை வழியை அச்சுறுத்தும் அபாயம் உள்ளது. மனித மரபணுவையும் இதர உயிரின வகைகளையும் காப்புரிமை செய்வது W.T.O உடன்படிக்கையின் கீழ் நடைபெற்று வருகிறது. அமெரிக்க பன்னாட்டு மரபணு நிறுவனங்கள் இத்தகு ஏகபோக காப்புரிமையைப் பெறக்கோரி ஏராளமான மனுக்களை செய்து வருகிறார்கள். பன்னாட்டு நிறுவனங்கள் யார் உயிருக்கே சொந்தக்காரர்? போன்ற முக்கியமான முடிவுகளை எடுக்கின்றனர்; மரபணு பற்றிய விவரங்கள் மற்றும் உயிரையே கூட தனியார்மயப்படுத்துவதன் மூலம் ஏற்படும் (சமூக, நன்னெறி மற்றும் பொருளாதார) எவ்வித பொதுவிவாதமோ அல்லது விழிப்புணர்வோ இல்லை.

### விவசாயத்தைப் பற்றிய ஒப்பந்தம்

இந்த ஒப்பந்தம் விவசாயத் துறையில் கீழ்க்காணும் சீர்திருத்தங்களை அமுல்படுத்த கோருகின்றது. அவையாவன : விவசாயத்திற்கான உள்ளூர் உதவி, சந்தை திறந்து விடுவது, ஏற்றுமதி போட்டிகள்.

இவை குறித்து இந்த ஒப்பந்தம் கூறுவது என்னவென்றால் விவசாயம் சம்பந்தமான அனைத்து அரசு உதவிகளையும் மறுக்கிறது; வேளாண் பொருட்களை இறக்குமதி செய்யாத நாடுகள் தங்களின் உள்ளூர் நுகர்வில் குறைந்தபட்சம் 3 சதவீதமாவது இறக்குமதி செய்து சந்தையை திறந்து விட வேண்டும். இது 1999ல் 5 சதவீதமாக அதிகரிக்கப்பட வேண்டும். இந்தியா போன்ற நாட்டிற்கு 5 மிலியன் டன் உணவு தானியங்களும், 3 லட்சங்கட்கு பருத்தியும் இதில் அடங்கும். இப்படி இந்திய வேளாண் துறை திறந்து விடப்பட்டால் அது இந்திய இறையாண்மையை பாதிப்பதாகாதா?

### இந்த ஒப்பந்தங்களிற்கு அப்பால்

உலகமயமாதலின் ஊடே, இன்றும் கூட, தேசீய அரசு என்ற கருத்தாக்கம், மக்கள் எதிர்காலத்தை தாங்களே நிர்ணயித்தல், தேசீய இறையாண்மை என்ற கருத்தாக்கம் போன்றவை ஜிவித்திருக்கின்றன. பன்முகத்தன்மை வாய்ந்த உலகில் வளர்ச்சியின் இலக்கணம் ஒரே நேர்கோட்டில் அமையாது. உலகம் இன்று ஒரே தன்மையுடையதாய் இல்லை. அதன் அழகும், பலமும் அதன் பன்முகத்தன்மையில் தான் உள்ளது. பார்த்தா சாட்டர்ஜி கூறுவது போல "ஐரோப்பாவின் சிந்தனையே உலக சிந்தனையாக - குறுகிய வரலாற்றைக் கொண்ட ஐரோப்பாவின் வரலாறே உலக வரலாறாக கருதப்பட்டது. மூலதனத்தின் நகர்வு அதன் உலகு தழுவிய அடைவு, உலகை அதன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருகிறது. இந்த மூலதனம், வர்த்தக நாட்டின் வன்முறை, போர், படுகொலை, ஆக்ரமிப்பு மற்றம் காலனியாதிக்கம் போன்றவற்றை உலக வளர்ச்சி, நவீனப்படுத்தல் மற்றும் சுதந்திரம் என அழைக்கிறது" W.T.O. இந்த வர்ணிப்புக்களையே பிரதிபலிக்கிறது.

W.T.O. சர்வதேச நிதியம் மற்றும் உலக வங்கி நிறுவப்பட்டதானது. பொருளாதார மறுசீரமைப்பின் உலகமூலதனத்தின் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதை குறிக்கோளாகக் கொண்டதாகும். பன்னாட்டு நிறுவனங்கள் இன்று உலகின் முக்கிய

www.tamilarangam.net



பொருளாதார முடிவுகளின் மீது செல்வாக்கு செலுத்துகிறது. எவை எங்கே எப்படி உற்பத்தி செய்வது என்பதை பன்னாட்டு நிறுவனங்களே தீர்மானிக்கின்றன. இப்போக்கின் விளைவாக உலகின் செல்வாதரங்களை தற்போதும் எதிகாலத்திலும் எவ்வாறு கட்டுப்படுத்தப்படும் என்பது தீர்மானிக்கப்படுகிறது. உலகின் செல்வாதாரங்கள் அனைத்தும் மக்களிடமிருந்து மென்மேலும் உலக மூலதனத்தின் வசம் ஒப்படைக்கப்படுகிறது. பல்வேறு பன்னாட்டு நிறுவனங்கள் வெறும் உற்பத்தியுடன் நிற்பதில்லை; பரிவர்த்தனையிலும் ஈடுபடுகின்றன; கடல், தரை, ஆகாய போக்குவரத்து, தொலைதொடர்பு, வங்கி, விளம்பரம், தொலைகாட்சி மற்றும் பத்திரிகை நிறுவனங்கள் போன்றவைகளிலும் செயல்படுகின்றன. இத்துறைகள் ஒன்றிணைக்கப்பட்ட - ஒன்றையொன்று சார்ந்த பங்கு மூலதனத்தைக் கொண்ட நிறுவனங்களால் கையாளப்படுகின்றன. இவை அரசியல் கட்சிகளுக்கு பெருமளவு நிதி உதவி அளிக்கின்றன; அரசாங்கங்களுக்கு தேவைப்படும் வல்லுனர்களை அளிக்கின்றன. இதன்மூலம் அவர்களின் கொள்கை முடிவுகள் தங்களுக்கு சாதகமாக அமையுமாறு செய்து கொள்கின்றன. வறுமை ஒழிப்பு, அனைவருக்கும் அடிப்படை வசதிகள், பகுதிகளிடையே உள்ள ஏற்றத்தாழ்வுை போக்குவது, வருவாயிலும் பகிர்மானத்திலும் உள்ள ஏற்றத்தாழ்வுகளை குறைப்பது போன்றவைகளை அரசுகள் வெற்றுக்கோஷமாகவே வைத்துக் கொள்ளுமாறு செய்கின்றன. W.T.O. வேலை செய்யும் உரிமை, வருமானம் போன்றவற்றைக் காட்டிலும் லாபத்திற்கே முன்னுரிமை அளிக்கிறது; லாபம் கிடைப்பதாயிருந்தால் தீங்கு விளைவிக்கும் ஒரு மருந்தை உற்பத்தி செய்வதுகூட தவறல்ல. W.T.O.வின் கீழ் உலகின் பிரதேசங்கள் பன்னாட்டு நிறுவனங்களின் வேட்டைக்களமாக மாற்றப்படுகின்றன. அவர்களின் இந்த லாப வேட்டையானது சுதந்திரவர்த்தம் போட்டி என்ற வாசகங்களின் பொருளுக்கு மாறாகவே நடைபெறுகிறது. ஏகபோகக் கட்டுப்பாடு, மையப்படுத்திய விலை நிர்ணயிப்பு, சந்தை பகிர்மானம், சூதாட்டம், உலக செயல்பாடுகள் போன்றவற்றை நிறுவனமயப்படுத்துவதும், நிறுவனங்களை வாங்குவது - இணைப்பது போன்றவற்றின் மூலம் இந்த லாப வேட்டை தொடர்கிறது.

முடிவாக உலக பொருளாதார நிலைமையானது பன்னாட்டு மூலதனத்தின் தற்கால வெற்றியைக் குறிக்கிறது. ஜன. 1, 1995 முதல் செயல்படத் துவங்கிய W.T.O. மற்றும் சர்வதேச நிதியம், உலக வங்கி ஆகியவை உலக மூலதனத்தின் தங்குதடையற்ற செயல்பாட்டிற்கு வழி அமைத்துக் கொடுக்கின்றன. மூன்றாம் உலகநாடுகளின் தேசிய இறையாண்மையையும் (சுயசார்பு இலக்கும்), இன்று மிகப்பெரிய பின்னடைவை சந்திக்கின்றன. மிகப்பெரும் ஜனநாயக நாடான இந்தியாவின் தலைமை இதைப் புரிந்து கொள்ள தவறியுள்ளது. "பொருளாதார மறுசீரமைப்பிற்கு மாற்றே இல்லை" என்று கருதுகிறது. ஏழை எழுத்தறிவற்றோர் அதிக எண்ணிக்கையில் உள்ள நாடு; வளர்ந்து வரும் பிராந்திய ஏற்றத்தாழ்வுகள்; வருமானம் மற்றும் சொத்து பகிர்மானத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகள்; லஞ்ச ஊழல் என்பதை ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையாகிப் போன நிலைமை - இவைகளை எதிர்கொள்ள மாற்றப்பாதைக்கான திறமையற்ற, இந்திய தலைமை W.T.O. விடம் சரணடைந்துள்ளது. இதுவரை பேசாத வறுமை ஒழிப்பு பற்றி சர்வதேச நிதியமும் உலக வங்கியும் இன்று உரத்தகுரலெழுப்புகின்றன. ஏனெனில் வளரும் நாடுகளின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மக்களிடையே அதிகரித்து வரும் எதிர்ப்புணர்வை மட்டுப்படுத்தி சமன் செய்யவே ஆகும். வளரும் நாடுகளின் தேசிய அரசுகளின் முழுத்தோல்வியையே இது குறிக்கிறது. பன்னாட்டு மூலதனங்கள்தான் மனிதகுல வளர்ச்சிக்கு உதவக்கூடியது என்று நம்புமாறு கருத்துப் பரப்பப்படுகிறது. அமெரிக்க முன்னாள் ராணுவ செயலர் கூறியது போல "அமெரிக்காவிற்கு எது நல்லதோ அதுவே உலகத்திற்கும் நல்லது" என்றும் மூன்றாம் உலக நாடுகள் நம்பவைக்கப் படுகின்றன.

www.tamilarangam.net



## பிறசேர்க்கை II

# தாராளமயமாக்கலுக்கு பின் இந்திய பொருளாதாரம் எங்கே செல்கிறது?

**பிரபாத் பட்னாயக்**
ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம்

**உற்பத்தியின் வளர்ச்சி**

பொருளாதார மறுசீரமைப்பு அறிமுகப்படுத்தப்பட்ட பின் அரசாங்கம் ஒரு பசுமையான அல்லது வளமான நிலை இருப்பது போல் காட்டக் கூடிய அளவில் தனது புள்ளி விபரங்கள் இருக்குமாறு பார்த்துக் கொண்டது. உலகில் உள்ள பல்வேறு சிறந்த முறைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஒரு புதிய முறையின் அடிப்படையில் கிடைத்து வந்த இந்தியாவின் புள்ளி விபரங்கள் சில ஆண்டுகளுக்கு முன்பு வரை மிகவும் நம்பகத் தன்மை வாய்ந்ததாய் இருந்தது. ஆனால் இப்போது அந்த நிலமை என்பது இல்லை. எனினும் இந்த புள்ளி விபரங்களைத்தான் ஒருவர் எடுத்தாள வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. அப்படி அதனை உபயோகிக்கும் போதே அதன் ஒருதலைப்பட்சமான குணாம்சத்தையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். இப்படியிருந்தபோதிலும், பொருளாதாரத்தின் அனைத்து துறைகளிலும் வளர்ச்சி என்பது மிகக் குறைந்து போய் வருவது இப்புள்ளிவிபரங்கள் மூலம் தெரிய வருகிறது.

1980-81களின் விலைகளின் அடிப்படையில் ஏழாவது திட்ட காலத்திலும் (1985-1990) மற்றும் 1990-91 முதல் 1996-97 வரை உள்ள காலத்திலும் நிலவிய சராசரி வளர்ச்சி பற்றிய விபரங்களை அட்டவணை 1 கூறுகிறது.

**அட்டவணை 1 :**

**1980-1981 விலைகளின் அடிப்படையில் ஆண்டு சராசரி வளர்ச்சி விகிதம்**

| | தேசிய வருமானம் | விவசாயம் | தொழில்துறை | சேவைத்துறை |
|---|---|---|---|---|
| ஏழாவது திட்ட காலம் (1985-90) | 6.0 | 3.4 | 7.5 | 7.5 |
| 1990-97 | 5.2 | 2.5 | 6.0 | 6.8 |

1991-97 காலங்களில் 1985-90 களோடு ஒப்பிடும்பொழுது பொருளாதாரத்தின் அனைத்து துறைகளிலுமே ஒரு மோசமான நிலையே இருந்துள்ளது என்பதனை இந்த அட்டவணை தெளிவாக்குகிறது. உண்மைகளை நாம் மேலும் உன்னிப்பாக கவனிக்க வேண்டும். அட்டவணை 2 தொழில் துறை வளர்ச்சி பற்றிய நிலைமைகளை கூறுகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**அட்டவணை 2 : தொழில் துறை வளர்ச்சி விகிதம் (சதவிகிதத்தில்)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1991-92 | - | 0.6 | 1995-96 | - | 11.8 |
| 1992-93 | - | 2.3 | 1996-97 | - | 7.1 |
| 1993-94 | - | 6.0 | 1997-98 | - | 4.2 |
| 1994-95 | - | 9.4 | | | |

1993-94க்குப் பின் ஏற்பட்ட சில காலம் இருந்த மீட்சி பற்றியதொரு உற்சாகமான மாதங்கள் அப்போது காணாமல் போய் விட்டது. இந்த வளர்ச்சி என்பது ஏதோ புதிய பொருளாதாரக் கொள்கையின் உத்வேகத்தால் ஏற்பட்டது அல்ல. மாறாக இந்த நிலமை என்பது தற்காலிகமானது, சிறிது காலமே தங்கியிருக்கக் கூடியதாகும்.

1993-94இல் அரசின் செலவினங்கள் அதிகாரித்தனாலும் மேல்தட்டு வர்க்கத்தின் ஆடம்பர நுகர் பொருட்களின் தேவைகள் அதிகரித்ததனாலும் ஓரிரு ஆண்டுகள் தேசிய வருமான வளர்ச்சி உயர்வை எட்டியது. ஆனால் இது தற்காலி கமானது.

1985-86 முதல் 1990-91 முடிய உள்ள ஐந்தாண்டுகளில் தொழில்துறை உற்பத்தியில் ஆண்டு சராசரி என்பது 8.4 சதமாக இருந்துள்ளது. மாறாக இதுவே 1990-92 லிருந்து 1997-98 ஆகிய ஏழு ஆண்டு காலத்தில் 5.9 சதமாக உள்ளது. இதற்கு என்ன காரணம்? முக்கியமாக தாராளமய பொருளாதாரத்தின் விளைவாக ஏற்பட்ட பொதுதுறை முதலீட்டில் வீழ்ச்சி, உயர்த்தப்பட்ட வட்டி விகிதங்கள், இறக்குமதியில் தாராளமயம் ஆகியவையே இதன் காரணங்களாகும்.

விவசாயத் துறையிலும் உற்பத்திக் குறைவு ஏற்பட்டுள்ளது என்பது தெளிவு. உணவுப் பொருள் உற்பத்தி என்பது மிக மேகமாக வீழ்ச்சி அடைந்துள்ளது. நீண்ட காலமாகவே இந்த உணவு பொருள் உற்பத்தி உயர்வு என்பது 2.5 சதமாகத்தான் உள்ளது. அந்த விகிதம் என்பது மக்கள் தொகை உயர்வினை விட சற்று தான் அதிகம்.

1978-79 தொடங்கி 1990-91 வரையிலான காலத்தில் இது 2.5 சதமாக இருந்தது. அதுவும் மக்கள் தொகை உயர்வை விட சற்றுதான் அதிகம். இருப்பினும் 1990-91 முதல் 1996-97 முடிய உள்ள காலத்தில் உணவு உற்பத்தியில் 1.4 சதம் குறைந்து விட்டது. இது மக்கள் தொகை உயர்வு சதவிகிதத்தோடு குறிப்பிடுகையில் ஒரு பெரும் குறைவுதான்.

1990-91 மற்றும் 1994-95 ஆகிய வருடங்களை எடுத்துக் கொண்டால் உற்பத்தி உயர்வு விகிதம் 2.1 சதமாக உள்ளது. மக்கள் தொகை உயர்வை விட குறைந்தே உள்ளது. எனவே நம் உணவுப் பொருள் பாதுகாப்பு மிக மோசமாகப் போகும் நிலமை உள்ளது. உணவு உற்பத்தியில் வீழ்ச்சி இருந்த போதிலும் இதுவரை உணவுப் பொருள் தட்டுப்பாடு இல்லாமல் இருந்துள்ளது. கிராமப்புற மக்களின் வாங்கும் சக்தி உண்மையில் மிகக் குறைவாகவே வளர்ந்துள்ளது என்பதைத்தான் இது காட்டுகிறது. பொருளாதார மறு சீரமைப்பு கொள்கைகளின் பின் வந்த காலத்தில்

www.tamilarangam.net



அரசின் பட்ஜெட் பற்றாக்குறைகளை சரி செய்யும் நடவடிக்கைகள் என்ற பெயரால், மானிய குறைப்பு வெட்டுகள் நடைபெற்றது. இது திட்டமிட்ட விலையேற்றத்திற்கு உதவியது. இதன் காரணமாக கிராமங்களில் விவசாயம் சாராத இதர வேலைவாய்ப்பு குறைந்தது. இதனால் கிராமப்புறங்களில் வாங்கும் சக்தி குறைந்தது. மேலும் விவசாயத் துறையில், உற்பத்தியில் ஏற்றுமதி நோக்கினை நோக்கி மாறிய கொள்கைகளும் உணவு பொருட்களின் பற்றாக்குறைக்கு காரணமாக அமைந்தன. மேலும் உணவுப் பொருட்கள் உற்பத்தியில் உழைப்பின் பங்கு என்பது இதர ஏற்றுமதி விவசாய உற்பத்தியினை விட அதாவது இறால் வளர்ப்பு, பழத்தோட்டம் போன்றவை - அதிகமாக தேவைப்படுகிறது. எனவே தாராளமயத்தின் விளைவான வேலை வாய்ப்பு பறிப்பு என்பது இங்கும் உள்ளது. ஆக வேலைவாய்ப்பிலும், உணவு உற்பத்தியிலும் குறைவு ஏற்படுவதற்கு தாராளமயக் கொள்கை ஒரு முக்கிய காரணமாகிறது.

இருந்த போதிலும் உணவு உற்பத்தியின் இந்த வீழ்ச்சிக்கு மற்றும் ஒரு காரணமும் உண்டு. கடந்த சில வருடங்களில் ஏற்பட்டுள்ள - விவசாயத் துறையில் பொதுத்துறை முதலீட்டில் வீழ்ச்சி ஒரு காரணமாகும். விவசாயத்தில் அரசுத் துறையின் மூலதனம் என்பது அதாவது பாசனம் போன்றவற்றில் 1980-81இல் ரூ. 1796 கோடியாக இருந்தது. 1990-91இல் இதுவே ரூ. 1152 கோடியாக இறங்கியது. 1995-96இல் இதுவே 1310 கோடியாக கீழே சென்றுவிட்டது. ஆனால் இதே காலத்தில் தனியார் மூலதனம் என்பது வளர்ந்தே வந்துள்ளது. 1990-91இல் ரூ. 3440 கோடியாக இருந்தது. 1995-96 முதல் ரூ. 4991 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. இந்த புள்ளி விபரங்களை சரியென்றே எடுத்துக்கொண்டால் கூட, இந்த தனியார் மூலதன வளர்ச்சி என்பது பாரம்பரிய விவசாயத்தை விட, ஏற்றுமதியோடு இணைந்த, அதாவது லாபநோக்கோடு கூடிய விவசாயப் பொருட்களில்தாம் அதிகம் உள்ளது. மேலும் பாரம்பரியப் பொருட்கள் விளைந்து கொண்டிருந்த நிலப் பரப்புகளில் பெரும்பகுதி சோயா பீன்ஸ் போன்ற ஏற்றுமதிக்கான விவசாயப் பொருட்கள் விளைவிக்கும் நிலமாக மாற ஆரம்பித்தது. இது பாரம்பரிய விவசாய பொருட்களின் உற்பத்தியில் தனியார் முதலீடு குறைந்து உள்ளது என்பதன் அறிகுறியாகும்.

**மூலதன உருவாக்கம் :**

உள்நாட்டு நிலையான மூலதன உருவாக்கத்திற்கும் (அதாவது தற்போது உள்ள இயந்திரம் மற்றும் உயர் ரக இயந்திரங்கள்) உள்நாட்டு மொத்த உற்பத்தி பற்றிய புள்ளி விபரங்கள்.

**அட்டவணை 3 :**

**உள்நாட்டு மொத்த உற்பத்தியில் - நிலையான மூலதன உருவாக்கத்தின் சதவிகிதம்**

| | |
|---|---|
| 1990-91 - 23.2 | 1994-95 - 22.5 |
| 1991-92 - 22.1 | 1995-96 - 24.3 |
| 1992-93 - 22.5 | 1996-97 - 24.0 |
| 1993-94 - 21.5 | |

www.tamilarangam.net



இந்த விபரங்கள் அதில் உள்ள தேக்க நிலையினை வெளிக்காட்டுகிறது. 1995-1996இல் வளர்ச்சியினைக் கூட தொடர்ந்த ஆண்டில் தக்க வைக்க முடியவில்லை. 1995-96 இல் 17.9 சதமாக இருந்தது. 1996-97 இல் 5.9 சதமாக குறைந்தது. 1997 ஏப்ரல் முதல் 1998 பிப்ரவரி முடிய உள்ள காலத்தில் இதுவே இன்று 1.8 சதமாக வீழ்ச்சி அடைந்துள்ளது.

முதலீட்டு விகிதங்களை உயர்த்தாத எந்த பொருளாதாரத்திலும் வளர்ச்சி என்பது இருக்க முடியாது. கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகள். அவர்களுடைய தற்போதைய நெருக்கடியில் சிக்குவதற்கு முன் அவர்களின் முதலீட்டு விகிதத்தினை அவர்களது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 35 சதமாக வைத்திருந்தனர். சீனாவில் அதுவே 40 சதமாக உள்ளது. மாறாக இந்தியாவில் அது 25 சதமாக உள்ளது. நாடு வளர்ச்சியினை மேலெடுத்து செல்ல வேண்டும் என்றால் அதனுடைய முதலீட்டு விகிதத்தினை கணிசமரன அளவு உயர்த்தியாக வேண்டும். தாரளமயமும், மறு சீரமைப்பு கொள்கைகளும் பின்பற்றப்பட்டால் தான் இது சாத்தியமாகும் என "தாராளமயவாதிகள்" குறிப்பிடுகின்றனர். ஆனால் இங்கு நமது மூலதனப் பொருள் துறையில் நடப்பது இந்தக் கூற்றிற்கு எதிர்மாறாய் உள்ளது. அந்தத் துறையின் தொழில் வளர்ச்சி குறைந்திருப்பது மட்டுமல்ல. முதலீட்டிற்கான முயற்சியும் செயலிழந்து நிற்கும் போது இந்தியா தனது வளர்ச்சி விகிதத்தினை அதிகரிக்கும். அதுவும் இரட்டை இலக்கத்தில் என்று கூறுவது முற்றிலும் பொருந்தாத ஒன்றாகும்.

முதலீட்டுக் குறைவிற்கான காரணம் என்ன? அதிகமான உபரி மதிப்பு கையில் கிடைத்தால்தான் முதலாளிகள் மேலும் மேலும் முதலீடு செய்வார்கள் என்ற ஒரு பிரமை நிலவுகிறது.

ஒரு தகுந்த லாப விகிதம் கிடைக்கும் என்கிற போது அதவாது அவர்களது தயாரிப்பிற்கான சந்தை விரிவடையும் போதுதான் முதலாளிகள் தங்கள் உற்பத்தியில் முதலீட்டை அதிகரிக்கின்றனர். சமூக உற்பத்திக்கான ஒட்டுமொத்த சந்தை விரிவாக்கத்திற்கு தனி முதலாளியின் முதலீடு என்பது ஒரு காரணியாக விளங்குகிறது. இதைத் தவிர இந்த ஒட்டுமொத்த தனியார் முதலீட்டிற்கு வெளியிலிருந்து ஆதரவு தேவைப்படுகிறது. அதற்குரிய வேறு தூண்டுகோல்களாக பொது முதலீடு, உள்நாட்டு சந்தையின் வளர்ச்சி, தொழில் துறை சார்ந்த பொருட்களின் ஏறறுமதி ஆகியவை நிகழ்கின்றன. ஏற்றுமதி என்பது எவ்வளவு வளர்ந்தாலும் இந்தியா போன்ற பொருளாதாரத்தில் அது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைய முடியாது. உள்நாட்டு சந்தையினைப் பொறுத்தவரை ஒரு சமமான நிலச் சீர்திருத்தம் இல்லாத நிலையில் விவசாயத்திலுள்ள பொது முதலீட்டில் வெட்டு விழுந்துள்ள சூழலில் இது ஒரு தூண்டுகோலாக அமைய முடியாது. பொது முதலீடு என்ற காரணியும் இங்கு தூண்டுகோலாக அமையவில்லை. ஏனென்றால் தாராளமயமாக்கத்தின் கொள்கையினால் அரசாங்கத்தின் பங்கு குறைக்கப் பட்டுள்ளது.

www.tamilarangam.net



**பணவீக்கமும், வறுமையும்**

1990களில் ஏற்பட்ட விலை உயர்வு என்பது தாராளமயமாக்கத்தின் நேரடி விளைவாகும். பொது முதலீட்டு வளர்ச்சி என்பது தடுக்கப்பட்ட சூழலில், பொருளாதாரத்தில் - சந்தையின் வளர்ச்சி விகிதம் ஒடுக்கப்பட்ட நிலையில், பணவீக்கத்தின் அழுத்தம் என்பது இக்கால கட்டத்தில் இல்லாதிருந்திருக்க வேண்டும். ஆனால் பொருளாதார சீரமைப்பு காலத்திற்குப் பின் பணவீக்கம் என்பது வெகு வேகமாக உயர்ந்தது. விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் உழைக்கும் மக்களைப் பொறுத்த வரை, 1980களோடு ஒப்பிடுகையில் 1990 களின் விலைவாசி என்பது மிக வேகமாக உயர்ந்தது.

இப்படிப்பட்ட பணவீக்கத்தின் வளர்ச்சி என்பது அரசாங்கத்தால் திட்டமிட்டு ஏற்றப்பட்ட விலை உயர்வே காரணமாகவும் அதன் விளைவாய் ஏற்படுத்தப்பட்ட மானிய வெட்டின் காரணமாகவும் ஏற்பட்டுள்ளது. இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டது உணவுப் பொருட்களின் விலைதான். மத்திய தொகுப்பில் இருந்த அரிசி மற்றும் கோதுமையின் விலை டிசம்பர் 1991, ஜனவரி 1993 மற்றும் பிப்ரவரி 1994 ஆகிய காலங்களில் செங்குத்தாக உயர்த்தப்பட்டது. இதன் விளைவாக பிப்ரவரி 1994இல் வரலாறு காணாத அளவில் அரிசியின் விலை 86 சதம் உயர்ந்தது. கோதுமையின் விலை 72 சதம் உயர்ந்தது. இதனால் உழைப்பாளி மக்கள் குறிப்பாக ஆலைத் தொழிலில் உள்ள தொழிலாளர்கள் மற்றும் கிராமப்புறங்களில் உள்ள விவசாய தொழிலாளர்களின் வாழ்க்கைதரம் சீரழிந்தது.

1997-98இல் பணவீக்கத்தில் சற்று மந்தமான நிலை ஏற்பட்டது. இந்த நிலை தற்சமயம் மாறிவிட்டது என்பது உண்மை. இந்த நிலை ஏற்பட்டதற்கு 'பொருளாதார மறு சீரமைப்பு கொள்கைகள்" காரணம் இல்லை. மாறாக 1994இல் ஏற்படுத்தப்பட்ட விலையேற்றத்திற்குப் பின், அரசாங்கம் அதன் திட்டமிட்ட விலையேற்றத்தை செய்யவில்லை என்பது முதல் காரணமாகும்.

இது தவிர இரண்டாவது காரணமும் ஒன்று உள்ளது. அன்றிருந்த ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் இருந்த இடதுசாரிகள் நடத்திய தொடர்ந்த போராட்டம் ஒரு காரணமாகும். அரசாங்கம் திட்டமிட்டு ஏற்படுத்தும் விலையேற்றத்தை எதிர்த்து அவர்கள் நடத்திய தொடர்ந்த போராட்டம் அது. இதன் காரணமாகத்தான் பொருளாதார மறுசீரமைப்புக் கொள்கைகள் தீவிரமாக அமுலாவதில் ஒரு சிறு இடைவெளி இருந்தது. அதன் காரணமாகத்தான் அந்த காலத்தில் பணவீக்கத்தில் ஒரு வளர்ச்சியின்மையற்ற நிலையும் இருந்தது. இந்த அமைதியும் இப்போது இழந்து விட்டது. மீண்டும் பணவீக்கம் எகிறிப் பாய ஆரம்பித்து விட்டது.

உழைப்பாளி மக்கள் கசக்கி பிழியப்பட்டதையும் வேலையின்மை அதிகரித்ததையும் 90களில் சந்திக்க நேர்ந்தது. நாம் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தபடி உணவு உற்பத்தியில் இருந்து இதர ஏற்றுமதி விவசாயப் பொருட்களுக்கு மாறியதும், கட்டுப்பாடற்ற இறக்குமதியும் வேலையின்மை உயர்விற்கு காரணங்களாகும். மேலும் எல்லாவற்றிற்கும் மேலாக பொது முதலீட்டிலும் நல்வாழ்வு செலவினங்களிலும் ஏற்படுத்தப்பட்ட வெட்டுகள் ஒரு முக்கிய காரணமாகும். இந்தியாவின் மொத்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உள்நாட்டு உற்பத்தியில் நல்வாழ்வுத் திட்டங்களுக்கான செலவினங்கள் என்பது 1985-86இல் 12.54 சதமாக இருந்தது. 1995-96இல் 8.08 சதமாகவும், 1996-97இல் 7.74 சதமாகவும் வீழ்ச்சி அடைந்தது. இந்த அரசுத்துறை செலவினங்களின் வீழ்ச்சி, குறிப்பாக கிராமப்புற வேலைவாய்ப்பில் பிரதிபலித்தது. அங்கு வேலையின்மை பெருகியது.

இப்படி பொருளாதார மறுசீரமைப்பு கொள்கையின்கீழ் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வும் வேலைவாய்ப்பில் ஏற்பட்ட பாதிப்பும், ஏழ்மையினையும் வறுமையினையும் அதிகரித்தது. இந்தியக் கிராமப்புற ஏழ்மை நிலை பற்றி கீழ்க்கண்ட புள்ளி விபரம் தெளிவாக்கும்

**அட்டவணை 4 : இந்தியாவில் கிராமப்புற ஏழ்மை நிலை**

| | | | |
|---|---|---|---|
| ஜூலை | 89 | ஜூன் | 90 - 34.30 |
| " | 90 | " | 91 - 36.43 |
| " | 91 | " | 92 - 37.42 |
| " | 92 | " | 93 - 43.47 |
| " | 93 | " | 94 - 38.74 |
| " | 94 | " | 95 - 41.02 |
| " | 95 | " | 96 - 37.15 |

ஜனவரி 97 - டிசம்பர் 97 - 35.78

பொருளாதார மறு சீரமைப்புக்கு சற்று மத்திய காலத்தையும் அதன் பிந்தைய காலத்தையும் ஒப்பிடுகையில், கிராமப்புற ஏழ்மை நிலை அதிகரித்துள்ளது தெளிவாகத் தெரிகிறது.

இந்த ஏழ்மையினை அதிகரிக்கச் செய்யும் வகையில் உள்ள மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சமூக நலத்திட்டங்களுக்கான செலவினங்கள் மீதான வெட்டு பற்றிய விபரங்கள்.

**அட்டவணை 5. மத்திய மற்றும் மாநில அரசுகள் சமூக நலத் திட்டத்திற்கென செய்யும் செலவுகள்.**

**(மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சதவிகிதம்)**

| | கல்வி மற்றும் கலாச்சாரம் | உடல்நலம் மற்றும் பொது சுகாதாரம் |
|---|---|---|
| 1989 - 90 | 3.36 | 1.26 |
| 1990 - 91 | 3.25 | 1.23 |
| 1991 - 92 | 3.12 | 1.19 |
| 1992 - 93 | 3.04 | 1.17 |
| 1993 - 94 | 3.04 | 1.17 |
| 1994 - 95 | 3.00 | 1.17 |
| 1995 - 96 | 2.84 | 1.12 |

www.tamilarangam.net



**மாற்று**

இப்படிப்பட்ட புதை குழியில் சிக்கியுள்ள நமது பொருளாதாரத்தை விடுவிப்பது என்பது எவ்வளவு முக்கியமானதோ, அவ்வளவு தூரம் நுணுக்கமானதும் ஆகும். இது வரை நடந்த ஜனநாயகப் போராட்டங்களுக்கு நாம் நன்றி கூற வேண்டும். இப்படிப்பட்ட போராட்டங்கள் இல்லை என்றால், கிழக்கு மற்றும் தென் கிழக்கு ஆசிய நாடுகளைப் போன்றதொரு நெருக்கடியில் நாம் சிக்கியிருப்போம். நிதி மூலதனத்தின் உலகமயமாக்கத்தினால் உலகத்தின் பல்வேறு நாடுகள் திடீரென்று நெருக்கடிக்கு உள்ளாகின்றனர். இதுபோன்ற நெருக்கடிகள் 90 களில் ஒரு தொடர்ச்சியான நிகழ்வாக இருந்துள்ளன. இதுபோன்ற நெருக்கடி நிலையை தவிர்ப்பதற்காக நிதி துறையின் தாராளமயமாக்கம், ரிசர்வ் வங்கிக்கு சுய உரிமை மற்றும் நாணயத்தை சார்ந்த ஊக செயல்பாடு ஆகிய மூன்று காரணிகளை தடுத்திட வேண்டும். முடிந்தால் இதை தலைகீழாக மாற்ற வேண்டும்.

இடதுசாரி மாற்றுப் பொருளாதாரக் கொள்கை என்பது நான்கு விஷயங்களின் அடிப்படையில் கட்டப்பட வேண்டும்.

1. ஒரு முறையான சமமான நிலச்சீர்திருத்தம் அமுலாக்கப்பட வேண்டும். இப்புதிய கொள்கையின் கீழ் பொருளாதார பலன் கிட்டும் அதேவேளையில் கிராமப்புற மக்களை அணிதிரட்டுடவும் இது உதவும்.
2. பொது முதலீட்டை மீண்டும் உயிர்ப்பிப்பது. குறிப்பாக கட்டமைப்பு துறையில், அதன்மூலம் விவசாயம் வளர்ச்சி நோக்கி செல்வது. உள்நாட்டு மக்களுக்கான உணவுத் தேவையினை பூர்த்தி செய்வது.
3. கல்வி, உடல்நலம் பொது சுகாதாரம் போன்ற சமூக நல செலவினங்களில் உயர்வு; ஒவ்வொரு குழந்தைக்கும் கட்டாய இலவச ஆரம்பக் கல்வி மேலும், ஒவ்வொருவருக்கும் குறைந்தபட்ச உடல்நலத் தரம், பொது சுகாதாரத்தில் வளர்ச்சி.
4. அதிகார பரவல் மூலமாக ஒரு பொறுப்பான மக்கள் சார்ந்த அரசமைப்பை உருவாக்க வேண்டும்.

பொது முதலீட்டை உயர்த்தவும் கல்வி மற்றும் நல்வாழ்வு திட்டச் செலவினங்கள் அதிகரித்திடவும் நிதி ஆதாரம் முக்கியமாகும். இதனை நேரடி வரி (சொத்து மற்றும் பெருந்தொழில் நிறுவனங்கள் மீது விதிக்கப்படும் வரி) விதிப்பின் மூலம் திரட்டிட வேண்டும்; அரசாங்கத்திற்கு தேவையான கடன்களின் மீதான வட்டி விகிதத்தை குறைக்க வேண்டும். செலவினங்களைக் குறைக்க மானிய வெட்டுகளை உபதேசிக்கும் அதிகார வர்க்கங்கள். இப்படி வட்டியாக பெரும்பகுதி செல்வதைப் பற்றி வாயைத் திறப்பதே இல்லை. மானியங்களுக்கு உற்பத்தியிலும் வளர்ச்சியிலும் பங்கு உள்ளது. ஆனால் இப்படி வட்டியாக மாற்றப்படும் தொகையால் எந்த பயனுமில்லை. இதைப் போலவே இங்குள்ள அதிகார வர்க்கம் நேரடி வரி விகிதங்களை குறைக்க வேண்டும் என உபதேசிக்கின்றன. ஆனால் இப்படிப்பட்ட வருவாய் பெரும் நாடுகளின் பட்டியலில் இந்தியா கடைசியில் உள்ள பத்து நாடுகளில்தான் வருகிறது. இந்தியாவிற்கு கீழ் உள்ள மற்ற 9 நாடுகள். சீனா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதனுடைய அமைப்பு முறையே வேறுபட்டது. அடுத்து நான்கு எண்ணெய் ஏற்றுமதி செய்யும் வளமிக்க நாடுகள். இங்கு வரிவிதிப்பிற்கான அவசியமே இல்லை. சீனாவையும், இந்த 2 நாடுகளையும் ஒதுக்கி விட்டால், கடைசியில் இருந்து 5வது இடத்தில் தான் இந்தியா இருக்கும். எனவே இந்தியாவில்தான் நேரடி வரிவிகிதம் அதிகம் என்பது முற்றிலும் பொய்யானது.

நேரடி வெளிநாட்டு மூலதனத்தை கவர்வது என்ற பெயரால் அவற்றிற்கான நேரடி வரிவிதிப்பினை நீக்குவது என்பது ஒரு தவறான செயலாகும். மிக வேகமாக வளரும் நாடுகளில் மட்டுமே இப்படிப்பட்ட நேரடி வெளிநாட்டு மூலதனம் வருகிறது. எனவே பொது முதலீடுகள் என்பது வெளிநாட்டு மூலதனத்தை ஊக்குவிக்கவே செய்கிறது. மாற்றுக் கொள்கையின் ஒரு முக்கிய பங்காக மீண்டும் பொது முதலீட்டை அதிகரிப்பது என்பதே இந்த நேரத்தின் உடனடிக் கடமையாகும்.

இதைச் செய்வதற்கு நம் நாட்டிலுள்ள வர்க்க பலாபலன்களில் ஒரு முற்போக்கான மாற்றம் கொண்டு வருவது என்பதே இன்றைய அவசியமாகும்.

www.tamilarangam.net



GATT General Agreement for Trade & Tariff
(வர்த்தகம், வரி குறித்த பொதுவான உடன்படிக்கை)

W.T.O World Trade Organisation
(உலக வர்த்தக நிறுவனம்)

G.N.P Gross National Product
(மொத்த தேசிய உற்பத்தி)

TRIMS Trade Related Investment Measures
(வர்த்தகம் தெடர்பான முதலீட்டு நடவடிக்கைகள்

TRIPS Trade Related Intellecture Property Rights.
(வர்த்தகம் தொடர்பான அறிவு சார் சொத்துரிமை

GATS General Agreement Trade in Services
(சேவை துறை வர்த்தகம் தொடர்பான பொது உடன்படிக்கை

D.S.B. Dispute Settlement Body
தாவா தீர்ப்பு அமைப்பு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

உலக வங்கி, நாணய நிதியம், காட் போன்ற சர்வதேசப் பொருளாதார அமைப்புகளின் கொள்கைத் திட்டங்களின் விமர்சனம்தான் இந்த நூல். இதன் பின்னணியில்தான் இந்தியாவில் இன்று, நடைமுறைப் படுத்தப்படும் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் ஆராயப்படுகின்றன. சுயச் சார்பில் இருந்து சரணாகதியை நோக்கி நாம் அழைத்துச் செல்லப்படுவதாக இதில் வாதிடப்படுகிறது. இந்தச் சரணாகதி சீர்திருத்தங்களுக்கு நாட்டுப்பற்று மிகுந்த மாற்றுத் திட்டத்தையும் நூலாசிரியர்கள் முன் வைக்கிறார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்